கொழும்பு
நிறுவனம்

பனுவல்



சமூக
பண்பாட்டு
விசாரணை

நான்காவது இதழ் - 2006

பனுவல்

நான்காவது
இதழ்
2006



சமூக
பண்பாட்டு
விசாரணை

# பனுவல்

ISSN 1391 - 9156

*சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவன அங்கத்தவர்களும் பட்ஹித மற்றும் பனுவல் தொகுப்பாசிரியர்கள் குழுவும்*

**தா.சனாதனன்,**
*பிரதான தொகுப்பாசிரியர்-பனுவல் (யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)*

**சசங்க பெரேரா,**
*பிரதான தொகுப்பாசிரியர் - பட்ஹித (கொழும்புப் பல்கலைக்கழகம்)*

**ஆனந்த திஸ்ஸ குமார**
*(கொழும்புப் பல்கலைக்கழகம்)*

**ரமணி ஜயதிலக**
*(கொழும்புப் பல்கலைக்கழகம்)*

**இந்திகா புலன்குலம**
*(நீதி மற்றும் சமூக நிதியம்)*

**அசோக டீ சொயிசா**
*(களனிப் பல்கலைக்கழகம்)*

**குமுது குசும் குமார**
*(கொழும்புப் பல்கலைக்கழகம்)*

**நலின் சுவாரிஸ்**
*(சுயாதீன எழுத்தாளர்)*

**ரஞ்சித் பெரேரா**
*(சமூக விஞ்ஞானிகள் சங்கம்)*

**மொழி ஆசிரியர்**

**க.அருந்தாகரன்,**
*(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

**உதவி**

**சாமிநாதன் விமல்**
*(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

*பனுவல், சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனத்தால் வருடந்தோறும் வெளியிடப்படுகிறது. இது தீர்த்த சர்வதேச கலைஞர்களின் கூட்டிணைப்பின் வெளியீட்டுச் செயற்பாட்டின் ஓர் பகுதியாகும்.*

**நிதி அனுசரணை: கீவோஸ் நிறுவனம்.**

# பனுவல் [redacted]

சமூக
பண்பாட்டு
விசாரணை

**நான்காவது இதழ்**
**2006**

சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான
கொழும்பு நிறுவனம்.

விலை ரூ: 300/-

© கட்டுரைத் தொகுதி ஒன்று என்ற வகையில் அனைத்து உரிமைகளும் சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனத்தைச் சார்ந்தது. 2006.

© சகல மூலக்கட்டுரைகளினதும் உரிமை அந்தந்தக் கட்டுரைகளின் மூலஆசிரியர்களுடையதாகும். 2006.

© சகல மொழிபெயர்ப்புகளினதும் உரிமை மொழிபெயர்ப்பாளர் களுடையதாகும். 2006.

வெளியீட்டு உரிமைகள் தொடர்பான சட்டரீதியான நிலைமைகள் கருத்துகளின் பரிமாற்றத்துக்கும் உரையாடலுக்கும் தடைகள், இடையூறுகள் ஏற்படக் காரணமாகலாம். எனவே வெளியீட்டு உரிமை தொடர்பான **கருத்தியல் ரீதியான** நம்பிக்கையொன்று சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனத்திடமில்லை. எனவே இதில் உள்ளடக்கப்படும் எந்தவொரு கட்டுரையும் கலந்துரையாடலுக்கு எந்த முறையிலும் பயன்படுத்த அனுமதி உண்டு.

## உள்ளடக்கம்

**நுழைவாயில்**

முன்னுரை
ஏ.ஜே.கனகரட்ணாவின் நினைவுகளுக்குச் சமர்ப்பணம்
– பனுவல் ஆசிரியர் குழு ... 01

பண்பாடு என்ற கருத்தாக்கம்
– தே.லூர்து ... 05

தொறுப்புசல் – வீரயுக மரபு:
மேட்டுநில தமிழகத்தில் ஆநிரை சார் சமூக உருவாக்கம்
– குணசேகரன் ... 37

பொதிசெய்யப்பட்ட வினோதங்களாக
தொடர்மாடி மனைகள் இடமின்மைத்தன்மையின்
அரசியலும், சுவையின் நியமப்படுத்தலும்
–சசங்கபெரேரா ... 64

இருபால் ஒருடல்:
அர்த்தநாரீஸ்வரர் அகழ்வாய்வுக்குறிப்புகள்
–பாக்கியநாதன் அகிலன் ... 87

**பனுவல் நூல் திறனாய்வு**

ජාත්‍යනුරාගය: සමාජ ශාස්ත්‍රීය විමර්ශනයක්
(தேசப்பற்று : சமூக அறிவுசார் திறனாய்வு)
– சசங்க பெரேரா ... 113

**கலைச்சொற்கள்** ... 127

# முன்னுரை

## ஏ.ஜே.கனகரட்ணாவின் நினைவுகளுக்குச் சமர்ப்பணம்

ஏ.ஜே.கனகரட்ணா தனது 72 ஆவது வயதிற் காலமானார். ஈழத்துத் தமிழ்ச்சூழலில் இலக்கியம், கலை, அரசியல், கல்வி சார்ந்து ஒரு வளமான கருத்தாடல் வெளியைத் தக்கவைக்கவும் விரிவுபடுத்தவும் ஆதாரமாகப் பல்வேறு நிலைகளிற் செயற்பட்டதினூடு அறிவுநுட்பத்திற்கும் அதன் பரவலாக்கத்திற்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கியவர். பெரிதாகப் பேசப்படாத அவரின் பங்களிப்புக்கள் இன்றைய நெருக்கடிக்குள்ளாகியுள்ள அறிவுசார் செயற்பாடு களின் சூழலில் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதுடன், வழிகாட்டியாகவும் அமைகின்றன. ஏ.ஜே.க்கு இருந்த தமிழ் மற்றும் ஆங்கிலப்புலமையும், பரந்த வாசிப்பும் ஈழத்தமிழரின் நெருக்கப்பட்டு சுருங்கிப்போன கருத்தாடல் வெளிக்கு எப்போதும் உயிர்ப்பையும் ஊக்கத்தையும் வழங்கின. உலகப்போக்குகளை உள்ளூரின் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவையறிந்து அறிமுகப்படுத்தியதினூடாக, ஈழம், தமிழ் என்று எல்லைப்பட்டிருந்த எமது தரிசனங்களைப் பரந்த மனிதப் பேற்றினை நோக்கித் திருப்பத்தூண்டினார். எளிமையான, தன்முனைப்பற்ற ஏ.ஜே பத்திரிகைத்துறை, விமர்சனம், மொழி பெயர்ப்பு ஆகிய துறைகளில் ஏக காலத்தில் இயங்கி, தனது சமூகப்பிரக்ஞையினூடு தனது பரந்த வாசிப்பையும் அதனாற்பெற்ற செரிப்பையும் கூட்டிணைவான ஒரு முறையில்

உள்ளூர் மயப்படுத்தியதுடன் மக்கள் மயப்படுத்தினார். இவ்வாறான முயற்சிகளுக்கு ஊக்கியாகவும், துணையாகவும் எல்லோருடனும் எப்போது மிருந்தார். 'பனுவல்' ஆய்வேட்டின் நோக்கமறிந்து, தொடக்கத்திலிருந்து அதற்கு உளவியல் ரீதியான ஆதரவை வழங்கியவர். சில மொழி பெயர்ப்புகளில் நேரடியாகவும் உதவியவர். அவரது பணியும், ஆதரவும், எளிமையும், பனுவல் தனது பணியைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான நம்பிக்கையாகவும், வலுவாகவும் எம்முடன் எப்போதும் இருக்கின்றன. இந்த இதழ் ஏ.ஜே. பற்றிய நீண்ட நினைவுகளுக்கான சிறிய சமர்ப்பணம்.

பண்பாட்டு உற்பத்திகளாக அமைந்த வெளிகளையும், சின்னங்களையும், நடைமுறைகளையும், கலைப் பொருள்களையும் பனுவல்களாகப் படிக்கும் ஏது நிலைகளைப் பிற்கட்டமைப்பு வாத அணுகுமுறைகள் சாத்தியமாக்கி, பண்பாடு பற்றிய கருத்தாடலை விரிவுபடுத்தியுள்ளன. இந்தச் சாத்தியப்பாட்டில் அவை குறிக்கப்படும்முறை, அவற்றில் சம்பந்தப்படும் பண்பாட்டு அரசியல் என்பன பற்றிய விவாதம் முக்கியமானது. அவ்வகையில் குறிப்பீடு செய்தல் என்பது பண்பாட்டின் அல்லது கருத்தியலின் இடையீட்டிற்கு உட்படுவது என்ற நிலையில் அது சூதுவாதற்ற, அப்பாவித்தனமானதொன்றல்ல. குறிப்பீடு செய்தல் என்பது பற்றிய கேள்வி என்பது இன்றைய சமூகப் பண்பாட்டு விசாரணைகளில் நிராகரிக்க முடியாதவை என்பதுடன், இவை தனித்துறைசார் விசாரணைகளால் மட்டும் அணுகப்பட முடியாதவையுமாகும். இன்று இவை பல்துறைகளின் கூட்டிணைவான ஆய்வு முறையியலை வேண்டி நிற்கின்றன.

இப்பின்னணியிற் பனுவலின் நான்காம் இதழில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்துக்கட்டுரைகளும், சந்தர்ப்பவசமாக ஓர் ஒற்றுமையைக் கொண்டுள் ளன. இவை ஏதோ ஒருவகையில் உட்குறிப்பீடு செய்தலை விசாரணைக்குட் படுத்துகின்றன. தே.லூர்துவின் முதலாவது கட்டுரை பண்பாடுபற்றிய கருத்தாக்கத்தினையும், அது பற்றிய வேறுபட்ட வாசிப்புக்களையும் முன் வைக்கிறது. தமிழ்மொழி மூலம் பண்பாடுபற்றி அறிய முயற்சிப்பவர்களுக்கு இது இவ்விடயம் சார்ந்து கணிசமானளவு தெளிவை அளிக்கும் அதேவேளை இவ்விதழில் உள்ள ஏனைய கட்டுரைகளை ஓர் அகன்ற கருத்துருசார் சட்டகத்தில் வைத்து நோக்கவும் உதவும் என்று நாம் நம்புகிறோம். தமரையும் பிறரையும் வேறுபடுத்தவென உருவாகிய பண்பாடு (Culture) என்ற பதம் பின்னர் நாகரிகம் என்ற பதத்துடன் எவ்வாறு இணைத்தும், பிரித்தும் பார்க்கப்பட்டது என்பதனையும் பண்பாட்டிற்கும் இயற்கைக்கும், பண்பாட்டிற்கும் அறிவிற்குமான



தொடர்பு பற்றிய மானிடவியளாளரின் கருத்து விளக்கங்கள் என்பவற்றையும் இது முன்வைக்கிறது. இறுதியிற் பண்பாட்டைக் குறியியற் கோட்பாடாக வாசிக்கும் அணுகுமுறை விளக்கப்படுகிறது. இதில் பண்பாடு பற்றிய ஆய்வானது 'அர்த்தங்களின் அமைவு' அல்லது அர்த்தம் / குறியீட்டியல் பற்றிய ஆய்வாகப் பரிணமிக்கிறது என்பதை லூர்து பிற ஆய்வாளர்களின் மூலக்கருத்துக்களினூடு எடுத்துக் காட்டுகிறார்.

மேல்நில தமிழகத்தில் ஆநிரைசார் சமூக உருவாக்கம் என்ற சு.குணசேகரனின் கட்டுரை நடுகற்களை மையமாகக்கொண்டு தமிழக மேட்டு நிலப்பகுதிகளில் நிகழ்ந்த பண்பாட்டு உருவாக்கத்தினையும் அது வெளிப்பட்ட வெவ்வேறு நிலைகளையும் வாசிக்கின்றது. நடுகற்களில் உள்ள உருவச் சித்தரிப்புகளையும் கல்வெட்டுக்களையும் மாறிவரும் உற்பத்தி முறைமை களுடனும், அரசு விரிவாக்கத்துடனும் வாசிப்பதனூடாக இவற்றுக்குப் பின்னால் மறைந்துள்ள அரசியலை திரைவிலக்க ஆசிரியர் முயல்கிறார்.

கொழும்பின் புறநகர்ப்பகுதியில் உருவாகியுள்ள சில தொடர்மாடி மனைகளின் இடப்பெயர்கள், வெளிகள், அழகியல் உணர்வு, சுவை என்பன வற்றின் பின்னால் இயங்கும் உலகமயமாதல் மற்றும் நகர்மயமாதல் சக்திகளும், அவற்றால் வெளிக்கொணரப்படும் அர்த்தங்களும் சசங்கப் பெரோராவால் பொதி செய்யப்பட்ட வினோதங்களாகத் தொடர்மாடி மனைகள் என்ற கட்டுரையில் எடுத்துக்காட்டப்படுகிறது. இந்தத் தொடர்மாடிகளில் எவ்வாறு உள்ளூர் வரலாறுகளும், ஞாபகங்களும், அவை தொடர்பாக உருவாகும் இடமும், அது தொடர்பான அடையாளமும் தொலைந்து போகின்றது என்பதை அவர் தனது அனுபவம்சார் வாசிப்பினூடு முன்வைக்கிறார். இக்கட்டுரை அது விசாரணைக் குட்படுத்தும் சமகால விடயம் சார்ந்து முக்கியமானது. தொடர்மாடிகளின் உருவாக்கம் என்பது முற்றான உள்ளூர் தேவையால் தோன்றிய தீர்வாக அல்லாமல் மிகவும் மேம்போக்கானதும் இறக்குமதி செய்யப்பட்டதுமான தீர்வாகின்றது. இந்தத் தீர்விற் காணாமற்போவது இப்பிரதேசத்திற்குரிய வாழ்தல் முறையும் அதனால் தோன்றும் அடையாளமும் ஆகும்.

இறுதியாக இருபால் ஒருடல் அர்த்தநாரீஸ்வரர்: அகழ்வாய்வுக்குறிப்புகள் என்ற பா.அகிலனின் கட்டுரையானது குறிப்பீட்டின் அர்த்தங்களை, பால்நிலையை அடிப்படையாகக்கொண்டு உளவியற் பகுப்பாய்வின் அடிப்படையில் வாசிக்க முயல்கிறது. புதியகலை வரலாற்று அணுகுமுறை சார்ந்த இக்கட்டுரை

அதன் முன்வைப்பினூடாக எம்மைப் பால்நிலை பற்றிய அதன் நடத்தைகள் பற்றிய சில அடிப்படையான கேள்விகளை நோக்கி அழைத்துச் செல்கிறது. பால்நிலை என்பது performative ஆனது என்ற அண்மைக்காலச் சிந்தனை ஒன்றை அது மறைமுகமாக எடுத்துரைக்கிறது.

பனுவல் ஆய்வேடு பேணமுயலும் ஆய்வுசார் தரங்களின் எல்லைப் படுத்தலாற் சென்ற மூன்று இதழ்களிலும் பெரும்பாலும் ஏற்கனவே வெளியான ஆங்கில மற்றும் சிங்களக் கட்டுரைகளின் மொழி பெயர்ப்புகளே வெளிவந்தன. இந்நிலையில் இவ்விதழ் மூன்று, தமிழில் எழுதப்பட்ட பிரசுரம் பெறாத மூலக்கட்டுரைகளையும், பனுவலுக்காக எழுதப்பட்ட ஆங்கிலக்கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பையும் உள்ளடக்கி வருவது உற்சாகமளிப்பதாகவுள்ளது. மூத்த பேராசிரியரும், நாட்டாரியல் ஆய்வாளருமான தே.லூர்துவின் கட்டுரை, பனுவலின் வழமையான ஆய்வுக்கட்டுரைமதிப்பிடல் நெறிமுறைகளுக்கு அப்பாலான கௌரவப் பிரசுரமாக அமைகிறது. பனுவலிற் பிரசுரிப்பதற்குத் தனது கட்டுரையை வழங்கி, பனுவலையும் கௌரவப்படுத்திய தே.லூர்து அவர்களுக்கு எமது நன்றிகள். இவ்விதழின் ஏனைய கட்டுரையாளர்களுக்கும், மொழி பெயர்ப்பாளர்களுக்கும் அவர்களின் ஒத்துழைப்பிற்காக நன்றிகள். இவ்விதழ் தயாரிப்பில் ஆலோசனை வழங்கிய, பேராசிரியர் பொ.இ.ரகுபதி கலாநிதி உ.சேரன் மற்றும் ச.கார்மேகத்திற்கும் எமது நன்றிகளை இங்கு பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.



# பண்பாடு என்ற கருத்தாக்கம்

தே. லூர்து

பண்பாடு பற்றிய பல்வேறு கருத்தாக்கங்களையும் அறிந்துகொள்ளாது அதனைப் பயன்படுத்துவது அறிவுடைமை ஆகாது. அண்மைக்காலத்தில் 'பண்பாடு' என்ற கருத்தாக்கம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பதம் என்பதுபோற் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது சமூக வரலாற்றுச் சிக்கல்களை எளிய பண்புருவாக்கங்களாகக் குறுக்கிவிடக்கூடும். இதனாற் சமூகங் களிடையே நிலைபெற்றுள்ள சமூக ஒழுக்க முரண்பாடுகளை மறைத்துவிடக் கூடும். மானிடவியல் அறிஞர்கள் உள்ளிட்ட பல சமூக அறிவியல் அறிஞர்கள். அதனைக் காலனிய ஆதிக்கத்தின் அறிவுபூர்வ இராணுவ அரசியல் சார்ந்த மேலாலதிக்கத்தோடு இணைத்து அடையாளம் கண்டுள்ளனர். அதாவது அவர்கள் உலகின் ஏனைய பகுதி மக்களை நாகரிகர், தொல்பழங்குடியினர்; பகுத்தறிவுடையோர்; பகுத்தறிவற்றோர்; கற்றோர்: கல்லாதோர் என்று இருமை எதிர்வுகளாகக் காலனியாட்சியாளர் கருதியுள்ளனர். “பண்பாடு” என்பது 'மற்றவர்' களிடம் இருப்பது (What other's have) என்று கருதினர். மேலும் மற்றவர்களைத் தங்களிடமிருந்து வேறுபடுத்தி உருவாக்கி வைத்திருப்பது எது? என்று கருதி ஆய்வுசெய்ததாற் பண்பாடு என்ற சொல்லை மேற்கண்டவாறு பயன்படுத்தி வந்தனர்.

19ஆம் நூற்றாண்டிற் 'பண்பாடு' (culture) என்ற கருத்தாக்கத்தை, ஐரோப்பியர்கள் தாங்கள் படை எடுத்துச்சென்று வெற்றிபெற்றுக் குடியேறிய நாட்டு (ஆப்பிரிக்கா, வட தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பசிபிக் தீவுகள், ஆசியா) மக்களின் வழக்கங்களை விளக்குவதற்காகப் பயன்படுத்தினர். இன்று சிறுபான்மையினர், விளிம்புநிலை மக்கள் போன்றோர் சமூகத்தின் முக்கிய நீரோட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ளாதிருக்கின்றனர் என்பதைப் பற்றி ஆய்வுசெய்யும் கருத்தாக்கமாகப் பண்பாடு உள்ளது. இக்கருத்தாக்கங்கள் எல்லாவற்றையும் அறிந்து விமர்சனம் செய்யாது ஏற்றுக்கொள்வது கூடாது. மானுடச் சமூக நடத்தைகளைப் பற்றி ஆய்வு செய்யும் புதிய தலைமுறையினர்க்கு ஆய்வு குறித்த அடிப்படை உருவகங்கள் கருத்தாக்கங்கள் பற்றிய அறிவு இன்றியமையாதது.

சமூக அறிவியல் சார்ந்த வரலாற்றிற் குறியீட்டு வடிவங்கள் பற்றிய ஆய்வும் ஒன்றாகும். அது, பண்பாடு என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையிற் பொதுவாக ஆய்வுசெய்யப்படுகின்றது. பண்பாடு என்ற கருத்தாக்கத்தின் பொருண்மை குறித்து ஆய்வாளர்களிடையே கருத்தொற்றுமை காணப்பட வில்லை. எனினும் ஒட்டுமொத்தமாக ஆய்வு செய்யும்போது சமூக அறிவியல்கள் எல்லாவற்றுக்கும் நடுநாயகமானது. பண்பாட்டு நிகழ்வு பற்றிய ஆய்வு என்பதனை ஆய்வாளர் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இயற்கையுலகில் நடக்கும் நிகழ்வுகள். சம்பவங்கள் போன்றவை மட்டுமல்லாமல், சமூக வாழ்வு என்பது அர்த்தமுள்ள செயல்களையும் வெளிப்பாடுகளையும் கொண்டதாகும்: அது பல்வேறுபட்ட உச்சரிக்கைகளையும், குறியீடுகளையும், பனுவல்களையும், கலைப்படைப்புக்களையும் கொண்டதாகும். இந்தக் கலைப்படைப்புக்களின் மூலம் தங்களையே வெளிப்படுத்திக் கொள்ளும் தன்னிலைகளையும், தாங்கள் உற்பத்தி செய்த, தாங்கள் பெற்ற வெளிப்பாடுகளை விளக்குதலின் மூலம் தங்களையும் பிறரையும் அறிந்து கொள்ளவும் முயலுகின்ற தன்னிலைகளையும் பற்றியது பண்பாடாகும். பண்பாட்டு நிகழ்வு பற்றிய ஆய்வு விரிந்த நோக்கில் சமூக வரலாறு சார்ந்த உலகம் என்பது ஓர் அர்த்தமுள்ள புலம் என்ற நோக்கில் ஆய்வு செய்யப்பட்ட (படிக்க) வேண்டிய ஒன்றாகும். சமூக-வரலாறு சார்ந்த உலகிற் சூழமைவுற்ற தனியர்களாற் பல்வேறு வகைப்பட்ட அர்த்தமுள்ள வெளிப்பாடுகள் உற்பத்தி செய்யப்பட்டு, கட்டமைக்கப்பட்டுள்ளன. அவை எவ்வாறு வெளிப் படுத்தப்படுகின்றன என்பவை பற்றிய கல்விப்புலம் இதுவாகும். இவ்வாறு பொருள் கொள்ளும்போது வரலாறு, சமூகவியல், பொருளாதாரம், மானிடவியல், நாட்டார் வழக்காற்றியல், மொழியியல், அமைப்பியல், பின்னை நவீனவியல், கலை இலக்கியத் திறனாய்வியல், தகவல் தொடர்பியல் போன்ற பல கல்விப் புலங்களிலும் பணியாற்றுவோரால் இன்று பகிர்ந்து கொள்ளப்படும் வரிசையான பல நிகழ்வுகளையும், பல அக்கறைகளையும் பண்பாடு என்ற கருத்தாக்கம் சுட்டுகிறது.

பண்பாடு என்ற கருத்தாக்கம் எல்லா நேரங்களிலும் மேற்சொல்லப்பட்ட முறையிற் பயன்படுத்தப்படவில்லை. இந்தக் கருத்தாக்கத்திற்கென்றே ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு. இன்று அது வெளிப்படுத்தும் அர்த்தம் ஓரளவு அந்த நெடிய வரலாற்றின் விளைவாகும். பண்பாட்டு நிகழ்வுகள் பற்றிய இன்றைய ஆய்வுக்குப் பண்பாடு என்ற கருத்தாக்கத்தின் வளர்ச்சி பற்றிய வரலாற்றை அறிதல் வேண்டும். பண்பாடு என்ற கருத்தாக்கத்தின் எல்லா விவரங்களையும்



நான் இங்கு குறிப்பிடப் போவதில்லை. சில முக்கியமான வழக்குகளை மட்டும் குறிப்பிடுகிறேன்.

பண்பாடு பற்றிய தொடக்கக் கால விவாதங்களைச் சுட்டுவோம். சிறப்பாக 18,19ஆம் நூற்றாண்டுகளில் ஜெர்மனியத் தத்துவவியலர்க்கும், வரலாற்றி யலர்க்குமிடையே நடைபெற்ற விவாதங்களைச் சுட்டுவோம். இந்த விவாதங்களிற் 'பண்பாடு' என்ற பதம் அறிவார்ந்த அல்லது ஆன்மீக வளர்ச்சி என்ற ஒரு படிமுறையைச் சுட்டப் பயன்படுத்தப்பட்டது. இந்தப் படிமுறை சில முறைகளில் 'நாகரிகம்' என்பதிலிருந்தும் வேறுபட்டதாகும்.

**பண்பாடும் நாகரிகமும்:**

இனி, 'பண்பாடு', 'நாகரிகம்' என்ற சொற்களைப் பற்றியும் முதலில் அறிந்து கொள்வது நல்லது. பண்பாடு என்ற சொல்லின் வரலாற்றைப் பின்நோக்கித் திரும்பிப் பார்ப்பதன்மூலம் அதன் வளர்ச்சிப் போக்கை நாம் புரிந்துகொள்ளலாம். 'Culture' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பல ஐரோப்பிய மொழிகளில் இந்தக் கருத்தாக்கம் (நவீன காலத்தின் தொடக்கம் முதல்) முக்கியத்துவம் பெறத் தொடங்கிற்று. 'Culture' என்பதன் மூலப் பொருண்மையைப் பல ஐரோப்பிய மொழிகள் பாதுகாத்து வைத்திருந்தன. பயிர்கள் அல்லது விலங்குகள் போன்ற சிலவற்றைப் 'பேணி வளர்த்தல்' என்பதே அதன் முதன்மையான பொருள். 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இந்த மூல அர்த்தம் மெல்ல மெல்ல வேளாண்மை என்பதிலிருந்த மானிட வளர்ச்சிப் படிமுறைக்குப் பயன்படுத்தப் பட்டது; 'நிலத்தைப் பண்படுத்தல்' என்பதைவிட்டு விலகி 'மனத்தைப் பண்படுத்தல்' என்பதற்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. இருப்பினும் 'Culture' என்ற பெயர்ச் சொல்லைத் தனித்துச் சுதந்திரமாக ஒரு பொதுவான படிமுறைக்கு அல்லது அத்தகைய படிமுறையைச் சார்ந்த ஒரு பொருளைக் குறிக்க 18ஆம் நூற்றாண்டு அல்லது 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திற்றான் பயன்படுத்தப் பட்டது. இந்தத் தனித்த பெயர்ச்சொல் முதலில் ஃபிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் காணப்பட்டது. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரெஞ்சுச் சொல் ஜெர்மன் மொழியில் 'cultur' என்ற உச்சரிக்கப்பட்டு பின்னர் 'kultur' என்று தழுவி அமைத்துக் கொள்ளப்பட்டது.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 'culture' என்ற சொல் 'civilization' என்ற சொல்லின் ஒரு பொருள் பன்மொழிபோலப் பயன்படுத்தப்பட்டது.

'Civilization' என்ற சொல் 'civilis' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது. அது 'நகரத்தில் வாழ்வோருக்குச் சொந்தமானது' என்ற பொருளில் வழங்கப்பட்டது. பின்னர் 'civilization' என்ற பதம் தொடக்கத்தில் ஃபிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், மானுட வளர்ச்சியின் ஒரு முன்னேற்றப் படிமுறையைச் சுட்டப் பயன்படுத்தப்பட்டது. அதாவது, செப்பத்தையும் நேர்த்தியையும் ஒழுங்கையும் நோக்கிய ஒரு நகர்வு (இயக்கம்) விலங்காண்டி (காட்டாண்டி) நிலைகளுக்கு அப்பாற்பட்ட அசைவு என்ற பொருளிற் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு வெளிப்பட்ட இந்த அர்த்தத்திற்குப் பின்னர் ஐரோப்பிய அறிவொளிக்கால உணர்வும், நவீன சகாப்தத்தின் முன்நோக்கிய வளர்ச்சியில் அதற்கிருந்த உறுதியான நம்பிக்கையையும் உணரலாம். ஃபிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் இவ்விரு சொற்களும் ஒன்றுக்கொன்று மாற்றீடாக வழங்கப்பட்டன. மானுட வளர்ச்சியின் ஒரு பொதுவான வளர்ச்சிப் படிமுறையை மேலும் மேலும் பண்படுத்தல் அல்லது நாகரிகமடைதல் என்பதைச் சுட்ட இச்சொற்கள் பயன்படுத்தப்பட்டன. இருப்பினும் ஜெர்மன் மொழியில் இச்சொற்கள் வேறு வேறு முறைகளிற் பயன்படுத்தப்பட்டன. 'zivilization' என்ற சொல் ஓர் எதிர் மறையான பொருண்மையையும். 'Kultur' என்ற ஒரு நல்ல பொருண்மையையும் பெற்றன. zivilization என்பது பழக்க வழக்கங்களின் பண்பட்ட நேர்த்தியான தன்மை என்பதனுடன் தொடர்புபடுத்தப் பட்டது. ஒரு மக்கள் குழுவின் அறிவார்ந்த களத்தில், ஆன்மீகப் படைப்புக்களின் வழியாக அவர்களின் தனித்தன்மைகள் வெளிப்படுத்தப்படுகின்றன என்ற பொருளில் 'cultur' பயன்படுத்தப்பட்டது.

'Kultur', zivilization என்ற சொற்களுக்கிடையிலான ஜெர்மானிய வேறுபாடுகள் தொடக்கக்கால நவீன ஐரோப்பாவிற் சமூகத்தை அடுக்குநிலை அமைவுகளாகப் பகுத்தல் என்பதனுடன் இணைக்கப்பட்டன. 18ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் அரண்மனைப் பிரபுக்களின் மொழியாகவும், உடைமையாளர்களாகிய மேல்தட்டு பூர்ஷ்வா வர்க்கத்தினர் மொழியாகவும் ஃபிரரெஞ்சு மொழி விளங்கிற்று. ஃபிரெஞ்சு மொழி பேசுவது என்பது மேல்தட்டு வர்க்கத்தினரின் ஓர் அடையாளக் குறியீடாக இருந்தது. இந்த மேல்தட்டு வர்க்கத்தினரிலிருந்தும் வேறுபட்ட ஜெர்மன் மொழி பேசிய அறிவாளிகளும் இருந்தனர். இவர்கள் அரசவை அதிகார நிறுவனங்களிலிருந்தும், சில வேளைகளில் நிலப்பிரபுத்துவக் குழுக்களிலிருந்தும் தேர்ந்தெடுக் கப்பட்டோராவர். இந்த அறிவு ஜீவிகள் தமக்கேயுரிய, தாமடைந்த அறிவார்ந்த கலைத்திற வெற்றிகளுக்கேற்ற அடிப்படையில் தங்களுடைய செயற்பாடுகளைக் கருத்தாக்கம் செய்து, தங்கள் பழக்க வழக்கங்களைச் செப்பம் செய்யவும் ஃபிரெஞ்சு மக்களைப் பின்பற்றவும் செய்தனர். இந்தத் துறையில் எதனையும் சாதிக்கத் தவறிவிட்ட மேல்தட்டு வர்க்கத்தினரை இவர்கள் எள்ளி நகையாடினர். மேல்தட்டு வர்க்கத்தினருக்கு எதிரான அவர்களின் விவாதம் 'kulture/ zivilization' என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டது. "கலை , அறிவியலின் மூலமாக நாம் பண்படுத்து கின்றோம்; பல்வேறு அருள் திறங்களையும், பல மெருகேறிய ஒழுகலாறுகளையும் அடையப்பெற்று நாம் நாகரிகமடைகிறோம்" என்று இம்மானுவேல் கான்ட் எழுதினார். ஜெர்மானியச் சிந்தனையாளர்கள் மேல்தட்டு வர்க்கத்தினரிடமிருந்து தங்களையும், தங்களுடைய நிலைப்பாட்டையும், தங்களுடைய சாதனைகளையும் வேறுபடுத்திக் காட்ட 'Kultur' என்ற பதத்தைப் பயன்படுத்தினர்.

இந்த முறையில் ஜெர்மன் சிந்தனையாளர்களின் சூழ்நிலை ஃபிரெஞ்சுக்காரரிடமிருந்து முக்கியமாக வேறுபட்டிருந்தது. ஃபிரான்சிலும் கூட ஓர் எழுச்சிமிக்க சிந்தனையாளர் கூட்டம் இருந்தது. இவர்களுள் வால்டேரும், டியூடெராட்டும் அடங்குவர். ஆனால் இவர்கள் பாரிசிலிருந்த அரசவைச் சமூகத்தால் ஈர்த்துக் கொள்ளப்பட்டுவிட்டனர். ஆனால் ஜெர்மன் சிந்தனையாளர் அரசவை வாழ்க்கையிலிருந்து ஒதுக்கப்பட்டனர். ஆதலின் ஜெர்மானியச் சிந்தனையாளர் தம் வாழ்க்கையின் நிறைவை ஆராய்ச்சி, அறிவியல், தத்துவம், கலை என்ற புலங்கள் அடங்கிய 'பண்பாடு' (kultur) என்ற புலத்தில் தேடத் தொடங்கினர்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மனுக்குலத்தின் வளர்ச்சி பற்றிய உலகளாவிய வரலாற்று நூல்களிற் பண்பாடு என்ற பதம் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டது. ஜெர்மானிய இலக்கியங்களிற் குறிப்பாக இவ்வழக்கு, பெரிதும் வழங்கப்பட்டது. சான்றாக அடெலுங் , ஹெர்டர், மெய்னர்ஸ், ஜெனிக் போன்றோரின் நூல்களைக் கூறலாம். 1782 இல் எழுதப்பட்ட அடெலுங் என்பவரின் நூலில் 'பண்பாட்டு வரலாறு' (Cultur-Geschichte) என்ற சொல் முதன் முதலாகக் காணப்பட்டது. இந்த வரலாறுகளில் 'பண்பாடு' என்ற பதம் பேணி வளர்த்தல் (Cultivation) என்ற பொருளிற் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. ஒருவன் அல்லது ஒருவகை மக்களின் உடல் சார்ந்த மற்றும் ஆன்மீகம் சார்ந்த பண்புகளை மேம்படுத்துதல் என்ற பொருளில் வழங்கப்பட்டது.

இவ்விடத்திற் பண்பாடு என்ற சொல் எவ்வாறு தமிழிலில் ஆய்வுகளுக்குள் வந்து சேர்ந்தது என்று அறிந்துகொள்வது நல்லது[1]. இது குறித்துப் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடும் கருத்து வருமாறு:

> சாதாரண எழுத்து வாசிப்புப் பயிற்சியுடைய தமிழர் எவராயினும் அவரது அன்றாட சமூக ஊடாட்டத்தின் பொழுது நிச்சயமாகக் கேட்கும். பயன்படுத்தும் முக்கிய தொடர்களில் "தமிழ் பண்பாடு" என்பதும் ஒன்று. சினிமா, வானொலி, செய்தித்தாள்கள் ஆகிய பல்வேறுபட்ட வெகுசனத் தொடர்புச் சாதனங்களில், தமிழ் மக்களின் ஈடுபாடுகளை, விருப்பு வெறுப்புகளை, சார்பு சார்பின்மைகளைச் சுட்டுவதற்கு இத்தொடர் பெரிதும் பயன்படுகிறது. இவ்வாறு பார்க்கும், கேட்குமிடம் எங்கணும் நீக்கமற நிறைந்துள்ள இத்தொடரில் வரும் பண்பாடு என்னும் சொல் ஏறத்தாழ கடந்த 50 ஆண்டுகளாக மாத்திரமே வழக்கிலுள்ளது என்ற உண்மை பலருக்கு ஆச்சரியத்தைத் தரலாம். 1926–31 இல் தயாரிக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழக லெக்சிக்கனில் அச்சொல் இல்லை. ஆங்கிலத்தில் 'Culture' எனக் குறிப்பிடப்பெறும் சொல்லை 'கலாச்சாரம்' என்று கூறும் ஒரு மரபு இருந்தது. டி.கே. சிதம்பரநாத முதலியார்தான் Culture எனும் ஆங்கிலச் சொல்லுக்குப் பண்பாடு என்னும் பதமே பொருத்தமானதென மொழிபெயர்ப்புச் செய்தார். அது நிச்சயிப்புச் சொல் தான் என வையாபுரிப்பிள்ளை கூறுவார்.
>
> வழக்கில் வந்த ஐம்பது வருடங்கள்தான் ஆகியுள்ளது என்றால் பண்பாட்டைக் குறிப்பிட முன்னர் நியமமான தமிழ்ச்சொல் இருக்கவில்லையா என்ற வினா எழும்புகின்றது. திருக்குறளில் வரும் 'சால்பு' எனும் சொல் ஓரளவு இக்கருத்தைத் தரக்கூடியது. இன்னுமொரு உண்மையுண்டு. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மானிடவியல், சமூகவியல் ஆகிய புலமைத்துறைகளின் வளர்ச்சியின் பின்னரே சமூக அசைவாக்கங்களை ஆராய்ந்து அவற்றின் உள்ளீடாக உள்ளவற்றைப் பிண்டப்பிரமாணமாக எடுத்துக் கூறும் மரபு வளர்ந்தது.
>
> ஆனால் இன்று தமிழ்பண்பாடு என்பது நமக்குச் சீவாதாரமான ஒரு தொடராகியுள்ளது. பக்தி இலக்கியம் முதல் பகுத்தறிவு இலக்கியம் வரை பரதநாட்டியம் முதல் தெருக்கூத்து வரை கோபுரம் முதல் கொட்டகை வரை திருத்தக்கதேவர் முதல் வீரமாமுனிவர் வரை, சாத்தனார் முதல் உமறுப்புலவர் வரை பலவற்றையும், பலரையும் இணைத்து ஒருமை காண்பதற்கு இத்தொடர் உதவுகின்றது.
>
> தமிழ்ப்பண்பாடு என்னும் இந்தச் சொற்றொடரின் முக்கிய பயன்பாடு யாது? மதங்களையோ, தனித்தனிக் குழும வேறுபாடுகளையோ ஊடறுத்து நிற்கும் தமிழ்மொழி தரும் ஒருமைப்பாட்டின் – பண்பு நிலைப்பாட்டினைக் குறிப்பிடு வதற்கு இது பயன்படுகின்றது. (1994:1–2)



இந்தத் தொடக்கக்கால வரலாற்றுகளிற் பலரும் அறிந்த ஒன்று யோகான் காட்ஃப்ரீட் வான் ஹெர்டர் (Johan Gottfried Von Herder) எழுதிய நான்கு தொகுதிகளைக் கொண்ட நூலாகும். இத்தொகுதிகள் 1784–91க்கும் இடையே பதிப்பிக்கப்பட்டன. ஹெர்டர் தம்முடைய சமகாலத்தவர் சிலரின் கருத்துக்களுக்கு இந்த விரிவான நூலில் அழுத்தம் கொடுத்திருந்தார். இருந்தபோதிலும் உலகளாவிய வரலாறுகள் என்ற முறையில் எழுதப்பட்ட பல நூல்களின் இனமையவாதப் பண்பை விமர்சனத்திற்குட்படுத்தினார். தம் கருத்துக்களைத் தவறாகப் புரிந்துகொண்டதாக அவர் கருதினார். அதனால் அவர் 'Outlines of a Philosophy of the history of man' என்ற தம்முடைய நூலில் அவர்களுக்குப் பதில் அளித்தார்.

பண்பாடு என்பதைப் 'பண்பாடுகள்' (cultures) என்று பன்மைப் பொருண்மைகளில் பேச விரும்பினார், ஹெர்டர் பல்வேறு குழுக்கள், தேசங்கள், காலங்கள் ஆகியவற்றின் குறிப்பிட்ட பண்புக்கூறுகள் பற்றிக் கவனம் செலுத்தி ஆய்வு செய்ய வேண்டுமென்றார். 'பண்பாடு' பற்றிய இந்தப் புதிய பதம் அதன் பின்னர் கஸ்ட்டாவக்ளெம், இ.பி. ரெய்லர் என்போராலும், 19ஆம் நூற்றாண்டிற் சிலராலும் எடுத்து விரிவாக்கம் செய்யப்பட்டது. இவர்களுடைய இனவரைவியல் எழுத்துக்கள் மானிடவியல் வளர்ச்சிக்கு ஒரு தூண்டுதலாக அமைந்தன.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யிலும் தோன்றி வெளிப்பட்ட, முக்கியமாக ஜெர்மனியத் தத்துவவியலர்களாலும், வரலாற்றாசிரியர்களாலும் பேசப்பட்ட கருத்தாக்கத்தைச் செவ்வியல் கருத் தாக்கம் என்றழைக்கலாம். அதனைச் சற்று விரிவாக பின்வருமாறு வரையறுக் கலாம்: மானுட வினைத்திறன்களை, வளர்த்து மேம்படுத்தும் ஒரு படிமுறை பண்பாடாகும். இது புலமையும், கலைத்திறமும் வாய்ந்த படைப்புக்களைத் தன்வயப்படுத்தி உருவாக்கப்பட்ட படிமுறையாகும். இப்படிமுறை நவீன சகாப்தத்தின் முற்போக்குப் பண்போடு இணைக்கப்பட்டதாகும். உயர்ந்த விழுமியங்களையும் பண்புகளையும் பேணி வளர்த்தல், புலமைத் திறத்தையும், கலைத்திறத்தையும் மேம்படுத்துவதற்குரிய அதன் திறமும் வாய்ந்த எடுத்துக் கொண்ட புத்தொளிக் காலக்கருத்தாகிய முற்போக்கு என்பவை இச்செவ்வியற் கருத்தாக்கத்தின் பண்புகளாகும். பண்பாடு பற்றிய இச்செவ்வியற் கருத்தாக்க

இயல்புகள் எல்லாம் இன்றும் மறைமுகமாக அன்றாடப் பேச்சு வழக்கிலும் காணப்படுகின்றன. இருப்பினும் மானிடவியற் புலத்தின் தோற்றத்தோடு, பண்பாடு என்ற சொல்லின் பொருண்மையில் முக்கியமான தொரு மாற்றம் ஏற்பட்டது. இனவரைவியல் விளக்கங்களோடு பண்பாடு என்பது தொடர்புறுத்தப் பட்டது. மனத்தையும் ஆன்மாவையும் மேம்படுத்தல் என்ற பொருளைவிட்டு விலகி ஐரோப்பியர் அல்லாத மற்றவர்களின் பழக்கங்களை, வழக்கங்களை, நம்பிக்கைகளைப் படிப்பதில் அக்கறை காட்டத் தொடங்கிற்று.

**பண்பாடு பற்றிய மானிடவியற் கருத்தாக்கங்கள்**

மானிடவியற் புலத்தின் வளர்ச்சியோடு நெருங்கிய தொடர்புடையது பண்பாடு என்ற கருத்தாக்கம். மானிடவியலின் முதன்மையான பிரிவுகளுள் ஒன்று பண்பாடு பற்றிய ஒப்பீட்டுப் பிரிவாகும். மானிடவியல் ஆய்வுகளின் நடுநாயகமான கருத்தாக்கம் என்ற முறையிற் பண்பாடு என்ற கருத்தாக்கம் பல்வேறு முறைகளிற் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அது பல்வேறு எடுகோள்களுடனும் அணுகுமுறைகளோடும் தொடர்புறுத்தப்பட்டுள்ளது. குரோபரும், குளுக்கானும் 160 வரையறைகளை எடுத்து விமர்சித்திருப்பதாக மெல்வில் ஹெர்ஸ்கோவைட் 1995 இல் பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology) என்ற நூலிற் குறிப்பிடுகிறார்.

அதன் பின்னர் 1960 களிலும் 70களின் தொடக்கத்திலும் பண்பாடு பற்றிய கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்டோர், பண்பாடுகள் என்பவை குறியீடுகள், அவற்றின் அர்த்தங்கள் பற்றிய ஒழுங்கமைப்புகள் என்ற முறையில் ஆராய்ந்தனர். இந்த ஆய்வு பண்பாட்டு மானிடவியலிற் புதியதோர் புலத்திற்கு வழிவகுத்தது. அது பண்பாட்டு மானிடவியலின் நோக்கங்கள் வழிமுறைகள் ஆய்வுப் பொருள்கள் மற்றும் ஏனைய புலங்களோடு அதற்கிருந்த உறவையும் மாற்றியமைத்தது. இந்தக் குறியீட்டியற் கருத் தாக்கத்தை முன்மொழிந்த மானிடவியல் அறிஞர்கள் புதிதாகத் தோன்றிய மானிடவியல் புலங்களுக்கு வெவ்வேறு பெயர்களைச் சூட்டினர்.

மானிடவியற் கல்விப்புலத்தில் உடற்கூற்று மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், தொல்பொருளியல், மொழியியல் என்று நான்கு பிரிவுகள் இருந்தன. அமெரிக்காவிற் பண்பாட்டு மானிடவியல் என்று குறிப்பிடப்பட்ட ஆய்வு, இங்கிலாந்தில் சமூக மானிடவியல் என்று குறிப்பிடப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் அறிவுபூர்வமான வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்தது மொழி



பற்றிய ஆய்வாகும். இந்த ஆய்வு மனுக்குலத்தை அறிதற்குரிய வழிகளையும், சமூக வரலாற்றையும், எப்படி ஒரு சமூகம் சட்டதிட்டங்களைக் கொண்டு செயற்படுகிறது என்பதற்கான வழிகளையும் திறந்துவிட்டது. மொழி பற்றிய இந்த ஆய்வுகள் மொழியியல் என்று அழைக்கப்பட்டது. கருத்துப்புலப்படுத்தும் வழிபற்றிய எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஓர் அறிவியலை உருவாக்க அடித்தளமிட்டவர் சசூர். அந்த அறிவியலுக்கு அவர் குறியியல் என்று பெயரிட் டார். இந்த மாபெரும் புரட்சி சமூக அறிவியல் புலங்கள் எல்லாவற்றிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திற்று. குறிப்பாக, மானிடவியற் புலத்தில் நல்ல மாற்றங்களை மேற்கத்திய உலகில் ஏற்படுத்திற்று. இன்று குறிப்பிட்ட ஒரு கருத்தாக்கம், குறிப்பிட்ட புலத்திற்கு மட்டுந்தான் உரியது என்று துல்லியமாக யாரும் குறிப்பிடமுடியாது. எல்லா ஆய்வுகளும் பல்துறை இணைவு ஆய்வு களாகவே மலர்ந்துள்ளன. இந்த நிலையில் மானிடவியற் புலத்தில் நடந்த சில மாற்றங்களைச் சுட்டுவோம்.

லெவிஸ்ட்ராஸ் இதனை 'அமைப்பிய மானிடவியல்' என்றும், குறியியல் என்றும் குறிப்பிடுகிறார். வீபர் டில்த்தே, சூட்ஸ் போன்றோரின் கருத்துக்களை விரித்து அதனைப் 'பொருள்கோள் மானிடவியல்' என்று கிளிஃபோர்டு கீர்ட்ஸ் அழைக்கிறார். ஸ்னைடர் 'ஒரு பண்பாட்டு விபரம்' (A Cultural Account) என்று அழைக்கிறார். பீக்காக் என்பவரும், அவருடைய நண்பர்களும் 'குறியீட்டு மானிடவியல்' என்று குறிப்பிடுகின்றனர். விக்டர் டர்னர் 'ஒப்பீட்டுக் குறியீட்டியல்' என்று பெயர் சூட்டுகிறார்.

இந்தப் பதம் குறித்த இந்த மரபுவழி வழக்கைச் செவ்வியற் கருத்தாக்கம் என்று கூறலாம். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மானிடவியற் கல்விப் புலத்தின் தோற்றத்தால் செவ்வியற் கருத்தாக்கம், பண்பாடு பற்றிய பல்வேறுபட்ட மானிடவியற் கருத்தாக்கங்களுக்கு இடமளித்தது. மானிடவியற் கருத்தாக்கங்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒருவகைக் கருத்தாக்கத்தை விளக்கமுறைக் கருத்தாக்கம் என்றும், மற்றொரு வகையைக் குறியீட்டியக் கருத்தாக்கம் என்றும் அழைக்கலாம்.

**விளக்கவியற் கருத்தாக்கம்:**

பண்பாடு பற்றிய விளக்கவியற் கருத்தாக்கங்களை 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வரலாற்று ஆசிரியர்களிடையே காணலாம். இவர்கள்

ஐரோப்பியர் அல்லாத சமூகங்களின் இனவரையியல் ஆய்வில் அக்கறை காட்டினார். இவர்களுள் மிகவும் முக்கியமானவர் கஸ்டாவ் கிளெம் என்பவர். பண்பாடு பற்றிய இவருடைய பத்துத் தொகுதிகள் 1843–1852 ஆம் ஆண்டுகட்கிடையே வெளியிடப்பட்டன. உலகம் முழுவதும் இருந்த இனக் குழுவினரின் வழக்கங்கங்கள், திறமைகள், கலைகள், கருவிகள், போர்ப் படைக்கலங்கள், சமய வழக்கங்கள் எல்லாவற்றையும் ஆய்ந்து மனுக்குலத்தின் படிப்படியான வளர்ச்சியை முறையாகவும், விரிவாகவும் அளிக்க முயன்றார். கிளெம்மின் எழுத்துக்களை ரெய்லர் அறிந்திருந்தார். ரெய்லர் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் மானிடவியற் பேராசிரியராக இருந்தார். அவருடைய முக்கியமான நூலாகிய 'தொல் பழங்குடிப் பண்பாடு' (Primitive Culture) 1871ஆம் ஆண்டு இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. ஆங்கிலச் சூழ்நிலையிற் 'பண்பாடு', 'நாகரிகம்' என்பவற்றிற்கிடையேயான வேறுபாடு ஜெர்மனியில் இருந்ததைப்போன்று இங்கிலாந்திற் குறிப்பிட்டுச் சுட்டக்கூடியதாக இல்லை. ரெய்லர் இப்பதங்களை ஒன்றுக்கொன்று மாற்றீடாக வழங்கினார். 'தொல் பழங்குடிப் பண்பாடு' நூலின் தொடக்கத்தில் அவர் பின்வரும் வரையறையைக் கூறியுள்ளார்.

> "அறிவு, நம்பிக்கை, கலை, அறங்கள், சட்டம், வழக்கம் மற்றும் மனிதன் சமூகத்தின் ஓர் உறுப்பினன் என்ற முறையில் அடையப்பெற்ற எல்லாத் திறமைகளையும், பழக்கங்களையும் உள்ளடக்கிய கலவையான முழுமையே, விரிந்த இனவரையியல் நோக்கிற் பார்க்கும்போது, பண்பாடு அல்லது நாகரிகமாகும். பொதுவான விதிகளின்படி பண்பாடு என்பதை ஆய்வுசெய்ய முடியும் என்ற நிலையில் மனுக்குலத்தின் பல்வேறுபட்ட சமூகங்களிடையே பண்பாட்டு நிலை பற்றிய ஓர் ஆய்வு மானுடச் சிந்தனையையும் செயலையும் பற்றிய சட்டங்களைப் படிப்பதற்குரிய பொருத்தமான பொருளாகும்" (1903:1).

பண்பாடு பற்றிய விளக்கவியற் கருத்தாக்கத்தின் முக்கியக் கூறுகளை ரெய்லரின் வரையறை கொண்டுள்ளது. இந்தக் கருத்தாக்கத்தின்படி நம்பிக்கைகள், வழக்கங்கள், சட்டங்கள், அறிவின் வடிவங்கள், கலைவடிவங்கள் போன்ற தொடர்புடைய எல்லாவற்றையும் உள்ளடக்கியது பண்பாடு. அதனை அறிவியல் அடிப்படையிற் படிக்கலாம் என்பது இந்தக் கருத்தாக்கமாகும். இந்த நம்பிக்கைகள், வழக்கங்கள் போன்றவை ஒரு கலவையான முழுமையாகும். இந்த முழுமை ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்குரிய பண்பாகும். இப்பண்பு அச்சமூகத்தைப் பல்வேறு காலகட்டங்களிலும், இடங்களிலும் அமைந்த மற்ற சமூகங்களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டும். ரெய்லரின் கருத்துப்படி பண்பாடு பற்றிய ஆய்வின் நோக்கம் இந்த முழுமைகளை அவற்றின் உறுப்புப்பகுதிகளாகப் பிரித்து, வகைப்படுத்தி ஒழுங்குமுறையாக ஒப்பிட்டுப் பார்ப்பதாகும். இது தாவரவியலரும், விலங்கியலரும் மேற்கொண்டதைப் போன்ற பணியாகும்.

ரெய்லரின் கருத்தாக்கம், அணுகுமுறை அடிப்படையிற் பல எடுகோள் களைக் கொண்டது. அறிவியல் அடிப்படையில் முறையாகப் படிக்கப்பட வேண்டிய ஒன்று பண்பாடு என்பது அவரது கருத்து. ஆனால் முந்தைய செவ்வியற் கருத்தாக்கங்கள் முதன்மையான மனித இனநலக் கோட்பாடு சார்ந்தது. ஆராய்ச்சியின் மூலமும், கலை வடிவங்களின் மூலமும் மானுடத் திறமைகளை வளர்த்தெடுத்து மேம்படுத்தும் நோக்கும் போக்கும் கொண்டது. இந்த விளக்கவியற் கருத்தாக்கம் வளர்ந்துவரும் ஒரு கல்விப்புலத்தின் மூல ஆதாரமாகக் கருதப்பட்டது. இந்தக் கல்விப்புலம் ஆய்வு வகைமைப்படுத்தும் ஒப்பீடு என்ற முறையிற் பல பண்பாடுகளைக் கட்டமைக்கும் கூறுகள் பற்றிய கல்வியின் அடிப்படையாகப் பண்பாடு என்பதைக் கருதியது. ஆனால் "பண்பாடு என்ற கருத்தாக்கம்" பற்றிய இந்த அறிவியலாக்கம் முன்னேற்றம் என்ற பழைய கருத்திற்குக் கொடுத்த அழுத்தத்தை ஒதுக்கிவிடவில்லை. ஆனால் இந்தக் கருத்து ஒரு பரிணாமச் சட்டகத்திற்குள் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. இதனை ரெய்லரின் நூலில் வெளிப்படையாகக் காணலாம்.

ரெய்லரைப் பொறுத்தவரை, வேறுபட்ட சமூகங்களின் பண்பாட்டு நிலைப்பாடுகள் வளர்ச்சியின் கட்டங்கள் அல்லது பரிணாமக் கட்டங்கள் என்று கருதினார். ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் முந்தைய வரலாற்றின் விளைவு என்றும், அக்கட்டம் அதன் சரியான பங்கை அடுத்த எதிர்காலக் கட்டத்தைச் செப்பம் செய்வதற்கு உதவும் என்றும் அவர் நம்பினார். ஆய்தல், வகைமைப்படுத்தல் என்பவற்றோடு மானுட உயிரியின் வளர்ச்சியை மீட்டுருவாக்கம் செய்வது குறித்துப் பண்பாட்டு ஆய்வுகள் கவனம் செலுத்த வேண்டும் என்று ரெய்லர் விரும்பினார். அதாவது விலங்காண்டி நிலையிலிருந்து நாகரிக நிலையை மனிதன் அடைந்த கட்டங்களை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்று அவர் கருதினார். ஆதலின் 'பண்பாட்டின் எச்சம்' (survival in culture) என்பது ரெய்லரின் முன்னீடுபாடாகும். தற்காலத்தில் நிலைத்து நிற்பவை முந்தையப் பண்பாட்டு வடிவங்கள் என்றும், சமகாலப் பண்பாட்டின் தொடக்க நிலைக்கும், காட்டாண்டி நிலைக்கும் அவை சான்று பகர்கின்றன என்றும் அவர் கருதினார்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலவிய பொதுவான அறிவுச் சூழ்நிலைக்கு அறிவியல் அடிப்படை சார்ந்ததும், பரிணாமமுறை சார்ந்ததுமான ரெய்லரின் எழுத்துக்கள் ஒத்ததாக அமைந்திருந்தன. இயற்கை அறிவியல்களின் அணுகுமுறைகள் புதிய ஆய்வுப்புலங்களில் தழுவிக்கொள்ளப்பட்டன. அப்பொழுது டார்வினின் தாக்கம் பரவலாகக் காணப்பட்டதால் இந்த ஆய்வுமுறை மானிடவியலிற் தழுவிக் கொள்ளப்பட்டது. பின்னர் வந்த மானிடவியலாளர்களின் ஆய்வுகளில் ரெய்லரின் ஆய்வில் வலியுறுத்தப்பட்ட கருத்துக்கள் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டன அல்லது வேறுவகையான அக்கறைகளால் இவை சற்று இடம் மாற்றப்பட்டன.

இவ்வாறாக 1930 களிலும் 1940 களிலும் எழுதிய மாலினோவ்ஸ்கி பண்பாடுபற்றிய ஓர் அறிவியல் கோட்பாட்டைத் தழுவிக்கொண்டார். மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பரிணாம நோக்கைப் பின்பற்றினார். ஆனால் பண்பாடு பற்றிய ஒரு செயற்பாட்டு அணுகுமுறையை வளர்த்தெடுக்க வேண்டுமென்பது அவருடைய முதன்மையான நோக்கமாக இருந்தது. இந்தக் கோட்பாட்டிற் பண்பாட்டு நிகழ்வுகள் மானுடத் தேவைகளை நிறைவு செய்பவை என்ற அடிப்படையில் ஆய்வு செய்யமுடியும். இது விளக்கவியற் கருத்தாக்கத்தின் மற்றொரு வடிவமாகும். மானுட உயிர்கள் இருவகையில் வேறுபட்டவை என்கிறார் மாலினோவ்ஸ்கி. முதலாவதாக அவர்கள் உடல் சார்ந்த அமைப்பிலும், உடற்கூறுப் பண்புகளிலும் வேறுபடுகின்றனர். இந்த வேறுபாடுகள் பற்றிய ஆய்வு உடற்கூற்று மானிடவியலரைச் சார்ந்ததாகும். அவர்கள் தத்தம் சமூக மரபுரிமையிலும், பண்பாட்டிலும் வேறுபடுகின்றனர். இந்த வேறுபாடுகள் பற்றிய ஆய்வுதான் பண்பாட்டு மானிடவியலரின் முதன்மையான அக்கறையாகும்.

> “மரபுரிமையாகப் பெற்ற கலைப்படைப்புக்கள், பொருள்கள், தொழில்நுட்பப் படிமுறைகள், கருத்துக்கள், பழக்கங்கள், விழுமியங்கள் போன்றவற்றை உள்ளடக்கியது பண்பாடு... பண்பாடு என்பது தனித்தன்மை வாய்ந்த ஒரு யதார்த்தமாகும். அதனைத் தனித்தமுறையிற்றான் படிக்க வேண்டும்”

என்கிறார் மாலினோவ்ஸ்கி (1931 : 621–23) சமூக மரபுரிமைகளை அதன் உறுப்புக் கூறுகளாகப் பிரிக்க வேண்டும்: பின்னர் அவற்றை ஒன்றோடொன்றாக இணைத்து உறவுபடுத்த வேண்டும். சூழலோடு உறவுபடுத்த வேண்டும். மானுட உயிரிகளோடு உறவுபடுத்த வேண்டும்; இதுவே பண்பாட்டு ஆய்வின் பணியாகும். பண்பாட்டு நிகழ்வுகளின் செயற்பாடுகளைப் பற்றி ஆய்தல், மானுடத் தேவைகளை அவை நிறைவு செய்யும் வழிமுறைகள் பற்றி ஆய்தல் போன்றவை



சமூக வளர்ச்சி பற்றியும் பரிணாம வளர்ச்சித் திட்டங்களின் கட்டங்களை உருவாக்குதற்கு முன் முயற்சியாக அமைய வேண்டும் என்பது மாலினோவ்ஸ்கி யின் கருத்து.

ரெய்லர் மாலினோவ்ஸ்கி போன்றோரின் பண்பாடு பற்றிய கருத்தாக்கங்களில் பெரிதும் வேறுபாடுகள் காணப்படவில்லை. ஆனால் பண்பாடு பற்றிய ஆய்வு எவ்வாறு நிகழ்த்தப்பட வேண்டும் என்பதிலேயே கருத்து வேறுபடுகின்றனர். பரிணாம வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட வேண்டுமா? செயற்பாட்டு ஆய்வு முறைக்கு முதன்மையளிக்க வேண்டுமா? என்பதே இவர்களின் அக்கறையாகும்.

### 1. இயற்கையிலிருந்து வேறுபட்டது பண்பாடு:

பண்பாடு என்பது சிலவற்றைக் கற்றுக் கொள்வதனால் வந்து சேர்வது, பரப்பப்படுவது. ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குக் கடந்து வந்தடைவது என்பது பொதுவானதொரு கருத்து. மானுடச் செயல்கள் பெரும்பாலும் நேரடியான ஊடாட்டத்தின் மூலமாகவும், மொழியியற் கருத்துப் புலப்படுத்தத்தின் வழியாகவும் வந்தடைவன. மானுடக் குழந்தையொன்று தான் பிறந்த மரபியற் பாரம்பரியத்தை விட்டுத் தன்னை வளர்த்தவர்களின் பண்பாட்டுத் தோரணிகளை ஏன் பின்பற்றுகிறது என்பதனை அடிப்படையாகக் கொண்டு இந்த விளக்கம் அளிக்கப்படுகிறது. தன்னுடைய இரத்த உறவிலிருந்து பிரிக்கப்பட்டு வேறொரு சமூகத்தில் வளர்க்கப்படும் ஒரு குழந்தை தன்னைத் தத்தெடுத்துக் கொண்ட வளர்ப்புப் பெற்றோரின் சமூகத்தைச் சார்ந்த ஒரு உறுப்பினராகவே வளரும். மொழி, சமூகவயமாக்கம் ஆகியவற்றின் காரணமாக வளர்ப்போரின் பண்பாட்டையே அக்குழந்தை தன்னுடையதாக அமைத்துக் கொள்ளும். இது குறித்து ஒஸ்வால்ட் என்பவரின் கருத்து வருமாறு (1986:25)

> “மானிடவியலிற் பண்பாடு என்பது ஒரு மக்கட் குழுவினரின் நடத்தைத் தோரணிகளைக் கற்றுப் பகிர்ந்து கொள்வதாக அமையும். உங்களுடைய பண்பாடு என்பது உங்களுடைய உறவினர்களிடமிருந்தும், உங்கள் குழுமத்தைச் சார்ந்த ஏனையோரிடமிருந்தும் கற்றுக்கொள்வதாகும். இதைப்போன்று புத்தகங்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற வடிவங்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளப்படுவது. நீங்கள் பண்பாட்டோடு பிறக்கவில்லை; உற்றுக் கவனித்தல், போலச்செய்தல் வழியாகக் கற்றுக்கொள்ளும் திறமையோடு பிறக்கிறீர்கள்”

ஆனால் இதற்கு மாறாக மானுட நடத்தை 'இயற்கையின் படைப்பு' என்ற கருத்தும் நிலவிவந்தது. இந்த இயற்கை x வளர்ப்பு (nature x nurture) என்ற எதிர்வுகள் ஆய்வாளர்களை இரு பிரிவினராக வேறுபடுத்தி மானுடரைச் சிறப்புத் தன்மை வாய்ந்தவராக்கியது எது? என்ற ஆய்வில் ஈடுபட வைத்தது. இதற்கு மொழியை அறிவதைக்கொண்டு அறிஞர்கள் விடையளிக் கின்றனர். ஒரு குழந்தை தான் வளரும் சூழலில் அங்கு பேசப்படும் மொழியை, ஒலிகளைக் கேட்டறிவதன்மூலம் பெற்றுக்கொள்கிறது. தொடர்ந்த பல சிக்கலான கருத்துக்களை வெளிப்படுத்துகிறது. பிறவியிலேயே காது கேளாத குழந்தைகள் சைகைக் குறிகளின்மூலம் கற்றறிந்து, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் திறத்தைப் பெற்றுள்ளனர். மொழியைக் கற்பதும், பல்வேறு முறைகளில் இயற்கையும் பண்பாடும் ஊடாட்டம் செய்து மொழிகளை உற்பத்தி செய்வது மானுடரின் தனித்தன்மையாகும் என்பது தெளிவு.

இயற்கைக்கும், பண்பாட்டுக்கும் உள்ள முரண்பாடு பற்றிய கருத்து அமெரிக்க மானிடவியலுக்கு ஜெர்மனியில் பிறந்த பிரான்ஸ் போவாசால் கொண்டுவரப்பட்டது. அவர் இம்மானுவெல் கான்ட்டின் தத்துவத்தினாலும், அதேபோல் 19ஆம் நூற்றாண்டின் கருத்து முதல்வாதத் தத்துவவாதிகளாலும் தாக்கம் பெற்றவர். "நம்முடைய அறிவாற்றல் உலகத்தை அறிந்து கொள்வதற் குரிய ஒரு முக்கியமான சக்தியாகும்" என்ற கருத்தை போவாஸ், கான்ட்டிடமிருந்து பெற்றுக்கொண்டார். கான்ட் தாம் கற்பித்த கருத்துக்களை எல்லாம் தொகுத்து "மானிடவியற் பயன்வழியியல் நோக்கில்" (Anthropology from a pragmatic perspective') என்ற நூலை எழுதினார். அதில் அவர் மானுட உடற் செயலியலைக் கட்டுப்படுத்தும் இயற்கை விதிகளுக்கு மாறாக மானுடன் தன்னுடைய சுதந்திர உணர்வினால் என்ன செய்கிறான் என்பதைப் பற்றிய ஆய்வே மானிடவியல் என்று (கான்ட்) வரையறுத்தார். இந்த வரையறை, பண்பாடு பற்றிய கான்ட்டின் எண்ணத்தினால் உருவாக்கப்பட்டது. அதாவது இடுகுறித்தன மான முடிவுகளை உருவாக்கும் சக்தி என்பதனின்றும் இவ்வரையறையை அவர் உருவாக்கினார். இதனை மேலும் வளர்த்தெடுத்தவர் ஹெகல் ஆவார். அவர் "மனத்தின் நிகழ்வுவாதம்" (Phenomenology of the mind) என்ற நூலில் இது குறித்து விரிவாக எழுதினார். 'பண்பாடு' என்பது இயற்கை அல்லது உயிரியல்சார் பண்பிலிருந்து விலகிநிற்பது என்று ஹெகல் வரையறுத்தார். பொருள்களை நம்முடைய பார்வையின் எல்லைக்குட்பட்டுப் பார்ப்பதிலிருந்து விலகி மற்றவர் களின் நோக்கிலிருந்து பார்ப்பது என்று கூறினார்.



## 2. பண்பாடு என்பது அறிவு

'பண்பாடு என்பது அறிவு' என்றால் உலகைப் பற்றிய அறிவு என்ற அடிப்படையிற்றான் சிந்திக்க வேண்டும். ஒரு பண்பாட்டின் உறுப்பினன் சில உண்கைமகளை அறிந்திருக்க வேண்டும். சில பொருள்களையும், இடங்களையும், மக்களையும் அடையாளம் காணத்தெரிந்திருக்க வேண்டும். மேலும் சில சிந்தனைத் தோரணிகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். அனுமானங்களையும் முன்னறியும் முறைகளையும் கொண்டு உலகை அறிந்து கொள்ளும் முறைகளைத் தெரிந்திருக்க வேண்டும். பண்பாட்டின் அறிதல் சார் கருத்து ஒன்றைப் பற்றி வார்டு கூடெனொ என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்.

> "ஒரு சமூகத்தின் உறுப்பினர்களுக்கு ஏற்றமுறையில் நடந்துகொள்வதற்காக ஒருவன் அறிந்துகொள்ள வேண்டியது. நம்ப வேண்டியது எதுவாக இருந்தாலும் அதனை உள்ளடக்கியதுதான் அச்சமூகத்தின் பண்பாடாகும். மேலும் அந்தச் சமூகத்தினர் அவனைத் தங்களில் ஒருவனாக ஏற்றுக்கொள்ளும் வகையில் பங்காற்ற வேண்டியது அவனுடைய கடமையாகும். உயிரியல் அடிப்படையில் மரபுரிமையாகப் பெற்றுக் கொண்டவற்றிலிருந்து வேறுபட்டு மக்கள் எவற்றை அறிந்துகொள்ளவேண்டுமோ அதுதான் பண்பாடு. இந்த வரையறையிலிருந்து பண்பாடு என்பது ஒரு பொருள் சார் நிகழ்வன்று என்பதனை அறிந்துகொள்ள வேண்டும். பொருள்கள், மக்கள், நடத்தைகள், உணர்ச்சிகள் இவற்றையெல்லாம் உள்ளடக்கிய ஓர் ஒருங்கமைப்பு அதுவாகும். மக்கள் தங்கள் மனங்களில் கொண்டிருக்கும் பொருள்களின் வடிவமாகும். புலன்களால் உணர்வதற்கும், தொடர்புபடுத்துவதற்கும், அவற்றைப் பொருள் கொள்வதற்கும் உரிய மாதிரிகளாக அது அமையும்" (கூடெனொ 1957,1964:36) இங்கு ஒரு மொழியியல் அமைப்பு ஒப்புமை செயற்படுவதைக் காண்க.

ஒரு பண்பாட்டை அறிவது என்பது ஒரு மொழியை அறிதல் போன்றது. இவை இரண்டும் மன எதார்த்தங்கள் . மேலும் ஒரு பண்பாட்டை விளக்குவது என்பது ஒரு மொழியை விளக்குவதைப் போன்றது. இனவரையியல் விளக்கங்களின் இலட்சியம். "பண்பாட்டு இலக்கணங்களை" எழுதுவதே என்று கீசிங் (1972) குறிப்பிடுகிறார்.

பண்பாடு பற்றிய அறிதல்சார் நோக்கில் ஒரு சமூகத்தில் திறமையாகப் பங்கேற்பதற்குத் தேவையான அறிவுத் தொகுதி 'முன்மொழிவு பற்றிய அறிவு'. 'நடைமுறை அறிவு' என்ற இரண்டாகும். முன்மொழி அறிவு என்பது பூனைகளும் நாய்களும் செல்ல உயிரிகள், புகைபிடித்தல் உடல் நலத்துக்குக் கேடு பயப்பது

குழந்தைகள் பிறந்தவுடன் தவழ முடியாது என்பன போன்ற கூற்றுக்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் நம்பிக்கையாகும். இவையெல்லாம் "அதனை அறிக" (know-that) என்ற உரைக்கூற்றுகளின் வகைமாதிரிகளாகும். இத்தகையவற்றையே இன வரைவியலர் தகவலாளிகளிடமிருந்து வருவிக்க முனைகின்றனர். நடைமுறை அறிவு என்பது வழியறிதல் (know-how) என்ற வகைத் தகவலைக் கொண்டது. அதாவது மக்கள் எவ்வாறு தங்களின் அன்றாட வாழ்வில் தங்களுடைய வேலைகளைச் செய்கிறார்கள் என்பதையும், பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்கின்றனர் என்பதைக் கவனித்தறிந்து அனுமானம் செய்கின்றனர் என்பதையும் பற்றியது நடைமுறை அறிவாகும். ஓர் மோட்டார் வண்டியை ஓட்டுவதற்கு, அவ்வண்டியின் பல்வேறு உறுப்புக்களும் என்ன செய்கின்றன என்பதை அறிவதோடு மட்டுமல்லாமல், அதாவது எந்தக் குறிப்பிட்ட மிதியை அழுத்தினால் வேகம் கூடுகிறது. நிற்கிறது என்ற முன்மொழி அறிவையும் பெற்றிருக்க வேண்டும். அந்தத் தகவலை எப்பொழுதும், எப்படிச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் தெரிந்திருக்க வேண்டும். குறிப்பிட்ட வரிசைமுறைச் செயல்களான நடைமுறை அறிவையும் தெரிந்திருக்க வேண்டும். அதன்மூலம் வேகப்படுத்துதல், நிறுத்துதல் போன்ற குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். மேலும் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்குக் குறிப்பிட்ட செயல் தேவைப்படுகிறதா என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

1960களில் அறிதல் சார் மானிடவியலர்கள் கலைச் சொற்கள் பற்றிய ஓர் ஒழுங்கை உருவாக்குவதில் ஆர்வம் கொண்டிருந்தனர். ஓர் குறிப்பிட்ட மக்கட் குழுவினர் உலகை எவ்வாறு அறிந்துவைத்திருக்கின்றனர் என்பதனை அறிந்து கொள்வதற்குரிய வழியாக அதனைக் கருதினர்.

### பண்பாடு என்பது சமூக ரீதியாக வழங்கிவரும் அறிவு

பண்பாட்டு மானிடவியலர்கள், பண்பாட்டு உளவியலர்களின் அண்மைக் காலப் படைப்புகளில் (லாவ், வென்கர்) உண்மையான வாழ்க்கைச் சூழல்களில் மக்கள் எவ்வாறு சிந்திக்கின்றனர் என்பது பற்றிய ஆய்வு வளர்ச்சி அடைந்துள்ளது. 'பண்பாடு என்பது அறிவு' என்ற முறையில் மற்றொரு பார்வையை இது நல்கியுள்ளது. இவர்களுடைய கருத்துப்படி 'அறிவு' என்பது ஒரு மனிதனின் மன இயக்கங்களில் தனித்து நிலைத்திருப்பவையல்ல. அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளை மக்கள் எவ்வாறு தீர்க்கின்றனர் என்பதை நோக்கும்போது



அறிதல் என்பது மனங்களுக்கிடையேயும், உடல்களின் செயல்கட்கிடையேயும் பரவி வழங்கிவருவது. விரிந்துகிடப்பது பிளவுபட்டதன்று. ஆனாற் பண்பாட்டு ரீதியாக ஒருங்கமைக்கப்பட்டது. 'சமூக அறிவு' பண்பாட்டு ரீதியாகப் பரவி வழங்கி வருவது என்று சொல்லும்போது அந்த அறிவை அடையும் படிமுறையில் இறுதியில் இருப்பவன் தனியன் என்பது பொருளல்ல; ஒவ்வொருவரும் அத்தகவலை அறிதற்குரிய வாய்ப்பினர் அல்லது அதே உத்திகளைத் தங்களின் இலட்சியங் களை அடைவதற்காகப் பயன்படுத்துகின்றனர். தனியனின் மனத்தினுள் இருப்பவை எல்லாம் 'அறிவல்ல' என்ற பொருளை முதற்கருத்து. குறிப்பாக உணர்த்துகிறது; ஒரு மனிதன் பயன்படுத்தும் கருவிகளிலும் அறிவு உள்ளது. அதாவது சில தீர்வுகளைக் கண்டடையும் சாத்தியப்பாடுள்ள சுற்றுச்சூழல்களில் அறிவு செயற்படுகிறது. ஒரே இலட்சியத்தைஅடையப் பாடுபடும் பல மனங்களிலும், உடல்களிலும் அது செயற்படுகின்றது: தனியர்களை ஒழுங்குபடுத்திச் செயற்படச் செய்து ஊடாடச் செய்யும் நிறுவனங்களிலும் அறிவு செயற்படுகிறது. இது எட்வின் ஹட்ச்சின்ஸ் என்ற அறிதல்சார் மானிடவியலர் எடுத்த நிலைப்பாடாகும். கடற்படைக் கப்பல் ஒன்றில் நடைபெறும் கடற் பயணப் பழக்கங்களை ஆராய்ந்தபின் அவர் பின்வரும் முடிவுக்கு வருகிறார். எவ்வாறு அறிதல் நடைபெறுகிறது என்பதை அராய்வதற்குரிய சரியான அலகு. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய சாத்தியப்பாடுகளை அளிக்கும் மானுட வளங்களையும் பொருள்சார் வளங்களையும் ஆய்வதுதான் என்ற முடிவுக்கு அவர் வருகிறார்.

### "கருத்துப் புலப்படுத்தம்" என்ற முறையிற் பண்பாடு

பண்பாடு என்பது கருத்துப் புலப்படுத்தம் என்று சொல்லும்போது, குறிகளின் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும். இது பண்பாடு பற்றிய குறியியற் கோட்பாடாகும். உலகைப் பற்றிய ஒரு பிரதிநிதித்துவம் பண்பாடாகும். கதைகள், புராணக்கதைகள், வருணனைகள், கோட்பாடுகள், பழமொழிகள், கலைத்திறன் வாய்ந்த படைப்புக்கள், நிகழ்த்துதல்கள் மூலம் யதார்த்தத்திற்கு உருவங் கொடுத்து அர்த்தமுள்ளதாக்கும் ஒருவழிமுறை பண்பாடாகும். புராணக்கதைகள், சடங்குகள், இயற்கை உலகையும் சமூக உலகையும் வகைமை செய்வன. இவை மக்களின் பண்பாட்டுப் படைப்புக்கள் ஆகும். இவை தனிமனிதர்கள், குழுக்கள் அல்லது உயிரிகள் ஆகியவற்றிற்கிடையே குறியீட்டு உறவுமுறைகளை நிறுவும் இயல்பு கொண்டவை. மக்கள் தம் ஆற்றலால் இயற்கையைத் தம் சொந்த உடைமையாக்கிக் கொள்கின்றனர் என்பது இக்கோட்பாட்டுப் பார்வையாகும்.


## லெவிஸ்ட்ராசும் குறியியல் அணுகுமுறையும்:

பண்பாடு என்பது கருத்துப்புலப்படுத்தம் என்ற கருத்துப் பலராற் சொல்லப்பட்டாலும், ஃபிரெஞ்சு மானிடவியலரான லெவிஸ்ட்ராசின் எழுத்துக்களில் எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது என்பதைக் காண்போம். எல்லாப் பண்பாடுகளும் குறிகளின் ஒழுங்கமைப்புக்களாகும். இவ்வொழுங் கமைப்புக்கள் இரட்டை எதிர்வுகளின் அடிப்படையைச் சார்ந்து உலகை வகைமைப்படுத்துகின்றன என்பது லெவிஸ்ட்ராசின் கருத்தாகும். எல்லா இடங்களிலும் மானுட மனம் ஒரே மாதிரியானதாகத்தான் இருக்கின்றது. ஆனால் சிந்தனையின் அடிப்படையான அருவப்பாட்டுத் தர்க்கப் பண்புகளைப் பல்வேறு முறைகளிற் செயற்படுத்துபவை பண்பாடுகளே. இந்தச் சிந்தனைகளையே எல்லா மானுடர்களும் பகிர்ந்து தம் வாழ்வுச் சூழ்நிலைகளுக்கேற்பத் தழுவியமைத்துக் கொள்கின்றனர் என்ற ஊகத்தை முன்வைக்கிறார் லெவிஸ்ட்ராஸ். “தொல்பழங் குடிச் சிந்தனை” பற்றிய முந்தைய கருத்தாக்கங்களுக்கு ஓரளவு எதிர்வினை யாகவும், திறனாய்வாகவும் இதனை அவர் எழுதுகிறார். அருவமான கருத்தாக்கங்களின் அடிப்படையில் நிகழும் உலகைப்பற்றிய சிந்தனைகளுக்குள் அடிப்படையான அறிதல்சார் வேறுபாடுகள் இல்லை. அருவமான சிந்தனை களுக்குச் சான்றுகளாக இயற்கணிதம், இரட்டை எதிர்வு. இயற்கையிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட (பௌதிகச் சுற்றுச் சூழல்கள், செடிகள் விலங்குகள்) குலக்குறியப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டவை. (எ.டு: கழுகுகள் x கரடிகள். நிலம் x வானம். மேலோடை x கீழோடை) ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இந்த அருவமான சிந்தனை முறைகளுக்கிடையே வேறுபாடில்லை என்பது அவர்கருத்து. மரபுவழிச் சமூகங்கள் என்று அழைக்கப் படுபவர்களின் (சான்றாக வேட்டைக்காரர், உணவு சேகரிப்போர்) சிந்தனைக்கும் தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய மேற்கத்திய மக்களின் சிந்தனை முறைகளுக்குமிடையேயான வேறுபாடுகள், தங்கள் கோட்பாடுகளைக் கட்டமைப்பதற்காகப் பயன்படுத்தும் மூல ஆதாரங்களிலேயே உள்ளன. ஏற்கனவே நிலைபெற்றிருக்கும் ஒருசில எண்ணிக்கைக்குட்பட்ட பாத்திரங்கள், உருவங்கள், கதைப்பின்னல்கள் கொண்டு தொல்பழங்குடிச் சிந்தனை புராணக் கதைகளைக் கட்டமைக்கிறது. மாறாக மேற்கத்திய அறிவியல்; புதிய கருவிகளையும், புதிய கருத்தாக்கங்களையும் படைத்துக் கொள்கிறது. சான்றாக மருத்துவர்களும் பொறியியலர்களும் தங்களுடைய தொழிலுக்கென்று தொழிலுக்கு மட்டுமே படைக்கப்பட்ட கருவிகளை வைத்துள்ளனர். ஆனால் புராணக்கதையும் அறிவியலும் ஒரே மாதிரியே வேலை செய்கின்றன.




இவ்விரண்டும் குறிகளைப் பயன்படுத்துகின்றன. மேலும் உவமைகள், ஒப்பீடுகளைக் கொண்டு செயற்படுகின்றன.

பல்வேறுபட்ட பண்பாட்டு வகைமைகளுக்கிடையேயான உறவை விளக்க மொழியியற் கோட்பாடுகளிலிருந்து லெவிஸ்ட்ராஸ் பல கருத்தாக்கங்களை எடுத்துப் பயன்படுத்தும்போது, பண்பாடு என்பது கருத்துப்புலப்படுத்தம் என்ற கருத்து, சிறப்பாக வெளிப்படுகின்றது. பண்பாட்டையும், இயற்கையையும் வேறுபடுத்த ‘ஒலிகளை அறிதல்’ என்ற ரஷ்ய மொழியியலர் ரோமன் யாக்கப்சனின் கோட்பாட்டை லெவிஸ்ட்ராஸ் விரிவாக்கம் செய்கிறார். ஒருபுறம் உயிரொலிகளுக்கும், மெய்யொலிகளுக்கும் இடையிலான ஓர் இரட்டை எதிர்வைக் கொண்டு முரண்பாடுகளின் ஒரு ஒழுங்கமைப்பினைக் கட்டமைப்பதன்மூலம் தாம் கேட்கும் ஒலிகளை மக்கள் உணரத் தொடங்கு கின்றனர். உயர்ந்த பட்ச வேறுபாடுடைய உயிரொலிகளுக்கும் (i,a,u) உயர்ந்த பட்ச வேறுபாடுடைய மெய்யொலிகளுக்கும் (p,t,k) உள்ள வேறுபாட்டை மக்கள் உணர்கின்றனர் என்கிறார் யாக்கப்சன். இதனைப் பின்வரும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.




Jacobson's vocalic triangle

‘சமைத்தல்’ என்ற உலகளாவிய செயலை உள்ளடக்கி இயற்கையைப் பண்பாட்டு அடிப்படையில் மாற்றுவது பற்றிப் பேசுவதற்கு இந்த முக்கோணத்தில் ஓர் அணுகுமுறையைக் கண்டார் லெவிஸ்ட்ராஸ், உச்சபட்சத் தனித்தன்மை வாய்ந்த உயிரொலிகள் பற்றிய யாக்கப்சனின் முக்கோணத்தைச் சமையற் கலை பற்றிய முக்கோணமாகத் தழுவியமைத்தார் லெவிஸ்ட்ராஸ் (1965) அதில் ஒலிகளுக்குப் பதிலாக உணவின் பண்பை மாற்றீடு செய்தார். மேலும் ஒலியியக்கக் கூறுகளுக்கிடையிலான எதிர்வை பண்பாட்டுக்கும், இயற்கைக்கும் இடையிலான எதிர்வாகவும், விரிவாக்கம் செய்யப்பட்டதற்கும், விரிவாக்கம் செய்யப்படாததற்கும் இடையிலான எதிர்வாகவும் மாற்றீடு செய்தார்.




ELABORATED

Levi-Strauss's Culinary triangle.

விரிவாக்கம் செய்யப்படாதது (unelaborated) விரிவாக்கம் செய்யப்பட்டது (elaborated) என்ற இருமை எதிர்வு. உணவை மாற்றும் செயல்களாகிய பண்பாடு (சமைத்தல்), இயற்கை (அழுகல்) என்பவற்றைப் பிரதிநிதித்துவம் செய்யப் பயன்படுத்தப்பட்டன. பச்சையானது (raw) என்ற வகைமை பண்பாட்டிற்கும், இயற்கைக்கும் இடையிலுள்ளது. ஏனென்றால் பச்சையான உணவுகள் சமையல் கலை மரபுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. (உணவின்போது பச்சையான பழங்கள், காய்கறிகள் பரிமாறப்படும்), ஆனால் அவை சமைக்கப்பட்டவையல்ல; பண்பாட்டினால் விரிவாக்கம் செய்யப்பட்டவையல்ல அல்லது மாற்றப்பட்டவை யல்ல.

பல்வேறுபட்ட பண்பாடுகளிலும் இத்தகைய முறையிலான இணைவுகளும், பதிலீடுகளும் காணப்படுகின்றன. வரலாற்று அடிப்படையில் தொடர்பற்ற சமூகங்களில் இத்தகைய ஒற்றுமைகள் காணப்படின் இதற்கு மானுடச் சிந்தனையின் முழுதளாவிய வகைமைகள் என்று மானிடவியலன் உணரலாம். இந்த அணுகுமுறையில் மொழியியற் கோட்பாடுகளிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட கருத்துக்கள் பண்பாட்டு ஆய்வுகளிற் பயன்படுத்தப்படலாம். ஏனென்றால், சமூகத்தின் உறுப்பினர்களின் மூலம் கருத்துப்புலப்படுத்தம் செய்யும் ஓர் ஒழுங்கமைப்பு, பண்பாடு என்று இத்தகைய ஆய்வுகளின் வழியாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது.

புராணக்கதைகளின்மூலம் மக்கள் கருத்துப் புலப்படுத்தம் செய்யவில்லை. மாறாகப் புராணக்கதைகள் தாம் மக்களின்மூலம் கருத்துப்புலப்படுத்தம் செய்கின்றன என்று லெவிஸ்ட்ராஸ் நம்பினார். இந்த நிலைப்பாடு குறித்து அவர் தம்முடைய எழுத்தைப் பற்றித் தாமே எழுதிய குறிப்பு சிறந்ததொரு கூற்றாகும்:



"மனிதனுக்கே தெரியாமற் புராணக்கதைகள் மனிதனுக்குள் சிந்தனை பெறுகின்றன என்று நான் எழுதியது உங்களுக்கு நினைவிருக்கலாம். இது பெரிதும் விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆங்கிலம் பேசும் என் தோழர்களால் பெரிதும் விமர்சிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், பட்டறிவு ரீதியாகச் சோதித்துப் பார்க்கும்போது, அது 'முற்றிலும் ஒரு அர்த்தமற்ற வாக்கியமாகும்' . ஆனால் என்னைப் பொறுத்தவரை வாழ்ந்த அனுபவம் ஒன்றை அது விளக்குகிறது. ஏனென்றால் என்னுடைய எழுத்தோடு எனக்குள்ள என் சொந்த உறவை நான் எவ்வாறு பார்க்கிறேன் என்பதைச் சரியாகச் சொல்கிறது. அதாவது என்னுடைய எழுத்துக்கள் எனக்கே தெரியாமல் எனக்குள் சிந்தனை பெறுகின்றன. நான் என்னுடைய சொந்த அடையாளத்தை உணருகிறேன் என்ற பார்வையை நான் ஒருபோதும் பெற்றதில்லை. இன்னும் பெறவில்லை. ஏதோ சில நடந்துகொண்டிருக்கும் இடமாக என்னை நான் உணருகிறேன். ஆனால் அங்கு 'நான்' (I) என்ற நிலை இல்லை. 'என்னை' (me) எனக்கு, நானோ என்ற நிலைகளும் இல்லை. நாம் ஒவ்வொருவரும் பாதைகள் குறுக்கிடுமிடமாகவுள் ளோம். அங்கும் ஏதோ சில நிகழ்கின்றன. இதற்குச் சமமான மதிப்புடைய மற்றொன்று வேறெங்கோ நிகழ்கிறது. இதில் தேர்ந்தெடுப் பதற்கு வாய்பில்லை (no choice) அது ஒரு வெறும் தற்செயல் நிகழ்வுதான்" (லெவிஸ்டராஸ் 1978:3–4).

பருண்மையான மானுட உயிர்கள், வரலாற்று உயிரிகள், உணர்ச்சிகள், சிந்தனைகள், புலனுணர்வுகள் என்பவற்றிற்கிடமானவர்கள் மட்டுமல்லர், மேலும் அவர்கள் செயல்களின் மூலங்கள், செயல்களைத் தோற்றுவிப்பவர்கள் என்பது இயல்கடந்த, பண்பாடு சாராத வரலாறற்ற தன்னிலைக்குள் மறைந்து போகிறது என்பதை இந்தப் பார்வை நமக்கு அளிக்கிறது.

### கிளிஃபோர்டு கீர்ட்சின் பொருள்கோள் கருத்தாக்கம்

குறியீடுகளைப் பயன்படுத்துதல் மானுட வாழ்வில் தனித்தன்மை வாய்ந்த கூறு என்று நெடுங்காலமாகவே விவாதிக்கப்பட்டு வந்துள்ளது. பல்வேறுபட்ட குறிகளை மனிதர் அல்லாத விலங்குகள் வெளிப்படுத்தி எதிர்வினை புரிந்தாலும் மனிதர்கள் மட்டுந்தான் மொழிகளை முழுமையாக வளர்த்தெடுத்திருக்கிறார்கள். அதன்மூலமாக அர்த்தமுள்ள வெளிப்பாடுகள் கட்டமைக்கப்பட்டு (உருவாக்கப் பட்டுப்) பரிமாறிக் கொள்ளப்படுகின்றன என்று விவாதிக்கப்படுகின்றது. அர்த்தமுள்ள மொழியியல் வெளிப்பாடுகளை உற்பத்திசெய்வதும் பெற்றுக் கொள்வது மட்டுமல்லாமல், செயல்கள், கலைப்படைப்புக்கள், பல்வேறு வகைப்பட்ட பொருள்சார் படைப்புக்கள் போன்ற மொழி சாராத கட்டமைப்புக்களுக்கும்

அர்த்தமூட்டுகின்றனர் (கற்பிக்கின்றனர்) சமூக அறிவியல்கள், மானுடவியல் போன்ற புலங்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட தத்துவவியல், ஆர்வலர் போன்றோரின் சிந்தனைக்குரிய இடைவிடாத அடிக்கருத்தாக மானுட வாழ்வின் குறியீட்டுப் பண்பு இருந்து வந்துள்ளது. மானிடவியற் சூழலில் இந்தச் சிந்தனைக் பண்பாடு பற்றி குறியீட்டியல் கருத்தாக்கமாக உருவாகியுள்ளது. இத்தகைய தொரு சிந்தனையை எல்.எ.வையிட் என்பார் 1940 களில் 'பண்பாட்டின் அறிவியல்' (The Science of Culture) என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளார். குறியீடுகளைப் பயன்படுத்துதல் மானுட உயிரிகளின் ஒரு தனித்தன்மை வாய்ந்த பண்புக் கூறு என்று கூறுகிறார். பண்பாட்டு நிகழ்வுகளின் ஒரு தனித்தன்மை வாய்ந்த ஒழுங்கு அல்லது வகைமைக்குரிய பெயர்; அதாவது மானுட உயிரிகளுக்கேயுரிய தனித்தன்மையான ஒரு மன ஆற்றலின் பயிற்சியைச் சார்ந்த பொருள்களையும் சம்பவங்களையும் 'குறியீட்டாக்கம்' என்ற சொல்லால் தாம் குறிப்பிடுவதாக அவர் விவாதிக்கிறார். பண்பாட்டு நிகழ்வுகள் என்ற விரிந்த ஒன்றை மூன்று ஒழுங்கமைப்புக்களாக வகைமைப்படுத்துகிறார் வையிட். தொழில் நுட்பவியல் நிகழ்வுகள், சமூகவியல் நிகழ்வுகள். கருத்தியல் நிகழ்வுகள் என்று பிரிக்கிறார். மேலும் இவற்றை ஒரு படிமலர்ச்சிச் சட்டகத்தில் அமைக்கிறார். இது தொழில் நுட்பவியலுக்கு முக்கியத்துவமளிக்கிறது. இவ்வாறு வளர்த்தெடுக்கும் போது பண்பாடு பற்றிய அவருடைய சொந்தக் கருத்தாக்கம் குறித்த ஆர்வத்தையும் தனித்திறத்தையும் அவர் இழந்துவிடுகிறார். அவருடைய எழுத்துக்கள் மானுட வாழ்வின் குறியீட்டுப் பண்பை வலியுறுத்தி ஒரு கருத்தாக்கத்தை மானிடவியல் விவாதங்களின் மையமாகக் கொண்டு வந்தார் கிளிஃபோர்டு கீர்ட்ஸ். அவர் 'பண்பாடுகளின் பொருள்கோள்' என்று ஒரு நூல் எழுதியுள்ளார். இந்த நூலில் அவர் குறியீட்டியற் கருத்தாக்கத்தை உருவாக்கியுள்ளார். இந்தக் கருத்தாக் கத்தைக் 'குறியீட்டியல்' சார்ந்தது என்பதைவிடக் 'குறியியல்' சார்ந்தது என்கிறார் கீர்ட்ஸ். இருப்பினும் கீர்ட்ஸின் முக்கியமான அக்கறை அர்த்தம். குறியீட்டியல், பொருள்கோள் பற்றியனவாகும். "தானே பின்னிய அர்த்த இழைகளுக்குள் தள்ளப்படும் விலங்கு மனிதன் என்று மாக்ஸ்வீபர் குறிப்பிடுவதை நானும் நம்புகிறேன். அந்த இழைகள் தான் பண்பாடு என்று நான் கருதுகிறேன். ஆதலின் அதனைப் பற்றிய ஆய்வு. விதிகளைத் தேடிச் சோதித்துக் கண்டுபிடிக்கும் அறிவியல் ஆய்வாக இருக்க வேண்டியதில்லை; ஆனால் அர்த்தத்தைத் தேடும் பொருள்கோள் பற்றிய ஒன்றாக அது இருக்க வேண்டும்" (கீர்ட்ஸ் 1973:5). 'அர்த்தமிக்க அமைப்புக்களின் தகுதிநிலை அடுக்கு' பண்பாடாகும். செயல்கள் போன்றவற்றையும், 'திடீர்ச் சிரிப்புக்கள்', 'கண் சிமிட்டுதல்', 'போலியாகக் கண் சிமிட்டுதல்' போன்ற குறிகள், நையாண்டிகள், அதேபோன்று உச்சரிக்கைகள்,



உரையாடல்கள், தனிமொழிகள் ஆகியவற்றையும் உள்ள டக்கியது அது. பண்பாட்டை ஆய்வதன்மூலம் அர்த்த அடுக்குகளை நாம் பிரித்தறிகிறோம்; தம்முடைய அன்றாட வாழ்வுப் போக்கில் தாங்கள் உற்பத்தி செய்து, புலனாற் கண்டுணர்ந்து, பொருள்கொள்ளும் தனியர்களின், அர்த்தம் பொதிந்த செயல்களையும், வெளிப்பாடுகளையும் விளக்குவதன் மூலமும் மீண்டும் மீண்டும் விளக்குவதன்மூலம் அர்த்தத் தள அடுக்குகளைச் சிக்கறுத்து வெளிப் படுத்துகிறோம்.

மானிடவியலரின் இனவரைவியல் எழுத்துக்கள் என்ற பண்பாட்டாய்வுகள் பொருள் கோடல்களின் பொருள்கோடல்களாகும். அதாவது ஒருலகில் ஏற்கனவே வாழ்ந்து அவ்வுலகைப் படைத்துக்கொண்டிருக்கும் தனியர்களால் இடைவிடாது விளக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படும் உலகம் பற்றிய இரண்டாம் நிலை விளக்கங்களாகும். அந்த ஆய்வுகள், இனவரைவியலன் சமூகச் சொல்லாடல் களைச் செதுக்குகிறான். அதாவது ஆணோ, பெண்ணோ அதனை எழுதுகிறார்கள். விரைந்து வேகமாகச் செல்கிற கண நேரம் தோன்றி மறையக் கூடிய சம்பவத்தை இனவரைவியலர் நிலைத்து நிற்கக்கூடியதாகக் கவனமாகப் படிக்கக் கூடிய ஒன்றாக எழுதுவதன் மூலம் மாற்றுகின்றனர். பால் ரிக்கூர் என்பவரிடமிருந்து ஒரு வாய்பாட்டை எடுத்து, சமூகச் சொல்லாடலின் 'சொல்லப்பட்டவற்றின்' ('said') 'நிலை நிறுத்தம்' ('fixation') என்று அந்தப் படிமுறைக்குப் பெயரிடுகிறார் கீர்ட்ஸ். இனவரைவியல் என்பது பொருள் கொள்ளும் செயல்; அச்செயலின்மூலம் சமூகச் சொல்லாடலில் என்ன சொல்லப்பட்டதோ அதனைப் பொருள்கொள்பவன் புரிந்துகொள்ள முயல்கிறான்; அதாவது அதன் அர்த்தமுள்ள உள்ளடக்கத்தைத் தேடிச் 'சொல்லப்பட்டவற்றை' எழுதப்பட்ட பனுவலில் நிலைநிறுத்த விரும்புகிறான். இந்த முறையில் விதிமுறைகளை உருவாக்கி முன்னரே மதிப்பிட்டுரைப்பது பண்பாடு பற்றிய ஆய்வின் வேலையல்ல. மேலும் மாபெரும் படிமலர்ச்சிக் கோட்பாடுகளை அவ்வாறு செய்யமுயன்றன.

பட்டறிவு சார்ந்த ஒழுங்கை உற்றுநோக்குவது என்பதைவிட, ஓர் இலக்கியப் பனுவலைப் பொருள்கொள்வதைப் போன்றது கீர்ட்ஸின் அணுகுமுறை, செயல்கள், அனுபவங்கள் ஆகியவை எவ்வாறு அர்த்தமுடையவை யாகின்றன என்பதையும், ஒரு பண்பாட்டிற் பங்குகொண்டு செயற்படுவோரின் செயல்களாகவும், அனுபவங்களாகவும் அமையும் அவை, என்ன அர்த்தம் கொண்டவை என்பதைச் சுட்டிக்காட்ட முயலுகின்றான் இனவரைவியலன்.

அவ்வாறு செய்யும்போது அச்சமூகத்தின் ஒரு பகுதியாக அமையும் இந்தச் செயல்களையும் அனுபவங்களையும் பற்றிய புதுக் கருத்துக்களையும், விவாதத்துக்குரிய சில கருத்துக்களையும் ஆய்வாளன் முன்வைக்கின்றான்.

பண்பாட்டு ஆய்வு பற்றிய கீர்ட்ஸின் பொருள்கோடல் அணுகுமுறை பெரிதும் ஆர்வத்தையூட்டுவது, மானிடவியலில் நடந்த ஒரு வளர்ச்சியைப் பிரதிநிதித்துவம் செய்வது. இதன் அடிப்படையாகப் பண்பாடு பற்றிய ஒரு கருத்தாக்கம் அமைகிறது. இதனைக் 'குறியீட்டுக் கருத்தாக்கம்' என்று கூறலாம். அதனைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

குறியீட்டு வடிவங்களிற் பொதிந்துருவாக்கப்பட்ட அர்த்தங்களின் அமைவு பண்பாடாகும்; குறியீட்டு வடிவங்களுள் செயல்கள், கூற்றுக்கள், பல்வேறு வகைப்பட்ட அர்த்தமுள்ள பொருள்களும் அடங்கும்; இதன் காரணமாகத் தனியார் ஒருவர் மற்றொருவரோடு கருத்துப் புலப்படுத்தம் செய்து, தங்களின் அனுபவங்களையும், கருத்தாக்கங்களையும், நம்பிக்கைகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். அர்த்த அமைவுகளைக் கண்டுபிடிப்பதுதான் பண்பாட்டு ஆய்வின் முதன்மையானதும் முக்கியத்துவம் மிக்கதுமான பணியாகும். கீர்ட்ஸின் கருத்துப்படி இது ஒரு பனுவலைப் படித்துப் பொருள் கொள்வதைப் போன்றதாகும். விளக்கவியற் கருத்தாக்கத்தினின்றும் இது வேறுபட்டது. பரிணாம மாற்றங்களையும், செயற்பாட்டுச் சார்பையும் கொண்டு ஆய்ந்து வகைப்படுத்தும் ஆய்வுகளிலிருந்தும் இது வேறுபட்டது. வகைமைப்படுத்தவும், அளவினை அறுதி செய்யவும் முயலும் ஓர் ஆய்வாளனின் போக்கு இதற்குத் தேவையில்லை. மாறாக அர்த்த அமைவுகளைப் பிரித்தறிய, நுட்பமான அர்த்த வேறுபாடுகளைக் கண்டறிய ஏற்கனவே ஒரு பண்பாட்டில் வாழ்ந்து கொண்டிருப்போருக்கு அர்த்தங்களை அளிக்கும் வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டுதற்குரிய கூர்மையான உணர்வுத்திறன்தான் இதற்குத் தேவைப்படும்.

பண்பாடு பற்றிய மிக முக்கியமானதொரு கருத்தாக்கத்தை கீர்ட்ஸின் உருவாக்கம் அளிக்கிறது. அவர் பண்பாட்டாய்வை அர்த்தம், குறியீட்டியல் பற்றிய ஆய்வாக ஆற்றுப்படுத்தித் திசை திருப்பிப் பொருள்கோடலை ஓர் ஆய்வியல் அணுகுமுறையென்ற முறையில் நடுநாயகமானது என்று காட்டியுள்ளார். கீர்ட்ஸின் ஆய்வுமுறை குறித்து மூன்று விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. கீர்ட்ஸின் குறியீட்டியற் கருத்தாக்கம் குறித்து மேலே சுருக்கமாகக்



குறிப்பிட்டிருந்தோம். இருப்பினும் 'பண்பாடு' என்ற பதத்தைக் கீர்ட்ஸ் பல்வேறுபட்ட முறையில் பயன்படுத்துகிறார். அவை எல்லாம் முற்றிலும் முரண்பாடற்றவையாகக் காணப்படவில்லை. 'குறியீடுகளில் உருவாக்கம் செய்யப்பட்டு வரலாற்று ரீதியாகப் பரப்பப்படும் அர்த்தங்களின் அமைவு' என்று ஓரிடத்திற் கீர்ட்ஸ் வரையறுக்கிறார். ஆனால் வேறொரு பகுதியிற் 'கட்டுப் படுத்தும் இயல்நுட்பங்களின் ஒரு தொகுப்பு. நடத்தையைக் கட்டுப்படுத்து தற்குரிய திட்டங்கள், பட்டியல்கள், விதிகள், வழிகாட்டுதல்களைக் கொண்ட தொகுதி' (1973:44,89) என்று வரையறுக்கிறார். பிந்திய கருத்தாக்கத்தின்படி சமூக, உளவியல் படிமுறைகளை ஒருங்கமைத் தற்குரிய ஒரு தோரணி அல்லது திட்டவரைவை ஒத்துக்காணப்படுகிறது.

இந்தத் தோரணி இன்றியமையாதது என்று கீர்ட்ஸ் விவாதிக்கிறார். ஏனென்றால் மானுட நடத்தை பெரிதும் நெகிழ்வானது (குழைவானது) என்கிறார். அது அப்படிப்பட்டதாயினும், நடத்தையைக் கட்டுப்படுத்தும் விதிகள், திட்டங்கள் என்ற முறையிற் பண்பாடு என்ற கருத்தாக்கம், குறியீட்டு வடிவங்களில் உருவாக்கம் செய்யப்பட்ட அர்த்தங்களின் அமைவுகள் பண்பாடு என்ற குறியீட்டுக் கருத்தாக்கத்துடன் தொடர்புடையது என்பதைத் தெளிவாக்க வில்லை. இரண்டு ஆய்வு முறைகளும் ஒரே மாதிரியானவைதானா என்பதையும் தெளிவாக்கவில்லை. மானுட நடத்தை பற்றிய விதிகளையும் திட்டங்களையும் விளக்க, அர்த்தங்களின் அமைவுகள் பற்றிய கவனம் தேவைப்படலாம். ஆனால் ஒழுங்குமுறைகள், நடைமுறைகள், அதிகாரத்திற்கும் சமத்துவமின்மைக்குமான உறவுகள். மேலும் விரிந்த சமூகப் போக்குகள் போன்ற காரணக் கூறுகளிலும் கவனம் செலுத்த வேண்டும். தனிப்பட்ட நிலையில் அர்த்தங்களின் அமைவு பற்றிய ஆய்வு மானுட நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் விதிகளுக்கும் திட்டங்களுக்கும் ஒளியளிக்காது போகலாம். ஆதலின் பண்பாடு என்ற பதத்தைக் கீர்ட்ஸ் பயன்படுத்தும் முறையும், பண்பாட்டு ஆய்வின் இயல்பும் பணியும் பற்றிய அவருடைய நோக்கும் தெளிவில்லை.

'பனுவல்' என்ற கருத்தும் கீர்ட்ஸின் எழுத்திற் சிக்கலைத் தோற்றுவிக்கிறது; அவருடைய அணுகுமுறையில் 'பனுவல்' என்ற கருத்து முக்கியமான பங்குவகிக்கின்றது. இந்தக் கருத்தைக் கீர்ட்ஸ், பால் ரிக்கூரிடமிருந்து கடன்பெறுகிறார். பால் ரிக்கூர், பனுவலின் முக்கியமான பண்புகளை வரையறுக்க முயன்று, அதனடிப்படையில் ஒரு பொருள்கோடல் பற்றிய ஒரு கோட்பாட்டை வளர்த்தெடுக்க முயல்கிறார். கீர்ட்ஸ் இருவேறுபட்ட

முறைகளில் இந்தக் கருத்தைப் பயன்படுத்துகிறார்; இரண்டுமே சிக்கல்களை எழுப்புகின்றன. இனவரைவியலின் வேலை பனுவல்களைப் படைப்பது என்ற அர்த்தத்தில், பண்பாட்டு ஆய்வு பனுவல்களின் அக்கறை கொண்டது என்று கீர்ட்ஸ் சில சந்தர்ப்பச் சூழல்களில் எழுதுகிறார். நாம் ஆய்வு செய்யும் பனுவல்கள் இனவரைவியல் பனுவல்கள்; அவை சமூகச் சொல்லாடல்களிற் சொல்லப்பட்டவற்றை ('said') நிலை நிறுத்துகின்றன ('fix') இனவரைவியலை எழுதுவது பனுவல்களைப் படைப்பது என்பதில் ஐயமில்லை. இனவரைவியல் சார்ந்த பனுவல்கள் என்ன செய்கின்றன? அல்லது என்ன செய்ய முயலுகின்றன? இனவரைவியல் ஆய்வின் பயில் பொருளாக இருக்கும் தன்னிலைகளின் சமூகச் சொல்லாடல்களிற் சொல்லப்பட்டவற்றை நிலை நிறுத்துவது என்றால், இவ்வாறு உரிமை கொண்டாடுவதற்குரிய ஆதாரமான விவாதங்கள் எங்கே? இதற்குரிய விவாதங்களை ரிக்கூரின் எழுத்துக்களில் காணமுடியவில்லை. அவர் முன்மொழிந்த அர்த்தங்களை நிலை நிறுத்துதல் பற்றிய கருத்துக்களுக்கும், சமூக அறிவியல் ஆய்வாளனுடைய ஆய்வுப் பொருளுக்கும் எந்தத் தொடர்புமில்லை.

**உலகம் பற்றிய நாட்டார் கோட்பாடுகள் என்ற முறையில் உருவகங்கள்:**

மொழியியல் வடிவங்களாற் பரப்பப்படுவது பண்பாடு என்றும், அதனால் அத கருத்துப் புலப்படுத்தம் சார்ந்தது என்றும் கூறும் மற்றொரு கருத்தாக்கம் உருவகம் பற்றி நடைபெற்றுள்ள கணிசமான எழுத்துக்கள் புலப்படுத்துகின்றன. மானிடவியலர்கள் பண்பாடு பற்றிய அறிதல்சார் நோக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், உருவங்கள் பற்றிய ஆய்வினால் அவர்கள் பெரிதும் கவர்ந்திழுக்கப்பட்டனர். (கீசிங், 1974).

நம்முடைய சமூகச் சுற்றுச் சூழலையும், இயற்கைச் சுற்றுச் சூழலையும் கட்டுப்படுத்தும் வழிகள் உருவகங்களாகும் என்பது ஒரு செயற்பாட்டு நோக்காகும். அண்மைக்கால அறிதல்சார் கோட்பாடுகள், உருவங்கள் என்பவை படிமுறைகள் என்ற முறையில் ஆய்வுசெய்கின்றன. ஒரு புலத்தைச் சார்ந்த அனுபவத்தை வேறொரு வகை சார்ந்த மற்றொரு புலத்தை உருவங்களின் மூலம் அமைப்பாக்கிப் புரிந்துகொள்கிறோம் (ஜோன்சன் 1987:15) உருவக மொழிகள் மானிடவியலர்களையும், மொழியலர்களையும், தத்துவவியலர் களையும் எப்பொழுதும் கவர்ந்து வந்துள்ளன. நம்முடைய பேச்சின் குறிப்பிட்ட வடிவமும், உள்ளடக்கமும் உலகம் பற்றிய நம்முடைய அனுபவத்தைப் பார்ப்பதற்குரிய ஒரு



வழிகாட்டி என்ற காரணத்தால் அவர்கள் உருவகங்களின் மீது ஆர்வம் காட்டி வந்தனர்.

உருவகங்கள் பண்பாட்டுத் திட்டங்கள் என்ற அறிதல்சார் ஆய்வுகள் (அல்லது திட்டங்களைச் சார்ந்தமையும் வெளிப்பாடுகள் என்ற முறையில்) என்பது நாம் முந்தைய வடிவங்களின் அடிப்படையில் உலகை (இதற்குள் மொழியும் அடங்கும்), அறிந்துகொள்கிறோம் என்ற கருத்தோடு நெருங்கிய தொடர்பு டையது. முந்தைய வடிவங்கள் எளிமையாக்கப்பட்ட பொதுமையாக்கப்பட்ட, பார்வைகள் அல்லது அனுபவம் பற்றிய நாட்டார் கோட்பாடுகள் ஆகும். (றோச், 1973, 1978) முந்தை வடிவக் கோட்பாடு எந்தவொரு சோதிக்கும் பட்டியல் கோட்பாட்டிற்கும் எதிரானது. சோதிக்கும் பட்டியற் கோட்பாடு, ஒரு வகுப்பின் (அல்லது சொற்கள், செயல்கள், சம்பவங்கள்) உறுப்பு என்பதை தனித்தனியான பண்புக் கூறுகளைக் கொண்டு வரையறுக்க முயல்கிறது. சான்றாக ஒரு 'பிரம்மச்சாரி' என்பவன் பின்வரும் பண்புக் கூறுகளின் அடிப்படையில் விளக்கப்படுகிறான். (1) ஆண், (2) பருவ முதிர்ச்சி பெற்றவர்(3) மணமாகாதவன். முந்தை வடிவக் கோட்பாட்டினர் 'பிரம்மச்சாரி' என்ற சொல்லைக் குறிப்பிட்டுச் சுட்டக்கூடிய சில மணாமாகாத மனிதர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தும்போது ஏற்படும் இடர்பாடுகளை, உலகு பற்றிய ஒரு நாட்டார் கோட்பாட்டை முற்கோளாக மொழிந்து சுட்டிக் காட்டுகின்றனர். இதில் மக்கள் குறிப்பிட்ட வயதில் மணம் செய்து கொள்கின்றனர். ஒரு முறைதான் அவர்கள் மணம் செய்துகொள்ளலாம். (பில்மோர், 1977). மிகவும் சிக்கலான உண்மை உலகில் மணம் செய்துகொள்ள முடியாத மக்களும் (குருக்கள்) உள்ளனர். மேலும் மிகவும் இளமை வாய்ந்த அல்லது வயதான அல்லது பலமுறை மணம் செய்து மணமுறிவு செய்துகொண்டவர்களும் உள்ளனர். இதே முறையில் ஸ்வீட்சர் என்பவர். 'பொய்' என்ற சொல்லின் அர்த்தம் உள்ளார்ந்த முறையில் மானுட அனுபவத்தின் சிலபகுதிகள் ஓர் எளிமையாக்கப்பட்ட அல்லது முந்தை வடிவத் திட்டத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்று விவாதிக்கிறார். (1997:44) இந்த எளிமையாக்கப்பட்ட திட்டத்தில் 1) நல்லவை செய் அல்லவை செய்யாதே 2) அறிவு ஆக்கம் தரும் போன்ற ஒழுக்க விதிகள் அடங்கியுள்ளன. வாழ்க்கை மிகவும் சிக்கலானது என்பதில் ஐயமில்லை. ஆதலின் இரண்டு கொள்கைகளுக்கும் விதிகளுக்கு மிடையே முரண்பாடுகள் இருக்கக் கூடும். மக்களைப் பற்றிச் சொல்லும்போது அது அவர்களைப் புண்படுத்தலாம். அதனால் பேசுவோர் தகவல்களை வெளிப்படுத்தாது மறைத்துவைத்துக் கொள்ளக்கூடும் அல்லது (சான்றாக பண்பட்ட முறை என்ற வகையில்) பொய் கூடச் சொல்லாம்.

## பண்பாடு என்பது இடையீடு செய்யும் ஓர் ஒழுங்கமைப்பு:

நாம் பிறந்து வாழ்ந்து வரும் சமூகத்தில் நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் பொதுவாகப் பயன்படுத்தும் அதே தளத்திற்றான் நாம் மொழியையும் பயன்படுத்துகிறோம் (றோசி – லண்டி 1970:521).

கருவிகள் என்பவை தொடர்புபடுத்தும் பொருள்கள் என்று வரையறுக் கலாம். பயன்படுத்துபவனுக்கும், அவன் பயன்படுத்தும் பொருள்களுக்கும் இடையே நிற்கும் பொருள்கள் அவை. கருவிகள் பற்றிய இந்தக் கருத்து 'உழைப்புக் கருவி' என்ற மார்க்சின் கருத்து என்பதற்கு நம்மை இட்டுச் செல்கிறது. பின்வரும் மேற்கோளைக் காண்க.

"உழைப்புக் கருவி என்பது ஒரு பொருள் அல்லது பொருள்களின் கலவை. உழைப்பாளி தனக்கும், தான்வேலை செய்வதற்காகப் பயன்படுத்தும்/ உழைப்புக்காகப் பயன்படுத்தும் பொருள்கள் அவை. அவை அவனுடைய செயல்களைக் கட்டுப்படுத்துகின்றன. அவன் தன்னுடைய நோக்கங்களுக்குத் துணையாகச் சில பொருட்களைப் பயன்படுத்தி வேறுபொருள்களைச் செய்ய எந்திர, பௌதிக வேதியியற் பொருள்களைப் பயன்படுத்திக் கொள்கின்றான். மண்ணும்கூட உழைப்புக்குரிய ஒரு கருவிதான். அதனை விவசாயத்தில் அப்படியே ஒரு பொருளாகப் பயன்படுத்தும்போது அதற்குப் பலவகையான வேறு கருவிகள் வேண்டும் என்பதும் அதற்காக உழைப்பிற்கு வேண்டிய ஒரு உயர்ந்த வளர்ச்சி வேண்டும் என்பதும் குறிப்பாகும். (மார்க்ஸ் 1906:199).

இக்கருத்தின்படி 'உழைப்புக் கருவிகள்' என்பவை சுற்றுப்புறச் சூழலைக் கட்டுப்படுத்தவும், ஆதார வளங்களைப் பெருக்கவும் மானுடர் எவற்றை எல்லாம் பயன்படுத்துகின்றனரோ அவைகளெல்லாம் உழைப்புக் கருவிகள் எனப்படும். இத்தகைய கருவிகள் எல்லாம் எப்பொழுதும் இரண்டுக்குமிடையிற்றான் இருக்கும் என்பது வரையறை. அவை மக்களுக்கும் உணவுக்கும் (உண்கலம்), மக்களுக்கும் வானிலைக்கும் (ஒரு குடை), மக்களுக்கும் பௌதிகப் பொருளுக்கும் (ஒரு கோடரி), மக்களுக்கும் மற்ற மக்களுக்கும் (சைகைகளும் கிளவிகளும் (மொழி), மக்களுக்கும் அவர்களின் சொந்தச் சிந்தனைகளுக்கும் (பேச்சு, மனப் பிரதிநித்துவங்கள்) இடையேதான் அவை செயல்புரிகின்றன. பின்வரும் வரைபடம் கருவிகள் இரண்டிற்கிடையே செயலாற்றும் பங்கைப் புலப்படுத்துவது காண்க.




மானுடர் ———— கருவி ———— சுற்றச் சூழல்

கருவிகள் மானுடருக்கும் சுற்றுச் சூழலுக்குமிடையே செயல்புரிவதை மேற்கண்ட வரைபடம் உணர்த்துகிறது.

மானுட உழைப்பினால் உற்பத்தி செய்யப்பட்ட கருவிகளும், கலைப்படைப்புகளும், மானுடருக்கும் அவர்களுடைய சுற்றுச் சூழலுக்கும் இடையே நிற்கின்றன. அதாவது மானுடருக்கும் பௌதிக உலகிற்கும் அல்லது சமூக உலகிற்குமிடையே ஊடாட்டம் செய்கின்றன. குறிப்பிட்ட செயல்களில் கருவிகளைப் பயன்படுத்துவதைப் பண்பாடு ஒருங்கமைக்கின்றது. அதாவது வேட்டையாடுதல், சமைத்தல், கட்டடம் கட்டுதல், சண்டை போடுதல் , பழமையை நினைவு கூர்தல், எதிர்காலத்திற்காகத் திட்டமிடுதல் ஆகிய ஒவ்வொன்றிலும், இயற்கையைத் தமதாக்கி மக்களின் திறமையே பயன்படுகிறது. அல்லது மக்கள் ஏனைய மானுடரோடு ஊடாட்டம் செய்வதற்கும் நிலையை மேம்படுத்துவதற்கும், திருத்தியமைப்பதற்கும் கருவிகளே பயன்படுகின்றன. இருப்பினும் உலகத்தோடு நம்முடைய உறவு எப்பொழுதும் இடைமடுத்தம் செய்யப்படுவதில்லை. நாம் ஒரு பூங்காவில் அமர்ந்திருக்கும்போது மழை பெய்யத் தொடங்குகிறது. நம்முடைய முகமும் முடியும் ஈரமாகிவிடுகின்றன.

இங்கு நமக்கும் இயற்கைக்கும் உள்ள உறவு அவ்வளவு நேரடியானதன்று. குறைந்த அளவே இடையீடு செய்யப்படுகின்றது. (இன்றும் நம் உடையும் நம் சிந்தனைகளும் நம்மோடு கூடவே இருக்கின்றன). இருப்பினும் நம்முடைய உடலின் ஒரு பகுதி பாதிக்கப்படாது இயக்கையைக் கட்டுப்படுத்த ஒரு குடையை விரித்துப் பிடிக்கும்போது, நம்முடைய தேவைக்காக ஒரு சக்தி வாய்ந்த நிகழ்வினை மாற்றி அமைக்கின்றோம். இங்கு இயற்கையோடு நமக்குள்ள உறவு ஒரு குறிப்பிட்ட பொருளால் இடையீடு செய்யப்படுகிறது. இங்கு பண்பாட்டைக் 'குடை' பிரதிநிதித்துவம் செய்கிறது.

மானுட அனுபவத்தின் இரட்டைச் சாத்தியப்பாடு, அதாவது நேரடியானதும், இடையீடு செய்யப்படுவதும் குறித்துப் பின்வரும் வரைபடத்தினால் விளக்கலாம்.




இந்த மாதிரியில் பொருள்சார் பண்பாட்டுப் பொருட்களையும் (குடை) பொருள் சாராத கருத்துப் பொருட்களையும் (குறியீடுகளும்) உள்ளடக்கியுள்ளது. பொருள்சார் அமைப்புக்கள், கருத்தமைப்புக்கள் அல்லது கருவிகள் ஆகியவற்றில் மானிடர்கள் உலகுடனான தங்கள் உறவை இடையீடு செய்கின்றனர். இருப்பினும் மானுடர் சிலவற்றில் நேரடியாக உடல் ரீதியாகத் தலையிட்டுச் சுற்றுச்சூழலைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கின்றனர். வேறு சமயங்களிற் சுற்றுச் சூழல்களைக் குறியீட்டுக் கருவிகள் மூலம் கட்டுப்படுத்துகின்றனர். இவ்வாறாக வாய்ச்சிகள், அம்புகள், சுத்தியல்கள், சம்மட்டிகள், ரம்பங்கள், நாற்காலிகள், கடவுளைப் பற்றிய கோட்பாடுகள் (சமயம்) , அம்புகள், மானுட உடல் ( மருந்து) போன்றவை பண்பாட்டுக்குள் அடங்கும். இங்கு விட்டுவிட்டு வரையப்பட்ட கோடு மானுடருக்கும் சுற்றுச் சூழலுக்கும் உள்ள உறவைப் பிரதிநிதித்துவம் செய்து முன்குறித்துக் காட்டுகின்றது. அதாவது இடையீடு செய்யப்படாத உறவைக் காட்டுவது. ஆனால் நேர்கோடுகள் இடையீடு செய்யப்பட்ட உறவைக் காட்டுகின்றன.

மற்றொரு சான்று தருவோம் நம்முடைய வீட்டை விட்டு ஒருவனை வெளியேற்ற அவனைக் கைகளால் பிடித்துத் தள்ளலாம். இதே செயலை ஒரு குறியீட்டினைப் பயன்படுத்தியும் செய்யலாம். (பார்வையாளருக்கு இங்கு இடமில்லை). நம்முடைய கைகளைப் பயன்படுத்தும்போது அச்செயல் பண்பாட்டினால் நிறைவேற்றப்படவில்லை. குறியீடுகளைப் பயன்படுத்தும்போது அது எப்பொழுதும் இடையீடு செய்யப்படுகின்றது.

"இடையீடு" என்பது ஓரளவு நடுநிலையான சார்பற்ற கருத்தாக்கமாகும். இதில் தன்னிலையோ, பயன்படுத்துபவரோ அல்லது இடையீடு செய்யும்



கருவியோ முக்கியத்துவம் பெறுவதில்லை. இருப்பினும் இந்த மாதிரி மேலும் வளர்த்தெடுக்கப்பட்டுச் செப்பம் செய்யப்படவேண்டிய ஒன்று. முதலாவதாக முக்கோகணத்தில் உள்ள ஒவ்வொரு கூறின் உள்ளொருங்கமைப்புக் குறித்து எதுவும் கூறவில்லை. குறிப்பிட்டுச் சொன்னால், மொழியியல் மானிடவியலனுக்கு மொழியமைப்புக் குறித்து, அவன் பின்பற்ற வேண்டியவை குறித்துப்போதுமான அளவு எதனையும் கூறவில்லை. இரண்டாவதாக அது நாம் எதிர்பார்க்கும் பொருட்களின் வகைமைகள் பற்றிய ஆய்வு முறையியல் குறித்த பிரச்சினைகள் குறித்து எதுவும் சொல்லாது விட்டுவிடுகிறது. இறுதியாகச் சுற்றுச் சூழலுடன் ஒரு அனுபவபூர்வமான பரிமாணம் இடையீடு செய்யப்படாத உறவுக்கும் இயல்பான உறவுக்கும் இருப்பதாக அது ஊகம் செய்கிறது. இது குறித்துப் பண்பாட்டு மானிடவியலர் கொஞ்சக் காலமாக விவாதித்து வருகின்றனர். மழை பெய்யும்போது நாம் அம்மணமாக நின்றாலும், கடல் நடுவில் நின்றாலும் நம்முடைய பண்பாடு நம்மிடம் உள்ளது. நாம் நின்றாலும் நீந்தினாலும் பண்பாட்டினால் வரையறுக்கப்பட்ட முறைகளினாலேயே அவ்வாறு செய்கின்றோம். அந்தச் சூழலில் நாம் பிரக்ஞைபூர்வமாகச் சிந்தித்து நம்மைப் பிரதிநிதித்துவம் செய்கின்றோம். இது பண்பாட்டுக்கேயுரிய சமூகவயமாக்கச் சிந்தனைகளினால் வடிவமைக்கப்பட்டட பழக்கங்களினாலேயேயாம்.

பண்பாடு என்பது உறவுடைய ஒரு தொகுதி இடையீடு என்றும், ஆனால் வெவ்வேறு ஒழுங்கமைப்புக்களைக் கொண்ட இடையீடு என்றும் கருத்தாக்கம் செய்யும்போது அது கருத்துப் புலப்படுத்த அறிதல்சார் கருவிகள் பலவற்றைச் சார்ந்தமைவது. இங்கு "ஒரு" பண்பாடு என்று பேசுவது கொஞ்சம் இடர்பாடானது. இருந்தாலும் பண்பாடு சார்ந்தது என்று கூறலாம். அதாவது குறிப்பிட்ட குழுக்களாற் குறிப்பிட்ட வகைச் செயல்கள் செய்யப்படும்போது இடையீடு செய்யும் குறிப்பிட்ட ஒழுங்கமைப்புக்களைச் சுட்டப் பண்பாடு சார்ந்த என்ற பெயரெச்சத்தைப் பயன்படுத்தலாம்.

**குறிப்பு:**

1. தமிழிற் பண்பாடு பற்றிய செய்திகளை விரிவாக அறியப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் தமிழர் பண்பாடு என்ற நூலைப் படிக்க வேண்டுகின்றேன்.

**உசாத்துணை நூல்கள்**

Duranti. Alessandro

1997. Linguitic Anthropology. Cambridge: Cambridge University Press.

Geertz, Clifford

1973. Interpretation of Cultures. New York : Basic Books.

Lakoff. George and Mark Johnson

1980. Metaphors We Live by. Chicago : University of Chicago Press.

Ortony Andrew

1993. Mataphor and Thouhgt Cambridge: Cambridge University Press.

Thompson, John, B.

1990. Ideology and Modern Culture - Critical Social Theory the Era of Mass - Communication. Cambridge : Polity Press.

சிவத்தம்பி, கார்த்திகேசு

1994. தமிழ் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும். சென்னை : நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

வையாபுரிபிள்ளை. எஸ்.

1955. தமிழர் பண்பாடு. சென்னை : தமிழ் புத்தகாலயம்.




# தொறுப்பூசல் - வீரயுக மரபு : மேட்டுநில தமிழகத்தில் ஆநிரை - சார் சமூக உருவாக்கம்

சு.குணசேகரன்

நிரந்தர அரசியல் – சமூகங்களின் தோற்றம் மற்றும் ஓர் அரசுசார் அமைப்பாக இவற்றின் பரிணாம வளர்ச்சி போன்றவை வேளாண்மைச் செயற்பாடுகளின் தீவிரத்துடனும், பரவலாக்கத்துடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. வேளாண்மை, இதுவரை ஒரு வகையான நாடோடி வாழ்வைத் தக்க வைத்துக்கொண்டிருந்த இனக்குழுக்களுக்கு நிலத்தினுடனான ஒரு நிரந்தரத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள நிர்ப்பந்தித்தது (சுசற்: 1999, றுசிவெல்ற்:1980, சேவிஸ் : 1962 மற்றும் பீற்றர் டி: 1985). ஆனால் இதுபோன்ற உழுகுடிகளை ஆதாரமாகக்கொண்ட சமூக உருவாக்கத்தின் தன்மை, அதற்கான காலம் போன்றவை இடத்திற்கிடம் வேறுபடுவதுடன், ஒரு பொதுவான கருத்தியற் கட்டமைப்புக்குள் சிக்காமல் முரண்படவும் செய்கின்றன. முக்கியமாக, உழுதொழிலை எளிதாக ஏற்றுக்கொள்வதிலோ அல்லது உழுகுடி சார்ந்த சமூக அமைப்புக்களுடன் தன்னை இணைத்துக் கொள்வதிலோ, மலைசார்ந்த மேட்டுநில இனக் குழுக்களுக்கு ஏற்புடையதாக அமையாததுடன் தாம் வழிவழியாகப் பின்பற்றிய கால்நடைப் பொருளாதார உற்பத்தியில் வேரூன்றி நின்ற பண்பாட்டுக் கூறுகளைத் தக்கவைத்துக் கொள்வதிலும் அவர்களிடையே ஓர் அதித ஆர்வம் எக்கி நின்றது. மாற்றுப் பொருளாதார ஆதாரங்களுக்கு உட்புகுதல் என்பதில் தயக்கமான அணுகுமுறையைக் கொண்டிருந்த அதே சமயத்தில், இந்தக் கால்நடை வளம் மிகுந்த இனக்குழுக்கள் தனக்கே உரித்தான கலாச்சார நடைமுறைகள், வழக்கங்கள், வழக்காறுகள், புராணம் மற்றும் குல வரலாறுகளை உருவாக்கியிருந்தன. (ஹலற்றி மற்றும் பொன்ரி: 1991, 1974, ஹெஷெக்விற்ஸ்: 1926). இங்கு தனிமனிதனின் அன்றாட வாழ்க்கையைக் கால்நடைச் செல்வத்தின் மீதான வேட்கை என்ற சித்தாந்த ஆளுகை நிர்ணயித்தது. மேலும் ஆநிரை – சார் – சமூகத்தில், ஆநிரைகள் தனி மனிதர்களின் செல்வச் செழிப்பைக் குறிப்பதோடு நில்லாமல், தனிநபரின் புகழ், அதிகாரம், சமுதாய நன்மதிப்பு ஆகியவற்றையும் தீர்மானிப்பதாக விளங்கின.

இந்நிலையில், ஒரு குடும்பத்தில் இருந்து கால்நடைகள் கவரப்படுதல் செல்வ இழப்பைச் சுட்டுவதற்கும் மேலாக, அக்குடும்பத்தின் புகழையும், சமுதாய நன்மதிப்பையும் இழக்கச் செய்கின்றது (கம்பெல்: 1964 எட்கர்: 1965). எனவே, இது ஓர் அவமதிப்பாக, அதிகாரத்தை உருக்குலையச் செய்யும் செயலாக மாறுகின்றது. இந்நிலையில், ஒருவன் தனது வாழ்க்கையைத் துச்சமாக்கிக் கால்நடைச் செல்வங்களைக் காப்பதும் அவ்வாறு கவரப்பட்ட செல்வங்களை மீட்பதும் இன்றியமையாத சமூக நிர்ப்பந்தமாக பரிணமிக்கின்றது. அதே சமயத்தில் மற்றவர்களின் ஆநிரைகளைக் கவர்தலின் மூலம், ஒருவருக்குக் தன்னுடைய புகழ், செல்வம், வீரத்தை நிலைநாட்டுவதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது.

இவ்வகையான கால்நடைகள் மீதான வேட்கையும், அதைச் சார்ந்து எழுந்த சமூக உருவாக்கமும் உலகின் பல்வேறு பகுதிகளிற் கண்டறியப்பட்டு மானுடவியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. தென் இந்தியாவில் இவ்வகையான கால்நடைச் சமூகத்தின் உருவாக்கத்தை வாசிப்பதற்கும் அதன் மூலம் வீரயுகத்தின் தொடர்ச்சியை அறிந்து கொள்வதற்கும் அக்கால வரலாற்றுப் படிமங்களான நடுகற்கள் உதவி செய்கின்றன. ஒரு வரலாற்று மரபு வீர உணர்வைப் போற்றுவதற்கான வழிவகை என்ற நிலையுடன், நடுகற்களைச் சமகாலத்தில் இயங்கிய வாழ்வாதாரப் பொருளாதாரத்துடன் தொடர்புபடுத்தி ஆய்வது அவசியம். இந்நடுகற்கள் தரும் குறிப்புக்கள் மூலமாக மேட்டு நிலங்களில் ஏற்பட்ட சமூக – அரசியல் அமைப்புக்களின் உருவாக்கத்தைப் பொருள்முதல் வாதம் என்ற கோட்பாட்டின் ஊடாக அணுகுவதும், பண்டைய தமிழகச் சமூக எழுச்சியை ஒரு நேர்கோட்டு உருவாக்கமாகக் கருதாமல், இதில் ஆற்றுச் சமவெளிகளுக்கும் விளிம்பு நிலைப்பகுதிகளுக்கும் உள்ள வேறுபாடுகளை வலியுறுத்துவதும் இக்கட்டுரையின் நோக்கம். இதன்படி, தமிழகத்தின் காவேரிப் படுக்கையிலிருந்து ஒதுங்கிய மேட்டு நிலங்களான கோயம்புத்தூர், சேலம், தருமபுரி போன்ற பகுதிகளிலிருந்து தொகுக்கப்பட்ட எழுபது நடுகற்கள் இங்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. (இவற்றின் அட்டவணை கட்டுரையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது). நான்கு பிரிவுகளைக் கொண்ட இக்கட்டுரை நடுகற்கள் குறித்த சிறு குறிப்புடன் தொடங்கி, இவற்றைச் சார்ந்த சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புக்களின் நிறுவனங்கள் மற்றும் உறவுகளைத் தனித்தனிப் பிரிவுகளில் விவாதிக்கின்றது.



**பிரிவு –I**

ஓர் இறப்புச்சடங்கு, வீரர்களுக்கு நினைவுச் சின்னம், வரலாறுகளைப் பதிவு செய்வதற்கான அக்கால ஆவணம் என்ற நிலையில், இக்கட்டுரைக்கான முதல் நிலைக் குறிப்புக்கள் நடுகற்களிடமிருந்து திரட்டப்பட்டுள்ளன. நடுகல் வாசகங்களும், அதிற் செதுக்கப்பட்டுள்ள வரைவோவியங்களும் அக்கால அரசியல், பொருளாதாரக் கூறுகளை வெளிப்படுத்தும் விதமாகத் திகழ்கின்றன. தென் இந்தியாவில் நடுகற்கள் அமைக்கும் முறை பெருங்கற்கால நினைவுச் சின்னங்களின் தொடர்ச்சியாகக் கருதப்படுகின்றது (ராஜன்: 2000, 53-56). குறிப்பாக, பெருங்கற்கால இறப்புச் சின்னங்கள் அக்கால இனக்குழுக்களின் ஒரு வழிபாட்டுத் தளமாகச் செயற்பட்டதுபோல் நடுகற்களும் செயற்பட்டன. ஆனால், ஆழ்ந்து கவனித்தால், இவ்விரு வரலாற்று மரபுகளுக்கும் இடையேயுள்ள மெல்லிய வேறுபாடுகள் புலப்படும். பெருங்கற்கால எச்சங்கள் குறிப்பாக இறப்புச் சடங்குகளுடன் தொடர்புடையவை, பிணம் புதைக்கும் நடப்புகளைச் சுட்டுபவை. இவற்றைக் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவுச் சின்னம் என்பதைவிட, மூதாதையர் வழிபாடு அல்லது ஆவிகளின் மீதான அச்சம் என்ற நிலையிலேயே அணுக வேண்டியிருக்கின்றது. ஆனால் நடுகற்கள் அமைத்தலின் நோக்கத்தைச் சமகால சமுதாயத்தை ஆளுகை செய்கின்ற வீர உணர்வு என்ற சித்தாந்தத்தின் அடிப்படையிற் புரிதலுக்கு உட்படுத்தவேண்டும். நடுகற்கள் வீர உணர்வின் மேன்மையைப் பறைசாற்றுவதுடன், ஆநிரைகளுக்கான போர்கள், ஊள்ளூர்ச் சண்டைகள், கொடிய மிருகங்களுடன் ஏற்பட்ட மோதல்கள் போன்றவற்றின்போது வெளிப்படுத்தப்பட்ட வீரத்திற்குச் சமுதாயச் சான்றுகளாக விளங்குகின்றன. இவை சமுதாயத்தில் வீர உணர்வின் ஆளுகை குன்றாமல் இருக்க உதவியதுடன், இது சார்ந்த சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்கள், உறவுகள் ஆகியவற்றின் மறு உற்பத்தியை ஊக்குவிக்கும் காரணிகளாகவும் திகழ்ந்திருக் கின்றன.

மேற்குறிப்பிட்டது போல், நடுகற்கள் அமைக்கும் முறை, கால்நடைகளை முதல் உற்பத்தியாகக் கொண்ட சமுதாயங்களிற் பரவலாகப் புழக்கத்தில் இருக்கின்றது (ராஜன் : 2000, 53–56). நீர்வளமிக்க சமவெளிகளில் வென்புல விவசாயம் சார்ந்த பொருளாதார அரசியல் அமைப்புக்கள் எழுச்சிபெறத் தொடங்கிய காலங்களில் கால்நடை – சார் சமூக அமைப்பு மேட்டு நிலங்களிலும், எல்லைப்புறக் காடு சார்ந்த நிலப்பகுதிகளிலும் ஆழ வேரூன்றி இறுக்கம் பெற ஆரம்பித்தன. இங்கு கால்நடை சார்ந்த சமூகத்தின் வரலாற்று நிகழ்வுகளைப் பதிவுசெய்து பாதுகாப்பதற்கான மரபு என்ற நிலையில், நடுகற்கள் இச்சமூக

அமைப்பு ஏற்றம் பெற்றிருந்த மேட்டு நிலங்களிற் பெருவாரியாக நடைமுறையில் இருந்தன. நடுகற்கள் குறித்தான இத்தகைய குறிப்புக்கள் தொல்தமிழ் இலக்கியங்களிற் காணப்படுகின்றன. (ராஜன்: 2000, 26-29). தொல்காப்பியம் இம் மரபைப் போற்றுவதுடன், இதைச் சார்ந்த சடங்குகள், வழிபாட்டு முறைகளையும் விவரிக்கின்றது. புறநானூற்றிலும் இச்சமூக நிறுவனங்களை, உறவுகளை, கட்டமைக்கும் வீர உணர்வு என்ற கருத்தியலின் அடிப்படைக் கூறுகளை எளிதாக அவதானிக்க முடியும். இவற்றுள் நடுகல் சடங்குகள், விழுப்புண் பெற்றதில் பெருமிதம், கோபத்தில் வெகுண்டெழும் வீரனின் தோற்ற வன்மை, இனக்குழுத் தலைவன் தன் குடிகளுடன் சமமாக அமர்ந்து கள்ளுண்ட பொழுதும், இறைச்சி உணவைப் பகிர்ந்துகொண்ட பொழுது ஏற்பட்ட சக உணர்வு, புலவர்களுக்கும், பாணர்களுக்கும், கூத்தியர்களுக்கும் பரிசு கொடுக்கும் பொழுது வெளிப்பட்ட புரவலத்தன்மை என எண்ணற்ற பண்புகள் அடக்கம். மேலும் தமிழகத்தில் தொல்லியற் சான்றுகளுக்கு முன்பாக, இலக்கியத் தரவுகள் நடுகற்கள் குறித்துப் பேசுவது தனிக் கவனத்திற்குரியது.

இலக்கியத் தரவுகள், நடுகற்கள் ஆகியவற்றின் மூலம் அறியப்படும் வீர – உணர்வு சமுதாயத்தின் மதிப்பீடுகள், உறவுகளை வேறுபடுத்தியும் அணுக முடியும். இலக்கியங்கள் புகழும் வீரர்கள், பெரும்பாலும் இனக்குழுத் தலைவர்கள். இவற்றிற் சாதாரண வீரனின் ஆளுமை பெரும்பாலும் மையப் பொருளாக்கப் படவில்லை. புறனானூற்றிற் பாடப்பெற்றோர் வரிசையை ஆராய்ந்தால் இது புலப்படும். இவ்வாறன்றி, ஓர் ஒப்பீட்டளவில் நோக்கும்போது, நடுகற்கள் சுட்டும் வீரர்கள் இனக்குழுச் சமூகப் பிரிவுகளின் அடித்தள மக்கள். இரண்டாவதாக, இலக்கியங்கள் மூலம் அறியப்படும் வீர உணர்வைக் கருத்தியல் தளமாகக் கொண்ட சமூகம், நிலம்சார் வேறுபாடுகளைக் கடந்து தொல் தமிழகம் முழுவதும் பரவியிருந்ததை அநுமானிக்கலாம். ஆனால் நடுகற்கள் மரபு, முன் குறிப்பிட்டது போல், மலை மற்றும் காடு சார்ந்த வறண்ட நிலப்பகுதிகளிலேயே அதிகம் ஒடுக்கம் பெற்றிருந்தது. இதைப்போன்று, இலக்கியக் குறிப்புகளில் வரும் வீரர்கள் பெரும் சண்டைகளிலும் பிரமாண்டமான வேட்டை நிகழ்வுகளிலும் ஈடுபட்டவர்கள். ஆனால் நடுகற்கள் வீரரோ, சிறு சிறு இனக்குழுப் பூசல்களிலும், மாடுபிடிச் சண்டைகளிலும் உயிர் துறந்தவர்கள். ஊராரையும் ஆநிரைகளையும் அச்சுறுத்திய கொடிய மிருகங்களுடன் சண்டையிட்டு மரித்தவர்கள். இறுதியாக, தொல் இலக்கியங்களின் வீர உணர்வை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் பெரும்பாலும் பரிசிலுக்காகப் புனையப்பட்ட பாடல்கள். இவற்றுள் உண்மை நிகழ்வுகளிலிருந்து வழுவி, புலவனின் தற்குறிப்பை ஏற்றிப் புகழ்வதற்கான



வாய்ப்புக்கள் அதிகம். இதற்கான சாத்தியப்பாடுகள் நடுகல் மரபில் இல்லை என்பதோடு தேவையற்ற இலக்கியக் கற்பனைகளின் ஊடுருவலும், இடையூறு களும் இல்லை.

**பிரிவு – 2**

தொல் தமிழக அரசியல் –சமுதாய உருவாக்கத்தில் ஆறாம் நூற்றாண்டு குறிப்பிடுவதற்குரியது. இது பொதுவான இனக்குழுக் கூறுகளின் ஆளுகையிலிருந்து முரண்பட்டு வளர்ந்து கொண்டிருந்த வேளாண்மை – சார் – சமூக அரசியல் அமைப்புக்கள் முழுமை பெறத் தொடங்கிய காலம். குறிப்பாக, ஆநிரை சார்ந்த வாழ்வாதாரம், வேட்டையாடுதல் மீதான வேட்கை, இடைவிடா இனக்குழுப் பூசல்கள், வீர உணர்வைப் போற்றித் தரிசித்தல் போன்ற இனக்குழுப் பிடிப்புக்கள் கட்டுடைந்து இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டன. வேளாண்மை யில் இருந்த உபரி உற்பத்தி, சிலர் உற்பத்திச் செயற்பாடுகளிலிருந்து தம்மை முழுமையாக விடுவித்துக்கொண்டு உற்பத்தியின் பெருக்கத்தை உறுதி செய்யும் மேலாண்மைப் பணிகளில் ஈடுபட ஏதுவாக்கியது. இது உழுதுண்போர், உழுவித்துண்போர் என்ற வர்க்க வேறுபாடுகள் தொல்காப்பியக் காலத்தில் தொடங்கி ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வலுப்பெற்று எழுந்தன. அடிப்படையில், இந்த உபரி உற்பத்தியைச் சுரண்டும் நிறுவனமாக அரசு அமைப்பு எழுந்தது. அரசின் இச்சுரண்டலுக்கான அங்கீகாரத்தைச் சித்தாந்தங்கள் மூலம் நியாயப்படுத்தச் சமயங்கள் முன்னிறுத்தப்பட்டன. ஆக, இனக்குழுக் கட்டுமானங்களின் தளர்ச்சியில் பிறந்த வேளாண்மைச் சமூகத்திற்குள் நிலவிய முரண்கள், ஏற்றத்தாழ்வுகளின் தேவையையும் இறுத்தலையும் உறுதி செய்யும் அரசியற் கோட்பாடுகளும் சமயம் சார்ந்த கருத்தியல் ஆளுகைகளும் பிராமணிய சித்தாந்தத்தின் ஊடுருவல் மூலம் நிரப்பப்பட்டன எனலாம். இதனைத் தொடர்ந்து கோயில்களை மையமாகக் கொண்ட சமுதாய அமைப்பின் எழுச்சி, மதத்தில் அரசின் ஊடுருவல், வேளாண்மை உற்பத்திப் பொருட்களில் வியாபாரப் பெருக்கம், நகரமயமாதல், அடிப்படைப் பிராமணியத்திற்கு எதிரான பக்தி இயக்கம், பிரமதேய, சதுர்வேதி மங்களம், தேவதானா போன்ற பிராமணக் குடியிருப்புக்களின் விரிவாக்கம், பிராமணிய நிறுவனங்கள் மற்றும் சமஸ்கிருத கலாச்சாரக் கூறுகளின் ஊடுருவல், இனக்குழுச் சடங்குகள், நுட்பங்கள், தெய்வங்கள் போன்றவை பிராமணியத்திற்குள் உள்வாங்கப்படுதல், சாதிகளின் பெருக்கம், அவற்றின் சமூக வரிசையாக்கம் எனப் பல்வேறு சார்பு மாறுதல்களும் எழுச்சி பெற்றன.

ஆற்றுச் சமவெளிகள் இதைப்போன்ற மாற்றத்திற்கு வெகுவாக உட்பட்டுச் சமுதாய உருமாற்றமடைந்த போதிலும், இவற்றின் தாக்கம் மேட்டு நிலப்பகுதிகளிற் குறைவாகவே உணரப்பட்டது. மேலும் இப்பகுதிகளில் இனக்குழுச் சமுதாயம் நிறுவனங்களின் நம்பிக்கைகளும், உறவுகளும் தொடர்ந்து நீடித்ததைச் சமகாலத் தரவுகள் வெளிச்சத்திற்குக் கொண்டு வருகின்றன. இத்தகைய இனக்குழு நிறுவனங்களின் தொடர்ச்சி சமூக மாற்றமின்மை அல்லது நிலைத்தன்மையைச் சுட்டுவதாகக் கருதமுடியாது. ஆனால் சமகாலத்தில் மேட்டு நிலங்களில் ஏற்பட்ட வளர்ச்சி, ஓர் அரசுசார் சமுதாய அமைப்பை உற்பத்தி செய்யுமளவிற்குப் போதுமானதாக இல்லை. மானுடவியல் புரிதலில் இவ்வளர்ச்சியை ஒரு முரண் செறிந்த குறுந்தலைமை எனக் குறிக்கலாம். இதிற் கூறுகளாக்கப்பட்ட குலக்குடிகள் பல்வேறு குறுநிலத் தலைவர்களின் அதிகாரத்தின்கீழ் இயங்கின.

இருந்தபோதிலும், தரவுகள் ஒரு இயல்பான சமூக மாற்றத்தைச் சுட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, பத்தாம் நூற்றாண்டு வரை கிடைக்கின்ற நடுகற்கள் தொல் – தமிழ்க் குடி நிறுவனங்களின் தொடர்ச்சியைத் தெரிவிக்கும் அதே வேளையில், இவற்றின் தன்மை ஒரு மாற்றத்திற்கு உட்பட்டுப் பத்தாம் நூற்றாண்டு இறுதியிற் கல்வெட்டுக்களாக உருமாற்றம் அடைகின்றன. இதைப்போன்று, தொல் தமிழ் இலக்கியங்களிற் காணப்படும் சமுதாய அரசியல் நிறுவனங்கள் தொடர்ந்து வழக்கத்தில் இருந்தபோதிலும், நடுகற்களின் காலமான ஆறு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையில் ஏற்பட்ட சில முக்கிய மாற்றங்களைக் கோடிடலாம். தொல் தமிழ் இலக்கியங்களும் பெருங்கற்கால எச்சங்களும் மேட்டு நிலங்களில் நிலவிய ஒரு நிரந்தரமற்ற மானிடக் குடியிருப்புக்களையே சுட்டுகின்றன. வேட்டைக்காகவும் மேய்ச்சல் நிலங்களைத் தேடியும் குடிகள் தொடர்ந்து புலம் பெயர வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. ஆனால், பொருளாதார உற்பத்தி ஆநிரைகளைச் சார்ந்த நிலையிலேயே இருந்தபோதிலும், நடுகற்களின் மூலம் அறியப்படும் குடிகள் ஒரு நிரந்தரக் குடியிருப்புகளுக்குள் ஊர், நாடு போன்ற குடிசார்ந்த எல்லைகளை வகுத்துக் கொண்டு உருவாக்கம் பெற்றன. இதைப்போன்று, இலக்கியங்களில் வீர உணர்வை மையமாகக்கொண்டு இயங்கிய சமுதாய நிறுவனங்கள் அக்காலச் சமுதாயத்தின் மேல்மட்டத்தில் இருந்தவர்களிடம் அதிகமாக இருந்தது. ஆனால் இம்மரபுகள் சாதாரணக் கீழ்த்தட்டு மக்களிடம் ஊடுருவி வழக்கத்திற்கு வந்ததை நடுகற்கள் குறிக்கின்றன. நடுகற்கள் வீரர்களிற் பெரும்பாலானோர் காரி, ஓரி, அதியமான் போன்ற மொத்த இனக்குழுவையும் பிரதிநிதிப்படுத்திய



தலைவர்களைப்போல் அல்லாமல், சிறு குடியிருப்பு அளவில் அல்லது ஊர் அளவில் புகழ்பெற்று இருந்தவர்களே. நடுகற்களிற் காணப்படும் குறுகிய வாக்கியங்கள் வட்டாரக் குலக் குழுக்கள், அதன் உட்பிரிவுகள் போன்றவற்றிடையே நிலவிய உறவுகளைத் தெரிவிக்கின்றன. பெரும்பாலான நடுகற்கள் மாடுபிடிச் சண்டைகள், இனக்குழுப் பூசல்கள், விலங்குகளுடன் ஏற்பட்ட மோதல்கள் போன்றவற்றிற் கொல்லப்பட்டவர்களுக்கு மரியாதை செலுத்தும்பொருட்டு எடுக்கப்பட்டுள்ளன (எண். 16). ஆநிரை கவர்தல் அல்லது குழுப்பூசல்கள் பொதுவாக இரண்டு ஊர்களுக்கிடையே அல்லது இரண்டு ஊர்களுக்கு (எண் 7, 8, & 11) அப்பாற்பட்ட இனக்குழுக்களுக்கு இடையே நடைபெற்றுள்ளன. (எண்.1, 19, 21, & 30). இவை அப்போதைய ஊர்க் குடியிருப்புக்களைத் தெரிவிப்பதுடன், குறிப்பிடும்படியான மக்கள் தொகை வளர்ச்சியையும் தெரிவிக்கின்றன. வீரன் கொல்லப்பட்ட இடத்தை குறிக்கும் பொழுது அல்லது பூசலில் ஈடுபட்ட இனக்குழுத் தலைவர்களின் ஆட்சிப் பகுதிகளைத் தெரிவிக்கும்பொழுது ஊர், நாடு போன்ற நிலம் சார்ந்த அடையாளங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன (எண். 21). நடுகற்கள் வாசகங்கள் மூலம் குறைந்தது ஆறு நிகழ்வுகளில் வீரன் இறந்துபட்டதை அறிகின்றோம். அவை: 1. பூசல் சென்றுபட்டான் (மற்றவர்களின் மீது தாக்குதல் தொடுத்த பொழுது கொல்லப்படுதல் ) (எண். 5) 2. பூசலில்பட்டான் (மற்றவர்களின் தாக்குதலுக்கு உட்பட்டபொழுது கொல்லப்படுதல்) (எண். 6) 3. தொறு கொண்டுபட்டான் (மற்றவர்களின் ஆநிரைகளைக் கவர முற்படும் பொழுது கொல்லப்படுதல்) (எண். 10) 4. தொறுவிடுவித்துப்பட்டான் (கவரப்பட்ட ஆநிரைகளை மீட்க முற்படும்பொழுது கொல்லப்படுதல்) எண். 11) 5. மிருகங்களுடன் சண்டையிடும்போது கொல்லப்படுதல் (எண். 59). 6. தன் இன மக்களின் பொது நலத்திற்காக அல்லது தன் தலைவர்களின் உடல் நலத்திற்காகச் சிரசைத் துண்டித்துக் கொண்டு தன் வாழ்க்கையைச் சமர்ப்பித்தல் (எண். 22).

அக்காலங்களில் நில ஆக்கிரமிப்புப் பெரும்பாலும் கால்நடைகளின் மேய்ச்சலுக்காகவே நடைபெற்றுள்ளன என்பதால், நடுகற்கள் குறிப்பிடுகின்ற பூசல்களை மேய்ச்சல் நிலங்களுக்கான சண்டைகள் என்று கருத முடியும். இதன் மூலம் நிலங்கள் சமூகத்திற்குப் பொதுவானதாகவும், ஆநிரைகள் தனிப்பட்ட உடைமையாகவும் கருதப்பட்டிருப்பதை உணரமுடிகின்றது. அதேசமயம் ஒரு ஊரின் ஆநிரைகள் பக்கத்து ஊரவர்களின் அல்லது வேறு இனக்குழுப் பிரிவுகளின் தாக்குதலுக்கு உட்படும்பொழுது, அவ்வூரின் ஒட்டுமொத்தக் குடிகளும் ஒன்றுபட்டு எதிர்த்திருக்கவேண்டும். நடுகற்களில் கால்நடைகளைக் குறிப்பதற்கு ஆநிரை (எண். 47), தொறு (எண்.37, 38, & 45), பொன் (எண்.23)

போன்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று தொறுப்பூசல் ஆநிரைக்கான பூசலைச் சுட்டுகின்றது (எண். 7 & 10). தொறு பொதுவாக பசுக்களுக்கும், எருமைத் தொறு எருமைகளுக்கும், மாரி தொறு ஆடுகளுக்கும், கொற்றொரு அல்லது கன்றுகாலை என்பவை மாடுகளைக் குறிப்பதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளன (காசிநாதன் 1978:6).

வாழ்வாதாரத்தின் மூலம் என்ற நிலையில் தன் ஆநிரைகளைப் பாதுகாத்தலும் மற்றவர்களினதைக் கவர்தலும் குடிகளுக்கு மிக முக்கியமான தாக இருந்தது. ஆகவே ஒரு சமூகத்தில் இவ்விரு செயற்பாடுகளுக்கும் தேவையான இனக்குழு சார்ந்த வீரர்களின் இருப்பு அவசியம். அடிப்படையில் இவ்விரு தளங்களும் வீரர்களுக்குத் தன் ஆற்றலை அல்லது வீரத்தை நிலைநாட்டுவதற்கான தருணங்களை ஏற்படுத்தித்தந்தன. வெற்றி கிடைக்கும் பட்சத்தில் வீரர் என்ற நன்மதிப்புடன் பல்வேறு சமுதாயச் சலுகைகளைப் பெற்று வாழ்ந்திருக்க முடியும். கடும் சண்டைக்குப் பிறகு கொல்லப்படும்போது, அவ்வீரனுக்கு நடுகல் எடுப்பதன் மூலம் ஊர் வரலாற்றில் அல்லது குல வரலாற்றில் அவன் நினைவு பதிவு செய்யப்படுகின்றது. இதன் மூலம் வீரனின் தீரச்செயல் என்றென்றும் போற்றப்படும், புகழ் நிலைத்திருக்கும். பெரும்பாலான நடுகற்கள் வீரன் சார்ந்த சமுதாயத்தினரால் அல்லது அவன் குடும்பத்தினரால் எடுக்கப்பட்டுள்ளன. சில சமயங்களில் ஒட்டுமொத்த ஊரும் ஒன்றுகூடி வீரனுக்குக் கல் எடுத்துக் கொண்டாடியது குறித்த பதிவுகளும் இருக்கின்றன.

நடுகற்களிற் செதுக்கப்பட்டுள்ள உருவங்கள் மூலம் அக்காலச் சமுதாய நடப்புகளை ஒருவாறு அனுமானிக்கலாம். வீரன் சண்டைக்கான தொனியில் வில் – அம்பு,நீண்ட அல்லது குறு வாட்கள், ஈட்டி, பட்டாக்கத்தி அல்லது சிறு அரிவாள், கேடயம் போன்றவற்றை ஏந்தி நிற்கும் நிலையில் வரையப்பட்டுள்ளான். (எண். 7, 8, 12, 14 & 15). சில வீரர்கள் பல்வேறு வேலைப்பாடு அமைந்த ஆபரணங்களை அணிந்த நிலையில் இருக்கின்றார்கள். சிலர் ஆளுயரத்திலான வில் – அம்புடனும், மதுக் கலயங்களுடனும் காணப்படுகின்றனர் (எண். 68). இறக்கும் வீரர்களைத் தேவமகளிர் தழுவி ஏற்றுக்கொள்வது போன்ற சில சிற்பங்களும், வீரனுக்குப் பின்புறத்தில் எருமைமாடுகள் நிற்பது போன்ற சிலவும் உள்ளன (எண். 45). இவை வீரவேட்கைச் சமூகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளையும் மற்றும் நம்பிக்கை களையும் தெரிவிப்பதுடன், தொழில் சார்ந்த சமூக உருவாக்கத்தையும் புலப்படுத்துகின்றன. மானுடவியல், தொல்லியல் ஆய்வுகள் உலோக உருக்குதலிற் சமூகக் குழுக்களின் தேர்ச்சி இனக்குழு கட்டுமானங்களின்



தளர்ச்சியைத் தெரிவிப்பதோடு, வாழ்வாதாரப் பொருளாதார உற்பத்தியினின்று சற்று விலகி, அதனைச் சார்ந்த மாற்றுத் தொழில்களில் இவ்வினக்குழுவின் பிரிவுகள் ஈடுபட்டதையும் குறிப்பிடுகின்றன. ஆனால் நடுகற்கள் இயம்பும் உலோகம் உருக்குதல் சார்ந்த குறிப்புக்கள், அதன் வளர்ந்த நிலையைச் சாட்டுகின்றன. இதைத்தவிர, ஆபரணங்கள், சண்டை உபகரணங்கள் போன்றவற்றை உபயோகிப்பதில் இருந்த வேறுபாடுகள் சமூக ஏற்றத்தாழ்வு களைப் பிரதிபலிப்பதாகக் கருதலாம்.

புலிக்குத்திக்கல் என்ற மற்றொரு வகையான நடுகற்கள், வீரன் புலியுடன் சண்டையிட்டு வென்ற பொழுது கொல்லப்பட்டதைத் தெரிவிக்கின்றன (எண். 16). இவ்வகையான நடுகற்களில் வீரன் புலியுடன் சண்டையிடும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. இதைபோன்று வீரன் பொதுநலனுக்குத் தன் உயிரைத் தியாகம் செய்வதைக் குறிக்கும் நடுகற்கள் நவகண்ட சிற்பம் என்று அறியப்படுகின்றன (எண்.63, 64, & 65). இவற்றில் வீரன் தன் தலையைத் துண்டித்து ஏந்தி நிற்பதுபோன்ற காட்சி விபரிக்கப்படுகின்றது.

பொதுவாக நடுகற்கள் உணர்த்துவது ஒரு நிரந்தரக் குடி அமைப்புக்குள் வந்த ஆநிரைச் சமூகம். தொல்தமிழ் இலக்கியங்களிற் குறிக்கப்படும் குரும்பர், எயினர், அதியர், வேட்டுவர், குறவர், வேடர், மலவர் இனக்குழுக்கள் தொடர்ந்து தம் பாரம்பரிய உற்பத்தி முறைகளில் ஈடுபட்டு வந்தன. குறிப்பாக, அதியர், வடுகர், வேட்டுவர் போன்ற இனக்குழுப் பெயர்கள் நடுகற்களின் வாக்கியங்களிற் காணப்படுகின்றன. இவற்றுள், வேட்டுவர்கள் கணிசமான மக்கள் தொகைப் பெருக்கத்துடன் ஒரு வலுவான இனக்குழுச் சமூகமாகப் பரிணமித்ததை அறியமுடிகின்றது. இவ்வளர்ச்சியின் விளைவாக மற்றைச் சிறுசிறு இனக்குழுக்கள் நாளடைவில் வேட்டுவர்களுடன் இணைந்திருக்கவும் வாய்ப்பு இருக்கின்றது. இந்தப் புது இனக்குழுவின் ஒன்றிணைவு, ஏற்கனவே பல்வேறு குலப் பிரிவுகளைக் கொண்ட வேட்டுவ இனக்குழுவிற்குள் மேலும் சில பிரிவுகளைக் கொண்டுவந்திருக்கலாம். குலங்கள், இனங்கள் தன் தனித்தன்மையை இழக்காதிருந்த அதே நேரத்தில், சில பொதுவான இனக்குழு அடையாளங்களைப் பகிர்ந்துகொண்டதன் மூலம் ஒன்றுபட்டன. ஒவ்வொரு குலமும் தனக்கென்ற ஒரு பொதுவான மூதாதையரைக் கொண்ட மரபுவழி வரலாறுகளைக் கட்டமைக்கத் தொடங்கின. இக்குல வரலாறுகள் புகழ்வாய்ந்த தலைவர்கள், அரசர்கள் சூர்யகுல, சந்திரகுலப் பிரிவுகளுடன் தொடர்பு படுத்தப்பட்டன. நடுகற்களில் இடம்பெறுகின்ற வீரர்களின் இனக்குழு

அடையாளங்களை அறிவதற்கான போதுமான சான்றுகள் இல்லாத போதிலும், தொல்தமிழ் இலக்கியங்களுடனும் பத்தாம் நூற்றாண்டுக்குப்பிந்தைய கல்வெட்டுத் தரவுகளுடனும் ஒப்பிட்டு ஆயும்பொழுது இவர்கள் வேட்டுவ இனக்குழுவைச் சார்ந்தவர்கள் என்பது தெளிவு. தொல்தமிழ் இலக்கிய காலத்தின் இறுதியில் மேட்டுநிலங்களில் வேட்டுவர்கள் வலுப்பெற்று எழுந்ததும் பிந்தைய கல்வெட்டுக்களில் இவர்கள் இப்பகுதியில் ஒரு முக்கியமான சமூகமாகத் தொடர்ந்திருந்ததும், இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட நடுகற்கள் காலத்திலும் மேட்டுநிலங்கள் வேட்டுவர்களின் ஆளுகைக்குக்கீழ் இருந்ததையும் உணர்த்துகின்றன. அண்ணமார் கதைகள் போன்ற பிற்கால நாட்டார் மரபுகளும் இப்பகுதியில் நிகழ்ந்த வேளாளர் குடியேற்றத்தின்பொழுது வேட்டுவர்களுடன் ஏற்பட்ட மோதல்களை விவரிக்கின்றன.

வேட்டுவர் இனக்குழு, ஆநிரைகளை முதன்மை உற்பத்தியாகவும் வேளாண்மையை உப உற்பத்தியாகவும் கொண்ட சமூகமாக மாற்றம் பெறுவதற்கு முன்னால், வேட்டை, கால்நடை வளர்ப்பு, வென்புல விவசாயம் போன்ற பல்வேறு வாழ்க்கை ஆதாரங்களைப் பின்பற்றி வளர்ச்சி பெற்றிருக்கிறது. மேலும் இவர்களுள் ஒரு பிரிவினர் அண்டை அரசர்களின் படைகளிற் போர்வீரர் களாகவும் பணியமர்த்தப்பட்டனர். ஆக ஒரு கட்டத்தில், வேட்டுவ இனக் குழுக்களுக்கிடையே ஒரு மெல்லிய தொழில் சார்ந்த சமூகப் பிரிவினை எழுந்தது தெளிவாகின்றது. இருந்தபோதிலும், இவ்வளர்ச்சியின் காரணமாக அவை தங்களின் பொதுவான இனக்குழுக் கூறுகளான வீர வேட்கை, பொது உற்பத்தி, உறவுசார்ந்த தொழிலாளர் போன்றவற்றை உடைத்துக்கொண்டு வேளாண்மைச் சமூகங்களிற் காணப்படும் வர்க்கம் சார்ந்த சமூக அமைப்பாக உருவாக்கம் அடையவில்லை. மேலும், வரலாற்றுத் தரவுகளில் வென்புல விவசாயம் குறித்தான குறிப்புக்கள் பதினொராம் நூற்றாண்டுக்குப் பின்பே அதிகமாகக் காணக் கிடைக்கின்றன.

பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேட்டுவ இனக்குழுவின் ஒரு பிரிவினர் தொல் உற்பத்தி முறைகளைத் தவிர்த்து முழுநேர வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர். பெரும்பாலும் கால்நடைச் சமூக அமைப்பிற் குடிகளின் பொருளாதார நிலை, குடிகளால் வளர்க்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை யைக் கொண்டு கணிக்கப்பட்டதால், இவ்வகைப்பொருளாதார உற்பத்தியில் முன்னேற்றம் அடைய முடியாதோர் (தங்கமணி. இராஜசேகர் ஆண்டு குறிப்பிடப் படவில்: 138) முழுநேர வேளாண்மை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றனர்.



இவ்வகையான வேளாண் குடிகளின் உருவாக்கம் ஆநிரைசார் சமூகத்தில் ஒரு பெரும் பிரிவினையை ஏற்படுத்திய போதிலும், இவ்விரு வேறுபட்ட உற்பத்தி முறைகளின் இருப்பு, வழக்கத்திலிருந்த சமூகப் பண்பாட்டு நிறுவனங்களில் பெரியதான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக, உபரி உற்பத்திகளைப் பண்டமாற்றம் செய்து கொண்டதன்மூலம், இக்குடிகள் தங்களுக்குள் பயன்பெற்றுப் பொதுவான நல்லிணக்கத்துடன் இருந்தன.

தென் இந்தியாவிற் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏற்பட்ட குடிப்பெயர்ச்சி, பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் இனக்குழு ஆளுகைகளை மட்டுப்படுத்தி ஒரு நிலையான வர்க்கம் சார்ந்த சமூக அமைப்பின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தன. இந்தத் திறந்த மேட்டுநிலங்கள் பல்வேறு குடிப்பெயர்வுகளுக்கான தளமாக இருந்தாலும் பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்பு ஏற்பட்ட குடிப்பெயர்ச்சி இதற்கு முந்தையவையுடன் வேறுபட்டவை (ஆரோக்கியசாமி 1996: 260) முக்கியமாக, இவை வெறும் இனக்குழுக்களின் புலம் பெயர்தலாக இல்லாமல் வேளாண்மை சார்ந்த குடிகள் ஒரு நிரந்தர இருப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக மேற்கொண்ட முயற்சிகளாகும். இப்புது வேளாண் குடிகளின் வருகைக்கு ஆநிரைச் சமூகத்தில் ஒரு பெரிதான எதிர்ப்பு இருந்திருக்கச் சாத்தியம் இல்லை. அதிகாரம், உரிமை, சமூகச் சலுகைகள் போன்றவை பொதுவாகக் கால்நடைப் பொருளாதாரத்தில் இருந்த செழுமையைக் கொண்டு மதிப்பிடப்பட்டதால், புலம் பெயர்ந்த உழுகுடிகள் எவ்வித எதிர்ப்புமின்றி ஊடுருவிக் குடியிருப்புக்களை ஏற்படுத்திக்கொண்டன. இவ்வுழு குடிகளைத் தொடர்ந்து, பல்வேறு தொழில்சார்ந்த குடிகளும், மேட்டு நிலங்களுக்கு நாளடைவிற் குடிப்பெயரத் தொடங்கின.

தமிழக ஆற்றுச் சமவெளிகளில் எழுந்த வேளாள உழுகுடிகள், மேட்டு நிலங்களிற் பாசனம் சார்ந்த விவசாய உத்திகளை அறிமுகப்படுத்தின என்ற கருத்து நிலவுகின்றது. ஆனால் வேளாண்மை தொடர்பான குறிப்புக்கள் பெருங்கற்கால காலம் தொட்டே கிடைக்கின்றன. எனவே முன் குறிப்பிட்டது போல, வேளாண் உற்பத்தியின் ஆளுகை வேளாண் குடிகளின் கணிசமான பரவலாக்கத்திற்கு முன்பே ஏற்பட்டது என்பதை இத்தரவுகளின் மூலம் அறியலாம்.

சமவெளிகளிலிருந்து ஊடுருவியிருந்த வேளாண்மை சார்ந்த சமூக, பண்பாட்டுக் கூறுகள், சாதிகளின் பெருக்கத்தையும் அதனைச் சார்ந்த சமூக வரிசையாக்கத்தையும் துரிதப்படுத்தின. மேலும், வேளாண்குடிகளுக்கும்

இன்னும் இனக்குழுக் கூறுகளைத் தாங்கிக் கொண்டிருந்த பழங்குடிகளுக்கும் இடையே நிலவிய ஒவ்வாத சமூகச் சூழல் தொடர்ந்து வந்திருக்கின்றது. குறிப்பாக, இடைக்கால வரலாற்றின் பெரும்பகுதி இவ்விரு சமூகங்களுக்கிடையே இருந்த பதற்றத்தைப் பேசுவதாக உள்ளது. பாசனம் சார்ந்த வேளாண் உத்திகளில் தேர்ச்சியும், பிராமணியத்தை மையப்படுத்திய பண்பாட்டு நிறுவனங்களும் வேளாளக் குடிகளுக்குச் சமூகத்தில் உயர்ந்த இடத்தைக் கோருவதற்குப் போதுமானதாக இருந்திருக்கிறது. அதே சமயத்தில் வேளாண் சமூகத்திலிருந்து விலகியிருந்த சில வேட்டுவப் பிரிவுகள், புதுப் பொருளாதார உறவுகளின் எழுச்சியால் வெகுவாகச் சீர்குலைய ஆரம்பித்தன. ராசண்ணாவின் கருத்துப்படி,

> 'எழாம் நூற்றாண்டில், வேட்டுவக் குடிகள் தம் சமூக, அரசியல் அதிகாரத்தை இழந்து வேளாளர்களின் ஆளுகைக்கு உட்பட்டார்கள். ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வேட்டுவர்களின் மேலாண்மை தளர்ச்சிபெற்ற அதே நேரத்தில் வேளாளர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட புதுப்பண்பாடு ஒரு காலத்தில் வேட்டுவர்களின் ஆளுகைக்குக்கீழ் இருந்த நிலத்தில் ஆழ வேரூன்ற ஆரம்பித்தது'(ராசண்ணா 1992 : 344).

கோயிலை மையமாகக்கொண்ட ஒரு சமய வழிபாட்டுமுறை கால்நடைச் சமூகத்தில் வலுப்பெறவில்லை. தொடக்கத்தில் நடுகற்கள் குடிகளின் வழிபாட்டுத் தளங்களாக விளங்கின. வீரனின் ஆன்மா நடுகற்களில் நிலை பெற்றிருப்பதாக நம்பப்பட்டிருக்கின்றது. வீரர்களின் வீரதீரச் செயற்பாடுகள் புனிதமாகப் போற்றப்பட்டன. பூசல்களிலும், மாடுபிடிச் சண்டைகளிலும் உயிரிழந்தோர் நாளடைவில் வழிபடும் தெய்வங்களாக மாறினர். மேலும் இக்குடிகள் தங்களையும், தங்களின் கால்நடைகளையும் வெளிப்புறத் தாக்குதலிலிருந்து பாதுகாக்க நடுகல் தளங்களிற் பல்வேறு வகையான சடங்குகளை மேற்கொள்ள ஆரம்பித்தனர். பிற்காலக் கோயில்களிலிருந்து நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பது, நடுகல் தளங்கள் பின்னாட்களில் கோயில்களாக மாற்றம் பெற்றதை உணர்த்துகின்றன. மீண்டும் ராசண்ணாவின் கருத்துப்படி, காலப்போக்கில் இந்த நினைவுச்சின்னங்கள் சிறு ஆலயங்களாகவோ அல்லது பெரும் வழிபாட்டுத் தளங்களாகவோ உருமாற்றம் பெற்றன (ராசண்ணா 1992 : 344).

வீர நிகழ்வுகளில் இறந்தவர்களை வழிபடுதல் என்பதைத் தவிர்த்து, குடிகளிடம் நிலவிய வேறு எந்த சமய நம்பிக்கைகள், வழிபாட்டுச் சடங்குகள்



போன்றவற்றைத் தெரிவிக்கும் தரவுகளும் கிடைக்கவில்லை. இனக்குழுச் சமூகங்களிற் பொதுவாகக் காணக்கூடிய இயற்கையை மனித உருவாக வழிபடும் முறை இருந்ததற்கான குறிப்புக்களும் கிடைக்கவில்லை. இதேபோன்று சமணம், பௌத்தம் மற்றும் இந்து மதங்களின் இருப்பைக் குறிக்கும் தரவுகள் காணப்படுகின்ற பொழுதுங்கூட, இம்மதங்கள் எந்த அளவிற்குக் குடிகளின் இனக்குழு உணர்வைச் சிதைத்து சமூக அங்கீகாரம் பெற்றிருக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மேற்குறிப்பிட்ட மதங்களில், ஒரு ஒப்பீட்டு அளவிற் பார்க்கும்போது, சமணம் சார்பான தொல்லியல் எச்சங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. சமணத்தின் வருகைக்கு இப்பகுதிகளின் புவியியல் அமைப்பும் முக்கிய ஊக்கியாக இருந்திருக்கின்றது. இப்பகுதிகளின் வியாபார முக்கியத்துவமும், கர்நாடகப் பகுதிகளுடனான புவியியல் தொடர்பும், சமண வருகையை இலகுவாக்கியி ருக்கலாம். கர்நாடகப் பகுதிகளை ஆண்ட கங்க வம்சத்தினர் சமணத்தைப் பரப்பியதாக நம்பப்படுகின்றது. சமண முனிவர்கள் வசித்த பழங்கால மலைக்குகைகள் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கணிக்கப்படுகின்றன (ராஜூ 2005 : 21–2). ஓவியங்கள், சமண தீர்த்தங்கரர் களின் சிற்பங்கள், முனிவர்களின் படுக்கைகள், தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் முதலானவை இக்குகைகளிலிருந்து திரட்டப்பட்டுள்ளன. பொதுவாக இனக்குழுத்தலைவர்கள், வியாபாரிகள் போன்றவர்களுக்குச் சமணத்துடன் தொடர்பிருந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கின்றது. இனக்குழுத் தலைவர்கள் சமணத்துறவிகளுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதைத் தங்களின் சமூக மேன்மையாக்கத்திற்கு ஒரு வாய்ப்பாகக் கருதியிருக்கின்றனர். ஐவர் மலையிற் காணப்படும் சமண தீர்த்தங்காரர்களின் சிற்பங்கள் மிக முக்கிய சமண எச்சங்களாகும் (ராஜூ 2005 : 79) பத்தாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட கல்வெட்டுக்களில் சமணம் தொடர்பான குறிப்புக்களும் மிகக் குறைவு என்பதால் ஒரு வேளாண்மை சார்ந்த சமூகத்தின் எழுச்சியிற் சமணம் நிலைபெறாமற் போனது தெரியவருகின்றது.

வைதீக மதங்களின் தொல் சின்னங்களாக நாமக்கல் குகைகள் இருக்கின்றன. இம்மதத்தின் ஊடுருவல் தாமதமாகத் தொடங்கியபொழுது மற்ற மதங்களை விட ஆழமாக வேரூன்றித் தழைக்க ஆரம்பித்தது. புதிதாகச் சமவெளிகளிலிருந்து குடி பெயர்ந்த உழுகுடிகள், இடைக்காலத் தொடக்கத்தில் எழுந்த பக்தி இயக்கம் போன்றவை இந்துமதப் பரவலாக்கத்தைத் துரிதப்

படுத்தின. பெரும்பாலான இந்துக் கோவில்களின் கட்டுமானப் பணிகள் பதினொராம் நூற்றாண்டுக்குப் பின் ஆரம்பித்து, பின்வந்த நூற்றாண்டுகளில் வெகுவாக அதிகரித்தன.

பிரிவு – 3

மேட்டுநில நீர் ஆதாரங்களைக் கட்டுப்படுத்தி விவசாயத்திற்குப் பயன்படுத்தும் அளவிற்குத் தொழில்நுட்பம் வளராத பட்சத்தில், குடிகளுக்குக் கால்நடை சார்ந்த பொருளாதாரம் ஒரு இயற்கை அமைவாக இருந்திருக்க வேண்டும். மக்கள் பெருக்கம் குன்றிய மேட்டு நிலங்களில், மலைப்பாங்கான பகுதிகளை உழுதும் அடர்ந்த காடுகளை அழித்தும் அவற்றை விவசாய நிலமாக மாற்றத் தேவையான மனித சக்தி இல்லாமல் இருந்தது. அதே நேரத்தில் நீண்ட புல்வெளிகளும் காடு சார்ந்த நிலப்பரப்பும் ஒரு தன்னிச்சையான கால்நடைப் பொருளாதாரம் எழுவதற்கு வழிவகுத்தது. வரகு, திணை, ஐவனம் நெல் போன்ற பயிரிகள் பயிரிடப்பட்டபோதும், அவை முழுநேர நெல் விவசாயமாக இன்னும் வளர்ந்திருக்கவில்லை. கால்நடைச் செல்வத்தின் மீதான ஒரு ஈர்ப்பு மெல்ல வளர்ந்து சமுதாயத்தின் கடைநிலைவரை ஆழவியாபித்திருந்தது. கால்நடைகளின் எண்ணிக்கையைக் கொண்டு தனிப்பட்ட நபரின் செல்வச் செழிப்பு மதிப்பிடப்பட்டதால், கால்நடை உற்பத்தியின் பெருக்கம் தனிநபரின் சமூக நன்மதிப்பையும் நிர்ணயிப்பதாக அமைந்தது.

நடுகற்களிற் கால்நடை வளங்கள் பல்வேறு பதங்கள் மூலம் குறிக்கப்படுகின்றன. இவற்றுள், தொறு, நிரை, காலி மற்றும் பொன் (எண்.23, 37, 47 & 55) போன்றவை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆநிரை என்பது மாடுகளைக் குறிப்பதற்கான பொதுவான சொல்லாக இருந்திருக்கலாம். பொன் (எண்.23) என்பதும் கால்நடைகளுக்கான பொதுப்பெயர். நடுகற்களிற் காணப்படும் பொன் என்ற வார்த்தைகளைக் கொண்டு தொடங்கும் தனிப் பெயர்கள் அந்நபரின் கால்நடைச் செல்வத்தினைக் குறிப்பதாக அவதானிக்க லாம் (பூங்குன்றன் 2001 : 41) பொன் தங்கத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப் பட்டது. சமூகத்தின் வர்த்தக மாற்றங்களின்போது, ஆநிரைகளைப் பணம் போன்று பயன்படுத்தியிருக்கவும் வாய்ப்பு இருந்திருக்கின்றது.

கால்நடைகள் குடிகளின் தனியுடைமையாக இருந்த அதே நேரத்தில், மேய்ச்சற் புலங்கள் பொதுவுடைமையாகக் கருதப்பட்டது. பெரும்பாலும் இரு இனக்குழுக்களுக்கிடையே ஏற்பட்ட பூசல்கள் கால்நடைகளை அபகரிப்பதற்காக



எழுந்த பூசல்களாகவே இருந்தன. சில நேரங்களில், இப்பூசல்கள் குடிகளின் மேய்ச்சல் நிலப்பரவலாக்க முயற்சியின் விளைவாகவும் நிகழ்ந்தன. விவசாயத்தை மையப்படுத்திப் புலங்களின் மீதான தனியுடைமை பதினொராம் நூற்றாண்டுக்குப் பின், குறிப்பாகப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிற்தான் பரவல் அடைந்தது.

பொன்னந்தியர், பொன்மோதனார் மற்றும் பொற்கோவனார் (எண். 19 & 20) போன்ற கால்நடைப் பொருளாதாரத்தில் செழிப்புற்று இருந்தவர்கள், இதில் ஏழ்மை நிலையில் இருந்தோரை வேலைக்கு நியமித்திருக்கலாம். பெரும்பாலான நடுகற்கள் தொறுப்பூசலின்போது இறந்த 'சேவகர்களைக்' கௌரவிக்கும் பொருட்டு எழுப்பப்பட்டிருக்கின்றன (எண். 20, 26 & 31). ஆனால் ஆநிரை என்பதும் ஒரு நிலையான உடைமை இல்லை என்பதால், அதாவது குடிகளின் ஆநிரைச் செல்வங்கள் எந்நேரத்திலும் கவரப்படலாம் அல்லது கால்நடை வளர்ப்பில் ஏழ்மையாக உள்ள குடிகள் தன் தனிப்பட்ட முயற்சியின் மூலம் அல்லது மற்றவர்களின் ஆநிரைகளைக் கவர்தலின் மூலம் தன் செல்வத்தை அதிகரித்துக்கொள்ள முடியும் என்ற நிலையில், கால்நடைச் சமூகத்திற் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறைவு எனலாம். அதைப்போன்று, குடிகளின் கால்நடைகள் கவரப்படக்கூடிய அச்சுறுத்தல் நிரந்தரமாக இருந்ததால், குடிகளுக்கிடையேயான சக உணர்வும் ஒத்துழைப்பும் அவசியமானதாக இருந்தன.

வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்திலிருந்து சிறு அளவிலான வென்புல விவசாயம் நடைமுறையில் இருந்தது. பெருங்கற்கால எச்சங்களும் தொல்தமிழ் இலக்கியங்களும் இதற்கான குறிப்புக்களைக் கொடுக்கின்றன (ராஜன் 1994 : 147). ஆநிரை சார்ந்த பொருளாதார உற்பத்தியிற் பிரசித்தம் பெறமுடியாத குடிகள் மாற்று உற்பத்தி முறையைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. இருந்த பொழுதிலும் இக்கால விவசாய வளர்ச்சி மிகவும் மெதுவானதாகவும் தேர்ந்த பாசனமுறை, பயிர்விதைத் தேர்வு போன்ற முறைகளுக்கு அப்பாற்பட்டதாகவும் இருந்தது.

பொதுவாக வேளாண் உற்பத்தியின் துரிதமான பரவலாக்கத்திற்கு முக்கிய காரணங்களாகப் புலப்பெயர்ச்சியும் ஏனைய வெளித்தொடர்புகளும் காரணமாக அமைந்தன. காவேரி, வைகை போன்ற ஆற்றுச்சமவெளிகளில் உருவாகியிருந்த அரசுகளின் அதிகார ஊடுருவல்களும், வர்த்தகத் தொடர்பு களும் மேட்டுநில இனக்குழுவினரை ஒரு வகையான வெளித்தொடர்புக்கு

உட்படுத்தியிருந்தன. நடுகற்களில் காணப்படும் குளம் அமைத்தற்கான குறிப்புக்கள் கால்நடை வளர்ப்புடன் தொடர்புடையதாக இருந்திருக்க வேண்டும். ஒரு முழுமையான பாசன ஏற்பாடுகளுக்குத் தேவையான மனித வளமும் தொழில் நுட்பமும் அற்ற நிலையில் வேளாண் செயற்பாடுகள் மழைநீரை எதிர்பார்த்த வென்புல விவசாயமாகவே இருந்திருக்கின்றது. மேலும், ஆநிரையை முதன்மையாகக் கொண்ட குடிகள் ஒரு நிரந்தரமான விவசாயப் புலங்களை அமைத்துக்கொண்டன என்பதும் சந்தேகம். பெரும்பாலும் குடிகளின் இடம்விட்டு இடம் நகரும் தன்மைக்கு ஏற்ற இடப்பெயர்வு விவசாயமே கையாளப்பட்டது. தவிர விவசாயப் புலங்கள் தனியுடைமையாகவும் மாற்றக்கூடிய வணிகப் பொருளாகவும் உருவாகியது. பன்னிரெண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டுகளிற்றான். இப் பரிணாம வளர்ச்சி ஆநிரைச் சமூகத்திலிருந்து வேளாண் சமூகத்திற்கான மாற்றத்தையும் உணர்த்துவதாக இருந்தது.

கைவினைஞர்கள் குறித்தான குறிப்புக்கள் நடுகற்களில் மிக அரிதாகக் காணப்படுகின்றன. இருப்பினும், இதற்கான தொழில் நிபுணத்துவம் பெற்ற குடிகள் இருந்திருக்கின்றன. கொல்லர், தச்சர், தட்டார் போன்றவர்களைப் பற்றிய குறிப்புக்கள் தொல்தமிழ் இலக்கியங்களிற் காணப்படுகின்றன. நடுகற்களிற் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களில் வீரர்கள் பல்வேறு வகையான அணிகலன்களை அணிந்திருக்கின்றார்கள். வளையல்கள், மணிகள், விரல் வளையம், சிலவகையான இடை ஆபரணங்கள் போன்றவை அவற்றில் காணப்படுகின்றன (எண். 18, 19 & 68). பெருங்கற்கால வசிப்பிடங்களில் நடாத்தப்பட்ட அகழ் வாராய்ச்சிகள் வெள்ளி, தங்கம் போன்ற உலோக எச்சங்களைக் கண்டு பிடித்திருக்கின்றன. இதைப்போன்று இரும்பின் பயன்பாடும் தென்னிந்தியா முழுதும் பரவியிருந்ததைத் தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. மேலும், நடுகற்களிற் காணப்படும் வீரர்கள் ஆடைகள் உடுத்தியிருப்பது, ஆடை நெய்தலில் ஏற்பட்டிருந்த தொழில் வளர்ச்சியைக் காட்டுகின்றது (எண். 26). முன்பு குறிப்பிட்டதுபோற் பல்வேறு தொல்லியல் ஆய்வுகள், உலோக உருக்குதலில் ஏற்பட்ட தனிப்பட்ட வளர்ச்சியைச் சமூகப் பிரிவினையாக்கத்தின் தொடக்கமாகக் குறிக்கின்றன.

இதைப்போன்று வாழ்க்கை ஆதாரப் பொருட்களிற் பண்ட மாற்றத்துடன், இதனைச் சார்ந்த தனிச் சிறப்புப் பெற்ற வர்த்தகக் குழுக்களும் மெதுவாக வளர்ச்சி பெற ஆரம்பித்தன. பால்படு பொருட்கள், இறைச்சி போன்றவை விவசாய உற்பத்திகளுக்கு ஈடாகப் பண்டமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன.



அகழ்வாய்வுகளிற் கண்டுபிடிக்கப்பட்ட பெருவாரியான ரோமன் நாணயங்கள், மலைக்குகைகளிற் காணப்படும் சமணத்துறவிகளின் வசிப்பிடங்கள் முறையே கடல் சார்ந்த வணிகத்தையும், வட இந்தியப்பகுதிகளுடனான வணிகத் தொடர்புகளையும் அறிவிக்கின்றன (ராஜு 2005 : 107இதைப்போன்ற நீண்ட தூர வர்த்தகத்திற்கான குறிப்புக்களை நடுகற்களில் எதிர்பார்க்க முடியாது. மேலும், முற்காலத்தில் நிலவிய நீண்டதூர வர்த்தகத் தொடர்புகள் ஒரு இனக்குழு நிலையிலிருந்த சமூகத்துடன் ஏற்பட்டவை. இவற்றில் இனக்குழுத் தலைவர்களின் கட்டுப்படுத்தும் அதிகாரம் மிகக்குறைவு. ஆனால் பிந்தைய நடுகற் காலம் ஒரு ஆநிரை சார்ந்த சமுதாயம் வேளாண் சமுதாயமாகப் பரிணாமம் அடைந்து கொண்டிருந்த காலகட்டம். மேலும் தற்போது பல்வேறு குறுநிலத் தலைமைகளை மையப்படுத்தி ஓர் அரசியல் ஒருங்கமைப்பும் ஏற்பட்டிருந்தது. இவ்வளர்ச்சி அயல் சார்ந்த வர்த்தகத் தொடர்புகள் குறைந்து உள்நாட்டு வாணிகம் வலுப்பெற உதவியது. மேலும் முற்கால வர்த்தக மாற்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களின் மீதானதாக இருந்தன. இதில் ஒட்டுமொத்தக் குடிகளின் பங்கேற்பு மிகக் குறைவு. இதைப்போலன்றி ரோமானிய வர்த்தகத் தொடர்புகளின் சிதைவுக்குப் பின்னால் பல்வேறு ஆபரணங்களின் உபயோகம் சமூகத்தின் விளிம்பு நிலை வரை ஊடுருவி இருந்ததை நடுகற்கள் மூலம் உணரலாம். நடுகற்களில் வீரர்கள் அணிந்திருக்கின்ற ஆபரணங்கள், வட்டார மக்கள் இத்தகைய வர்த்தக மாற்றங்களில் ஈடுபட்டதைத் தெரிவிக் கின்றன. எனவே நீண்டதூர வணிகத்தொடர்புகளின் சிதைவு வட்டார வர்த்தக வளர்ச்சியை உத்வேகித்தது.

**பகுதி – 4**

இப்பகுதியில் வரலாற்றுப் பதிவுக்காக நடுகற்களைப் பயன்படுத்திய ஓர் ஆநிரைச் சமூகத்தின் அரசியல் வளர்ச்சி, ஒருங்கிணைப்பு ஆகியவற்றை ஆராயலாம். மேற்குறிப்பிட்டதுபோல், இன்னும் இனக்குழுக் கட்டுமானத்தின் பிடிப்புத் தளராமல் இருந்த தமிழக மேட்டு நிலங்களைச்சுற்றிப் பல்வேறு அரசு–சார் சமூகங்களும், அரசியல் அமைப்புகளும் உருவாகி வலுப்பெற்றிருந்தன. கங்கர், சேரர், பல்லவர், பாண்டியர், சோழர் முதலிய அரசுகள் மேட்டு நிலங்களின் எல்லையைத் தொட்டுக் கொண்டு இருந்தன. மேலும் இந்த எல்லைப்புற அரசுகள் மேட்டு நிலங்களில் தங்களின் அதிகார எல்லையை விரிவுபடுத்தக் கடும் சண்டைகளில் ஈடுபட்டன. அவை கால்நடைசார் சமூகக் குழுத்தலைவர்களுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு, வேளாண், பிராமணிய குடியிருப்புக்களை

ஊக்குவிப்பதன் மூலம் மேட்டு நிலங்களில் தங்களின் அதிகாரத்தை வலுப்படுத்த முனைந்தன. இம்மேட்டு நிலங்களின் வர்த்தக முக்கியத்துவமும் இவ்வெல்லைப் புற அரசுகளின் ஊடுருவலுக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

இந்த அரசுகளுக்கிடையே தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருந்த கடும் மோதல்கள் காரணமாக மேட்டுநிலக் குறுநிலத் தலைவர்களின் ஒத்துழைப்பு அந்தந்த அரசுகளுக்கு மிக அவசியமாக இருந்தது. முக்கியமாக இனக்குழுத்தலைவர்களின் வீரம், வீர மரணத்தின் மீதான வேட்கையை இவ் அரசுகள் பயன்படுத்திக்கொள்ள நினைத்தன. இதைப்போன்று, வட்டார இனக்குழுத் தலைவர்களும் இந்த அரசுகளுடன் தம்மை இணைத்துக் கொள்வதன் மூலம் பயன்பெற்றனர். இவ்வெல்லைப்புற அரசுகளின் செயற்பாடுகள், நிர்வாக முறைகள், குறுநிலத்தலைமைத் தலைவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்தன. குறுந்தலைவர்கள் அரசர்கள் போன்று தம்மைப் பாவித்துக்கொள்ளத் தொடங்கியது மட்டுமல்லாமல் இவ்வரசுகளுடன் இணைத்துக் கொள்வதன் மூலம் வட்டார இனக்குழுப் பிடிப்பிலிருந்து விடுபட்டு, மற்றக் குடிகளுக்கும் தமக்கும் உள்ள சமூக இடைவெளியை அதிகரித்துக் கொள்ளவும் ஏதுவாக்கியது. அரசு ஆட்சியாளர்களின் தனிப்பட்ட பெயர்களையும், பட்டங்களையும் பயன்படுத்திக் கொண்டதன் மூலம் உள்ளூர் மக்களிடையே தமது அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொள்ளவும் முடிந்தது. அரசு மாதிரிகளை எடுத்துக்கொண்டு செயற்பட்டதன் விளைவாக ஏற்பட்ட இரண்டு முக்கிய மாற்றங்களை குறிப்பிடலாம். ஒன்று, இது குறுநிலத் தலைவர்களுக்கும் அரசுகளுக்கும் ஏற்பட்ட ஒருவிதமான உடன்பாட்டைத் தெரிவித்தது; அதாவது இது ஒரு வகையான மேட்டுக்குடியினர் சார்ந்த தொடர்பு; இனக்குழுவின் சாதாரண பிரிவினர்களுக்கும், பொதுமக்களுக்கும் இவ்விதத் தொடர்பு களுக்கான சாத்தியங்கள் இல்லை. இரண்டாவதாக, இனக்குழுத் தலைவர்கள் இரண்டு விதமான பயன்பாட்டைப் பெற்றனர். இனக்குழுக்களின் தலைவர் என்ற நிலையிலும், வெளி அரசுகளின் வட்டாரப் பிரிதிநிதி என்ற நிலையிலும் மேலிருந்தும் கீழிருந்துமாகத் தனது அதிகாரத்தைத் திடப்படுத்தி ஒரு ஆளும் வர்க்கமாக எழ வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது. இறுதியாக, இனக்குழுத் தலைவர்கள் தம் குல வரலாற்றை வெளி அரசுகளின் குல வரலாற்றுப் புராணங்களுடன் இணைத்துக்கொள்ள முடிந்ததன் ஊடாக இனக்குழுக்களுக்கு ஒரு புது வரலாற்றுத் தொடர்பு ஏற்பட்டதுடன், இனக் குழுவிலிருந்து விடுவித்துக்கொண்ட ஆளும் வர்க்கத்தின் ஆளுகைக்கு ஒரு வரலாற்று ரீதியான அங்கீகாரமும் அதிகாரமும் கிடைத்தது.



சில நடுகல் வாசகங்கள், குறிப்பாகத் தருமபுரிப் பகுதிகளிருந்து திரட்டப்பட்டவைகள், பல்லவ மற்றும் கங்க அரசர்களின் ஆட்சியாண்டைக் கொண்டு தொடங்குகின்றன (எண். 11). இவை இவ்வரசர்களின் ஆட்சி அதிகாரத்தை உள்ளூர்த் தலைவர்கள் ஏற்றுக் கொண்டதைத் தெரிவித்த போதிலும், இவ்வகையான வெளி அரசுகளின் அதிகாரம் தொலைதூர மேட்டுப்புற நிலங்களில் எவ்வாறு செயற்பட்டன என்பது ஆராயப்படவேண்டும். பொதுவாக மேட்டுநிலங்கள் எந்த வெளிப்புற அரசுகளின் ஒட்டுமொத்த ஆளுகைக்குக் கீழேயும் வந்ததாக வரலாற்றுத் தரவுகளிற் பதிவு செய்யப்படவில்லை. போர்த் திறன்பெற்ற வட்டாரத் தலைவர்களின் சுதந்திரமான போக்கு, ஆநிரை சார்ந்த சமூக அமைப்பு, வாழ்க்கை முறை, வேளாண் உற்பத்தியில் நாட்டமின்மை போன்றவை மேட்டு நிலங்களை அரசுசார் அமைப்புக்கள் உள்வாங்குவதைத் தவிர்த்தன எனலாம்.

இந்த வெளி அரசுகளின் தற்காலிக ஊடுருவலைத் தவிர்த்து, இரண்டு நிலையிலான அதிகார எல்லைகள் செயற்பட்டன. ஒன்று ஊர் அளவிலும், மற்றொன்று ஊருக்கு அப்பாற்பட்ட அளவிலும் செயற்பட்டன. நடுகற்களிற் பேசப்படும், போற்றப்படும் வீரர்கள் இந்த ஏதாவது ஒரு அதிகார நிலைகளுடன் தொடர்புடையவர்கள். எவ்வாறு இவ்வகையான ஒரு அரசியல் உருவாக்கம் இனக்குழு அரசியலிடமிருந்து விடுபட்டு எழுந்தது என்பதைப் பின்வரும் பந்திகளிற் காணலாம்.

பொதுவாகப் பண்டைய அரசு உருவாக்கம் அல்லது இனக்குழுத் தலைவர்கள் தன் அதிகாரத்தை நியாயப்படுத்துவது, நிலைப்படுத்துவது போன்றவை பல்வேறு வழிகளைக் கையாண்டு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன. இவற்றுள் அரசு மதம், அரசு மதிப்புக்கள், சித்தாந்தம், அரசுப் புராணம், திரிபுக் கதைகள், அரசுச் சடங்குகள், யாகங்கள் போன்றவற்றை நிலைப்படுத்தல் முதலியனவும் அடங்கும் ராஜு 2005 : 107). இவ்வகையான முறைகள் வேறுபாடின்றி எல்லா அரசுகளாலும் கடைப்பிடிக்கப்பட்டன. குறிப்பாக, அரசு மதங்கள் ஒரு பொதுவெளியை ஏற்படுத்தி அதிற் பல்வேறு பண்பாட்டு வேறுபாடுகள் உடைய அல்லது வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுகின்ற இனக்குழுக்களை ஒன்றிணைக்க முற்பட்ட அதே வேளையில், ஆட்சியாளர் களுக்கும், ஆளும் வர்த்தகத்தினருக்கும், அடித்தளக் குடிகளுக்கும் இடையே இருந்த கலாச்சார மற்றும் அதிகார வேறுபாடுகளையும், இடைவெளியையும் வலியுறுத்தும் விதமாக அமைந்தன. தமிழகத்தில் இவ்வகையான முயற்சி

பல்லவர் காலத்திலும், மிகத் தெளிவாகச் சோழர்கள் காலத்திலும், கையாளப் பட்டன. ஆனால் மேட்டு நிலங்களில், இவ்வகையான மதக் கோட்பாடுகளின் பரவலை ஊக்குவிப்பதன் மூலம் ஒரு அரசை அல்லது அரசு – சார் சமூக அமைப்பைக் கட்டமைப்பது வெகு காலத்திற்குச் சாத்தியமில்லாமல் இருந்தது. பொதுவாக வறண்ட மலைகளும், காடுகளும் நிறைந்த மேட்டு நிலங்களில் ஆநிரைப் பொருளாதார உற்பத்தியும், இனக்குழுத் தலைவர்களின் ஆளுகையும் அரசு உருவாக்கத்தைத் தள்ளி வைத்தது எனலாம். இனக்குழுத் தலைவர்கள் தன் குடிகளோடு இருந்த நெருங்கிய இரத்த உறவாலும், தன் தீரச் செயல்களின் மூலமாகத் தன் அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றதாலும் ஒரு முழு ஆளும் வர்க்கமாக உருவெடுக்கக் கால தாமதமானது.

இவ்வகையான ஒரு நிலையற்ற அரசியற் சூழ்நிலையை அடுத்து, சமகாலத்தில் ஏற்பட்ட சமூக வளர்ச்சியும் ஓர் அரசு அமைப்பைக் கட்டமைக்கும் அளவிற்குப் போதுமானதாக இல்லை. இம்மேட்டு நிலங்களின் வரலாற்றை ஆராயும்போது, எந்தவொரு இனக்குழுத் தலைவர்களின் குடும்பமும் குறைந்தது இரண்டு தலைமுறைகளுக்குக்கூட ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முற்படவில்லை. தொல் இலக்கியக் காலத்திற்குப் பின்வந்த காலகட்டங்களிற் கூட ஒரு நிரந்தர அரசமைப்போ அல்லது ஒற்றைத் தலைமையின் கீழான அரசியல் ஒருங்கிணைப்போ ஏற்படவில்லை. மாறாக, காலம் காலமாக நிலைத்திருந்த வீர உணர்வின் ஆளுகை இனக்குழுவின் மேல்மட்டத்தில் இருந்தவர்களிடமிருந்து கசிந்து ஒட்டுமொத்தக் குடிகளின் செயற்பாடாக மாறியது. மேற்குறிப்பிட்டது போல், எண்ணற்ற நடுகற்கள் வீர உணர்வின் ஆளுகையையும் பிடிப்பையும் தெரிவிப்பதுடன் சமூகத்தில் நிலவிய ஒரு பதற்ற நிலையையும் இடைவிடாத பூசல்களையும் உணர்த்துகின்றன. பண்டைய இனக்குழுக்களான அதியர், கங்கர், மலையமான், வேட்டுவர்கள் போன்றோரின் வழியினர் தங்களின் அதிகாரத்தைத் தக்க வைத்திருந்திருக்கலாம். ஆனால் இனக்குழுக்கள் பிளவுபட்டுத் தனித்தனி இரத்த உறவு சார்ந்த கூட்டங்களாகவே செயற்பட்டு வந்தன. எடுத்துக்காட்டிற்குச் சில நடுகல் வாசகங்களைக் காணலாம்.

1) கோவிசை வின்ன பருமனின் 14வது ஆட்சியாண்டில், தகடூர் நாட்டின் கங்கைரைசர் வண்ணபெருமரைசரால் தாக்கப்பட்டார். இப்பூசலில் வண்ணப் பெருமரைசர் கொல்லப்பட்டார். (எண்–1) (இச்சண்டை இரண்டு அரைசர் நிலையிலான குறுநிலத் தலைவர்களுக்கிடையே ஏற்பட்டது. கோவிசை வின்ன பருமன் பல்லவ ஆட்சியாளர்)



2) கோவிசை சின்கவினாவின் 14ஆம் ஆட்சியாண்டில், பெரும்பானரைசர் மக்களின் சேவகர், சத்தப்பரவானர் ஒரு உள்ளூர் பூசலில் கொல்லப்பட்டார். (எண்.4) (வட்டார அரைசர் நிலையிலான தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்)
3) பாலாசிரியரின் மகன் சிறுப்பாடுவன்னர் தொறுப்போர் மேற்கொண்டபோது பூயநாட்டு பிலாய ஊரின் சதங்கள் கொல்லப்பட்டார். (எண்.7) (வட்டார அளவில் நடைபெற்ற ஆநிரைக்கான போர். பாலாசிரியர் வட்டார இனக்குழுத் தலைவர், ஊர் மற்றும் நாடு பிரிவுகள் குறிக்கப்படுகின்றன)
4) சிம்ம விஷ்ணுவின் ஆட்சியாண்டில், கப்பலூர் ஆண்டவனும் மோந்தைகளில் குமாரசதியரும் பூசலில் ஈடுபட்டார்கள். இதில் குமாரசதியர் கொல்லப்பட்டார். (எண்.9) (வட்டார இனக்குழுத் தலைவர்களுக்கிடையே நடைபெற்ற சண்டை; அதியர், ஆண்டவர் போன்ற பட்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன)
5) கோவூர் நாட்டு கங்காதியரைசர் சின்கவினருடன் சண்டையிட்டபோது, அவருடைய சேவகர் அதிம்பருரைசர் மகன் நாட்டிக்கட்டியார் கொல்லப்பட்டார். (எண்.12) (இது ஒரு ஊர் நிலைத் தலைவருக்கும் ஒரு வெளிப்புற ஆட்சியாளருக்கும் நடைபெற்ற சண்டை).
6) மையேந்திர பருமனின் 14வது ஆட்சியாண்டில், பெரும்பானதியரைசரும் சின்கபெரமாதியரைசரும் பூசலில் ஈடுபட்டார்கள். இதில் இரண்டாமவரின் சேவகர் அச்சூர பாணில் கொல்லப்பட்டார். (எண்.13) (அதியரைசர் என்ற பட்டம் பெற்றிருந்த தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டை).
7) மையேந்திர பருமனின் 15வது ஆட்சியாண்டில், கடந்தைகளில் சேவகரில் ஒருவர் புதுப்பள்ளியுடன் சண்டையிட்டார். இதில் எருமையதிகாரி கொல்லப்பட்டார். (எண் . 14) (வட்டார இனக்குழுத் தலைவர்களுக்கிடையே ஏற்பட்டசண்டை).
8) மகேந்திர வர்மனின் ஆட்சியில், புரவர் பெற்றான்டன் கொம்புலிகளின் மகன் யேரான் ஒரு மாடுபிடிச் சண்டையில் கொல்லப்பட்டார். (எண்.17) (வட்டார அளவிலான தொறுப்பூசல்).
9) வானபருமரைசரின் சேவகர் உழுமுனுக்கனின் மகன் அவருடைய சேவகருடன் பூசலில் கொல்லப்பட்டார். (எண்.31).
10) மகேந்திரவர்மனின் ஆட்சியில், மேவநாட்டு குப்பையூர் கங்கயரைசரால் தாக்கப்பட்டு அவ்வூரின் ஆநிரைகள் கவரப்பட்டன. ஊரின் ஆநிரைகளைக் காக்க முற்படும்போது கவிதி வடுகன் கொல்லப்பட்டார். (எண்.11) (தொறுப்பூசல் பற்றிய குறிப்பு)

மேற்கண்ட செய்திகளில் முன்குறிப்பிட்டதுபோல் இருவேறுபட்ட அதிகார நிலைகள் செயற்பட்டதை அவதானிக்கலாம். இந்த வேறுபட்ட அதிகார நிலைகளை நடுகற்களிற் காணப்படும் தனிப் பெயர்களுடன் இணைந்துள்ள தலைப்புக்களைக் கொண்டு அவதானிக்கலாம். அரைசர் (எண்.30) அதி அசைர் (எண். 12 & 31), முத்தரையர் (எண் ), இளவரையர் எண்.35), பருமரைசர் (எண்.39), பருமர் (எண்.49 & 31), பாலாசிரியர் (எண்.2), பெருமன் (எண்.31) போன்ற தலைப்புக்கள் தனிப்பட்ட நபரின் அதிகாரத்தை எடுத்துரைப்பன. இவர்களுள், அதியரைசர், இளவரைசர், பருமரைசர் போன்றோர் அதிகார அமைப்பின் அடிநிலையில் இருப்பவர்கள். பெரும் இனக் குழுக்களின் வட்டார அளவிலான கூட்டங்களின் தலைவர்கள் எனலாம். இக்கூட்டங்கள் பல குடிகளைக் கொண்ட ஊர் அமைப்பாகச் செயற்பட்டன. சில அடிப்படைத் தகுதிகள் இனக்குழுக்களின் தலைமைக்குத் தேவைப்பட்டிருக்க வேண்டும். பொதுவாக இந்த இனக்குழுத் தலைவர்கள் ஆநிரைச் சமூகத்தின் மேல் மட்டத்தில் இருந்தவர்கள். நாளடைவில் தன் தலைமை அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். இனக்குழுவின் உயர் நிலையில் இருந்தோர்களுடன் அல்லது இனக்குழு வரலாற்றில் உள்ள புராணப் பாத்திரங்களுடன் பாரம்பரிய உறவு இருப்பதாகக் காட்டிக்கொள்வது போன்றவை இவ்வினக்குழுக் கூறுகளின் தலைவர்கள் தன் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள உதவியிருக்கலாம். இரண்டாவதாக, இத்தலைவர்கள் வட்டார அளவில் ஆநிரை உற்பத்தியிற் செல்வந்தர்களாக இருந்திருக்க வேண்டும். அதே சமயத்தில், இந்த வட்டாரத் தலைவர்கள் சககுடிகளின் வாழ்வாதாரச் செயற்பாடுகளிற் குறுக்கிடுவதற்கான அல்லது அச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. மேலும், உற்பத்திச் செயற்பாடுகளிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு ஒரு முழு அதிகாரம் படைத்த ஆளும் வர்க்கமாக இவர்கள் இன்னும் வளர்ச்சி அடையவில்லை. மாறாக, மற்றக் குடிகளுடன் சமமாக உற்பத்திப் பணிகளில் ஈடுபட வேண்டியிருந்ததாற் சக குடிகளின் ஒத்துழைப்பும் நல்லிணக்கமும் அவர்களுக்குத் தேவைப்பட்டது. எனவே, இவ்வினக்குழுக் கூட்டங்களின் தலைவர்கள் தன் சக குடிகளின் உற்பத்திச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதுடன், வெளிப்புற அச்சுறுத்தல்களிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டிய நிலைமையும் இருந்தது. இந்தத் தகுதிகள்தான் அவர்களின் தலைமைத் தன்மையையும் அதிகாரத்தையும் நிர்ணயித்தன எனலாம். ஒரு நிலையில், இவ்வகையான அரசியல் அமைப்பில், தனிப்பட்ட நபர்களின் அதாவது வட்டாரத் தலைவர்களின் சொந்த விருப்பத்தைக் காட்டிலும் இனக்குழுக் குடிகளின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வது முக்கியமானதாக இருந்திருக்கின்றது. இறுதியாக, மிகுந்த உடல் தகுதியும், மனத் திட்பமும் தலைமைக்கு முக்கிய தகுதியாகக் கருதப்பட்டது. பூசல்கள், போர்கள், இனக்குழுச் சண்டைகள் போன்றவற்றில் இடைவிடாது ஈடுபடவேண்டிய கட்டாயம் இனக்குழுத் தலைமைக்கு இருந்துகொண்டே இருந்தது. தலைவர்கள் பூசல்களுக்கும், போர்களுக்கும் அஞ்சுபவராக இருந்தால் சககுடிகளிடம் தன் செல்வாக்கை இழக்க நேரிடலாம். பஞ்சம், வெள்ளம் போன்ற இயற்கை சார்ந்த அச்சுறுத்தல்களின் போதும் தலைவர்கள் மற்றக் குழுக்களின் ஆநிரைகள் மீது தாக்குதல் தொடுத்து அவற்றைக் கவர்தலுக்கான முயற்சியில் ஈடுபடவேண்டும். அதே போன்று, இவ்வகையான தாக்குதல்களை மற்றக் குழுக்கள் தொடுக்கும்போதும் அவற்றை முறியடித்துத் தன் குடிகளின் ஆநிரைகளைக் காக்க வேண்டியிருந்தது. தலைவர்களும், குடிகளும் மற்றக் குழுக்களின் ஆநிரைகளைக் கவர்தலின் மூலம் தங்களுடைய கால்நடைச் செல்வத்தைப் பெருக்கிக்கொள்ள முடிந்தது. மாடுபிடிச் சண்டைகளின்போது, தலைவர்கள் சக குடிகளிடமிருந்து வீரர்களைத் திரட்டி சண்டையில் ஈடுபட வைத்தனர். இம் மாடுபிடிச் சண்டைகளில், பூசல்களை ஒழுங்கமைப்பவர் தலைமை தாங்குபவர் என்ற நிலையிற் சூறையாடப்பட்ட பொருட்களிலும் ஆநிரைகளிலும் அதிக பங்கு கோருவதற்கான தகுதியைத் தலைவர்கள் பெற்றிருந்தனர். இவ்வாறு திரட்டப்பட்ட செல்வங்களை மறுபங்கிடுவது, விருந்தளிப்பது, வெளி ஆட்சியாளர்களிடம் அல்லது ஆளும் வர்த்தகத்திடம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது அல்லது தொடர்பு இருப்பதாகக் காட்டிக்கொள்வது, பூசலில் இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுப்பது, வெளிப்புற வணிகத் தொடர்புகளைக் கட்டுப்படுத்துவது போன்றவற்றின் மூலம் இந்த வட்டாரத் தலைவர்கள் தன் தலைமைத் தன்மையைத் தக்கவைத்துக்கொள்ள முடிந்தது.

இரண்டாம் நிலையிலான இனக்குழுத் தலைவர்களின் வரிசையிற் பாணர்கள், காடவர்கள், அதியமான்கள், நொளம்பர்கள், முத்தரையர்கள் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்கள் சிறுசிறு கூறுகளைக் கொண்ட பெரிய இனக்குழுக்களின் தலைவர்கள் எனலாம். இவர்களின் அதிகாரத்திற்குள் மேல் விவரிக்கப்பட்ட வட்டாரத் தலைவர்களும் அடங்குவர். இவர்கள் பெரும்பாலும் பரம்பரையாக ஆதிக்கத்தில் இருப்பவர்கள். பெரும்பாலானோரின் குடும்ப வரலாறு சூரிய, சந்திர குலப் பிரிவுகளுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் வட்டார அளவிலான தங்களின் அதிகாரத்தை நிலைப்படுத்தியிருக்கலாம். இவர்கள் நடுகற்களில் முத்தரையர், பெருமன், பருமர், அரைசர் போன்ற பெயர்த் தலைப்புக்களுடன் அடையாளம் காணப்படுகின்றார்கள் (எண். 12, 13, 31, & 44)

| எண் | காலம் | இடம் | பொருள் | செய்தி | குறிச்சொற்கள் | படம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பல்லவர் | பாப்பம்பட்டி | பூசல் | கங்கரைசருக்கும் வானபெருமரைசருக்கும் நடைபெற்ற போர் | பெருமரைசர். கங்கரைசர், பருமர் | | ப. 148 |
| 2 | சிம்மவர்மன் | ஊத்தங்கரை | தொறுப்பூசல் | ஆநிரைகளைக் கவர்ந்த போது பாலாசிரியரின் மகன் மாறன் இறந்தான் | ஆல்வார், பாலாசிரியர், தொறு | – | ப. 149 |
| 3 | சிம்மவர்மன் | ஊத்தங்கரை | – | | பருமர், நாடு | வால் ஏந்திய வீரன் | ப. 169 |
| 4 | சிம்மவிஷ்ணு | கோரையாறு | பூசல் | பெரும்பாணரைசரின் மகன் சாத்தப்பரவனார் சேவகன் வன்ன ஊர்பாகன் இறந்தான் | பருமன், பெரும்பாணரைசர், பூசல் | வாள் மற்றும் கேடயத்துடன் வீரன் | ப.155 |
| 5 | சிம்மவிஷ்ணு | கோரையாறு | பூசல் | – | பூசல் சென்றுப்பட்டான் | கத்தி மற்றும் கேடயத்துடன் போரிடும் வீரன் | ப.155 |
| 6 | சிம்மவிஷ்ணு | கோரையாறு | பூசல் | – | பூசலில்பட்டான் | குறுவாள் மற்றும் அம்புடன் போரிடும் வீரன் | ப.155 |
| 7 | சிம்மவிஷ்ணு | ஊத்தங்கரை | தொறுப்பூசல் | பாலாசிரயரின் மகன் சிறுப்படுவண்ணார் தொறுப்பூசல் மேற்கொண்ட போது சதங்கன் என்பவர் கொல்லப்பட்டார் | பாலாசிரியர், தொறு, பூசல் | கத்தி மற்றும் கேடயத்துடன் வீரன் | ப.156 |
| 8 | சிம்மவிஷ்ணு | ஊத்தங்கரை | பூசல் | மொக்கைப்பாடியை ஆண்டவருக்கும் கொளகாப்புறையை ஆண்ட மைந்தைகள் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட பூசலில் சதியார் இறந்தார் | சதியர் | வீரன் | ப.156 |
| 9 | சிம்மவிஷ்ணு | எல்லப்புடைய– | பூசல் | கப்பலூர் ஆண்டவருடன் | – | – | ப.157 |



இரு நிலையிலான இனக்குழுத் தலைவர்களுக்கும் இடையிலான அதிகார உறவுகளைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. இருப்பினும், இவர்களுடைய அதிகாரம் வட்டாரத் தலைவர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். சில சமயங்களில் இவர்கள் வட்டாரக் குழுக்களிடமும் வெளிப்புற அரசுகளிடமும் சண்டையிட்டதாகத் தெரியவருகின்றது. ஆனால் பொதுவாக வெளிப்புற அரசுகளிடம் இத்தலைவர்கள் ஒரு நல்லிணக்க உறவுகளை வளர்த்துக் கொண்டார்கள். இவை முக்கியமாக வட்டார அளவில் இவர்களுடைய அதிகாரத்தை நிலைப்படுத்துவதற்குத் தேவையானதாக இருந்தது. சமணம், பௌத்தம், இந்து மதக் குழுக்களிடம் தம் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதாலும் தங்களின் அதிகாரத்தைச் செயற்பட வைக்க முடிந்தது. இவர்கள் வட்டாரத் தலைவர்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட அளவிலான மேலாண்மைப் பணியை மேற்கொள்ள முடிந்தபோதிலும், குடிகளின் பொருளாதாரச் செயற்பாடுகளிலும் உற்பத்தி நடவடிக்கைகளில் தம் ஆளுகையை நிலைநாட்ட முடியவில்லை. மேற்குறிப்பிட்டது போல், வட்டாரத் தலைவர்கள்கூடக் குடிகளின் உற்பத்தி முறைகளிற் குறைந்த அளவே அதிகாரம் செலுத்த முடிந்தது. மிக முக்கியமாக இந்த முதல் நிலைத் தலைவர்கள் வெளிப்புற அரசு நிர்வாக முறையை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு செயற்பட ஆரம்பித்திருக்கலாம். மேலும் வேளாண் மற்றும் பிராமணியக் குடிப்பெயர்வுகளை ஊக்குவிப்பதன் மூலமும், உள்நாட்டிலிருந்து வளர்ந்து வந்த வேளாண் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதன் மூலமும் ஒரு அரசு சார்ந்த சமூகப் பொருளாதார, அரசியல் அமைப்பு எழுவதற்கு வழி வகுத்திருக்கிறது. பல்லவர், கங்கர் போன்ற ஆட்சியாளர்களின் பட்டங்களான பருமன், வர்மன் போன்ற வற்றை இவ்வினக் குழுத் தலைவர்கள் எடுத்துக்கொண்டு அரசர்கள் போன்று தங்களைப் பாவித்துக்கொள்ள அல்லது வெளிப்படுத்த முயன்றார்கள் (எண். 31 & 43). முன்னர் குறிப்பிட்டதுபோல் இந்த இரண்டு நிலைத் தலைவர்களுக்கும் உள்ள உறவுகளை வேறுபடுத்திக் காண்பது கடினம். அவரவர் நிலைகளிற் இத்தலைவர்கள் சுதந்திரமாகவே செயற்பட்டார்கள் எனலாம்.

பதினொராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழக மேட்டு நிலங்களில் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சியிற் குறிப்பிடும்படியான மாற்றங்கள் நிகழ்ந்தன எனச்சொல்லலாம். கோனாட்டான் என அறியப்படுகின்ற ஒரு குறுநிலத்தலைமைக் குடும்பத்தினர் மற்ற இனக்குழுத் தலைவர்களைக் கட்டுப்படுத்தி மேட்டு நிலங்களின் பெரும்பகுதியைத் தன் அதிகாரத்தின்கீழ் கொண்டுவந்தார்கள். அச்சம காலத்தில் தமிழகச் சமவெளிகளில் அதிகாரம்

வாய்ந்த அரசாகச் செயற்பட்ட சோழ அரசின் அரசு அமைப்பை மாதிரியாக எடுத்துக்கொண்டு செயற்படுத்தினர். இந்நேரங்களில் வட்டார வேளாண் குடிகளின் வளர்ச்சியும், வெளிப்புறத்திலிருந்து மேட்டு நிலங்களில் நடந்த வேளாண்மைக் குடிகளின் இடப்பெயர்வும், வேளாண் உற்பத்தியில் ஏற்பட்ட உபரி உற்பத்தியும் இம்மேட்டு நிலங்களில் அரசு அமைப்பின் உருவாக்கத்திற்கும் செயற்பாட்டுக்கும் ஏதுவானதாக அமைந்தன. குடிகளின் உற்பத்திச் சுதந்திரத்தில் அரசு நிறுவனங்கள் மெதுவாகத் தம் அதிகாரத்தை நிலைப்படுத்தி உபரி உற்பத்தியைச் சுரண்டும் நிறுவனங்களாக மெல்ல எழ ஆரம்பித்தன.

**உசாத்துணை நூல்கள்**


Arokiyaswami M
1936. Kongu Country. Madras.

Campbell, J.K
1916. Honour, Family and Patronage. Oxford: Clarendon Press.

Galaty, Jhon G. and Pierre Bonte
1991. Herders, Warriors and Traders: Pastoralismn Africa. San Francisco and Oxford: Westive Press.

Heald Suzette
1999. 'Agricultural Intensification and the Decline of Pastoralism: A Case Study from Kenya', Africa: Journal of the International African Institute, Vol. LXIX, No. 2.

Hershokvits, Melville J
1926. 'The Cattle Complex in East Africa', American Anthropologists, New Series, Vol. XXVIII, No. 1.

Kasinathan Natana
1978. Hero-Stones in Tamilnadu. Madras: Arun Publications.

Little, Peter D.
1985. 'Social Differentiation and Pastoralist Sedenterization in Northern Kenya', Africa: Journal of the International African Institute, Vol. LV, No. 3.

Poongunran R
2001. Tholkudi, Velir, Arasial -Cengam Nadukarkkal or Ayvu (Tribe, Velir, Politics -A Study on Cengam Hero Stones). Coimbatore: Pudhumalar Padippagam.





Rajan K
2000. South Indian Memorial Stones. Thajavur: Manoo Pathippakam.

Rajan K
1994. Archaeology of Tamil Nadu (Kongu Country). Delhi : Book India Publishing Co.

Rajanna B
1992. Salem Encyclopedia -A Cultural and Historical Dictionary of Salem District, Tamilnadu. Salem: Institute of Kongu Studies.

Raju S
2005. Kongunadum Samanamum (Jainism and the Kongu Country). Erode: Kongu Aayvu Mayyam.

Raju S
2005. Kongunadum Samanamum (Jainism and the Kongu country). Erode : Kongu Aayvu Myyam.

Roosevelt
1985. Parmanan: Pre-Historic Maize and Manioc Subsistence Along the Amazon and Orinoco. New York : Academic.

Schneider H.K
1974. Economic Development and Economic Change: The Case of Ea African Cattle, Current Anthroplogy, Vol.XV, No.3.

Schneider, H.K
1957. The Subsistence Role of Cattle Among the Pokot and in East Africa in American Anthropologist, LIX.

Schneider, H.K
1974. 'Economic Development and Economic Change: the Case of African Cattle', Current Anthropology, Vol. XV, No. 3 September.

Service, E.R
1962. Primitive Social Organization. New York: Random House.

Thankamani M. Raja Sekara,
Kongil Vettuvar, (Vettuvar in Kongu), Avanam Karutharanku Malar. Thanjavur : Tamilnadu Archaeological Society.

Winans Edgar V
1965. The Political Context Economic Adaptation in the Southern Highland of Tanganyika', America Anthropologist, New Series, Vol. LXVII, No. 2.

# பொதிசெய்யப்பட்ட வினோதங்களாக தொடர்மாடி மனைகள்

## இடமின்மைத்தன்மையின் அரசியலும், சுவையின் நியமப்படுத்தலும்

சசங்க பெரேரா
மொழிபெயர்ப்பு: சுப்பிரமணியம் ஜீவசுதன்
தா.சனாதனன்

### அறிமுகம்

இந்தக் கலந்துரையாடலை, புனைகதையொன்றில் இருந்து எடுக்கப்பட்ட கதையாடலை மேற்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கிறேன். அயன் ராண்ட்ஸ் இன் Fountain Head (1947) என்ற நாவலை வாசிக்கும் எவரும் அதில்வரும் ஹோவார்ட் றோஆக் எனும் சமரசம் செய்யாத நவீன கட்டடக்கலைஞனின் படிமத்தைத் தவறவிடுவது சாத்தியமற்றதாக இருந்திருக்கும். இக்குறிப்பிட்ட புனைகதைச் சூழலிற் தனது படைப்புக்களை அல்லது செயல்வடிவத் திட்டங்களைத் தனது மக்களின் வேறுபட்ட சுவைகளிற்கு ஏற்ப மாற்றிக்கொள்ள விரும்பாத கட்டடக் கலைஞன் ஒருவனால் நவீனவாதக் கட்டடக்கலைஞர்களின் கட்டடக்கலையானது பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது (மோர்கன் 2003:79). அவனுடைய நிர்மாணங்கள் அங்கீகாரத்தைக் கோருவதில் முடிந்தமுடிபானவை. இந்த வகையான ஒழுங்கமைப்பு விதியில், பாரிய மனைத்தொகுதிகள் போன்ற நியமப்படுத்தப்பட்டவற்றில் தனிமனிதப் போக்கான பண்புகள், தூய்மை மற்றும் தெளிவு என்பவற்றின் பெயரால் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும்போது தனித்துவமான மற்றும் தனித்துவப்படுத்தப்பட்ட மூலைகள், வெடிப்புக்கள் அற்றுப்போகின்றன (மோர்கன் 2003:79). அயன் ராண்ட்ஸ் இன் நவீனப் புனைகதைக் கட்டடக் கலைஞன் சனநாயகத்தை வளர்ச்சிக்குகந்த படைப்புத் திறனைச் சமப்படுத்தும் 'வேறுபாடுகளின் பேரம்பேசுதலுக்கு' பயன்படுத்தப்படும் முறையாகக் கவனத்திற் கொள்கின்றான் (மோர்கன் 2003:79). இன்னும் ஒவ்வொரு இடத்திலும், ஒரு தொடர்மாடித் தொகுதியிலுள்ள ஒவ்வொரு அலகுகளாகத் "தனித்துவமானவை" அல்லது "நம்பத்தக்கவை" என அடையாளப்படுத்தப்பட்டாலும் யதார்த்தத்தில் உலகைச் சுற்றி வலம்வருகின்ற குறிப்பிட்ட அமைப்புக்களின் பிரதியெடுக்கப்பட்ட பெரும் மீளுற்பத்திகளாகவே இவை உள்ளன. இவற்றில் அணி அலங்காரங்கள் மற்றும் காட்டுரு போன்றவை சம்பந்தமாகச் சிறிதளவு பண்பாட்டு மாற்றங்கள் நிகழலாம். எனினும்



உள்ளகப்பிரதேசத்தை அடையாளம் காட்டுதல், எல்லை வரையறுத்தல் போன்ற செயற்பாடுகளில் அவற்றிடையே பெரிதாக வேறுபாடுகள் இல்லை. எப்படி இருப்பினும் கிம் டுவே மிகச் சரியாக அவதானிப்பதுபோல, அதிகாரத்துவத்தின் தேடல் என்பதை பொதிசெய்யப்பட்ட உருவங்களை நுகர்வதினூடு அடைய முடியாதது. இங்கு அதிகாரத்துவம் பற்றிய கேள்வியானது, அதேவேளை அனுபவத்தின் தெளிவின்மைக்கு ஓர் ஈடுபாட்டை இன்றியமையாததாக்கும் மெய்ப்பொருள் காணும் ஆய்வாக உள்ளது (டுவே 1998:148).

இவ்வகையான வெளி மற்றும் சுவையின் நியமப்படுத்தல்களில் தனித்துவம் புறந்தள்ளப்படுவதுடன், தனியன்களின் வினோதங்கள் மற்றும் ஆசைகளை ஒரு கூட்டு இலக்குபோலப் பொதி வடிவமாக, கட்டடக் கலைஞர்கள், வீடுகள், கட்டடங்களை உருவாக்கும் நபர்கள், நிதியளிப்பவர்கள் போன்றோரை உள்ளடக்கிய ஒரு குழுவினரால் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. இவ்வாறாகக் கொழும்புக்குக் கிட்டவாக, இலங்கையின் துணை நகரப்பகுதிகளிற் கடந்த 10 வருடங்களிற்கு மேலாக எழுப்பப்படும் ஒரு குறிப்பிட்ட வகைத் தொடர்மாடி மனைகள் தொடர்பாக நான் இங்கு உரையாடலாம் என நினைக்கிறேன். இருப்பினும் எனது கதையாடல் தனியே உள்ளூர் அனுபவங்களை மட்டுமன்றி, உலகளாவிய ரீதியான எனது அனுபவங்களையும் உள்ளடக்கியதாக அமையும். இலங்கையில் நாம் காண்பதென்பது உலகளாவிய தோற்றப்பாட்டின் உள்ளூர் அவதாரத்தையாகும். இவ்வாறான கட்டடத் தொகுதிகளின் ஒரு பரந்துபட்ட ஒத்த தன்மையென்பது, 'இடம்' சம்பந்தப்பட்ட கடுமையான மற்றும் தெளிவாகக் கையாளப்பட்ட தொடர்புகள் அற்று, அவை எங்கும் காணப்படலாம் என்ற கருத்தளவில் ஏற்படும் அவற்றின் இடமற்ற தன்மையாகும். மறுபுறத்தே இம்மனைத் தொகுதிகள் நேரடிக் கருத்தளவில் இடம்பெயர்க்கப்பட்டவை ((dis)place(d)) என்பதுடன் அந்தப் படிமுறையில் காலம், வெளி, வரலாறு மற்றும் அனுபவம் என்ற நிலைகளிலும் அறிவாராத முறையியல் அடிப்படையிலும், குறியீட்டியலின் அடிப்படையிலும் குழப்பப்பட்டவை.

செம்மையான அனுபவமொன்றாக அமையும் ஒன்றைக் கருத்தில் எடுப்போம், வியாபார வங்கியின் சொத்தான 'ஷேர்வுட் கிளேட்' (Sherwood Glade) எனும் கட்டடத்திற்கான விளம்பரம், பொரளை (கொழும்பு – 08)ல் காசல் வீதி, டி.எஸ்.சேனாநாயக மாவத்தையில் வந்து சந்திக்கும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவ்விளம்பரத்தில் "இங்கிலாந்தின் ஒரு சிறு பகுதி மாலபேயில்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான உலகமயமாக்கலின் ஒரு

அங்கமான வெளிப்பாடுகள் இலங்கையில் மட்டும் உள்ளூர் கட்டடக் கலைக் கற்பனைகளைக் கடுமையான சவாலுக்குட்படுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது, தென்ஆசிய நாடுகளின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான நிலையை ஏற்படுத்தியுள்ளன. உதாரணமாக "*இந்தியன் எக்ஸ்பிரஸ்*" பத்திரிகையில் 2001 இல் வெளிவந்த விளம்பரம் ஒன்று, தில்லியின் தெற்கு நீட்சிகளில் உருவாக்கப்பட்ட சொத்துத் தொகுதி ஒன்று "இந்தியாவில் முகவரியை மட்டுமே கொண்டுள்ளது.'' என விளம்பரம் செய்துள்ளது.

இலங்கையில் அதிகளவில் அரசாங்கத்தினாலும், தனியார் துறைகளினாலும் வசதிகுறைந்தவர்கள், வசதிபடைத்தவர்கள், நடுத்தரவகுப்பினர் என்போருக்கு வெவ்வேறு வகைப்பட்ட கட்டடத்தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற் சிலபற்றிச் சமூகவியல் ரீதியானதும், கட்டடக்கலை ரீதியானதும் தகவல்கள் இருக்கின்றபோதும், அரசாங்கத்தின் ஆதரவுடன், வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் வசதி குறைந்தவர்களுக்காக எழுப்பப்பட்ட கட்டடங்கள் பற்றி முறையாகவும், சூழ்நிலை சார்ந்த கோட்பாடுகளினடியாகவும் எந்தவொரு ஆய்வும் இடம்பெறவில்லை. கொழும்புக்கு அண்மையில் உபநகர்ப் பகுதியிற் பெரியளவில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களால் உருவாக்கப்படும் முன்பிருந்த பழம் சமுதாயங்களில் இருந்து அவர்களால் அல்லது இரும்பு வேலிகளால் எல்லை வரையறுக்கப்பட்ட பெரிய வீட்டுக் கட்டிடத்தொகுதிகள் பற்றிப் பார்ப்பதுடன் இங்கு எனது பார்வையை நான் மட்டுப்படுத்தியுள்ளேன். இந்தக் கட்டடத் தொகுதிகள் 24 மணிநேரமும் பாதுகாப்புக்குட்படுத்தப்படுவதுடன், இதன் நுழைவாயிலின் ஊடாக நுழைபவர்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே உள் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். வீடமைப்பின் வெகுசனக் கருத்தாடலில் உள்ள மிகத் தெளிந்த உதாரணங்களான அரிடியவில் உள்ள லோட்டஸ் குறோவ், தலவத்து கொட ஈடன் காடன், அத்துருகிரிய மிலேனியம் நகர அபிவிருத்தித் திட்டத்தில் அமைக்கப்பட்ட பரடைஸ் அன்ட் ஒலிம்பஸ் என்பன காணப்படுகின்றன. ஷேர்வூட் கிளேட் (Sherwood Glade) போன்ற, நான் முன்னரே சுருக்கமாகக் குறிப்பிட்ட மாடிமனைத் தொகுதிகளும், மேற்குறிப்பிட்ட தொகுதிகளின் அம்சங்களைக் கொண்டிருப்பினும், திட்டமிடல் அற்ற தன்மை, 24 மணிநேர பாதுகாப்பு மற்றும் விற்பனையின் பின்னரான நிர்வகிப்பு என்பவை தொடர்பில் சற்றுப் பின்தங்கியே காணப்படுகின்றன. எதுவாக இருப்பினும் இம் மனைத்தொகுதிகள் நடுத்தரவகுப்பினர், ஒப்பீட்டளவில் வசதிபடைத்தவர்கள், சமூகப் படிநிலையில் மேல்நோக்கிச் செல்பவர்கள் போன்றோரை இலக்கு வைத்தே




இந்தியாவின் உபநகரப்பகுதிகளுக்காக பிரஷாவட் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட அதிசெகுசுத் தொடர்மாடிகள்

வடிவமைக்கப்படுகின்றன. சில புத்தகங்களில் இவ்வாறான கட்டடத் தொகுதிகள் படலையிடப்பட்ட சமுதாயங்கள் (Gated Communities) எனக் குறிப்பிடப்பட்டுள்ளன (டுவே 2001: 150).

எனது தொடக்க நிலை மற்றும் சிறிது அகவயமான இந்தக் கட்டுரை வாசிப்பு என்பது இலங்கையில் உள்ள இரண்டு அறிவார்ந்த பின்னடைவுகளுக்கு மத்தியில் இடம் பெறுகின்றது என்பதனை நான் இங்கு கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும். அதிலொன்று நகர், நகர இடவெளி, நகரச் செயற்பாடுகள் என்பவை பற்றிய உயர்ந்த கோட்பாட்டு ரீதியான சமூகவியல் ஆய்வுபற்றிய ஆர்வமின்மை, மற்றையது கட்டடக்கலை விமரிசனம் பற்றிய அறிவார்ந்த செயன்முறைப் பாரம்பரியம் இல்லாதது. இதுவே நான் முன்னர் கூறியதுபோல இம் மாடிமனைகள் தொடர்பான அடிப்படைச் சமூகவியல் மற்றும் கட்டடவியல்சார் தகவல்களிற்கு மேலாக இவை தொடர்பான பல்துறைசார் ஆய்வுகள் எதுவும் வெளிவராமைக் குரிய காரணமாக அமைகின்றது. இந்த வெளிப்படையான, சிந்தனைகளற்ற இத்தருணத்தில் எனது முயற்சி என்பது தீர்வு காண்பதற்கான கேள்விகளை எழுப்புவதல்ல, அதாவது என் சிந்தனையிலிருப்பதுபோல ஒரு பிரயோகிக்கப்பட்ட முயற்சியல்ல. கட்புல ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் பயணமொன்றைச் சில உதாரணங்கள் மூலம் மேற்கொள்ளவும், குறியீட்டியலின் முன் நிபந்தனைகளால் அறிகை செய்யப்பட்ட நகரவெளியின் சமூகவியலினுள் இவற்றைச் சூழமைவு செய்வதிலுமே எனது ஆர்வம் மையப்படுத்தப்படுகின்றது. அதாவது இடமின்மைத் தன்மையின் அரசியல் மற்றும் சுவையை நியமப்படுத்தல் என்ற இரு விடயங்கள் தொடர்பாக நான் அடிப்படையில் எனது அக்கறையைக் கொண்டுள்ளேன்.

நான் இங்கு குறிப்பிடும் இடமின்மைத் தன்மையின் வகையானது பல உருவ வெளிப்பாடுகளினூடும். அர்த்தங்களினூடும் விளங்கிக்கொள்ளப்படலாம். முதலினதும், எண்ணங்களினதும் உலகமயமாதல் சூழலில் சில தெரிவுசெய்யப் பட்ட பயில்வுகள், சுவைகள் என்பவற்றின் நியமப்படுத்தலும், அத்துடன் சில பண்பாட்டுக் கலைப்பொருட்களுக்கான ஆசைகளும் ஒரு தெளிவான பண்பாட்டுப் பலாபலன்களாகி வருகின்றன. இவ்வாறான சூழ்நிலையிற் கொழும்பிலுள்ள 'செலான் கோபுரம்' அல்லது உலகவர்த்தகத் தாபனத்தின் இரட்டைக் கட்டடம் என்பன "சர்வதேசக் கட்டடக்கலையின்" வெளிப்பாடாகவும், குறிப்பாக இடம், புவியியல், பண்பாடு மற்றும் வரலாறுசார் எந்தவித உள்ளூர் தொடர்புமின்றி உலகரீதியில் அமையக்கூடியவற்றுக்கு உதாரணங்களாகும். இவை இடம்பெயர்க்கப்பட்டவை என்பதுடன், சமூகரீதியில் அல்லது குறிப்பிட்ட பண்பாட்டு ரீதியில் வேர் அற்ற தன்மையைக் கொண்டவையாகவும் உள்ளன; எனவே இடமின்மைத் தன்மையானவை. இக்கட்டடங்களில் உள்ளக இட ஒழுங்கமைப்பு, நிலவுரு உருவாக்கம், திட்டமிடல், வடிவமைப்பு என்பவற்றின் பொதுவான மனப்பாங்கு என்பவற்றைப் பொறுத்தவரையில், இவ்வீட்டுத் தொகுதிகளில், அவை வடக்குக் கலிபோர்ணியா, மெல்போண் அல்லது கொழும்பின் உபநகரப்பகுதி எங்கு அமைந்தாலும் அவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மிகக் குறைந்தளவிலே அமைப்பு ரீதியாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இக்கட்டடத் தொகுதிகளில் வெளிப்புறத்தில் சில பண்பாட்டு ரீதியான காட்டுருக்கள் கருகலாகவும் குறைந்தளவிலும் சேர்க்கப்பட்டிருப்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த வகைக் கட்டடத் தொகுதிகளை அவுஸ்திரேலியா மற்றும் கலிபோணியா போன்ற இடங்களில் விளம்பரப்படுத்தியி ருப்பதைப் அடிப்படையாக் கொண்டு எவ்வாறு வீட்டு அலகுகளில் உள்ளக பகுதிகளைப் பெயரிடும் படிமுறையினூடு வாழ்விடவெளிகள் திட்டமிடப் படுகின்றன என்ற தனது அபிப்பிராயத்தை டுவே வெளிப்படுத்துகிறார் (2001 : 141). 'ஒரு வீட்டினுள் பிராந்தியங்களாகத் தொகுக்கப்பட்ட, மூடப்பட்ட அல்லது திறந்த இடங்களை இப்பெயர்கள் சட்டமிடுகின்றன'(டுவே 2001 : 141). இப்பேர்ப்பட்ட வீடுகளின் உள்ளகத்திட்டமிடலிலுள்ள பல்வேறு வேறுபாடுகளுக்கு மேலாக இவற்றில் ஒருவகை மாதிரிப்படுத்தல் அல்லது ஒத்த தன்மை என்பது மேலாட்சிசெய்வதாக டுவே குறிப்பிடுகிறார் (2001: 141). இதற்குக் கலிபோர்ணியா மற்றும் அவுஸ்ரேலியாவிலுள்ள வீட்டுத்தொகுதிகள் பற்றிய தனது அவதானத்தை ஆதாரமாகக் கொடுக்கிறார். இவ் ஒத்த தன்மையென்பதை



நான்கு அடிப்படையான வேறுபட்ட வெளித்தொகுதிகளிற்கிடையே ஒரு கட்டமைக்கப்பட்ட தொடர்பு முறையாக விளக்கப்பட முடியும். அது பின்வருமாறு:

**ஒரு முறைசார் வசிப்பு வலயம்** – இது வசிப்பிடம் (கூடம்), உணவு அருந்தும் பகுதி, வாயிற் பகுதி, படி வரிசை, படித்தற் பகுதிகளை உள்ளடக்கியது.

**முறைசாரா வசிப்பு வலயம்:** – சமையலறை, சாப்பாட்டுக்குரிய இடம், குடும்பத்திற்குரிய பகுதி, விளையாட்டுக்குரிய இடம், மொட்டைமாடி என்பனவற்றை உள்ளடக்கியது.

**பெரிய படுக்கை அறை** :– இது பெரிய படுக்கையறை, குளியலறை, உடையணியும் பகுதி, சில வேளைகளில் முற்றம் அல்லது பலகணி என்பவற்றைக் கொண்டது.

**சிறிய படுக்கையறைப் பகுதி:**– இது சிறுவர்கள் மற்றும் விருந்தினரின் படுக்கையறை, குளியலறை மற்றும் பொழுது போக்கிற்குரிய பகுதியென்பவற்றை உள்ளடக்கியது (டுவே 2001:141).

அனுபவத்தின் அடிப்படையில் இந்த மாறுபடாத அமைப்புக்கள் விரிவான இரு இடங்களில் (கலிபோர்ணியா, அவுஸ்ரேலியா) இனங்காணப்பட்டாலும் இலங்கைச் சூழலிற்கூட ஒப்பிடத்தக்க மனைத்தொகுதிகள் சிலவற்றிற் சிறிய வேறுபாடு களுடன் அதே பண்புகளும், உள்ளார்ந்த வெளிப் பிரிப்புக்களும்கூடக் கண்டு பிடிக்கப்படலாம். உதாரணமாக அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் உள்ள பரடைஸ், ஒலிம்பஸ், ஹாட்லாண்ட், ஹொரிஸோன் மற்றும் ரியூலிப் என்பவற்றுடன் ஈடன் காடன், ஷேர்வூட் கிளேட் போன்ற பகுதிகளிற் காணப்படும் தரைத் திட்டத்தின் வெளிப்பிரிப்புக்கள், வட கலிபோர்ணியாவிற் காணப்படும் டாவின்சி, மேற்கு அவுஸ்திரேலியாவிற் காணப்படுகின்ற செனின் போன்ற கட்டடத் தொகுதிகளில் உள்ளவற்றுடன் ஒத்திருக்கின்றன. இதுபற்றியே டுவே பேசுகின்றார் (2001:141–146). இடம், வடிவமைப்பு, நிதித்திட்டமிடல் செயற்பாடுகளில் ஏற்பட்ட சிறு மாற்றங்களைத் தவிர, இவை இந்த மாறுபடாத தன்மையை ஒத்தே காணப்படுகின்றன.

இந்த நிலையில், மாறுபடாத வகைகள் முதலாளித்துவ விரிவாக்கத்தில் வசதிபொருந்திய நாடுகளான வடஅமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கு ஐரோப்பா போன்றவற்றிலிருந்து இலங்கை போன்ற நாடுகளுக்கும் பரவியுள்ள தனையும், ஒரு உலக யதார்த்தமாக மாறியுள்ளதனையும் காணக்கூடியதாக உள்ளது. இடம், பண்பாடு, தனிப்பட்டசுவை என்பவற்றின் முக்கியத்துவத்தை இல்லாமற் செய்து, இந்தக் கட்டடத் தொகுதிகளின் நிர்மாணத்தைச் சொந்தம்




இந்தியாவின் உபநகரப்பகுதிகளுக்காக பிரஷாவட் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட அதிசெகுசுத் தொடர்மாடிகள்

கொண்டாடும் 'உலகளாவிய' இலட்சியங்களாலேயே இவ் ஒற்றுமைத் தன்மையானது சாத்தியப்படுகின்றது. இந்நிலையில், குறிப்பாக வீடுகளின் உள்ளக இட ஒழுங்கமைப்பைப் பொறுத்தமட்டில் இடமின்மைத் தன்மை, வெளி, வரலாறு, பண்பாடுகள் பற்றிய அடையாளங்களின் தெளிவின்மைகள், இவ் அமைப்புக்களின் தெளிவான அடையாளங்களாக உருவாகியுள்ளன. சுவரில் தொங்கும் சமய ரீதியான சுவாமிப்படங்கள் அல்லது அரசியல் விக்கிரகப்படங்கள், தளபாடங்கள், பூ ஒழுங்குகள், குடும்பப்படங்கள் மற்றும் சாத்தியப்படக் கூடிய சில கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்கள் போன்ற மேலோட்டமான பண்புகள் அந்த வீட்டிற் குடிபுகும் உரிமையாளராற் கொண்டுவரப்படுகின்றன. இந்த மேலோட்டமான பண்புகளே இறுதியிற் கட்டடத்தில் சுட்டிப்புத் தன்மைக்கான காரண காரியங்கள் ஆகின்றன.

இடமின்மைத்தன்மை இன்னொரு வழியிலும் தோன்றுகின்றது. உண்மையாகக் குறிப்பிட்ட இடம் எவ்வாறு பெயரிடப்படுகின்றது. அல்லது ஒரு சமுதாயம் எவ்வாறு சாதாரணமாக இனங்காணப்படுகின்றது என்பதிலிருந்தும் இது புலப்படுகின்றது. பெயர்களையும், பெயரிடுவதற்கான நடைமுறைகளையும் பார்க்கும்போது அது கருத்தற்ற அப்பாவித்தனத்தின் கருத்தாடல் அல்ல. இது விருப்பத்தைப் பூர்த்தி செய்தல், உயர்ந்த எண்ணத்தைக் கட்டியெழுப்புதல், தமது தயாரிப்பின்மீது பிறருக்குப் பொறாமை ஏற்படுத்தல் எனப் பல கருத்துக்களுடன் தொடர்புபட்டதாகவும் வலிமை கூடியதான அரசியல் வெளிப்பாடாகவும் காணப்படு கின்றது. வீட்டுத் தொகுதி போன்ற ஒரு குறிப்பிட்ட இடம் அதன் பெயரிடற் படிமுறையின்போது அது நிலைகொண்டுள்ள பாரிய வரலாற்று மற்றும் பண்பாட்டு வட்டகைக்கு வெளியே இடவமைக்கப்படுமாயின் அது இடமின்மைத் தன்மையான தாகும். இருந்தபோதும் வெளி இப்பெயரிடல் படிமுறையாயில் மொழியியல் ரீதியாக இன்னொரு யதார்த்தத்துடன் இணைக்கப்படலாம் (இன்னொரு நாடு அல்லது இன்னொரு காலப்பகுதியுடன் பிணைக்கப் படுகின்றது). இருந்த போதிலும் இப்பெயரிடலானது ஒரு முழுமையான அறிவார்ந்த ஆதாரத்தினடிப் படையிலோ அல்லது அனுபவ அடிப்படையிலுமோ மேற்கொள்ளப்படாமல். மாறாக சூழமைவு சாராத நிலையில் மேற்கொள்ளப் படலாம். சமூகத்தின் பரந்த பண்பாட்டு மற்றும் அரசியல் பின்னணியில் இடப் பெயர்கள் எவற்றை மறக்க வேண்டும்? எவற்றை ஞாபகப்படுத்த வேண்டும், யார் ஆதிக்கம் செய்தார்கள்? யார் புறந்தள்ளப்பட்டனர் என்பனபற்றி எமக்கு அறிவிப்பதுடன், அவற்றின் சொந்த அரசியலுடன் பதியப்பட்ட பலசெறிவான கருத்துக்களைக் கொண்டுள்ளன (பெரேரா 2003) . இடங்களுக்குப் பெயரிடுதல் என்பது பழக்கப்படுத்திக் கொள்ளும் பொறிமுறையுடனும் விருப்பத்தின் அரசியலுடனும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. ஒரு சம்பவம்சார்ந்து அல்லது நபர் சார்ந்து இடமொன்றிற்கு பெயர் வழங்கப்படுகையில் அது பரீட்சயமின்மைக்கும் விருப்பமின்மைக்கும் எதிராகப் பரீட்சயமானதாகவும், விருப்பமானதாகவும் உருவாகிறது. காலனிய ஆட்சி இலங்கைக்கு வந்தபோது அவர்கள் இங்குள்ள நகரங்கள், தெருக்கள், கட்டடங்கள், பெருந்தோட்டங்கள் என்பவற்றுக்குப் பெயரிடும்போது இலங்கைப் பண்பாட்டிற்கும், மொழிக்கும் சற்றும் தொடர்பில்லாத பெயர்களையே வைத்தனர். எனினும் இப்பெயர்கள் அவர்களது அரசியல் வலிமை, ஆதிக்கம் என்பவற்றை வெளிக்காட்டுபவையாக உள்ளன (பெரேரா 2003). இதனையே ஜமேக்கா கிங் கயிட் அவர்களும் வெளிப்படுத்த முனைகின்றார். தான் வழமையாக வாழ்ந்த அன்ரிகுவாவில் உள்ள தெருவுக்கு ஒரு ஆங்கிலேயக் குற்றவாளியான ஹரேசன் நெல்சன் என்பவரின் பெயரும் ஏனைய தெருக்களுக்கு வேறு குற்றவாளிகளின் பெயர்களும் சூட்டப்பட்டிருப்பதைக் அவர் சுட்டிக்காட்டுகிறார் (கின் கயிட் 1990 :92).

நான் பேசுகின்ற எல்லா வீட்டுத் தொகுதிகளும், கொழும்பிலும் அதற்கு அப்பாலும் இருக்கின்ற எண்ணற்ற தொடர்மாடிகளும், மாடி மனைகளும் Sherwood Glade, King Authars Court, Kingstons Garden, Windsor Park, Mount Charles, Eden Gradens, Santio Valley, Olympus போன்ற பெயர்களையே காவுகின்றன. இவை மொழி மற்றும் பண்பாட்டு ரீதியாக



அத்துருகிரியவில் ஈடன்தோட்டத்தில் அமைந்துள்ள மப்பிள் நெஸ்ட் வீட்டுத்தொகுதியின் மாதிரிப்படம்

இலங்கையில் வாழும் மக்களுக்கு பரீட்சயம் இல்லாமற் காணப்படுகின்றன. அத்துடன் இங்கு வாழும் மக்கள் சிங்களம் அல்லது தமிழ் பேசுபவர்களாக இருக்கின்றனர். இவ் இரு மொழிகளிலும் இருந்தும் இப்பெயர்கள் உருப்பெறவில்லை. இவ்வாறான தன்மையே இடமின்மைத் தன்மை பற்றிய ஓர் உணர்வை தோற்றுவிக்கப் போதுமானது. ஏனெனில் இப்பெயர்கள் தற்போதைய கணத்தின் வரலாறு மற்றும் கூட்டிணைவான சமூக மற்றும் மொழிசார் அனுபவபுலத்திற்கு வெளியே காணப்படுகின்றன.

இதுபற்றி மேலும் நான் விபரிக்கின்றேன். நான் மேலே குறிப்பிட்ட அனைத்துப் பெயர்களும் இங்கிலாந்துடனும் பிரித்தானிய ஆட்சி மரபினருடனும், அதன் கிராமிய புராணங்களுடனும் அல்லது கிறிஸ்தவ அல்லது கிரேக்க தொன்மங்களுடனும் சம்பந்தப்பட்டிருப்பதை ஒருவர் அவதானித்திருக்கக்கூடும். பல உள்ளூர்க் குடிமக்களைப்போல இப்பெயர்களுடன் இத்தொகுதிகளில் வசிக்கும் பலருக்கும் முற்றாகப் பரீட்சயம் இருக்காது Sherwood Glade என்பது இத்தகைய முரண்பாடுகளைக் கொண்டமைந்தது. "Glade" என்பது காடுகளால் சூழப்பட்ட சுத்தமான இடம் என்பதைக் குறிக்கின்றது. ஆனால் உண்மையில் இந்தக் கட்டடப்பகுதி பிரதான பாதை ஒன்றுடன் தொடர்புபடுவதாகவும், திட்டமிடப்படாத நகரக்கட்டடங்கள், வியாபாரத்தலங்கள் என்பவற்றாற் சூழப்பட்டதாகவும் காணப்படுகின்றது. எனவே Glade என்பதன் உண்மையான கருத்துடன் தொடர்புபடும் எந்த விடயங்களும் இங்கு காணப்படவில்லை. இங்கு பூர்த்தி செய்யப்படாத விருப்பமும் அல்லது எதிர்பார்ப்புமே காணப்படுகின்றது. ஷேர்வூட் எனும் பதம் குறிக்கும் காட்டுப் பகுதியானது றொபின் கூட் எனும் ஆங்கிலேயப்புராண வழிப்பறிக் கொள்ளைக்காரனான கதாநாயகன் வாழ்ந்து, செயற்பட்டு, இறந்த இடமாகக் பிரசித்தமானது. மக்கள் வியாபார வங்கியினால்



வெளியிடப்பட்ட விளம்பரக் கையேடு ஒன்றில் "ஆங்கிலக் கட்டடக்கலையின் உன்னதத்தின்மூலம் முழுமைக்கு வழிசமைத்தல்" எனவும், அவ் வீடுகளின் பெயர்களும் றொபின் கூட்டின் ஆர்வம் மிக்க குணாதிசயங்களால் பெயரிடப்படும் என்றும் குறிப்பிடுகிறது (மக்கள் வர்த்தக வங்கி: திகதி குறிப்பிடப்படவில்லை). ஆகவே இந்த படிமுறையில் மாலபே, ஷேர்வூட் கிளேட்டில் தனிப்பட்ட வீடுகளிற்கு Robin, Little John, Marion, எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன், இது இங்கிலாந்தின் ஒரு சிறுபகுதி எனவும், "சிறந்த வீட்டின் தரக்குறியீடு" எனவும் முன்வைக்கப்படுவதோடு இக்கட்டடக் கலைஞர்களும், அபிவிருத்தியாளர்களும் எதனை மனதிற் கொண்டுள்ளார்கள்? மத்திய கால ஆங்கிலேய வழிப்பறிக் கொள்ளையரின் தொன்மக் கதையாடலால் அருட்டப்பட்டதும், கருத்துருப் படுத்தப்பட்டதுமான ஷேர்வூட் கிளேட் என்று அழைக்கப்பட்ட இவ் இடத்தில் வாழ முடிவு செய்தவர்களின் எதிர்பார்ப்புக்கள்தான் என்ன என்பதும் அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்கள் றொபின் கூட், லிட்டில் ஜோன் போன்று வாழ்வதான வினோதத்தில் மீள வசிக்கிறார்களா?

வழமையான இலங்கைச் சமூக மற்றும் அரசியல் வீழ்ச்சிகள் இங்கு வாழும் அதிகமான மக்கள் தமது கைகளிற் சட்டங்களை எடுத்துக் கனவு காணவும், நடைமுறைச் சாத்தியமற்ற யதார்த்தங்களை உருவாக்கவும் இட்டுச்செல்லலாம். விரக்தியால் அறிவிக்கப்படும் கற்பனையின் கணப்பொழுதிலேயே இப்பேற்பட்ட வினோதங்கள் முற்றுமுழுதாகச் சாத்தியமாகின்றன. இந்த வீடுகள் வடிவமைக்கப்பட்ட மத்தியதர வர்க்கத்தின் நபரின் சராசரியான மேல்நிலை நோக்கிய நகர்வு பற்றிய கனவுடன், சட்டத்தால் வேண்டப்படும் ஒரு வழிப்பறிக் கொள்ளைக்காரனாகச் சீவித்தல் என்பது முரண்படுகின்றது. அநேகமாக இங்கிலாந்து தொடர்பாக மிகவும் துண்டாடப்பட்டதும், தொடர்பற்றதுமான சக்திவாய்ந்த ஒரு பகுதியாக மேற்குறிப்பிட்ட கதையாடற் பகுதி காணப்படலாம். அபிவிருத்தியாளர்களின் குழுவையும், வசிப்போரையும் பொறுத்தமட்டில் உரித்துடைமையாக்கல் என்ற வகையில் இது செழிமையானதாக உள்வாங்கப் பட்டுள்ளது. ஆங்கிலேய யதார்த்தமும், மத்திய காலத்து நாட்டுப்புற வழிப்பறிக் கொள்ளையர் மற்றும் நாட்டுப்புறச் சமுதாயங்கள் பற்றிய தொன்மக் கதையாடல் களும் எவ்வாறு இன்று "தொல்சீர் இல்லங்கள்" என அடையாளப்படுத்தப்படலாம் என ஒருவர் ஆச்சரியமடையக்கூடும். அத்துடன் "பிரித்தானியக் கட்டடக்கலை மூலம் பூரணத்துவத்திற்கு இட்டுச்செல்லல்" என்ற கருத்தின்மூலம் என்ன கருதப்படுகின்றது என்பதனையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. மேலும் காலனித்துவத்திற்குப் பிந்திய கால இலங்கையிலே "போலிக் குடிசை

தோற்றம்" (Pseudo - Cottage Look) என்பதை இவ்வீடுகள் உரித்துடைமையாகக் கொண்டுள்ளன என்பதற்கப்பால், இவற்றிற் பிரித்தானியத் தன்மை என்று கூறுவதற்கு எதுவும் இல்லை. எனினும் இந்தப் பல்யதார்த்தம் மற்றும் சிந்தனைப் பன்மைத்துவத்தின் உலகமயமாக்கம் என்ற இவ் யுகத்தில் 'பிரித்தானிய கட்டடக்கலை' என்று எதையும் இனங்காணப்பட முடியுமானால் அவை இவ்வாறான வீட்டுத்தொகுதிகளின் திட்டமிடலில் அல்லது நடைமுறைப் படுத்தலில் ஏதாவது முறையிற் சம்மபந்தப்படுகின்றனவா எனக்கூற ஆதாரம் ஏதும் இல்லை. இந்த தெளிவற்ற கற்பனையின் கணத்தில், சமூக – அரசியல் மற்றும் வரலாற்று வட்டகையில் இருந்து விலகியுள்ள, குறிப்பாக மாலபேயிலும், பொதுவாக நாட்டின் பிற பகுதிகளிலும் உள்ள மனைத்தொகுதிகளின் இடமின்மைத் தன்மை என்பதே மிகவும் துலக்கமாகின்றது.

அவுஸ்திரேலிய நாட்டின் கட்டடக்கலை நிறுவனமான ஹாரிவ் அன்ட் அபிக்னனோ (Harrive and Abignano) கொழும்பின் டிசைன் கொன்சோற்றியம் லிமிட்டெட் (Design Consortium Ltd) உடன் இணைந்து வடிவமைத்ததே ஈடன் தோட்டம் (Eden Gardens) என்ற விலையுயர்ந்த, மிகவும் உயர்ந்த திட்டமிடலைக் கொண்ட, எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு உயர்ந்தளவிலான அபிவிருத்தித் திட்டமாகும். இந்த கட்டடத்தொகுதியானது உலகம் பூராவும் பரவியுள்ள படலையிடப்பட்ட சமுதாயங்களிற்கு ஒரு வகைமாதிரியாக அமைந்துள்ளதுடன், இடமின்மைத் தன்மை மற்றும் தெளிவின்மைக்குத் தகுந்த உதாரணமாகக் காணப்படுகிறது. இவ்வியல்பின் ஒரு பகுதி அவுஸ்திரேலியக் கூட்டுமுயற்சியுடன் விளைந்தது. இதை ஒரு சாதகமான விடயமாக இதன் முதலீட்டாளர்கள் கருதுகின்றனர். அவர்கள் இந்தத் தொகுதிகளை விற்பனை செய்வதற்குத் தயாரித்த கையேடுகளிற் குறிப்பிடாவிட்டாலும் இந்தக் கட்டடத் தொகுதியானது சுற்றிவர மரக்குற்றி வேலிகள் அமைக்கப்பெற்றுள்ள அவுஸ்திரேலியத் தொனிப்பொருளைக் கொண்டுள்ளதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. முதல் உதாரணத்திற் கூறப்பட்டதுபோல தொனிப்பொருளும், பெயரும் அதிகளவான முரண்பாடுகள் நிரம்பி வழிவதாக உள்ளது. இந்த முரண்பாடுகள் இத்திட்டத்தினை இடமின்மைத் தன்மையுடையதாக்குகிறது. அவுஸ்திரேலியத் தொனிப்பொருள் மற்றும் மரக்குற்றிச் சுற்றுவேலிகள் என்பன எந்தக் கருத்தைத் தந்தாலும் இலங்கையின் மேற்கு மாகாணத்திலுள்ள தலவத்துகொடயில மைந்துள்ள சமகி மாவத்தையிலுள்ள கட்டடத் தொகுதிக்கும் அவற்றுக்கு மிடையில் என்ன தொடர்பு? கிறிஸ்தவ புராணங்களிலும், இறையியலிலும் மையமுக்கியத்துவம் பெற்ற ஈடன் தோட்டம், இந்த நாட்டில் கிறிஸ்தவம் என்பது



பிரதான மதங்களில் ஒன்று என்ற வகையில் ஷோர்வூட் போல அல்லாமல் மக்களில் கணிசமானவர்களுக்குப் பரீட்சயமானதாக இருந்திருக்கும். இருப்பினும் இங்கு பெயரிற் பரீட்சயம் என்பதல்லப் பிரிச்சினை. கிறிஸ்தவ நம்பிக்கை என்ற அடிப்படையிற்கூட அது தருகின்ற முரண்பாடு என்பதே இங்கு முக்கியமானது. உலகின் தோற்றம் பற்றிய நூலில், ஈடன் தோட்டமானது முதலில் உருவாக்கப்பட்ட ஆணும் பெண்ணுமான, ஆதாமும் ஏவாளும் இறைவனின் கட்டளையை மீறியதால் வெளியேற்றப்படமுன்னர் வாழ்ந்த பூலோக சொர்க்கமாகும். இது Yahweh (இஸ்ரேலின் கடவுள்) தோட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. இவ் ஈடன் (Eden) எனும் பதம் அக்கேடியன் எனும் மொழியில் உள்ள 'edinu' என்ற சொல்லிலிருந்து பெரும்பாலும் தோன்றியிருக்கலாம் என்பதுடன் இந்தமொழிக்கு இச்சொல் சுமேரிய மொழியிலிருந்து வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. சுமேரிய மொழியில் 'Eden' என்பதற்கு 'Plain' எனப்பொருள் வழங்கப்படுகின்றது. (என்சைக்கிளோப்பீடியா பிரிட்டானிக்கா 2004) உலகியல் ரீதியான சுவர்க்கம் என்ற சிந்தனையானது தனியே கிறிஸ்தவ சிந்தனையிலிருந்து வந்தது என்று கூறமுடியாதுள்ளதுடன் அவை சுமேரிய எண்ணற்ற தரவுகளிலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது போன்று புராதன மத்திய கிழக்கின் தொன்மைக் கதையாடல்களிற் காணப்படுகின்றன (என்சைக்கிளோப்பீடியா பிரிட்டானிக்கா 2004).

மானிடத்தின் வீழ்ச்சி பற்றிய முழுப் பின்னணியையும் கிறிஸ்தவ நம்பிக்கையின் கட்டமைப்பில் வைத்து நோக்கும்போது, ஈடனின் சொர்க்கம் என்பது மனிதனின் ஆற்றற்குறைவினால் தக்கவைக்கப்பட முடியாத ஓர் கடந்து செல்லும் நிலையாகும். இந்த அடிப்படையில் ஈடன் தோட்டத்தின் கதையில் 'அப்பாவித்தனம், ஆனந்தம் என்ற நிலையிலிருந்து பாவம், துன்பம், சாவு என்ற அறிவின் நிலவரத்திற்கான மனிதனின் நகர்வினை விளக்க இறையியல் பயன்படுத்தும் தொன்மம்' சுட்டப்படுகின்றது (என்சைக்கிளோப்பீடியா பிரிட்டானிக்கா 2004). ஈடன் உடன் சம்மந்தப்பட்ட மேற்கூறிய பாவம், துன்பம், சாவு பற்றிய மேலாட்சியான உள்ளடக்கங்களைப் பார்க்கும்போது விலையுயர்ந்த, புறம் ஒதுக்கிய ஒரு வீட்டு மனைத்தொகுதிக்கு இவ்வாறு பெயர் வைப்பது எவ்வளவு தூரம் பொருத்தமுடையதாக இருக்கும் என்பது தொடர்பில் ஒருவர் ஆச்சரியமடையக்கூடும். மறுபுறத்தில் சுவர்க்கம் பற்றி இருக்கின்ற உள்ளடக்கங்கள் ஈடன் தொன்மத்துடன் சம்பந்தப்படுவதுபோல, தலவத்து கொடவிற் கட்டடத் தொகுதி எழுப்பப்பட்ட தரிசு நிலத்திலும் இழக்கப்பட்டுள்ளன. அங்கு காணப்பட்ட மரங்கள், பசுமைத் தன்மை என்பன இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அழிக்கப்பட்டுள்ளன.

ஈடன் காடன் வீட்டு மனைத் தொகுதியின் விற்பனை மேம்பாட்டிற்காக வெளியிடப்பட்ட விளம்பரக்கையேடு, பூலோக சுவர்க்கம் தொடர்பாக மனிதருக்கிருந்த எண்ணங்கள் வீழ்ச்சியடைவதையே குறிப்பதாகத் தொடர்பாட முயற்சிக்கிறது. உதாரணத்திற்குப் பின்வரும் அவதானத்தைக் கருத்திற் கொள்வோம். 'நீங்கள் முதலில் பிரவேசிக்கும்போது எது பார்க்கப்படுகிறது? அது புல், தழைகளால் பசுமையுள்ள சூழல். மறுபுறத்தே தொடுவானத்திற் கம்பீரமாக வளர்ந்த செவ்விளநீர் மரங்கள், அவற்றின் பச்சை ஓலைகளும், பொற் குரும்பைகளும். மறுபுறத்தே தென்றலில் அலை அலையாக அசையும் பொன்நிற நெல் வயல்கள். இவற்றுக்கப்பால் பச்சைப் பட்டிபோல் அமைந்த இறப்பர் மரங்கள், இவற்றின் நடுவில் ஈடன் காடின்' (சிலிங்கோ கௌசிங் இன்ரநஷனல். திகதி அற்றது) மிகவும் வெப்ப வலையம் சார்ந்த உள்ளூர் சுற்றுப்புறத்திலேயே இந்த 'அவுஸ்திரேலிய' சொர்க்கத்தின் கனவு என்பது நிலைப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவற்றின் இருப்பின் இயல்பினால் ஈடன் காடினில் இவ் உலக சொர்க்கம் பற்றிய எண்ணக்கருவிற்கான தொடக்கத்திற்கான மையப் புள்ளியை உருவாக்கும் இந்த மூன்று காட்சி வலையங்களும், ஆதாமினதும் ஏவாளினதும் கதையாடல்களுடனும் அவர்களது வெளியேற்றத்துடனும் சம்பந்தப்பட்ட விவிலியக் கருத்தின் அடிப்படையிற் கணத்துக்குக்கணம் மாறும் சொர்க்கத்தின் இயல்பையும் இவை குறிக்கின்றன. இங்கு குறிப்பிட்ட இறப்பர் தோட்டம், வயல்வெளி மற்றும் இளநீர்த் தோட்டம் என்பன (இது கட்டடத் தொகுதியின் ஒரு அங்கமாக இல்லாது வேறுநபர்களுக்குரியன) இந்தச் செயற்றிட்டத்தை நிலையாக்கிச் செயற்கையான சுவர்க்கத்தை உருவாக்கும் அதீத முன்னேற்றத்தில் அழிந்து போகலாம். அவ்வாறு எனில் சுவர்க்கம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தக் கட்டடத்தொகுதியின் நடுவில் அமைந்துள்ள பொதுப் பூங்காவைத் தவிர, தாவரங்களும் பூந்துணர்களும் வேறு இடங்களிற் கிடையாது. மறுபக்கத்தில் Maple nest மற்றும் Pine Home (நிழல்மரக்கூடும் மற்றும் பசுமை மாறாத இல்லம்) போன்ற வீடுகளின் பெயர்வகைகள், உண்மையில் இயற்கை யாகக் காணப்படும் தாவரங்கள், மரங்கள் என்ற பின்னணியிற் சுவர்க்கம் பற்றிய குறைந்தளவு எண்ணங்கள்கூட இல்லாதிருப்பதின் துலக்கமான வெளிப் பாடாகும். ஏனெனில் இந்தச் சுற்றுச் சூழலில் மப்பிள் மற்றும் பைன் மரங்கள் என்பது கொழும்பின் துணை நகர்ப்பகுதியிற் பனிக்கரடிகளையும் பனித்தேசத்து கலைமான்களையும் பற்றிப்பேசுவது போலாகும்.

எனினும் இடத்தின் இடமின்மைத் தன்மையை வலுவேற்றும் முரண்பாடுகள், தெளிவின்மைகள் என்பவற்றுக்கு மேலாக, அதே நேரத்தில், எல்லாவிதப்



பெயரிடல் படிமுறைகளிற் சம்பந்தப்படுவதுபோல, இவ்வகையான பெயரிடல்களும் கருத்துருவாக்கங்களும் ஒருவகையான பரீட்சயப்படுத்தலிற் படிமுறையை எடுத்துக்காட்டுகின்றன. இதனடிப்படையில், தகுதிபடைத்த வீட்டுச் சொந்தக்காரர்களுக்காக வீடு கட்டுபவர்களால் உருவாக்கப்பட்ட வினோதங் களினதும், ஆசைகளினதும் பொதியைப் பரீட்சயப்படுத்தலை அது குறிக்கிறது. காலனியம் முடிந்துவிட்டது என்றாலும், பிற்காலனியத்தின் வகையிலும், கடுமையாக அறைகூவலிடப்பட்ட புலமைசார் சூழ்நிலையில் தற்போது நாங்கள் பிரித்தானிய ஆட்சி மரபினருடனும், பிரித்தானியத் தொன்மங்களுடனும் சம்பந்தப்பட்ட வினோதங்களில் வாழ்கிறோம். அவுஸ்திரேலியக் கனவுகளும், பைன் மற்றும் மப்பிள் மரங்களும், வெளிநாட்டு இடப்பெயர்களும் அவற்றின் முரண்பாடுகளைத் தாண்டி இன்னும் உன்னதமான, நவநாகரிகமான, அதிசிறத்தலான இருப்பின் நிலையாக உள்வாங்கப்படுகின்றன. உலக மயமாதலிலும், அதன் எண்ணற்ற பிறப்பெடுப்புக்களிலும் வினோதங்களினதும் ஆசைகளினதும் இப்பேற்பட்ட நிலையானது ஓர் இலக்காக, காலனிய ஞாபகத்தில் ஆழமாகப் புதைந்துள்ள கூட்டிணைப்பான இலட்சியமாக, பிற்காலனிய யதார்த்தத்திற் பன்மைத்தன்மையாக, கட்டடம் கட்டுபவர்களாற் பிழையாக வியாக்கியானப்படுத்தப்பட்ட உன்னதத்தின் எண்ணக்கருவாக, கொள்வன வாளர்களின் மனமுவந்த ஏற்றுக்கொள்ளலாக காணப்படுகின்றன. இந்த வகையான திட்டங்கள், பெயர்கள் என்பவை விநோத விருப்பார்வம் அதாவது இங்கிலாந்து அல்லது அவுஸ்திரேலியாவில் மப்பிள் மற்றும் பைன் மரங்களுடன், சுற்று வேலிகளுடன் வாழுதல் அல்லது இவ்வாறான பண்பாட்டு வசதித் தன்மைகளை மேம்படுத்துதல் என்பவற்றை வலிந்து வழங்குகின்றன. இந்தநிலையில் போல் காட்டர் என்பவர் இவ்வாறான இடங்களிற்குப் பெயரிடுதலின் இயங்குநிலை பற்றி அவுஸ்திரேலியாவில் கேம் கல்வெட்டை மேற்கோளாக வைத்துக் குறிப்பிட்டதை நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

> இந்த உருவக வழியினூடு பேசுதல் என்பது வெளிசம்பந்தப்பட்ட வரலாறு தனது மூலத்தை வியாக்கியானப்படுத்தும் வழிமுறையின் காட்டியாகக் காணப்படுகிறது. தொடர்ச்சியாக மற்றும் கவித்துவமாக அது வெளி சம்பந்தமான வரலாறுகள் தொடங்கும் பண்பாட்டிடங்களை எடுத்துக்காட்டுகின்றது. அவை குறித்த ஆண்டிலோ அல்லது இடத்திலோ அல்லாமற் பெயரிடல் என்ற செயற்பாட்டுடன் ஆரம்பிக்கின்றன. பெயரிடற் செயற்பாட்டின் ஊடாக வெளிகள் குறியீட்டுத் தனமாக, இடங்களாக நிலைமாறுகின்றன. அது வரலாற்றுடனான வெளி ஆகிறது. (காட்டர் 1995 : 137).

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உதாரணப் பெயர்கள் 'காட்டர்' இன் அவதானத்தின்படி இடமின்மை என்பதற்கு அப்பாலும், வேறு சில பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. உதாரணமாக, சமகால இலங்கைச் சமுதாயங்களிற்கு கிங் ஆதேர்ஸ் கோட், ஈடன் தோட்டம், கென்சிங்கரன், பியோ போன்ற பெயர்களை வைக்கும் போது எவ்வாறு வெளிசார் வரலாறுகள் தமது மூலகங்களை விபரிக்கின்றன? உண்மையில், அவற்றின் மூலங்கள்தான் என்ன? காலனிய ஞாபகங்கள், விவிலிய நூலின் பிழையான வியாக்கியானங்கள், விமர்சனமற்ற பின்காலனியம் அல்லது இவ்வாறான வீட்டுத் தொகுதி யமைப்பாளர்களின் கட்டடக்கலைஞர்கள் மற்றும் அவர்களின் நடுத்தரவர்க்க வாடிக்கையாளர்கள் என்பவர்களின் எல்லைப்படுத்தப்பட்ட கற்பனை, பெயரிடும் செயற்பாடு என்பது, வெளியொன்றினை இடம் என்பதாக மாற்றுவதாக இருந்தால், ஒரு வரலாறுள்ள வெளியைக் குறிப்பதாக இருந்தால், மாலபேயில் உள்ள ஷேர்வூட் கிளேட், கண்டிக்குப் பக்கத்தில் இருக்கும் மவுண்ட் சார்ள்ஸ், தலவத்து கொடவிற்குப் பக்கத்திலிருக்கும் ஈடன் காடன் போன்றனவற்றின் வரலாறு என்ன? எங்கு, எப்படி அவற்றின் வரலாறு ஆரம்பிக்கின்றது? ஷேர்வூட் கிளேட்டில் வசிப்பவர்களின் கதாநாயகர்கள் ரொபின் கூட் மற்றும் அவனின் சகாக்களா அல்லது இத்திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்திய வியாபார வங்கியின் மேல் நிருவாகிகளா? ஆதாமும் ஏவாளும் சொர்க்கத்திலிருந்து அவர்களின் வெளியேற்றத்திற்கும், மானிடத்தின் வீழ்ச்சிக்கும் காரணமான கட்டுப்படுத்த முடியாத சபலமும் அவற்றுடன் பைன் மற்றும் மைபிள் மரங்களாலும், குற்றிகளாலுமான வேலியாலும் உள்வாங்கப்படும் சொகுசும், ஈடன் தோட்டத்திற் கான கூட்டிணைவான இறந்த காலத்தை எதிர்காலத்தில் உருவாக்கவேண்டிய தொன்மக் கட்டமைப்பையும் வரலாற்றுத் தொடர்பையும் உருவாக்குமா? இவ்வரலாறுகள் பற்றிய இவ்வாறான வர்த்தக ரீதியான வியாக்கியானங்கள் முரண்பாடுகளையே அதிகம் கொண்டிருக்கின்றன. ஏனெனில் காலஓட்டத்தில் வளர்ச்சியடைந்த வரலாறு என்பதிலும் இவை விநோதங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இடைச்செருகல்களாகும். உள்ளூர் நிலவரங்களிலிருந்து வெளியே உள்ள மோசமாக உணரப்பட்ட 'வரலாறுகள் உடன் இந்த வினோதங்கள் ஆசையினதும், பொறாமையினதும் பண்பாட்டுப் பொருட்களாகவும், வெளி களாகவும் உருவாகின்றன.

**சுவையை நியமப்படுத்தல்**

சுவைபற்றிய எந்தவொரு விவாதமும், ஆபத்தானதும் அகவயமானதுமாகும். 1960களில் சமூகவியலில் புறவயம் பற்றிய விவாதங்கள் புறவயம் என்பதைப் பகுப்பாய்வுப் படிமுறையில் தொடர்ந்து அகவயத்துடன் பேரம்பேச வேண்டிய மற்றும் சமரசம் செய்யவேண்டிய தேவை உள்ளதுமான ஓர் படிமுறையாக ஏற்றுக்கொள்கிறது. தனித்துவத்தன்மை சிறப்புரிமைபெறும் அண்மைக்காலப் பின்நவீனத்துவச் சிந்தனையாளர்களின் சூழலிலும், தனிமனிதப் போக்கு மற்றும் தனிமனித வேறுபாடு என்பனவற்றிற்கு இடம்கொடாமல், மேற்சொன்ன வரையறுக்கப்பட்ட, நியமப்படுத்தப்பட்ட சில வகையான சுவையுடன் வீட்டுத்தொகுதிகள் தொடர்புறுகின்றன என்பதைப் பார்ப்பதினூடாகச் சுவையின் எண்ணக்கரு பற்றி அகவயமாகக் கலந்துரையாட நான் முயல்கிறேன். வெகுசனச் செயற்பாட்டில் சுவை என்பது சமூகவாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படும் அகவயமான தீர்ப்பின் வெளிப்பாடு என்பதுடன், **தனிப்பட்ட ஆளுமையின் மாற்ற முடியாத ஒரு குறி** எனவும் விளக்கம் தரப்படுகின்றது (புறுக்கர் 2003 : 248). தனிமனித ஆளுமையின் மாற்றத்திற்குள்ளாக்க முடியாத ஒருபகுதியாகச் சுவை அமைகின்றது என்பதை நான் அழுத்தவிரும்புகிறேன். ஒருவன் அல்லது ஒருத்தியினுடைய நடப்பு வழக்கிலிருந்து வீடமைப்பு வரையான சுவையென்பது தனித்துவமான ஜனநாயக உரிமையாக உள்ளது. ஆனால் இதற்கு மாறாக அந்நியப்படுத்தப்பட முடியாத, மாற்றமுடியாத தனிப்பட்ட சுவைகளானவை மாற்றக் கூடியதாகவும், மாற்றமடைவதாகவும் உள்ளது. எனவே சுவை என்பது மாற்றமடைவதாகவும் உள்ளது. எனவே சுவை என்பது மாற்றமடையாதது என்ற கருத்திற்கு வரமுடியாது என்பதல்ல, ஆனாற் கட்டாய மாற்றம் என்பதுதான் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததொன்றாகும்.

மிக அண்மைய முறைசார் சமூகவியல் விவாதங்களிற் சுவைபற்றிய கருத்துக்கள் பியர் போதியூவின் Distinction : A Social Critique of the Judgment of Taste (1984) என்ற நூலில் முன்வைக்கப்படுகின்றன. அக்காலம் வரை பொது உணர்வின் அடிப்படையிலும், தத்துவார்த்த ரீதியிலும் முன்வைக்கப்பட்ட ஊகங்களுக்கெதிராக, போதியூ மக்களின் சுவை என்பது அவர்களின் சமூக அந்தஸ்து என்பதைக் காட்டுவதோடு, இந்த அந்தஸ்து என்பது குடும்பப் பின்னணி, குறிப்பிட்ட நபர் கொண்டுள்ள கல்வித் தகுதி, அந்த நபரின் தொழிற் பின்னணி என்பவற்றின் செல்வாக்குக்கு உட்படுகின்றது எனக் குறிப்பிடுகிறார். இந்தப் பின்னணிகளே சுவைகளை உருவாக்குகின்றன எனக் கூறியவர். இவர் மேலும் இந்தச் சுவைகள் என்பது சில செயற்பாடுகள் (விளையாட்டு, பொழுதுபோக்கு) மற்றும் சொத்துக்கள் (தளபாடம், துணிகள், வீடுகள்) என்வற்றில் நிகழும் தெரிவால் மேற்கிளம்புவதாகக் குறிப்பிடுகிறார் 'தெரிவின் பின்னாலுள்ள விதியின் உணர்விற் சுவை என்பது தானாக உருப்பெருகிறது'

(போதியூ 1995 : 108, பெரேரா 1999: 68 – 69). அவர்மீதுள்ள விசமர்சனங் களுக்கப்பால் போதியூ சுவைபற்றிய சிந்தனைகளைச் சமூகவியல் ரீதியில் நிலை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளார் (பெரேரா 1999). அத்துடன் சுவை என்பது சமூக ரீதியிற் கட்டமைக்கப்படுகின்றது என்ற செய்தியையும் தெரிவிக்கின்றார் (போதியூ 1984). அதாவது இன்னொரு வகையிற் கூட்டிணைவான சமூகச் செயற்பாடுகளில், சொத்துக்களில் இருந்தும் ஒருவன் அல்லது ஒருத்தி அவனின் அல்லது அவளின் சமூகச்செயற்பாடுகளை அல்லது சொத்துக்களை வரையறுத்துக்கொள்ளும் அல்லது தெரிவுசெய்யும் வழியே தனித்துவமான சுவை எனப்படலாம். இச் செயற்பாடுகள் அல்லது பொருட்கள் சில பண்பாட்டு மூலதனம் அல்லது விழுமியங்களுடன் உறுதியாகத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. மேலும் இவை பாரிய சமூகத்தில் உள்ள வலிமைமிக்க பகுதியினரால் வரையறுக்கப் படுகிறது (பெரேரா 1999 : 69). மேலும் போதியூவின் கருத்துப்படி

> பலசுவைகள் இருக்கவேண்டுமெனில் 'நல்லது' அல்லது 'கெட்டது', 'மதிப்பிற்குரியது' அல்லது 'இழிவானது' எனப் பொருட்கள் வகைப் படுத்தப்படவேண்டும் – வகைப்படுத்தப்பட்டவை அதனால் வகைப்படுத் தப்படுகின்றவை, அடுக்கமைக்கப்பட்டவை மற்றும் அடுக்கமைக்கப் படுகின்றவை – மற்றும் மக்கள் சுவையையும் வகைப்படுத்தலையும் உரித்தாக்கி அதனூடு அவர்களது 'சுவைக்கு' ஏற்றாற்போல் பொருட்களை இனங்காண்கிறார்கள். (போதியூ 1995 : 108).

இவ்வாறாக, எந்தச் சமூகத்திலும் சுவையிற் பன்மைத்தன்மை காணப்படு வதற்கான காரணம், அச்சமூகத்தில் வர்க்கம், அந்தஸ்து, கல்வி, அறிவு, ஒருவரின் சொந்த உலகத்திலிருந்து வெளியேயுள்ள உலகுடனான பரீட்சயம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட அடுக்கமைவுகள் காணப் படுவதனாலாகும் (பெரேரா 1999 : 69). இச்சுவை வகைப்படுத்தல் என்பது சமூகத்திற் காணப்படுகின்ற ஏனைய வேறுபட்ட சமூக அடுக்கமைவுடன் தொடர்புபட்டவை என்பதுடன் சம்பந்தப்பட்டவை (பெரேரா 1999 : 69). சுவைகள் அதிகாரத்துடன் சம்பந்தப்பட்டவை, அந்த வகையிற் சமூகத்தில் உள்ள அதிகார நிலைகள் போட்டியிடும் ஓர் இடமாகச் சுவையை ஒருவர் விவாதிக்கலாம் (பெரேரா 1999 : 69–70) உதாரணமாக 'நல்லது' அல்லது 'கெட்டது' எனத் தீர்மானிக்கப்பட்ட ஒன்றை அடிப்படையாகக்கொண்டு தெரிவைச் சமூகத்தின் ஏனையோர்மீது திணிக்கலாம். தமது தெரிவிற்கு முதலிடத்தை வழங்கி, சட்டபூர்வமான தன்மையை வழங்கி, தமது மேலாண்மையை உறுதிப்படுத்திக்கொள்ள இந்தச் சுவையை உருவாக்கும் முடிவை எடுப்பவர்கள், அதிகாரத்தில் இருப்பவர்களாக



இருக்கவேண்டும். எனவே சுவைகள் போதியூ கூறுவதுபோல் ஏறுநிலை மற்றும் ஏறு நிலைப்படுத்தற் போக்குகளைக் கொண்டுள்ளன (பெரேரா 1999 :69–70). எனவே, இந்த நோக்கு நிலையிலிருந்தே நான் தெரிவு செய்துள்ள வீட்டுத் தொகுதிகளின் வடிவமைப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் அவற்றை ஏற்றுக் கொள்ளுதல் போன்றவற்றிற் சுவையின் பங்களிப்பை ஒருவர் விளங்கிக்கொள்ள முடியும்.

குறிப்பாக, இலங்கையிலோ, வேறு எந்த நாட்டிலோ உள்ள உயர்தரம் வாய்ந்த மற்றும் விலையுயர்ந்த படலையிடப்பட்ட சமூகங்களும் மற்றும் மத்திய தரத்தன்மை கொண்ட வீட்டுத்தொகுதிகளும் சொகுசானவை என்றோ, அன்றி நுண்ணய மான தன்மைகொண்ட மனைத்தொகுதிகள் என்றோ அல்லாமல், தனித்தன்மை வாய்ந்த தொகுதிகளாகவே சந்தைப்படுத்தப்படுகின்றன. இருந்தும் இவ்வாறு பெருந்தொகை எண்ணிக்கையில் அமைக்கப்படுகின்ற சிறு வேறுபாடுகளையும், கட்டமைப்புக்களை மேற்கொள்வதற்கு மிகக் குறைந்த சந்தர்ப்பத்தையும் கொண்ட வீட்டுத் தொகுதிகளில் தனிப்பட்ட வடிவமைப்புப் பாணியோ அல்லது தனித்தன்மையோ காணப்படமாட்டாது. இந்த முரண்பாட்டை டுவே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> விருப்பத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் பொருளின் மதிப்பைப் பேணுதல் என்ற இருவேறுபட்ட விடயங்கள், வேறுபாடுகளும் எதிர்ப்பாடுகளும் பெருந் தொகையில் உற்பத்தி செய்யப்படும் சந்தையில் ஒன்றிணைக்கப்படுகின்றன. இவ்வாறான மாதிரிகள் ஆயிரக்கணக்கில் மீள் உருவாக்கப்பட்டு, உரிமையாளரின் சுவையையும், கலைத்துவத்தையும் எடுத்தியம்பும் கைவினைத் தொழில்துறையின் ஒப்பற்ற தனித்தன்மையான படைப்புக்களாகவே சந்தைப்படுத்தப்படுகின்றன (டுவே 2001 : 147).

மேற்கூறிய கருத்தென்பது பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மேலாண்மை செய்யும் ஒரு சமூகப்பிரிவினரால் முன்கொண்டு செல்லப்படுகின்ற சுவை நியமப்படுத்தலுக்குத் தகுந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. எனினும் இங்கு வீடுகளை உருவாக்குபவர்கள், நிதியளிப்பவர்களின் செல்வாக்கு மேலோங்கி நிற்பது புலனாகின்றது. இம்மாதிரியான நியமப்படுத்தலும் மேலாதிக்கமும் சமூக உறவுகளை நிர்வகிக்கும் கட்டமைக்கப்பட்ட முறைகளுடன் விளங்கும் மிகவும் அடுக்கமைவான சமூக ஒழுங்கமைப்புக்கொண்ட இலங்கை போன்ற இடங்களில் இவ்வகை மேலாதிக்கமும் நியமப்படுத்தலும் எளிமையாக

நிகழ வாய்ப்புள்ளது. எனவே எப்போது சமூகச் செல்வாக்கு மற்றும் அதிகாரம் உள்ளவர்களாற் சுவையென்பது முன் நிறுத்தப்படுகின்றதோ, அப்போது ஏனையோர் அதனைப் பின்பற்ற விரும்புகின்றனர். இப்பின்னணியில் இங்கு கவனிப்படவேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில், எல்லாப்பொருட்களும் சுவையைக் கொண்டவையுமல்ல, எல்லாச் சுவைகளும் அவற்றுடன் தொடர்புபட்ட பொருட்களைக் கொண்டிருப்பதுமில்லை. அதாவது பொருட்களைத் திருப்திப்படுத்தும் சுவைகள் பொருட்களுக்கு முன்னரே இருப்புச்செய்யலாம் (பெரேரா 1999). எனவே, இலங்கையின் வீடமைப்புச் சந்தையின் வெளிகளில் அலைந்து, நான் எனது சுவைக்குள் உள்ளடக்கக்கூடிய வீடுகள் ஏதும் இல்லை என்ற முடிபுக்கு வரலாம்.

இவ்வாறான முடிவுக்குவரும் தனிநபர்கள், குறிப்பிட்ட அளவிற்குத் தமது தனிப்பட்ட சுவைகளைத் தாமாகவே உருவெடுக்க அனுமதிக்க விரும்புபவர்களை எடுத்துக்காட்டுபவர்கள். அதனாற்றான் கட்டுமானங்களின் சிக்கல்களைத் தவிர்க்கும் ஆற்றல், உள்ளூர் அரசஅதிகாரிகளின் ஊழல்மிக்க செயற்பாடு களைக் கையாளல் மற்றும் சில வீட்டுத் தொகுதிகளில் உள்ள முக்கிய சேவைகளுக்கான தொடர்ந்த வசதி வாய்ப்பு என்பவற்றிற்கு எதிர்மறையாக டுவேயின் சொற்களில், வேறுபாடுகள் பாரிய அளவில் உற்பத்தி செய்யப்படும் (2001: 141) வீட்டுத் தொகுதிகளில் எவ்வாறாயினும் அவர்கள் வசிக்க முன்வரமாட்டார்கள். இத்தோற்றப்பாட்டின் மறுபக்க விளிம்பில் சுவை உருவாக முன்னர் உருவாக்கப்பட்ட பொருட்கள் காணப்படுகின்றன. இவற்றின் சாத்தியப்பாட்டிற்றான் வீடு கட்டுபவர்கள் தங்கியிருக்கிறார்கள். உதாரணமாக, அத்துருகிரியவிலுள்ள ஹார்ட்லாண்ட்டில் இருந்து தலவத்துக்கொடையிலுள்ள ஈடன்காடின் வரையான மனைத் தொகுதிகளுக்குள்ள அபரிமிதமான கிராக்கி எதைக் காட்டுகிறது என்றால் அவர் பிரதிநிதித்துவம் செய்யும் சுவையும், ஆசையும் புலம்பெயர்ந்த இலங்கையர் மற்றும் இலங்கை மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் உடனடியாக இடம்பிடித்துக் கொள்வதை அல்லது தகவமைத்துக் கொள்வதற்கான விருப்பத்தைக் கொண்டிருப்பதையாகும். இந்தத் தனிநபர்கள், தமது தனித்துத்தைப் பொதுவான சுவைக்கு விற்க முன்வருகிறார்கள். இதனால் பரந்த பின்னணியில், அவர்களது சுவை நெகிழ்வுத்தன்மையானது என்பதுடன் தெளிவற்றதுமாகும். எனவே அவர்களைப் பொறுத்தவரை சிலவடிவமைப்பு ஆற்றல்களையும், எல்லைப்படுத்தப்பட்ட கற்பனைகளையும் கொண்ட கட்டடக் கலைஞர்களையும், வீடு கட்டுபவர்களையும் கொண்ட குழுவினரை, குறைந்த வேறுபாடுகளைக் கொண்ட, பாரிய அளவில் உற்பத்தி செய்யப்பட்ட தமது



இருப்பிடங்களைக் கட்ட அனுமதித்தல் முழுமையாகச் சாத்தியமாகிறது. இவ்வாறானவர்கள் தனித்துவமான சுவையை உருவாக்கிக் கொள்ளல் என்பதுடன், ஏற்கனவே சந்தையில் உள்ள சுவைகளை, தகவமைத்துக் கொள்கிறார்கள். இக்காரணத்தினாற்றான் படலையிடப்பட் சமூகங்கள் அல்லது பிற பொது வீடமைப்புத் திட்டங்கள் போன்ற பாரிய அளவில் உற்பத்தி செய்யப் பட்டதும், உலகமயமானதும், இடமின்மைத் தன்மையானதும், தனிச்சிறப் பற்றதுமானவற்றுள் தமது சுவையை உள்ளடக்கிக் கொள்ள அவர்களால் முடிகிறது.

**இறுதியான விமரிசனங்கள்**

இந்த வாசிப்பை ஒரு தற்காலிக முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நான் முயற்சிக்கிறேன். இடைக்கால முடிவு என்பதை இங்கு அழுத்துவதன் நோக்கம் என்பது எனது இந்த வாசிப்பு முழுமையானதோ அல்லது விரிவானதோ அல்ல. என்னைப் பொறுத்தவரையிலும் மற்றும் இன்றைய சமகால இலங்கைச் சமூகவியலிற் சூழலிலும் இது வரைவிலக்கணத்தின் அடிப்படையில் மேலும் விரிவாகப் பேசப்படவேண்டிய, விவாதிக்கப்படவேண்டிய, சிந்திக்கவேண்டிய, கோட்பாட்டு நிலைப்படுத்தப்படவேண்டிய ஒன்று. எனது சிந்தனை என்பது இவ்வாறான பொது வீடமைப்புத் திட்டங்களை அர்த்தமில்லாதவை, நடைமுறைச் சாத்தியமற்றவை எனக் கூறிக் குழப்புவதல்ல. இவை வறியோருக்கோ அல்லது வளமானவருக்கோ உருவாக்கப்படும்போது அவர்களுடைய அத்தியாவசிய சேவைவையை அல்லது தேவையை நிறைவு செய்கின்றன. குறித்த எல்லைவரை மக்களுக்கு இப்பேற்பட்ட சேவைகள் தேவைப்படுகின்றன. அது அவர்களுக்குக் கட்டாயம் கிடைக்கவேண்டும். எப்படியாயினும் இந்த மனைத்தொகுதிகள் அரசியல் தனமற்ற வெறும் வீடுகள் மட்டுமல்ல. உபநகரத் தொன்ம மேற்பரப்புக்களை பனுவல்களாக, வெளிசார்திட்டங்களாக அத்துடன் இடமாக வியாக்கியானத்துக்குரியனவாகக் கிடைக்கச் செய்யும் முறையில் இத்தொகுதி கள், கனவின் பிரதிஷ்டையைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன (டுவே 2001:140). இலங்கைச் சூழலில் இப்பேற்பட்ட வியாக்கியானங்களுக்கே இந்தமுன்னெடுப்பில் என்னால் முயற்சிக்கப்படுகிறது.

அதாவது இதற்கப்பால் ஒரு விவாதமுமம் இல்லை என்ற வகையில், இந்த வீட்டுத் தொகுதிகள் தொடர்பாக இடமின்மைத் தன்மை என்ற விடயமும் சுவையின் தொகையான உற்பத்தியும் மாற்ற முடியாதனவாகவே கொள்ளப்

படுவதை நான் இங்கு எடுத்துக்காட்டுகிறேன். உலகமயமாதலிற் பாரதூரமான அழுத்தத்தைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் இலங்கைக்கு இதை விட்டால் வேறு வழியில்லையா? சமூக மற்றும் பண்பாட்டு ரீதியில் நிலைநிறுத்தப்பட்ட இடம்சார் உணர்வுடன் இந்த வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுக்க, இலங்கையில் சமூக மற்றும் பண்பாட்டு வரலாறு, அதன் அருட்டுணர்வுக்கான பல்வேறுபட்ட மூலங்களுடன் பொருத்தமான தொடர்புகளைத்தராதா? மேலும் படைப்புத்திறனும், எமது கற்பனைவளத்துடனுமான இருத்தல் சாத்திய மில்லையா? எமது கற்பனைகளை இவ்வாறு பெருந்தொகையில் உற்பத்தி செய்யப்படும் கட்டடத்தொகுதியினுள் அடக்க வேண்டுமா? நிச்சயமாக இல்லை என்றே நான் நினைக்கின்றேன். மறுபக்கத்திற் பார்க்கும்போது நான் குறிப்பிடும் மேற்கூறிய நபர்கள் சில வகையான சுவைகளின் ஊற்றுக்கண்களாக இருக்கின்றனர். எனினும் நான் மேலே விவாதித்த கட்டடக்கலை என்பது அறைகூவலுக்குட்படுத்த முடியாததாகவும், சுவையுணர்வின்றியும் காணப் படுகின்றது. எனினும் சில இலங்கையர்களைப் பொறுத்த வரையிற் புதுமையான வீட்டுக் கட்டமைப்புக்களை விரும்புகின்றனர். இந்தப் பொதுவான உலகளாவிய வகைமாதிரிகளைக் கண்மூடித்தனமாகத் தொடர்வதற்கு எதிராக அழுத்தம் கொடுக்கத்தக்க முகவர்த்தனமுள்ள இலங்கைக் கட்டடக்கலைஞர்களும், வீடு கட்டுபவர்களும், நாம் மேற்சொன்ன வீடமைப்புத் தொகுதிகளில் இன்றுள்ள தகுதியுள்ள வதிவோரும் இல்லையா? மறுபுறத்தில், நான் மேற்குறிப்பிட்டது போல, வசதிபடைத்த வீட்டுக்சுட்டுமானக்காரர்களும், கட்டடக்கலைஞர்களும் குறிப்பிட்ட வகையான சுவையின் ஊற்றுக்களாக உள்ளனர். எவ்வாறாயினும் துரதிர்ஷ்டவசமாக நான் குறிப்பிட்ட கட்டடங்களில் உள்ள சுவை என்பது அறைகூவல் விடாதவையாகவும், மண்ணுடன் இணையாதவையாகவுமாகக் காணப்படுகின்றன. எனினும் சில இலங்கையர் வீடமைப்பில் தெளிவற்ற சுவையையே விரும்புகின்றனர். இதுதான் உண்மை நிலவரமா அல்லது பல சந்தர்ப்பங்களில் எல்லைப்படுத்தப்பட்டுள்ள தெரிவில் தேடுவது கிடைப் பதில்லையா? சமகால இலங்கைக் கட்டடக்கலையிற் குறித்த இப்பண்பைப் பொறுத்தமட்டில் நாங்கள் தீர்வுகாணவேண்டிய விடயங்கள் இவைதான் என நான் கருதுகிறேன். விவாதத்திற்கும், எண்ணங்களின் பகிர்விற்கும், விடயங்களைப் பிரச்சனைப்படுத்தவும், எண்ணங்களின் பன்முகத்தன்மைக்கும், தொழில்சார் உடன்பாடின்மைக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் இடம்தரத்தக்க கட்டடத்தை விமர்சன பூர்வமாக அணுகும் ஒரு பாரம்பரியம் இலங்கையில் அன்றும் இன்றும் காணப்படாமையே இதற்கு இயல்பான பகுதிக் காரணங்களாகும். இன்றைய கணத்தின் இலங்கைக் கட்டடக்கலையானது,



நவீனத்துவக் கட்டடக்கலையின் பொறிக்கிடங்கினுள்ளும், கட்டடக் கலைஞனை விசேடசலுகை பெற்ற ஒரு சமூக உயிரியாக உற்பத்தி செய்த, அடுக்கமைக்கப்பட்ட சமூக அமைப்பினுள்ளும் சிறைப்பட்டுள்ளதாக நான் நம்புகிறேன். மக்களினுடைய அசைவுகளை வடிவமைக்கும்போது இப்பேற்பட்ட அதிகாரத்தின் கருதுகோள்களுக்கப்பால் நாங்கள் செல்லவேண்டும் என நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். எவ்வாறாயினும் இந்நாட்டிலுள்ள இன்றைய உத்வேகமற்ற, அருட்டுணர்வற்ற புலமை சார் கட்டடக்கலை, இந்த விடயங்களைச் சூழ்நிலைப் படுத்தும் மற்றும் அதை பண்பாட்டுத் தொடர்பு, சுவை மற்றும் வடிவமைப்பு சம்பந்தமான விடயங்களில் மேலும் பொறுப்புள்ள கட்டடங்களை உருவாக்கு பவர்கள் சம்பந்தமாக உறுதிப்படுத்தும். மக்களை வலுவுள்ளதாக்கும், கட்டடம் பற்றிய பொதுக்கருத்தாடல்களிற் பகுதியாகும் சாத்தியப்பாடு மிகவும் அரிதானது. இந்த நிலையில் ஒருவர் பல்கலைக்கழகங்களையும், இப்பேற்பட்ட நிறுவன ரீதியான கட்டமைப்புக்கொண்ட கற்றலுக்கான இடங்களிலுமே நம்பிக்கை வைக்கலாம். அதுவும்கூட இந்நிறுவனங்கள் அவற்றின் கூட்டிணைப்பான தரிசனத்தை அகலப்படுத்திக்கொள்ளும். அவற்றின் நிலைப்படுத்தல்களைத் தலைகீழாக மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே இப்பேற்பட்ட பண்பாட்டு பொறுப்புள்ள உத்வேகமான கட்டடக்கலை என்பது சாத்தியமாகும். ஆனால் இப்போதைக்கு, எனது தனிப்பட்ட கனவைப்போல இந்த நம்பிக்கையே நீடிக்க வேண்டும்.

## உசாத்துணைநூல்கள்


Bourdieu, Pierre
1984. Distinction: A Social Critique of the Judgment of Taste. London: Routledge.

Bourdieu, Pierre
1995. 'Metamo rphosis of Tastes.' In, Sociology in Question. London: Sage.

Brooker, Peter
2003. A Glossary of cultural Theory. London: Arnold.

Carter, Paul
1995. "Spatial History." In, Bill Ashcroft, Gareth Griffith and Helen Tiffin eds., Post Colonial Studies Reader. London: Routledge.

Dovey, Kim
1999. Framing Places: Mediating Power in Built Form. London: Routledge.

Kincaid, Jamaica
1995. 'A Small Place.' In, Bill Ashcroft, Gareth Griffith and Helen Tiffin eds., Post Colonial Studies Reader. London: Routledge.

Morgan, Diane
2003. 'Postmodernism and Architecture.' In Stuart Sim ed., The Routledge Companion to Postmodernism. London: Routledge.

Perera, Sasanka
1999. 'Disruptions of My Visual Space: Issues of Architecture, Taste and Imagination.' In, The World According to Me: An Interpretation of the Ordinary, the Common and the Mundane. Colombo: ICES.

Perera, Sasanka
2003. 'Public Space and (I)Mobility in the Context of Security and Insecurity in Colombo: A Brief Biography of Political Moment.' Paper presented at City One: South Asian Conference on Urban Experience, 9-11 January 2003, Delhi.



# இருபால் ஒருடல்: அர்த்தநாரீஸ்வரர் அகழ்வாய்வுக்குறிப்புக்கள்

பாக்கியநாதன் அகிலன்

இங்கே பார் இனிய நண்ப
மனிதர்களின் இந்த உடைகளை அணிவது
உனக்காக மட்டும் தான்.

சிலவேளைகளில் நான் ஆண்
சிலவேளைகளில் நான் பெண்

ஓ கூடலி சங்கமதேவா
உனக்காக நான் யுத்தம் புரிவேன்!
ஆனால், நான் உனது பக்தனின் மணவாட்டி
– பசவண்ணா

## முன்னுரைக்கு முன்

பிறப்புச்சான்றிதழ், திருமணப்பதிவுப்பத்திரம், கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவம் முதலிய உத்தியோகபூர்வ ஆவணங்கள் அனைத்தும், விண்ணப்பதாரியின் பாலை ஆண் / பெண் என்ற நிர்ணயிக்கப்பட்ட பால்வகைமைக்குள் அடையாளப்படுத்துமாறு கோருகின்றன. இது "சாதாரணமான – வழமையான" ஒரு செயற்பாடுதான் என்பதோடு, இது பற்றிச் சிந்திப்பதற்கும் விவாதிப்பதற்கும் எதுவுமில்லை என்பதே பொதுநம்பிக்கை. மேற்படி விண்ணப்பப்படிவங்களில் ஆண் / பெண் என்ற வகைப்பாட்டுடன், "பிற" எனவும் மேலதிகமாக ஒரு வகைப்பாட்டினைச் செய்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளதா என யாராவதொருவர் வினாவுவாராயின், அது மிகவும் கேலிக்குரிய ஒன்றாகவும், முட்டாள்தனமானதாகவுமே அமையும்.

ஆனால், கேலிக்குரியதும் – முட்டாள்தனமானதெனவும் நம்பப்படும் மேற்படி கேள்வி, யதார்த்தத்தில் முட்டாள்தனமானதும், கேலிக்குரிய ஒன்றும்தானா? இது தொடர்பாகப் பின்வரும் கேள்விகளை முன்வைப்பதன் மூலம், மேற்படி உரையாடலுக்கான பகைப்புலத்தை சற்றதிகரித்துக் கொள்ளமுடியும்.

- ஆண் / பெண் என்ற இருபாலுக்கும் வெளியால் வேறெந்தவொரு மூன்றாவது பாலும் இல்லையா.
- அல்லது ஆண்/ பெண் என்ற இருவேறு பால்களும் கலக்குமொரு பால்வலையம் உண்டா?
- பௌதிகத் தோற்றத்தில் ஆண்/பெண்ணாகத் தோன்றுமொருவர் உளவியல் ரீதியாகவும் அதேபாலாகத்தான் இருப்பாரா?
- அல்லது பௌதீகத் தோற்றத்தில் ஆணாகவும் / பெண்ணாகவும், உளவியல் ரீதியாகப் பெண்ணாகவும் / ஆணாகவும் இருக்கலாமா?
- அல்லது பௌதிகத் தோற்றத்திலும் – உளவியல் ரீதியாகவும் ஆணாக / பெண்ணாக உணரும் – அறியப்படுமொருவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது எதிர்ப்பாலின் ஊடுருவலை, ஏதாவதொரு விகிதாசார அளவிலாவது சந்திக்காமற்தானுள்ளனரா?

சுருக்கமாகக் கூறினாற் பால்பேதம் என்பது நிர்ணயகரமான தூய நிலைமையா, அல்லது தூயபால் (pure sex) என்றவொன்று உண்மையிலுள்ளதா என்பதே மேற்படி கேள்விகள் புறப்படும் பகைப்புலமும் சாராம்சமுமாகும்.


மேற்படி கேள்விகள் உருவாக்கியுள்ள வினா வலயத்தினை இக்கட்டுரைக்கான பின்தளமாக, முன்னுரைக்கொரு முகவுரையாக இக்கட்டுரை முன்னிறுத்துகிறது. மேற்படி கேள்விகளுக்கு நேரிடையாக இக்கட்டுரை பதில்கூற முனையாது விட்டாலும், அவற்றிற்கான பதில்களைக் கண்டடைவதற்கான சுற்றுச்சூழலை உருவாக்கும் எனலாம். அவ்வகையில் அர்த்தநாரீஸ்வர வடிவத்தினை அதற்கான, பிரதான உசாத்துணையாக இக்கட்டுரை முன்மொழிகிறது.

**முகவுரை:**

அர்த்தநாரீஸ்வரர் சைவ விக்கிரகவியலின் மிக முக்கியமான வெளியீடுகளில் ஒன்று, தடத்த நிலையிற் சிவன்[2] பல்வேறு உருவத் திருமேனிகளை எடுப்பதாக சைவசித்தாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன. அத்தகைய சிவனது மூர்த்த நிலைகளின் பொதுவான போக்கிலிருந்து அடிப்படையில் மாறுபட்ட ஒன்றாகக் காணப்படும் விக்கிரகவியற் கோலங்களுள் ஒன்றாகக் காணப்படுவது அர்த்தநாரீஸ்வரர் வடிவ நிலையாகும். பொதுப்படையாகச் சிவனது விக்கிரகவியற் கோலங்கள் யாவும் ஹரிஹர[3] வடிவமுட்பட ஒற்றைப் பாலுடைமை சார்ந்ததாகப் பெருமளவிற் காணப்பட, அதிலிருந்து மாறுபட்ட ஒன்றாகக் காணப்படும் அர்த்தநாரீஸ்வர வடிவம், எதிரிடைப் பால்கள் இரண்டும் ஒருடலில்




வதியும், அதனால் ஆண், பெண் என்ற இருபாலும் ஒன்றாக, ஒருடலைப் பகிரும் ஒரு வடிவநிலையாகக் காணப்படுகிறது.



சிவ அல்லது சைவ விக்கிரகவியலின் ஆரம்பங்களை 'ஆரிய' வேதமரபிற்கு முற்பட்ட சிந்துவெளிக் காலத்தில்[4] இருந்தே இனங்காணும் விக்கிரகவியலாளர்கள் சிவனைக் கூட, பெருமளவுக்கு 'ஆரிய' மரபு சாராத தொல்சமய, சமூக மரபின் பிரதிநிதியாகவே இனங்கண்டுமுள்ளனர் (சுக்லா 1996: 232, 233) புராணங்களும், ஆகமங்களும், சிற்பசாஸ்திர நூல்களும் சைவ விக்கிரவியலுக்கான நியமங்களைக் கட்டமைத்த பிரதானமான நூல்களாகும். வேதங்களைப் போலல்லாது, உருவவழிபாட்டினையும் அதன் பரிமாணங்களையும் முன்னிறுத்திக் கொண்ட ஆகம மரபு சைவ விக்கிரகவியலுக்கான, சமயத்தத்துவ– விக்கிரகவியல் விதிகளைக் கட்டமைத்த பிரதானமான பனுவலாக, ஒரு வகையிற் சைவ விக்கிரகவியலின் பிரதான மூல அடிப்படை எனும் பங்கினைப் பெற்றதெனலாம். இன்னொரு வகையிற் புராணிக மரபின் எடுத்துரைப்புக்களை, அதனடுத்த உருவப் பயில்வுக் கட்டத்திற்கு விரைந்து இழுத்துச்சென்று, ஒரு தத்துவார்த்தத் தளத்தின்மீது, அதனை நடுவு செய்துகொண்டதன் மூலம், ஆகமம் மேற்படி பிரதான வகிபாகத்தைப் பெற்றுக்கொண்டதெனலாம். இவ்விதமான நீண்ட தொடர்ச்சிக்கோடொன்றினை வரைந்து இழுக்கும்போது, காலத் தொன்மை ரீதியாகச் சைவ சிவ விக்கிரகவியல் இற்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகள் வரை செல்வதை அவதானிக்கமுடியும்.

சைவ விக்கிரகவியல் பேசும் உருவ அமைப்புகளைச் (பிரதிமா லட்சணங்கள்) சுருக்கமாகப் பின்வருமாறு வகையீடு செய்ய முடியும்.




(சுக்கலா 1996:247 - 286)

சாந்தமூர்த்தமெனும் அமைதிநிலை மூர்த்த வடிவங்களுள் சிறப்புக் கவனிப்புக்குரிய மூர்த்தங்களுள் ஒன்றாக இருப்பது அர்த்தநாரீஸ்வர வடிவமாகும். 'அர்த்த (பாதி)' 'நாரி (பெண்)' 'ஈஸ்வரன் (சிவன்)' எனும் பொருளுடைய பெண்ணைப் பாதியாகக் கொண்ட சிவன் (திவாரி 1979 :44) என்ற பிரயோகவழி மேற்படி பெயர் உருவானது. இதற்குச் சமனாக 'மாதொருபாகன்' அல்லது 'மாதொரு பாகனார்' எனும் பிரயோகத்தினைத் தேவார திருவாசகங்களிற் பார்க்கமுடியும்.

சிவபுராணம் அர்த்தநாரீஸ்வர வடிவ உருவாக்கம் பற்றிய தொன்மம் / புராணிகமொன்றினை முன்வைத்துள்ளது. அதன்படி பிரம்மாவின் படைப்புச் செயற்பாட்டில் இருந்த தடைகளை நீக்க ஆணும் பெண்ணுமென்ற இருவேறு பால்களின் சேர்க்கையின் இன்றியமையாமையைச் சுட்டிக்காட்ட, சிவன் இருபாலையும் ஒருடலிற் காட்டி, சக்தி பாதியாக நின்றாரென அது கூறுகின்றது. (ராவ் 1971 : 321 – 322). வேறொரு புராணிகம், பிருங்கி முனிவர் சிவனையும் சக்தியையும் தனித்தனியாக வழிபடுவதில் இருந்த இடர்ப்பாட்டை நீக்கச் சிவன் சக்தியைத் தன்னுடலிற் பாதியாக ஏற்றுக் காட்சி தந்தாரெனக் கூறுகிறது. (திவாரி 1979 : 45 , 46). காமிகம், சுப்பிரவேதாகமம், காரணாகமம், சில்பரத்தினம் முதலான நூல்கள் அர்த்தநாரீஸ்வர வடிவம் – விக்கிரகவியல் என்பது பற்றி விரிவாகப் பேசியுள்ளன.



## பாசுபத சைவமும் அர்த்தநாரீஸ்வர வடிவமும்



லகுலிசா / கி.பி. 10 / மத்திய பிரதேசம்

சமய வரலாற்றாசிரியர்கள் சைவர், ருத்திரர், பக்தர், ஜங்கமர், பாசுபதர், கபாலிகர், களாமுகர் முதலிய சைவசமயத்தின் பல கிளைகளைப் பட்டியற்படுத்தியுள்ளனர் (வில்சன் 1976 : 18, லோறன்சன் 1991 : 01) இந்தக் கிளைகளுக்குள் காலத்தால் முற்பட்டதும், அனைத்து ஆசிரியர்களாலும் குறிப்பிடப்படுவதும் பாசுபத சைவம் ஆகும் (லோறன்சன் 1991 : 173).

மகாபாரதத்தில் பாசுபத சைவம் பற்றிய முதற் குறிப்பு இடம்பெறுவதாகக் கூறும் 'கூபே' பாசுபத சைவத்தின் தோற்றம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

> பனுவல்கள் மற்றும் கல்வெட்டுத் தகவல்களின் அடிப்படையிற் பாசுபத முறை லகுலிசாவினால் தோற்றுவிக்கப்பட்டது என்பதுடன், அவர் சிவனின் இருபத்தெட்டாவது அல்லது கடைசி அவதாரிப்பாகவும் பார்க்கப்படுகின்றார். பிற்பட்ட கால ஆய்வுகள் புத்தர், மகாவீரர்போல லகுலிசாவினை வரலாற்றுப் பாத்திரமாகவும், மேற்படி மரபின் தலை சிறந்த ஆசானாக, குண்டாந் தடியோடு அம்மரபினை முன்னெடுப்பவராகவும் பார்க்கிறது. (கூபே 1997 : 49)
>
> பாசுபதம் அல்லது லகுலீசபாசுபதம் அல்லது நகுலீசபாசுபதம் கிறிஸ்து வருட ஆரம்பங்களில் இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்களில், குறிப்பாகக் கிழக்கிந்தியப் பகுதிகளில் நிலவியுள்ளது. மேற்படி லகுலீச எனும் இந்தச் சொல் லகுல / லகுட / லகுத என்ற குண்டாந்தடியைக் குறிக்குமொரு சொல் வழிவந்து, இறுதியிலே லகுலிசாவாகியது என்பர். லோறன்சன் 1991 : 177).

பண்டாஸ்கரை மேற்கோள்காட்டி கூபே, லகுலிசாவின் தோற்ற உருவைப் பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார்.

> விஸ்வகர்ம வாஸ்து சாஸ்திரம் லகுலிசாவின் தோற்ற உருவை எடுத்துக் காட்டுகையில், அவரைப் பத்மாசனத்தில் அமர்ந்தவராகவும், அவரது

ஆண்குறி விறைப்பேறிய நிலையிற் காணப்படுவதாயும் (உர்துமேத்திரா), வலக்கையில் நாரத்தங்காயையும், இடது கையில் குண்டாந்தடியையும் (தண்டம்) ஏந்தியுள்ளது என்கிறது. (கூபே 1997 : 49)

இந்த விக்கிரகவியற் பின்னணியில் இருந்து அர்த்தநாரீஸ்வர விக்கிரகவியலினைக் கட்டுடைத்து வாசிப்பதற்கான முன்னோடி முயற்சியாக இக் கட்டுரை, அர்த்தநாரீஸ்வர வடிவ நிலையை விபரிக்க முயற்சிக்கின்றது. அவ்வகையிற் சில்பரத்தினம் அர்த்தநாரீஸ்வர வடிவத்தினை முன்மொழிந்தமுறை கீழே மேற்கோள் காட்டப்படுகின்றது.

"இனி அர்த்தநாரீஸ்வரரைச் சொல்லப்போகிறேன். இவரது வலது கால் இயற்கையாக நன்கு பொருந்தியவாறும், இடதுகால் மடங்கியுமிருக்கும். அணிகள் எல்லாவற்றையும் அணிந்திருப்பார். இவரது இடதுபாதி பார்வதி வடிவமாயும், வலதுபாதி பரமசிவன் வடிவமாயும் இருக்கும். இவருக்குக் கைகள் நான்கு. வலதுகைகள் இரண்டில், முறையே அபய முத்திரையையும் கோடரியையும் தரித்திருப்பார். மற்றொரு இடது கைகளிலே ஒன்றினுடைய முழங்கையை அழகாக எருதின் தலைமேல் வைத்திருப்பார். மற்றொரு இடது கையிற் கடகமுத்திரையுடன் மலரைத் தரித்திருப்பார்... (அத்தியாயம் 22)

எசா

"பாசம், அங்குசம், ஜபவஸ்திரம், அபயதான முத்திரை இவற்றைக் கைகளில் தரித்திருப்பது. இளஞ் சந்திரனைத் தலையிலணிந்தது, செந்தாமரை மலரில் வீற்றிருப்பது. மூன்று கண்களுள்ளது. செம்பரத்தம்பூ, பொன் இவைபோன்ற பக்கங்களுடையது. மனதைக் கவரும் அழகு வாய்ந்தது. இவ்வாறான அர்த்தநாரீஸ்வர வடிவம் உங்களை எக்காலமும் காப்பாற்றட்டும்."

மேலும் எஎ

"செந்தூரம், பொன் இவைபோன்ற நிறமுள்ள இரண்டு பக்கங்களை யுடையவராகவும், பார்வதி, பரமசிவன் இவர்களுக்கேற்ற அணிகளையும் அடையாளங்களையுமுடையவராகவும், பாசம் அபயதான முத்திரை, அஷலை வரதானமுத்திரை இவற்றைக் கைகளில் தரித்தவராகவும், அர்த்தநாரீஸ்வரரைத் தியானித்து வேண்டியவரமெல்லாம் கைகூடும் பொருட்டு அமைக்கவேண்டும்.



மேலும் எஅ

"சிவப்பு நிறமும், பொன்னிறமுடையது, தாமரை மலரில் அமர்ந்திருப்பது பார்வதி, சிவன் இவர்களுடைய அழக அடையாளங்களுமுள்ளது. அழகிய தன்மையும், உக்கிரமமான தன்மையுள்ளது. பாசம், மழு, அபயதான முத்திரை, வரதான முத்திரை இவற்றைத் தரித்து, விசித்திரமாகக் காட்சியளிப்பது. இவ்வாறான அர்த்தநாரீஸ்வர வடிவமானது உங்களுடைய விருப்பத்தை எல்லாம் பூர்த்தி செய்யட்டும்." (அத்தியாயம் 25, சிலப்பரத்தினம் 1980 : 240 – 248)

இதேபோன்று அர்த்தநாரீஸ்வர வடிவமைதிபற்றி நூல்களிடையே அடிப்படையைக் குழப்பாத, பல்வேறு பாடபேதங்களையும் அவதானிக்க முடிகின்றது.

காண்பிய ரீதியாக, அர்த்தநாரீஸ்வர வடிவத்தின் ஆரம்பங்களை குஷானர் காலத்திலிருந்து விக்கிரகவியல் ஆய்வாளர்கள் இனங்காண்பர் (அகர்வாலா 1957 : 28). பனர்ஜி குப்தர் காலத்திற்குரிய சுடுமண்ணாலான வடிவமொன்றினை அர்த்தநாரீஸ்வர வடிவத்தின் ஆரம்ப அடிப்படையாக எடுத்துக்காட்டியுள்ளார் (பனர்ஜி 1941 : 198 – 199). இதனைத் தொடர்ந்த காலங்களிற் பரவலாக, பதாமி முதல் ஒரிசா, தமிழ்நாடு (தஞ்சாவூர், காஞ்சிபுரம், மகாவலிபுரம், மதுரை, கும்பகோணம்) இலங்கைவரை பாவிப் பரந்துள்ளது. இதேவேளை, இதற்குச் சமாந்தரமாக இலக்கியத்திற் சமஸ்கிருத இலக்கிய மரபுமுதல் (உதாரணமாக சுபசித்தரத்ன பந்தகிராம்) தமிழிலக்கியப் பாடங்கள் (சிலப்பதிகாரம், பக்திப் பாசுரங்கள்) வரை அதிகம் உசாவப்பட்ட ஒன்றாகவிருந்த சிவமூர்த்தமான அர்த்தநாரீஸ்வரர் காணப்படுகின்றது. இந்நேரம் செள, குச்சுப்பிடி, யக்ஷகானா, பரதநாட்டியம் முதலிய ஆற்றுகைக் கலைகளும் அர்த்தநாரீஸ்வர ஆள் மேற்கொள்ளலைப் பிரதான கூறாகக் கொண்டவை. குறிப்பாக செளவும், குச்சுப்பிடியும் ஆற்றுவோனுடலை இருகூறாக்கி ஆண் பெண் காட்சிக் கூறுகளால் அவற்றை நிரப்புவதையும் காணலாம் (ஹஸ்ரோவ் 1982 : 139) அவ்கையில் இந்திய உபகண்டப் படைப்பு மனதினுள் அதிகம் நுழைந்ததும் தொடர்ந் தேர்ச்சியான நினைவுருவாக நடமாடுமொன்றாகவும் அர்த்தநாரீஸ்வர புராணிகமெனும் ஆண், பெண் பால்களான இருபாலாலோருடல் காணப் படுகின்றது.

விக்கிரகவியலின் பரந்து நீண்ட தொடர்ச்சியின் மிக முக்கியமான, ஒப்பீட்டளவில் ஏனையவற்றிலிருந்து சற்று மாறுபட்ட ஒரு களமாக இருப்பது



அர்த்தநாரீஸ்வரர் வடிவங்கள் / கிழக்கு கங்கர்கள் / கி.பி 07/ ஒரிசா

இருபாலோருடற்களமாகும். இருபாலோருடல் என்ற சொற்பிரயோகத்தினை "Androgyne" எனும் ஆங்கிலப் பதத்திற்குச் சமாந்தரமாக இக்கட்டுரை கையாளுகின்றது. ஆங்கிலத்திலுள்ள "Androgyne" என்ற சொல் "Andras" (ஆண்) "Gyne" (பெண்) எனுமிரு கிரேக்க வேரடிச் சொற்களின் இணைவின் வழியுருவானதும் பௌதிக ரீதியாக ஆண் – பெண் என்ற தோற்றப்பாடுகளை ஒரே சமயத்தில் உடையதுமான உயிரிகளைக் குறிப்பதாகும். (பிளேவ்வி 1980 : 283). இதே சமயம் கிரேக்க தொன்ம வழியுருவாகிய ஆங்கில மொழி வழக்கிலுள்ள இருபாற்சின்னவுயிரி என்ற சொல்லும் மேற்படி சொற்பிரயோகத்திற்கு நெருக்கமானதொன்றாகும் (ஹோண்பி – 2005 : 729).

வென்டி டோனிகர் ஓ பிளேவ்வியின் (Wendy Diniger O Flahetrby) இருபாலோருடல் பற்றிய ஆய்வுக் குறிப்புக்களின்படி அவர் இவ்ரண்டு வகையான இருபாலோருடற்களங்களை முதன்நிலையில் இனங்காண்கின்றார். அதன்படி மனிதவுலகில் நிலவும் இருபாலோருடல் – அவற்றையும் பௌதிக நிலையில் ஒருபுறமாகவும், உளவியல் நிலை சார்ந்தது இன்னொரு புறமாகவும் பார்க்குமவர்



அடுத்ததாகத் தொன்மைவுலகுசார் இருபாலோருடல்களையும் குறிப்பிடுகிறார். அவை ஒன்றினுள் ஒன்று இடைத்தாக்கம் புரிகின்றன என்றும் அவரது ஆய்வு குறிப்பிடுகின்றது. (பிளேவ்வி 1980: 293 – 334)[5]

### நனவிலி – தொன்மங்கள் மற்றும் விக்கிரகவியல்

இருபாலோருடற் பிரதிநிதித்துவங்கள் உட்பட விக்கிரகவியலை வடிவமைக்கும் கருத்தாக்கங்களை விநியோகிக்கும் பிரதான கருத்தாடற் களங்களிலொன்றாகத் தொன்மங்கள்[6] காணப்படுகின்றன. இந்திய உபகண்ட மரபிற் பயிலப்படும் புராணிகங்கள் கூடத் தொன்ம வடிவுடையனவே எனக் கூறப்படுகின்றது (தாப்பர் 1978 : 295). அடிப்படையில், மனிதகுலத்தின் கூட்டுப் பிரதிநிதித்துவங்கள் எனக் கூறத்தக்கவகையில் தொன்மமங்கள் உலகப் பொதுப்பண்புகளுடையவை.


தொன்மமென்பதை உளவியலாலளரான கார்ல் யுங் (Carl Gustav Jung) மனித மனத்தின் நனவிலிப் பகுதிசார் நேரடி வெளிப்பாடுகளில் ஒன்றாகப் பார்க்கின்றார் (போடம் 1954 : 27). யுங்கின் சொற்களைப் பயன்படுத்திக் கூறினால் தொன்மமென்பது நனவிலி சார்ந்த உளப் படிமுறைகளின் வெளியாடையாகும் (யுங் 1959 :06) எனலாம். இவ்வகையில் யுங்கின் உளவியல் குறிப்பாக, அவரது நனவிலி தொடர்பான கருத்தாக்கங்களைச் சற்று விரித்துப் பார்ப்பதனூடாகத் தொன்மவுருவாக்கம், விக்கிரகவியலின் மூலங்களில் ஒன்றாகத் தொன்மங்கள் செயற்படுதல் என்பவற்றுடன் சிறப்பாக அர்த்தநாரீஸ்வர வடிவத்தின் விக்கிரகவியற் பின்புலத்தைப் புரிந்துகொள்ள முடியுமென நினைக்கின்றேன்.

நனவிலி மனத்தின் இருப்புத் தொடர்பான முற்கருத்துக்களைச் சிக்மன்புரொயிட் முன்வைத்திருந்தபோதிலும்[7] நனவிலி மனந்தொடர்பான, ஆழமான வாசிப்புகளை யுங்கே மேற்கொண்டிருந்தார். மனித – சமூக நடத்தைக் கோலங்களை நிர்ணயம் செய்யுமொரு பெரும் பிராந்தியமாக நனவிலியை யுங் அறிமுகஞ் செய்தார் என்பதுடன் நனவுமனத்தின் ஊக்கியாகவும் நனவிலியையே அவர் பிரதானமாக இனங்கண்டார்.

"நனவிலியினுடைய அதிகப்படியானதோ அல்லது குறைந்தளவானதோ வான, மேலோட்டமான மட்டம் சந்தேகத்திற்கு இடமின்றித் தனியாளுக்குரியதாகும். இதனை நான் தனியாள் நனவிலி என

அழைக்கின்றேன். ஆனால் இந்தத் தனியாள் அனுபவத்திலிருந்து உருவானதோ, தனியாள் முயற்சியால் ஈடுபட்டதோ அல்ல. பதிலாக அது பிறப்பின் வழிவருவதாகும். இந்த ஆழமான அடிமட்டத்தை நான் கூட்டு நனவிலி என அழைக்கின்றேன். நான்; கூட்டு என்ற சொல்லை, இந்தப் பகுதி – தனியாள் வயமானதல்ல பதிலாகப் பிரபஞ்ச ரீதியானது என்ற வகையிற் பயன்படுத்துகின்றேன். (யுங் 1959 : 03)

நனவிலி தொடர்பான அவரது கருத்துக்களை மேலும் விரிப்பதற்கு முன்னால் அதனை இலகுபடுத்தும் நோக்குடன் இக்கட்டுரை அவரது மனத்தின் கட்டமைப்பு, அதன் உள்ளடக்கம் என்பன தொடர்பான நிலைப்பாட்டினை விளக்க வரைபட ரீதியாகக் கீழ்வருமாறு முன்வைக்க முயல்கின்றது.




A நனவுமனம் B நனவிலிமனம்

1. புலனுகர்வு
2. உணர்வு
3. உள்ளுணர்வு
4. எண்ணம்

i. மறக்கப்பட்ட விடயங்கள்
ii. உள்ளெடுக்கப்பட்ட விடயங்கள்
iii. உணர்ச்சி
iv. எப்போதாவது சடுதியாக வெளி வரக்கூடிய நனவிலிப் பகுதி
V. எப்போதுமே திறக்கப்பட முடியாத நனவிலிப் பகுதி

அ. தனியாள் நனவிலி
ஆ. கூட்டு நனவிலி

(ஜக்கோபி 2001 : 46, 48)

மனித நனவுப் பகுதியை விடவும் மிகப் பழமையானதாக அவனது நனவிலியை குறிப்பாகக்கூட்டு நனவிலியை இனங்காணும் யுங் பின்வருமாறு கூறுகிறார்.

நனவிலியினது உள்ளடக்கம் புராதன காலத்தோடு சார்புடையதாக – செயற்றொடர்புடையதாக உள்ளது. அதனை நான் தொன்மைவகை என்பேன். அவை பிரபஞ்ச ரீதியான படிமங்கள் என்பதுடன் மிகப்



பண்டைக் காலத்திலிருந்தே அவை உயிர் வாழ்ந்தும் வருகின்றன. (யுங் 1959:05)

நனவிலியின் பொதுமைப்பாடு அதன் பண்டை அடிப்படைகள் என்பன பற்றி யுங்கை முன்வைத்து ஜக்கோபி பின்வருமாறு கூறுகின்றார்.

வரலாறு, இனத்துவவியல், இனவியல் அல்லது பிற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதும் மனித குலத்தின் பொதுக் குணாம்சங்கள் சார்ந்த நிலைகளான பயம், அபாயம், மேன்நிலைச் சக்திகளுக்கு எதிரான போராட்டம், பால்களுக்கு இடையிலான மற்றும் பெற்றோர் பிள்ளைகளுக்கும் இடையிலான தாய் – தந்தையர் படிமம் , காதல் – வெறுப்பு முதலியவற்றின் மீதானதுமான பிறப்பு – இறப்பு மீதானதும் எதிர்வினை, ஒளி – இருள் முதலியவற்றின் ஆற்றல் பற்றிய கோட்பாட்டுப் படிவுகளாற் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதும், எந்தவிதமான வேறுபாடுகளு மின்றிக் காணப்படுவதுமான உள்ளடக்கங்களால் நனவிலி உருவாக்கப் பட்டுள்ளது. (ஜக்கோபி 2001: 24 – 25)

இந்த வகையில் நனவிலி மனமென்பது தனிமனிதர் சார்ந்த அவனு(ளு)டைய கடந்தகால ஞாபகங்கள், அவன்(ள்) தனக்குள் உள்ளொடுக்கிப் புதைந்த விடயங்களால் மட்டுமின்றி, மனித குலத்தின் பல்லாயிரமாண்டு கால ஞாபகங்களாலும் இழைக்கப்பட்டிருப்பதாக யுங் எடுத்துக்கொள்கிறார். இதன்படி தனிமனித மனமென்பது, ஏக சமயத்தில் தனியாளுடையதும், அதே சமயம் பொதுச் சமூகக் கூட்டினதாயும் அமைந்திருப்பதை முன்மொழியும் யுங், குறிப்பிட்ட தனியாளைவிட, அவனது மனத்தின் அடியாழங்களைத் தொன்மையானதாக எடுத்துக்கொள்கின்றார். உளவியல் ரீதியாக ஒரு மட்டத்திற் மனிதன் காலங்களுக்கு உட்பட்டவனாகவும், இன்னொரு மட்டத்தில் காலங்களைக் கடப்பவனாகவும் உள்ளானென்ற ஒரு வாசிப்பினையும் மேற்படி கருத்தின் மீதாக முன்மொழிய முடியும்.

இந்த வகையில் நனவிலியின் அடியாழப் பகுதியான கூட்டு நனவிலியில் மனித குலத்தின் மிக ஆரம்பகாலக் கடப்புகள் – அனுபவங்களின் உறங்கும் படிவுகளை அல்லது தொன்மை வடிவங்களை யுங் புராதனமானதும் – பிரபஞ்ச ரீதியானதுமான மனித சமூகத்தின் சிந்தனையுருவங்கள் என்கிறார். (யுங் 1953 : 65) மேற்படி தொன்மை வடிவங்களை யுங் " தொல் படிவுகள்" எனப் பெயரிட்டழைக்கின்றார்.




புதிய பபிலோனியு கால இருபால் ஒருடல்



எகிப்திய முட்டோ



இந்தோ ஐரோப்பிய இருபால் ஒருடல்



மத்தியகால இரசவாதப்பண்புடைய இருபால் ஒருடல்



"கூட்டு நனவிலியின் உள்ளடக்கங்கள் இன்னொரு வகையில் தொல்படிவுகள் என அறியப்படுகின்றன...." (யுங் 1959 : 04)

எனவே, நனவிலியென்பது அனைத்துத் தொல்படிவுகளாலும் இழைக்கப்பட்டவொரு முழுமையாகவும் – மிகப் பண்டைக்கால மனித அனுபவங்கள் வைப்பிலிடப்பட்ட இடமாகவுமுள்ளது என்ற காரணத்தால் தொல்படிவுகள் அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுமையானதாக உள்ளது. வேறுவகையிற் கூறுவதாக இருந்தால், மனித மனத்தின் இயல்பூக்கங்களின்[8] சுயபிரதிமை எனவும் தொல்படிமங்களை அறிமுகஞ்செய்ய முடியும் (போடம் 1954 : 122, ஜக்கோபி 1999: 36). தொன்மங்கள், கட்டுக் கதைகள் முதலியன இவ்வகையில் நனவிலியின் நேரடி வெளிப்பாடுகளாகவும் அல்லது தொல்படிவ வெளியீடுகளாகவுமே யுங்கினாற் பார்க்கப்படுகின்றன (போடம் 1954 : 135, ஜக்கோபி 1999 : 3) என்பர். இவ்வகையில் விக்கிரகவியலிற்கான கருத்தாக்கப் புலத்தை வழங்கும் தொன்மங்கள், தொல்படிவங்களே என்ற மேற்படி கருத்து நகர்வடிப்படையிலும், தொல்படிவமென்பது நனவிலி சார்ந்ததென்ற வகையிலும் விக்கிரகவியலாக்கத்தின் ஒரு பெரும்பிராந்தியம் மனித நனவிலியுடன் – அவ்வகையில் மனித குலப் பொதுமை அனுபவப் புலத்தின் மீதும் காலூன்றி இருக்கின்றதெனலாம்.

**அனிமா**

யுங் பேசும் தொல்படிவங்களிற் சிறப்பான ஒன்றாக அமைவது, அனிமா எனப் பெயரிடப்பட்டுள்ள ஆணுள் உறையும் பெண்ணும், அனிமஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள பெண்ணுளுறையும் ஆணுமாகும். அதாவது, ஆணின் நனவிலிக்குள் வசிக்கும் அல்லது உள்ளொடுக்கப்பட்டிருக்கும் பெண்ணம்சத்தையே மேற்படி அனிமா என்ற பிரயோகம் குறித்து நிற்கின்றது. வேறுவகையிற் கூறுவதானால் ஆணின் நனவிலிக்குள் இருக்கும் தொகுக் கப்பட்ட பெண்ணின் படிமமே அனிமாவாகும். யுங் அடிப்படையில், அனிமா அனிமஸ் பற்றிய கோட்பாடானது முழுவளவில் அனுபவத்தை பிரதானமாகக் கொண்டது என்கிறார் (யுங் 1959 :56).

யுங் மேலுமொரு படியேறி அனிமா என்பதை ஆணின் ஆத்மாவாகவும் நித்தியத்துவத்தின் இருப்பிடமாகவும், குறிப்பாக ஆத்மாவின் பிரதானவுலகு என்றும் அதனை அழைக்க முற்படுகிறார் (யுங் 1959 : 26, 50).

இதேநேரம் அனிமா என்ற தொல்படிவம் எப்போதும் தாய் என்ற தொல்படிவத்தோடு கூடியிருப்பதாகவும் யுங் எடுத்துக் காட்டுகிறார். அதாவது அனிமா கோட்பாடும், தாய் சிக்கலும் ஒன்றுளொன்று கலந்திருப்பதாக எடுத்துக் காட்டும் யுங் அனிமா சமவளவிற் கன்னியாகவும் – தாயாகவும் தோன்றுவதாகக் கூறுகிறார் (யுங் 1959 : 99, 199).

"அனிமா ஒரு எதிரிணையாக ஒரு கணத்தில் உடன்பாடான தோற்றத்திலும், வேறு காலத்தில் எதிர்மறையான தோற்றத்திலும் காட்சி தரலாம். இப்போது இளமை, இப்போது முதுமை, இப்போது கன்னி, இப்போது ஒரு நல்ல வனத்தெய்வம், இப்போது ஒரு பரத்தை, இப்போது ஒரு புனிதை, இந்த இருமனப் போக்கினுள் அனிமா என்ற மாயவிரகசியம் நிரம்பிய விசித்திரங்களுடன் இருளடர்ந்த ஒளியுருவும் பொதுப்படையாக இருளடர்ந்த உலகிலேயே சம்பந்தப்பட்டு உள்ளது." (யுங் 1959 : 199)

இவ்வகையில் அனிமா என்பது பெண்நிலையின் பல்வேறு படிமவாக்கங்களாற் பின்னப்பட்டது அல்லது தொகுக்கப்பட்ட பல்மடிப்புடையது. அதாவது ஒன்றின் மேலொன்றாய் அடுக்கப்பட்ட அல்லது பலவாய் மடக்கி வைக்கப்பட்ட, பல பெண் பாத்திரங்களின் ஒரு தொகுப்பு நிலையாக அனிமா காணப்படுகின்றது. அதனாற்றான் யுங் ஓரிடத்திற் பலருக்கான தொல்படிமமாய் அனிமா இருக்கிறதென்று கூறுகிறார் (யுங் 1059 : 27)

### குறியீடு

யுங்கின் Psychology of the child archetype என்ற கட்டுரையை மேற்கோள் காட்டி ஜக்கோப் தொல்படிமங்கள் அவற்றின் உள்ளடக்கத்தினை உருவக நிலையிலேயே கொண்டிருப்பதாகக் கூறுகிறார் (ஜக்கோபி 1999 :31) இவ்வகையில் நனவிலியின் மொழியமைப்பென்பது அடிப்படையிலொரு படமொழியாகவே உள்ளதெனவும், அவை ஆள்மேற் கொள்ளலூடாகவோ அல்லது குறியீடான படவுருவிலோதான் தோற்றம் தரமுயல்கின்றன. பெரும்பாலும் தொல்படிவுகள்



கிரேக்க - ரோமானிய வழி வரும் இருபால் ஒருடல்



தம்மை மூடிக்கொண்டு அதிகபட்சம் குறியீட்டு நிலையிலேயே தோற்றம் தரமுயல்கின்றன. (ஜக்கோபி 2001 : 58) அதனாற்றான் ஒவ்வொரு குறியீடும், அதே சமயத்திலேயே தொல்படிவமாக யுங்கிய மரபிற் பார்க்கப்படுகின்றது.

இதனை மேலும் புரிந்துகொள்ளுமுகமாக விரித்துப் பார்த்தால் தொல்படிவமானது இங்கே இப்போது காலத்திலும், வெளியிலும் நடமாடத் தக்கதாகத் தன்னை உற்பத்தி செய்யும்போது, அது நனவுமனத்திடமிருந்து சில வடிவங்களைப் பெற முயற்சிக்கிறது. இந்த வடிவ நிலையை எளிமையாகக் குறியீடு என யுங்கிய மரபினின்று கூறலாம். இதன்படி நனவிலியின் தொல்படிவு ஒரு மூலப்பொருளாகத் தொழிற்பட, நனவுமனத்தின் வடிவம் வழங்கும் பண்பு அதற்காக வாய்ப்பைத் திறக்க, தொல்படிவம் தனக்கான ஒரு "உடலை" / தோற்றத்தை" அல்லது "குழைமவுருவத்தை" பெறுகிறது. யுங்கைப் பொறுத்தவரை குறியீடென்பது உளவாற்றலின் சாரமும், படிமமுமாகும் (ஜக்கோபி 1999 : 74, 75, 105).

மேலும் சமயம், தொன்மம் சார்ந்த குறியீடுகளை யுங் கூட்டுக்குறியீடுகள் என அழைக்கமுற்படுகின்றார். அதாவது ஆதிமனித வழி நிகழுகின்ற பிரபஞ்சம்பொது மூலத்திலிருந்து இவையுற்பத்தியாவதாக அவர் எடுத்துக் கொள்கிறார் (ஜக்கோபி 1999 : 104).

### தொல்படிவமும் கலையாக்கமும்

மனிதனின் ஆக்கச்செயற்பாடுகளிற்கான பிரதான உந்துசக்தியாக அல்லது உற்பத்திக்களமாக நனவிலி கொள்ளப்படுகின்றது. அதிலும் சிறப்பான இடத்தைக் கூட்டு நனவிலி பெறுகிறதென்பர் (நியூமென் 2001: 85, 88) இந்த வகையில் யுங்கின் தடவழி நடந்து வந்தால் கலையாக்கம் என்பதை நனவிலி தொல்படிமஞ்சார் குறியீடுகளை உற்பத்தி செய்யும் செயற்பாடெனக் கூறமுடியும். அதுவொரு உளப்படிமுறையும் பிரதிநிதித்துவமுமாகும்.

"மனிதகுலத்தின் செயற்றூண்டலுடைய காலாதீதமான குறியீடுகள் நனவிலியை ஆதாரமாகக் கொண்டுள்ளதுடன், கலைப்படைப்பாக்க முன்ன கர்வுக்கும், மேம்பாட்டிற்குமான இசைதலாகவும் காணப்படுகின்றது" (ஜக்கோபி 2001:43)

நனவிலியை ஆதாரமாகக் கொண்ட கலையாக்கச் செயற்பாட்டிற்கான வளக்கூறுகளில் ஒன்றான தொல்படிமங்கள் செயலாற்றும் முறைமை தொடர்பாக நியூமென் பின்வருமாறு எழுதுகிறார்.

> "கூட்டு நனவிலியின் தொல்படிவங்கள் உள்ளார்ந்த, வடிவமற்ற உளக்கட்டுமானங்களாக இருக்குமதேவேளை, கலைகளிலிவை காணத்தக்க நிலையில் வெளிப்படுகின்றன. தொல்படிமங்கள் தாம் கடந்து செல்லும் ஊடகங்களைப் பொறுத்து வேறுபடுகின்றன. அதாவது அதனுடைய வடிவமானது காலங்களினால் மாற்றப்படுகின்ற தென்பதுடன் இடம் – அதனை உற்பத்தி செய்யும் தனியாளது உளநிலை முதலியவற்றால் மாறுகின்றது". (நியூமென் 2001:82)

இந்தவகையிற் கலையாக்கச் செயற்பாடும் – அதன் விளைவான கலைப்பொருளும், நேர்முகமாகவும் – மறைவாகவும், மனித அகத்துடன் – குறிப்பாக நனவிலி – கூட்டு நனவிலியுடன் தொடர்புடையது. சிக்மன் புரோய்ட்டின் அல்லது பண்டைய கிரேக்க மரபின் "கதாசிஸ்" சிந்தனை வழி பார்த்தால் உணர்ச்சி வெளியேற்றம் – "புனிதவழிப்படுத்தல்" உள்ளிட்ட பல காரணிகளுடன் இணைந்த மனிதவளத்தின் அடியாழமட்டங்கள் வெளிச் செல்லுதற்கான வழியாகவும் – வாய்ப்பாகவும் கலை இருக்கின்றதெனக் கூறலாம்.

மேற்படி உளவியலடிப்படையிலான கோட்பாட்டு ரீதியான விவாதங் களிலிருந்து திரும்பிவருகையிற் சந்தேகமில்லாமல் அர்த்தநாரீஸ்வர வடிவமென்பது "அனிமா" என்ற தொல்படிமத்தின் இந்திய உபகண்ட வட்டகைசார் வெளிப்பாடுதான் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

**அர்த்தநாரீஸ்வர விக்கிரகம்: அனிமாவின் கருத்துடல்**

படிமம், பிரதிமம், விம்பம், பேரம் முதலிய சொற்கள் விக்கிரகம் தொடர்பில் தமிழ் – சமஸ்கிருத மொழி மரபில் பயிலப்படுகின்றன. ஆங்கிலத்திலுள்ள இதற்கிணையான "Icon" எனும் சொல் "Eikon" எனும் கிரேக்கவேரடிச் சொல்லிருந்து உருவானது என்பதுடன் படிமம், பிரதிநிதித்துவம் (பைக்கோவ் 1998: 448, மூர் 1977: 18) எனும் அர்த்தங்களையும் உடையது. இதேநேரம் படிமத்துக்குச் சமதையான "Image" எனும் சொல்லின் லத்தீனிய மூலச்சொல்லான "Imago" என்பது கருத்துருவத்தோற்றம் (வில்லியம்ஸ் 1989:





அர்த்தநாரீஸ்வரர் / கி.பி 07/ அனுராதபுரம்

158) எனும் பொருளுடையது. இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது விக்கிரகம் என்பது (அதற்கு இணையாகப் பயன்பாட்டில் உள்ள சொற்கள் உள்ளிட) "கருத்தின் வடிவம்" (பைக்கோவ் 1998:448) எனும் பொருளையே அதிகம் முன்னிறுத்துகிறது.

இவ்வகையில் அர்த்தநாரீஸ்வர வடிவம் என்பது "அனிமா" என்ற பாற் கலப்பு நிலையின் இயல்பு வழிப்பட்ட கருத்தாக்க வடிவமெனப் பார்க்கப்படலாம். ஆண், பெண் என்ற எதிரிணைகளின்" ஓரிட இருப்புப் பகிர்வினை அர்த்தநாரீஸ்வரர் எனும் விக்கிரகவுடல் பகிர்வு செய்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டபடி உலகப்பொதுவான அனுபவத்தின், இந்திய உபகண்ட வட்டகைசார் அல்லது பண்பாட்டு நிலைப்படுத்தப்பட்ட வெளியீடாக உள்ள அர்த்தநாரீஸ்வர வடிவம் பல்வேறு பண்பாடுகளிலும் உள்ள இருபால் ஒருடல் வடிவங்களுக்கு நிகரானது எனலாம்.

விக்கிரகம் என்பது கருத்துடல் எனும் வகையில் வேறுபட்ட பல விழைகளால் பின்னப்பட்டவொன்றாக அடிப்படையிற் காணப்படும். இவ்வகையில் ஏக காலத்தில் விக்கிரகம் என்பது ஒரு கருத்தின் குறியீடாகவும், அதேசமயம் மேற்படி கருத்துருவைக் கட்டியெழுப்பும் பல்வேறு உபகுறியீடுகளாலும் கட்டப்பட்டுள்ளது எனலாம். பிரதானமாகப் பால் மற்றும் பால்நிலை சார்ந்து இக்குறியீடு காணப்பட்டாலும், அவை இன்னொரு மட்டத்தில் வேறுபட்ட மெய்யியல் உள்ளிட்ட தளங்களுக்கு உரிய குறியீடுகளாகவும் இருக்கின்றன எனலாம்.

### அர்த்தநாரீஸ்வரர்

| | வலப்பக்கம் | இடப்பக்கம் |
|---|---|---|
| சிரசு | சடாமகுடம்; பிறை | கரண்ட மகுடம்; உச்சிக் கொண்டை |
| நெற்றி | நெற்றிக்கண் | பாதித்திலகம் |
| காது | நாக குண்டலம்; சாதாரண குண்டலம் | வாலிக குண்டலம் |
| கைகள் | அபயகரம்; வரதகரம்; சூலகரம் | கிளியுடன்; கண்ணாடியுடன்; நீலோற்பலம் |
| | மழு; கபாலம் | டோலஹஸ்தம்; எருதின்மேல்; கடகமுத்திரை |
| | அஷமாலை; தீச்சுடர் | |
| ஆடை | புலித்தோல் | பட்டாடை |
| கால்கள் | சற்றுவளைவு | நேராக |
| மார்பு | நாக யஞ்ஞோபிதம் | ஆபரணங்கள் |
| தேகம் | சிவந்தநிறம் | பச்சைநிறம் |





சிவசக்தி கோயில் / அச்சுவேலி[9]

### சிவன் என்னும் அனிமா

அடிப்படையில் சிவனது அதிகாரபூர்வமான விக்கிரகவியற் கட்டுமானத்திற் குள்ளேயே அனிமா எனும் பெண்பாற் கூறு நுழைந்துள்ளது என வாதிடமுடியும். அதாவது, சிவனது உத்தியோக பூர்வமான உடல் விதானிப்பிற் காணப்படும் சிரசிற் சூடிய அல்லது மறைக்கப்பட்டுள்ள கங்கை (நதி) எனும் நீர்முகப் பெண் இவ்வகைப்பட்ட பிரதானமானதொரு கூறாகும். அவள் சிவனது சிரசிலிருந்து இடையீடின்றிப் பிரவகித்துப் பாய்கிறாள். உயரத்திலிருந்து பாயும் நீர் என்பது தெய்வீக அம்சமுடையது என்பதுடன், அசையும் அதனியல்பு என்பது கூட்டுநிலை பிரதிநிதித்துவமாகவும், மனிதருக்கும் முற்பட்டது (ஜக்கோபி 1993: 143, 147) என்ற பிரதிநிதித்துவங்களுடனும் உள ஆற்றல், கருவளம், பெண் என்பதையும் குறிக்கும் அது, மிகச்சிறப்பாகக் கூட்டுநனவிலியினது குறியீடு என்பதும் முக்கியமானது.

இவ் விளக்கங்கள் சிரசிற் சூடிய கங்கையைச் சந்தேகமற அனிமாவின் பிரதிநிதியாக எடுக்கக்கூடிய வாய்ப்பை அளித்துள்ளது. அதுமட்டுமன்றி, சிவன் கங்கையுடன் சிரசிற் சூடிய பிறை நிலவும் பெண்ணாகவும் – பண்டைக் காலந்தொட்டு அனைத்துக் கருவளங்களுக்குமான அடையாளமாகவே பார்க்கப்பட்டது என்பதனையும் கவனத்திற் கொள்ளவேண்டும். அதுமட்டுமன்றி,

சிவனது உடலிற் சாதாரணமாக/ வழமையாகக் காணப்படும் ஆபரணங்கள் (உதாரணமாக செவி, காலாபரணங்கள்) கூட உள்ளடங்கிய நிலையில் ஆண் – பெண் கலப்பிணைவு உடையனவாகவே காணப்படுகின்றன. சிவலிங்கவுருவுக்குக்கூட ஆவுடையார் எனும் பெண் / சக்தி பாகம் ஏற்று அனிமாவாகிறது.

இவ்வகையில் தொல்மனித மனத்தினுள், இந்தியப் பண்பாட்டு வட்டகைசார்ந்து உதித்து, ஆண்ணுட்கொண்டுள்ள பெண்பால் நுழைவின் (அனிமா) வடிவமாக சிவன் எனும் 'தொல்லோன்'[10] காணப்படுகின்றார் என்று கூறமுடியும்.

காணும் ஆறு காணேன் உன்னை
அந்நாள் கண்டேனும்
பாணே பேசி என் தன்னைப் படுத்தது
என்னை பரஞ் சோதி
ஆணே பெண்ணே ஆர் அமுதேஅத்தா
செத்தே போயினேன்
ஏண் நாண் இல்லா நாயினேன் என்கொண்டு
எழுகேன் எம்மானே.
(ஆனந்தப்பரவசம், மாணிக்கவாசகர் 1970:368)

### முடிவுரை : பால் - பால்நிலை சிக்கலுக்குள்ளாகும் நிர்ணயங்கள்

பால், பால்நிலை, பாலியல் தொடர்பான சமகாலக் கருத்தாடற் களங்களின் முக்கியமான எடுகோளாக அதிக விவாதமின்றி முன்மொழியப்படுவது இருமை எதிரிணை சார்ந்த ஆண் x பெண் என்ற பால் – பால் நிலைப் பிரிப்பாகும். டீவர் தன்னுடைய How many sexes? How many genders, When two are not enough (2007) எனும் நெடுங்கட்டுரையிற் பின்வருமாறு கூறுகின்றார்.

"............... இருமைக் கட்டளைக்கோலானது மாறு பால்நிலை மாறு பால் நபர்களால் அறைகூவப்படும் அதேவேளை அதனை முறித்துவிடக்கூடிய ஒன்றாகவும் இருக்குமதே நேரம், இது தொடர்பான புதிய முறையான எண்ணத்திற்கான காலமாகவும் காணப்படுகின்றது........" (டீவர் 2007)

மாறுபால், மாறுபால் நிலை நபர்களிடம் மட்டுமன்றி, அதிகாரபூர்வமான ஆண் – பெண் என்ற தூயபால் நிர்ணயமே அடிப்படையில் கேள்விக்குரியதாக மாறியுள்ளது. மேற்படி அனிமா (அனிமஸ்) தொடர்பான முன்வைப்புக்கள்,



பாலென்பதை பௌதிக மற்றும் நடத்தைசார் வேறுபாடென்ற நிலைப்பாடுகள் என்பனவற்றின் விரிவாக்க விவாதங்கள் முதலியனவெல்லாம் பால் – பால்நிலை – பாலியல் தொடர்பான, ஒன்றையான – அதிகாரபூர்வமான இருமைச் சட்டகத்தை கேள்விக்குள்ளாக்குகின்றன. இவ்வகையில் தூய பால், பால்நிலை சார்ந்த பேதங்கள் என்பது "கற்பனை" செய்யப்பட்ட ஒன்றெனவும் – அதிகார அரசியலின் பொறி நுட்பங்களுள் ஒன்றெனவும் இக்கட்டுரை குறிக்க விரும்புகிறது.

ஆனால், தூய பால், பால்நிலைப் பேத சுற்றாடல்களுக்குச் சமாந்தரமாகவே அதற்கான கேள்விகளும் யதார்த்தங்களும் பயணஞ்செய்தே வந்துள்ளன என்பதிற் சந்தேகமில்லை. அவ்வகைப்பட்ட சகபயணக் கருத்தாடல்களின் பூர்வ கலைத்துவச் சாட்சியங்களில் ஒன்றாகவே அர்த்தநாரீஸ்வர வடிவத்தைக் குறிப்பிட வேண்டும். அது பால்கள் முறியும் /கலக்கும் / இடைவெட்டும் ஒரு புள்ளியிலிருந்து இடைவிடாது மேற்கிளம்பி வருகின்றது.




அர்த்தநாரீஸ்வரர் / ஆரம்ப சோழர் / கி.பி 10/ திருவெண்காடு

## குறிப்புக்கள்

1 பசவண்ணா சைவத்தின் கிளைகளுள் ஒன்றான வீரசைவ மரபினைச் சேர்ந்தவர். பசவண்ணாவின் கன்னடச் சுலோகங்கள் (பாடல்கள்) ஏ.கே.இராமனுஜத்தின் Specking of Siva மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டு, இ.கிருஷ்ணகுமாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பொன்னம்பலம் பாக்கியநாதன் நினைவுச்சுவடியில் (1998) வெளிவந்ததாகும்.

2.





(சிவபாதசுந்தரம் 1955)

3. மத்திய கால இந்தியாவின் உற்பத்தியான ஹரிஹர வடிவம் சிவனும் – விஷ்ணுவும் தேகத்தினைச் சரிபாதியாகப் பகிர்ந்து ஒருடலில் நிற்கும் திருக்கோலமாகும்.

4. சிந்துவெளி நாகரிகப் பிராந்தியங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இலிங்கவடிவக்கற்கள் மும்முகமூர்த்தி ('பசுபதி') முதலிய பலவுருவங்களை சைவ விக்கிரகவியலின் முன்னோட்டமாகப் பார்ப்பர் (சுக்லா 1996:232)

5. மனிதவுலகுசார் இருபாலோருடல் - தொன்மவுலகுசார் இருபாலோருடல்




(மேலதிக விபரங்களுட்படப் பார்க்க பிளேவ்வி 1980:283–334)



6. Myth எனுஞ் சொல் Mythos எனும் கிரேக்க வேர்ச் சொல்லிலிருந்து உருவானது. அதற்கு மூதுரை – நவிலல் – நவில் முறை (Utterance ) எனப் பொருளாகும் (ராப்பர் 1978:29).

7. தொல்படிமம் பற்றிய ஆரம்பக் குறிப்புகளை புரொய்ட்டின் Interprition of dreams எனும் நூலிற் காணலாம். ஆனால் யுங்கும் கசிரருமே இதனை வளர்த்தெடுத்தவர்களாவர். யுங்கின் Introduction to a science of Mytholog frpuhpd; The Philosophy of symbolic from vol. 2 - Mythical though முதலியனவாகும்.

8. Instings – நனவுவிலியில் நிலை கொண்டுள்ள உந்தல் . செயற்றூண்டல் (போடம் 1954; 122)

9. சிவசக்தி கோயில், அச்சுவேலி தெற்கில் (யாழ்ப்பாணம்) உள்ளது. பல தலைமுறைகளுக்கு முன்னால் இந்தியாவிலிருந்து வந்த பட்டர் ஒருவரால் மேற்படி கோயில் தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அவர் வேளாளப் பெண்ணொருவரை மணஞ்செய்து அங்கேயே தங்கியிருந்தார் எனவும் அவரது தலைமுறையைச் சேர்ந்த தகவலாளியான குமாரகுல சூரிய ராஜ வடிவேல் கூறினார்.

இக்கோயிலிலுள்ள அர்த்தநாரீஸ்வர வடிவங்கள் பெண் தெய்வங்களுக்குரிய சாத்துப்படியிற் காணப்படுகின்றன. "அர்த்தநாரீஸ்வரியாக வெளிக்கிடுத்தி வந்திருக்கினம், ஏனெண்டு தெரியேல' என மேற்படி தகவலாளி கூறினார். ஆனால் அந்தணர் ஆண்பாலுக்குரிய – சிவனுக்குரிய மந்திரங்களையே ஒலித்துக்கொண்டிருந்தார். அதுவும் ஆய்வுக்குரிய சுவாரஸ்யமான ஒரு விடயந்தான்.

தமிழ்நாடு சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டிலும் புகழ் பெற்ற அர்த்தநாரீஸ்வரர் மலைக்கோயில் ஒன்றிருப்பதாக அறியமுடிகிறது (பசுபதி ம.வே.இமேகலா.ஞா, சாயிராமன்.எஸ் 2002: 8,9).

10. .... சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க....

மணிவாசகர் /திருவண்டம்

(சித்பவானந்தர் (பதிப்பு) 1970:193)

Agrwal V S

1957, A Catalogue of the Bramanical images in Mathura art, Uttarapirathesh, History Society.

Banerjea Jitendra Nath

1941, The Development of Hindu Iconography, New Delhi, Munshiram and Manoharla Publishers Pvt. Ltd.

Bychkov, V.Victor

1988, Icon (in) Kelly Micheal eds, Encyclopedia of Aesthetic Vol.2

Choubey M.C

1977, Lakulisa in Indian art and Culture, Delhi, Sharada Publishing House

Devor A.H

2007, How many sex? How many Genders? When two are not enough http://web.uvic.ca/-addevr/HowMany/How Many/html

Fordam Frieda

1954 An introducation ot Jung's psychology, Middlesex, Pelican Books.

Gaston Anne - Marie

1982 Siva in dance, myth and inconography, New Delhi, Oxford University Press

Horny A.S

2005 Oxford advanced learner's dictionary of current English, India, Oxford University press.

Jocobi Jolande

1999, Complex/ Archetype/Symbol in the psychology of C.G.Jung, London, Rutledge 2001, Psychology of C.G Jung, London, Rutledge.

Jung C.G

1959, The Archetypes and Collective unconscious, London, Retledge and Kegan

1959, Aion, , London, Rutledge and Kegan

Lorenzen N David

1991, The Kapalikas and Kalamukhas, Delhi, Motilal Banarsidass publishers pvt. Ltd.

Moore, C. Albert

1977, Iconography of Religions; An introduction, London, SCM Press Ltd.

Neumann Erich

2001, Art and the creative unconscious, London, Retledge.

O'Flaherty Wendy Doniger

1981, Sexual metaphors and animal symbols in Indian mythology - New Delhi, Motilal Banarsidass.

Rao Gopinatha

1971, Elements of Hindu iconography vol. 2, p.I. Delhi, Indological Book House

Shukla D.N

1996, Vastu - Sastra Vol.2, New Delhi, Munshiram and Manoharlal Publishers Pvt, Ltd

Thapar Romila

1978, Ancient Indian social history, New Delhi, Orient Longman.

Thewari S.P

1979, Hindu Iconography, New Delhi, Agam Kala Prakashan

Williams Reymond

1989, Key Words, Londan, Fontne Press.

குமார சூரிய ராஜவடிவேல் (நேர்காணல் 20–10–2007 அச்சுவேலி)

தேவநாதாச்சியார் (பதிப்பு)

1961 ஸ்ரீ குமாரர் இயற்றிய சிற்பரத்தினம், தஞ்சை, சரஸ்வதி மகால்

சித்பவானந்தா (விளக்கம்)

1970, திருவாசகம், திருச்சி ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

சிவபாதசுந்தரம். சு (உரை)

1955, திருவருட்பயன், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை

பசுபதி ம.வே., மேகலா .ஞா, சாயிராமன்.எஸ் (பதிப்பு)

2002, பூங்கோதை இயற்றிய அர்த்தநாரீஸ்வர குறவஞ்சி என்னும் திருச்சேங்கோட்டுக் குறவஞ்சி, சென்னை, மகாமகோபாத்தியாய டாக்டர்.உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்.

பத்மநாதக் குருக்கள் கோபாலகிருஷ்ண ஐயர்

1981, சிவாகமங்களும் சிற்ப நூல்களும் சித்திரிக்கும் சிவ விக்கிரகவியல், (பதிப்பிக்கப்படாத கலாநிதிப்பட்ட ஆய்வு) யாழ்ப்பாணப் பல்லைக்கழகம், திருநெல்வேலி.

பொன்னம்பலம் பாக்கியாநாதன் நினைவுச்சுவடி

1998, யாழ்ப்பாணம்.



கே.என்.ஒ.தர்மதாச

ජාත්‍යනුරාගය: සමාජ ශාස්ත්‍රීය විමර්ශනයක්
(தேசப்பற்று : சமூக அறிவுசார் திறனாய்வு)

2002, விசிதுனு வெளியீடு, கொழும்பு
ISBN 955-9170-50-3 பக்கங்கள் V, 290

**புத்தகத்திறனாய்வு : சசங்க பெரேரா**
தமிழாக்கம்: சாமிநாதன் விமல்



**பின்னணி**

கே.என்.ஒ.தர்மதாசவின் தேசப்பற்று: சமூக அறிவு சார் திறனாய்வு என்ற நூல் அறிவுசார் சந்தையினுள் நுழையும் சமூக, அரசியல் மற்றும் அறிவுசார் பின்னணி தொடர்பாக நாங்கள் சற்றுக் கவனமெடுப்போம். சமூக மற்றும் அரசியல் ரீதியாகத் தற்போதைய இலங்கையிற் சனநாயக நிறுவனங்களும் நடை முறைகளும் மிகவும் பலவீனப்பட்டும், நிலையற்றும் இருக்கும் நிலையிற் பண்பாட்டு ரீதியில் நாங்கள் உலக, பிராந்திய மற்றும் உள்ளூர் ரீதியிற் கடும் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறோம் என்பது இங்கு ஞாபகத்திற் கொள்ளத்தக்கது. இதேபோல புலமை சார்ந்த பின்னணியிற் பார்க்கும்போது நாங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளோம். அதாவது குறிப்பாகப் பல்கலைக்கழகங்கள் சார்ந்தும், சமூகவியல், மனிதப்பண்பியல் போன்ற துறைகளிலும் அறிவுற்பத்திச் செயற்பாடுகள் மிகவும் வறிய நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்குத் தெளிவானதொரு உதாரணமாக அண்மைக் காலத்தில் வகை தொகையாக வெளிவரும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் நூல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரங்களில் இருந்தும், புலமையியல் சார்

நடைமுறைகளினின்றும் விலகியுள்ளதை எடுத்துக்காட்ட முடியும். இவ்வாறான தொரு பரந்த பின்னணியில் தேசப்பற்றுப் போன்ற ஒரு கருத்துரு, அறிவு சார் கருத்தாடலிலிருந்து விலகி மிகவும் குறுகிய அரசியற் செயற்பாடுகளின் ஒரு கருவியாகலாம்.

நிலைமை இவ்வாறிருக்கையில் தர்மதாசவின் இந்நூல் சமகால நிலவரத்திற் பலவிதமான பொருள் விளக்கங்களுக்கும், மறுபொருள் விளக்கங்களுக்கும் உட்படுத்தப்படும் அதேவேளை, பலவகை அரசியற் செயற்றிட்டங்களுக்குப் பலவகைகளிற் பயன்படுத்தப்படும் சாத்தியப்பாடுகளும் அதிகம் காணப்படுகின்றன. ஆயினும் பிற்கட்டமைப்புவாதிகளினால் நீண்ட காலமாக எடுத்துக்காட்டப்படுவதைப் போன்று எழுதப்பட்ட எல்லாச் சொற்களும், பனுவல்களும் பொது வெளிகளுக்கு வந்த பின்னர் அவை தொடர்பாக அவற்றின் ஆசிரியர்களுக்குள்ள உரிமையும் அதிகாரமும் இல்லாது போகிறது. எவ்வாறாயி னும் இதனால் அறிவுச்செயற்பாடுகளை நிறுத்தும் ஒரு நிலையில் நாங்கள் இல்லை. மறுபுறத்தே மிகெல் பூக்கோ போன்ற சிந்தனையாளர்கள் எடுத்துக்காட்டுவதைப் போன்று அறிவு என்பது அதிகாரத்தின் ஒரு குறியீடாகும். அறிவின் ஊடகம், மற்றும் அறிவுக்காக உற்பத்தியாக்கப்படும் கருத்தாடல்கள் என்பன ஒருபோதும் அப்பாவித்தனமானவையல்ல. இதனடிப்படையில் இந்நூலானது எவ்வித பொருள் விளக்கங்களுக்கு உட்பட்டாலும், உட்படா விட்டாலும் இதனூடு முன் வைக்கப்படும் அறிவானது அதற்கேயுரிய ஓர் அரசியலையும், அதிகாரத்தினையும் கொண்டுள்ளது. அந்த வகையில் இந்நூலில் அடையாளப்படுத்தப்படும் தேசியம் தொடர்பான அகன்ற கருத்தாடலினுள் ஓர் அப்பாவித்தனம் அடங்கி இருக்கவில்லை என்பதை நாங்கள் ஞாபகத்திற் கொள்ளவேண்டும்.

### நூலின் அடிப்படை இயல்பு தொடர்பான கருத்துக்கள்

பரந்துபட்ட பின்னணியில் இந்த நூலின் அடிப்படையான சுபாவம் என்னாற் புரிந்துகொள்ளும் விதத்தினை மிகவும் சுருக்கமாகத் தெளிவுபடுத்தி, அதனூடு தோன்றும் சில பிரச்சனை தொடர்பாகவும், இப்புத்தகத்தினால் அடையாளப்படுத்தப்படும் ஆய்வுசார் திசையூடாக இனிமேலும் எவ்வாறு பயணம் செய்யமுடியும் என்பது தொடர்பாகவும் சில கருத்துக்களை முன்வைப்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும்.



1) தொழில்நுட்பத் தரங்கள் சார்ந்து (அடிக்குறிப்பு, உசாத்துணை, மேற்கோள் போன்றவை) பார்க்கையில் இந்நூலானது மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருப்பது தெளிவு. சர்வதேச மட்டத்திற் பார்க்கையில் இவ்வாறு ஒரு திறனாய்வில் இவ்வாறான விடயங்கள் தொடர்பாகவும் கவனமெடுக்க வேண்டிய தேவை என்னால் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இந்நூல் வெளிவரும் சிக்கலுக்குரிய அறிவுசார் நிலவரம் காரணமாகத் தோன்றுகிறது.

2) தேசப்பற்றுத் தொடர்பாகவும் அதனுடன் தொடர்புடைய பல கருத்துக்களையும் சிங்கள வாசகனிடம் கொணரும் ஒரு நூல் என்ற வகையில் இந்நூல் குறிப்பிடத்தக்கது. ஆங்கில மொழித்திறமையற்ற, ஆயினும் இவ்வாறான கருத்துக்கள் தொடர்பாக அறிவுசார் ஆவல் / தேடல் கொண்டுள்ள புத்திஜீவிகளுக்கு இது மிகவும் பயனுள்ள மூலாதார நூலாகும்.

3) தமிழ்தேசியவாதம் தொடர்பாகவும், அதன் பல்வேறான வடிவங்கள் தொடர்பாகவும் மிகவும் விரிவான வாசிப்பு இந்நூலில் உள்ளடங்கியுள்ளது. மேலும் நாங்கள் வாழும் மிகவும் வறிய அறிவுசார் சூழ்நிலைகளுக்குள் மதிக்கப்படவேண்டிய விடயம் யாதெனில் உணர்ச்சி ரீதியிலான சார்பு நிலைகளுக்கு இரையாகாமல் இந்த விபரிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளமை யாகும்.

4) இந்நூல் சிங்களத் தேசியவாதம் தொடர்பாகவும் அதன் வடிவங்கள் தொடர்பாகவும் மிகவும் விரிவாக நான்கு அத்தியாயங்களில், இந்நூலில் விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில்வரும் சில தகவல்கள் தர்மதாசவினால் இதற்கு முன்னர் ஆங்கிலமொழியில் வெளியிடப்பட்ட கருத்துக்களைச் சிங்களவாசகனிடம் கொண்டுவரும் ஒரு முயற்சி என்பது தெளிவு. இந்நூலுக்கு மேலதிகமாகச் சிங்கள இன அடையாளம், அதன் வரலாற்று ரீதியிலான பரிணாமம் தொடர்பாகவும் வெஸ்லி குணவர்த்தன போன்ற அறிஞர்களின் கருத்துக்களும் விமர்சனக் கண்ணோட்டத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளன.

5) இந்நூலின் கடைசி இரு அத்தியாயங்கள் (9 & 10) ஊடாக ஒட்டுமொத்தமாக நூலுக்கு வழங்கப்படும் பங்களிப்புக் குறைவு என்பது என்னுடைய கருத்தாகும். அதாவது "இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரையில் தேசிய சிந்தனைகளின் சுபாவங்கள்" மற்றும் "தேசியவாதமும் உலகப்பிரஜைகளின் எதிர்காலமும்" என்று பெயரிடப்பட்டுள்ள இரு அத்தியாயங்கள் இல்லாமலும் இந்த நூலுக்கு அறிவு சார்ந்த சுயாதீன நிலையில் இருக்கக்கூடிய சாத்தியம் உள்ளது. அதேவேளை இப்புத்தகத்தின் ஏனைய அத்தியாயங்களில் இருந்து கிட்டும்

அறிவு சார்ந்து நோக்குகையிற் குறைந்தளவு புலமைசார் பங்களிப்பினையே இவ்விரு அத்தியாயங்களும் செய்கின்றன என்பது என்னுடைய முடிவாகும்.

### நூலில் இருந்து தோன்றும் சில பிரச்சினைகள்

நாம் இந்நூலில் இருந்து தோன்றும் கருத்துக்களிற் சில தெரிவு செய்யப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக மேலும் தேடலை மேற்கொள்வோம். ஜேர்மன் நாட்டு இராஜதந்திரியான ஒட்டோ வென் பிஸ்மாக் தனி இனமாக ஜேர்மன் மொழி பேசும் பிரஜைகளை அணிதிரட்டுகையில் முன்வைத்த "உங்களின் இரத்தத்தால் சிந்தியுங்கள்" (2002:14) என்ற கருத்து இதன்போது முக்கியமானது. நாங்கள் முதலாவதாகப் புரிந்துகொள்ளவேண்டிய விடயம் யாதெனில் தேசப்பற்று "தேசியம்" அல்லது இவ்வாறான எந்தவொரு கருத்தினை எடுத்துக்கொண்டாலும் ஏனைய எல்லாக் கருத்தாக்கங்களையும் போலவே இவையும் மனதில் தோன்றியவையேயாகும். ஆயினும் இவ்வாறான கருத்துக்களினுள் எவ்வாறானவைக்கு ஒருவன் மிகவும் கடும் உணர்ச்சிசார் பெறுமதியை வழங்குகிறான் என்பதும் இன்னொரு பிரச்சினையாகும். இறுதியில் இவையும் வெறும் பண்பாட்டு அடையாளங்கள் பற்றிய அகன்ற கருத்தாடலில் ஒரு பகுதி மட்டுமேயாகும். எனவே தேசாபிமானம் போன்ற கருத்துக்களை வெறுமனே "இரத்தத்தால் சிந்திப்பதும்" "தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட ஒரு மட்டத்தில் வைத்து நோக்குவதென்பதும் புத்திசாலித்தனமானதல்ல. அத்துடன் அவ்வாறு செய்தல் பயங்கரமானதுங்கூட. இது எமது சிந்தனையையும் எதிர்காலத்தினையும் முழுமையாகவே அரசியல்வாதிகளிடம் ஒப்படைப்பதற்கு நிகரானது. மறுபுறத்தே அரசியல்வாதிகள் தேசப்பற்றுப்போன்ற உணர்ச்சி வயப்பட்ட கருத்துக்களைத் தமது அரசியலுக்கு மிகவும் குறுகிய மற்றும் சிக்கலான விதத்தில்தான் பயன்படுத்துகின்றனர் என்பது எமக்கு நன்கு புலப்படும் ஒரு விடயமாகும். இச்சந்தர்ப்பத்தில் எனது நண்பரான இந்திய அரசியல் விஞ்ஞானியும் உளவியளாளருமான ஆஷீஸ் நந்தி அவர்கள் என்னிடம் கூறிய ஒரு விடயத்தை முன்வைக்க விரும்புகின்றேன். ஒருமுறை ஆஷீஸ் நந்தியின் சகோதரரான பிரதீஸ் நந்தி ஓர் இந்து மற்றும் முஸ்லீம் சோடியின் திருமண வைபவத்திற் பங்கு கொண்டார். அத்திருமணத்தில், அவர் இந்திய இந்து மதவாத இயக்கத்தின் தலைவரும், கடுமையான இஸ்லாமிய எதிர்ப்பு நிலைப்பாட்டிலுள்ள அரசியல்வாதியுமான பால் தாக்கரேயைச் சந்தித்துள்ளார். "இஸ்லாமிய எதிர்ப்பு மனப்பான்மையைப் பகிரங்கமாக முன்வைக்கும் தாங்கள் எவ்வாறு இவ்வாறானதொரு நிகழ்ச்சியிற் பங்குகொள்கிறீர்கள்" என்ற பிரிதீஸ் நந்தியின் கேள்விக்குப் பதில் பின்வருமாறு அமைந்திருந்தது – "எனக்கும் எனது சகபாடிகளுக்குமிடையிலான பிரதான வேறுபாடு யாதெனில், நான் கூறும் எதனையும் நான் நம்புவதில்லை. ஆனால் இந்த முறைதவறிப் பிறந்தவர்கள் நம்புகிறார்கள்"[1] என்பதாகும்.



இந்துமதத்தை அடிப்படையாகக் கொண்ட தேசியவாதம் மிகவும் பயங்கர நிலையை எட்டுவதற்குப் பங்களிப்புச் செய்த பால்தாக்கரே தன்னுடைய கருத்துக்கள் தொடர்பாகத் தனக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை என தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொண்டாலும், அவரது கருத்துக்களும் செயல்களும் இந்தியச் சமூகத்தில் மதங்களுக்கிடையிலான முரண்பாடுகள் வலுவடையப் பங்களித்துள்ளன. தேசப்பற்றுப் போன்ற கருத்துக்கள் "இரத்தத்தாற் சிந்திக்கும்" மற்றும் "தர்க்கமற்ற" நிலைக்குக் கொண்டு செல்லப்படுமானால் அதற்கான பொறுப்புகள் இவ்வாறான நபர்களையே சாரும் என்பதை நாம் மறக்கமுடியாது.

இந்த நூலை வாசிக்கையில், குறிப்பாக அதனுள் கலந்துரையாடப் பட்டுள்ள பலவிதமான தேசப்பற்றுக்களின் அளவுகள் மற்றும் முன் நிபந்தனைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுகையில் தோன்றும் ஒரு கருத்து யாதெனில், எந்தவொரு சமூக வெளியிலும், ஓர் இனக்குழு சார்ந்து, ஒரு வடிவம் சார்ந்த தேசப்பற்று மட்டுமே இருக்க முடியும் என்ற கருத்தாகும். ஆயினும் தமிழ் தேசப்பற்றுத் தொடர்பாகப் பேசும்போது அதனுள் பல்வேறு வகையான வடிவங்கள் இருந்துள்ளன என்பதை எம்மாற் காணமுடிகிறது. அவற்றிற் சிலவடிவங்கள் கடுமையான சிங்கள எதிர்ப்பு மனப்பான்மைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த அதேவேளை சில அவ்வாறு இருக்கவுமில்லை.

சிங்களத் தேசப்பற்றுக்கூட இவ்வாறு தனிக்கோடானதாகத் தோன்றியதல்ல என்பதை நாங்கள் ஞாபகத்திற் கொள்ளவேண்டும். 1995இல் நான் எழுதிய Monopoly of Patriotism (தேசப்பற்றின் ஏகபோகம்) என்ற கட்டுரையினூடாக நான் தேசப்பற்றுப் பற்றிய ஒரு சிறிய தேடலை மேற்கொள்ள முயற்சித்தேன். அதன்படி என்னுள்ளே தோன்றும் சிங்கள பௌத்த தேசப்பற்றினுள் ஏனைய கலாசார அடையாளங்களுக்கும், அவற்றின் பலவித உரிமைகளுக்கும் ஓர் அகன்ற இடம் உள்ளது தெளிவானது. ஆயினும் இன்னொருவரின சிங்கள பௌத்தத் தேசப்பற்றுள் அவ்வாறானதொரு இடம் இல்லாமலும் இருக்கலாம். தமிழ்தேசப்பற்றுத் தொடர்பாகவும் இதனைத்தான்

எம்மாற் கூறமுடியும். இந்த நூலினைப் பயன்படுத்திக் கொள்ளுகையில் தேசப்பற்றின் பலகோடுகளான இயல்பினைப்பற்றி மனதிற் கொள்வதினூடாக அது தொடர்பான எமது புரிந்து கொள்ளலை ஆழமான மட்டத்திற்குக் கொண்டு செல்ல முடியுமென்பது எனது கருத்தாகும்.

இந்நூல் தொடர்பாக இன்னொரு பிரதான விடயத்தினைக் குறிப்பிட்டு, அதற்குப்பின் இக்கருத்து முன்வைப்பை வேறோர் திசையில் இட்டுச்செல்ல நான் விளைகிறேன். என்னால் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளதைப் போலவே தேசப்பற்றும், அதனுடன் தொடர்பான ஏனைய கருத்தாக்கங்கள் தொடர்பாகவும், சிங்கள மற்றும் தமிழ்தேசப்பற்றின் தோற்றம் மற்றும் வளர்ச்சி தொடர்பாகவும் இந்நூல் ஒரு விரிவான அடித்தளத்தினைச் சிங்கள வாசகர்களுக்கு முன்மைத்துள்ளது எனினும், அந்த விரிந்த அடித்தளத்தினின்று இலங்கையில், பிராந்தியத்தில் அல்லது அகிலத்தில் தேசியவாதம் தொடர்பாகவோ, தேசப்பற்றுத் தொடர்பாகவோ அறிவுசார் கருத்தாடலினைக் கருத்துரு சார்ந்து அல்லது கேட்பாடு சார்ந்து மேலும் ஆழமாக ஆய்வு செய்யவே, அவ்வாறான அறிவுசார் பங்களிப்பினூடாகத் தேசப்பற்றுத் தொடர்பாக எம்மிடம் நிலவும் கருத்துக்களை யும் மனப்பான்மைகளையும் அறிவுசார் நிலையில் கடுமையாகக் கேள்விக்குட் படுத்தவோ இந்த நூல் எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இந்த நிலைமையானது தர்மதாசாவினால் தெரிவுசெய்யப்பட்ட அணுகுமுறையின் விளைவு என்பது தெளிவு. அதாவது மிகவும் உணர்ச்சிபூர்வமான நிலையிற் கலந்துரையாடப்படும் ஒரு விடயத்தினை அறிவு பூர்வமான நிலையிற் கலந்துரையாடத் தேவைப்படும் அடித்தளத்தினைக் கட்டியமைப்பது அவருடைய தேவையாகவிருந்தது இருந்திருக்கலாம்.

### புத்தகத்தால் வழங்கப்படும் அறிவு பயணிக்கத்தக்க ஏனைய திசைகள்

ஆசிரியராற் கட்டியமைக்கப்பட்ட அடித்தளத்தினின்று இனி எந்த அறிவுசார் திசையை நோக்கி நகர வேண்டும் என்பதைப்பற்றி நாங்கள் இப்போது கவனமெடுப்போம். தர்மதாசாவின் புத்தகத்தை வாசித்த நான், இதற்கு முன்னால் என்னாற் படிக்கப்பட்ட ஐந்து புத்தங்களை மீண்டும் அவசரமாகப் படித்தேன். அவற்றினூடாக உருவாக்கப்படும் அறிவும், தோற்றுவிக்கப்படும் பிரச்சினைகளும் எமது சமூகத்திலும்கூடத் தேசப்பற்று மற்றும் தேசியம் போன்ற கருத்துக்கள் தொடர்பாக ஓர் அறிவுசார் கருத்தாடலைக் கட்டியமைக்க உதவும்



என்பது எனது நம்பிக்கையாக இருந்தமை இவ்வாறு புத்தகங்கள் மீள வாசிக்கக்காரணமாக இருந்தது.

என்னாற் படிக்கப்பட்ட முதல்நூல் பார்த்தா சட்டர்ஜியின் The Nation & its Fragments: Colonial and Post Colonial Histories (தேசமும் அதன் எச்சங்களும்: காலனிய மற்றும் பிற்காலனிய வரலாறுகள்) (1995) என்ற பிரபல்யமான புத்தகமாகும். தர்மதாச தனது நூலிற் பெனடிக் அன்ரசனின் Imagin Communities (கற்பனைச் சமுதாயங்கள்) என்ற கருத்தாக்கத்தினை அறிமுகம்செய்து அதன் எல்லைகளை ஏ.டி. ஸ்மித்தின் கருத்துக்களின் உதவியுடன் எடுத்துக்காட்டியுள்ளார். அன்ரசனின் கற்பனைச் சமுதாயம் பற்றிய கருத்தானது சர்வதேசமட்டத்தில் தேசியவாதம் தொடர்பான அறிவுசார் கலந்துரையாடலிற் பெரும் செல்வாக்குச் செலுத்தியதாக அமைந்துள்ளது. அவருடைய கருத்தின் பிரகாரம் இன்று எங்களால் தேசம் என்று அழைக்கப்படும் அளவுகள் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஐரோப்பாவில் நிகழ்ந்த சமூக அரசியல் மாற்றங்களுடனேயே தோன்றின என்பதாகும். மேலும் இச்செயற்பாட்டின்போது தேசங்களின் உருவாக்கமானது தெளிவான சமூக விஞ்ஞான நிலைமைகளின் கீழ் (அதாவது மொழி, இனம், மதம் போன்ற அளவு கோல்கள்) அல்லாமல் அவை வெறும் அதிகாரக்குழுக்களின் கற்பனையால் இருப்புச் செய்யப்பட்டவையாகும். அவ்வாறு செய்கையிற் சில பண்பாட்டுக் குழுக்களுக்கு இருந்த அதிகாரமும், அடையாளமும் வலுப்பெற்ற அதேவேளை சில தேசம் என்ற அளவிற்குள் மங்கியும் போயின. அவரால் மேலும் குறிப்பிடப்படுவதாவது, உலகின் எல்லாப் பிரதேசங்களின் தேசிய வாதங்களும் மேற்கு ஐரோப்பா, வடஅமெரிக்கா மற்றும் ருஸ்சியா ஆகியவற்றில் தோன்றிய ஆரம்பதேசியவாத மாதிரிகளின் செல்வாக்கிற்குள்ளாகி உயிர்ப்பு நிலை யடைந்தன என்பதாகும். இந்த அணுகுமுறைக்கே சட்டர்ஜி சவால் விடுகிறார். "அன்ரசனின் தர்க்கத்திற்கு எதிராக ஒரு பிரதான எதிர்ப்பினை என்னாற் பதிவு செய்ய முடியும். அதாவது உலகின் ஏனைய பாகங்களில் உள்ள தேசியவாதங்கள் தமக்கு விரும்பிய தேசிய வாத்தினைத் தெரிவு செய்யவேண்டிய நிலையிலுள்ளன. அது ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கட்டியமைக்கப்பட்டதாகவுள்ள தேசியவாத மாதிரிகளில் இருந்துதான் என்றால், அவர்களாற் கற்பனை செய்ய இன்னும் என்ன எஞ்சியுள்ளது? இக்கூற்றின்படி பிற்காலனிய உலகில் வாழும் நாங்கள் சதாகாலத்திலும் நவீனத்துவத்தை நுகர்வோராக இருக்கவேண்டும் என்று ஒரு நியதி வரலாற்றில் விதிக்கப்பட்டுள்ளது. அதாவது ஐரோப்பாவும் அமெரிக்காவும் வரலாற்றில் மிகவும் அதிகமான சட்டரீதியான உரிமையாளர்கள்

என்ற வகையில் எமக்காக, காலனித்துவ மேட்டுக்குடி நிலையும், சுரண்டலும் எவ்வாறு நிகழவேண்டும் என்பதனைத் தீர்மானிக்கின்றனர். அதேவேளை எமது பேரரசு வாதத்திற்கெதிரான எதிர்ப்புகளும், எமது பிற்காலனித்துவ அவலங்களும் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும் எங்களின் சார்பில் அவர்களே தீர்மானித்துள்ளார்கள். சுருக்கமாகக் கூறுவதாயின் எமது கற்பனைகள் கூடச் சதாகாலமும் அடக்கப்பட்டதாகவே இருக்கவேண்டும்" (சட்டர்ஜி 1995:5) ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் வல்லரசு எதிர்ப்புத் தேசியவாதக் கற்பனையானது அடிப்படையில் ஐரோப்பாவுடனும், அமெரிக்காவுடனும் எவ்வாறு அன்னியோன்னியமாக இருக்கலாம் என்பதை அடித்தளமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக அவற்றிலிருந்து எவ்வாறு மாறுபடலாம் என்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்றே சட்டர்ஜி எடுத்தியம்புகிறார் (1995).

சட்டர்ஜி போன்ற புலமையாளர்களின் கருத்துக்களை எமது நாட்டின் தேசியம் மற்றும் தேசப்பற்றுத் தொடர்பான கருத்துக்களை ஆழமான கேள்விக்குட்படுத்தப் பயன்படுத்த முடியும். இச்செயற்பாட்டில் ஸ்ரீபன் கெம்பரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமூக மானிடவியல் ஆய்வுகளை அடியொற்றி எழுதப்பட்ட The Presence of the Past: Chronicles, Politics and the Culture in Sinhala Life (கடந்த காலத்தின் இருப்பு: சிங்கள வாழ்வில் தொடர் வரலாறு, அரசியல் மற்றும் பண்பாடு) போன்ற நூலில் இருந்து வெளிச்சத்தினைப் பெறமுடிகிறது. ஐரோப்பாவில் தேசியவாத இயக்கங்கள் தோன்றக் கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்களுக்கு முன்பே சிங்கள தேசியவாதம் தோன்றியது என்பது கெம்பரின் ஓர் அடிப்படையான தர்க்கமாகும். அவருடைய தர்க்கமானது தேசியவாதத்தின் ஐரோப்பிய மூலத்தைத் தீவிரமாகக் கேள்விக்குட்படுத்துவதாகவுள்ளது. ஆயினும் கெம்வரினால் முன்வைக்கப்படும் கருத்தாடலில் வரும் தேசியவாதமானது அன்ரசனின் கருத்தாடலில் வரும் தேசியவாதத்துடன் நிச்சயமாக ஒத்திருக்கவேண்டுமென்றில்லை. இவை உலகில் ஒன்றுக்கொன்று மாறான இடங்களில், மாறுபட்ட காலகட்டங்களில் உருவாகிய குழு அடையாளம் சார்ந்து தோன்றிய பண்பாட்டு நிலைப்பட்ட கருத்துகளாகும். சட்டர்ஜி மற்றும் கெம்பர் போல இவ்வாறான கருத்துக்களை ஒரே வகையிற் பகுப்பாய்வு செய்ய வேண்டுமா, செய்ய முடியுமா என்ற கேள்வி எம்மாற் கேட்கப்படவேண்டியது.

நான் மூன்றாவதாகப் படித்த நூல் ஆஷிஸ் நந்தியின் Illegitimarcy of Nationalism: Rabinranath Tagore and the Politics of the Self (தேசியவாதத்தில் முறையற்ற தன்மை: ரவீந்திரநாத் தாகூரும் சுயத்தின் அரசியலும்) (1994) என்ற



நூலாகும். இந்த நூலினூடு நந்தி கீழ்வரும் விடயங்களை முன்வைக்கிறார். இந்திய சுதந்திரத்திற்கான தேசியவாத இயக்கத்தின் ஆரம்ப காலத்தில், நேர்த்தியான தேசிய அரசு ஒன்று இல்லாமையும் மற்றும் தேசம் தொடர்பாக நேர்த்தியான புரிதலோ அல்லது உணர்வுகளோ இல்லாமையும் பெரும் குறைபாடாக, இந்தியச் சுதந்திரத்திற்கான தேசியவாத இயக்கத்தின் ஆரம்பகட்டத்தில் அதன் தலைவர்களால் நம்பப்பட்டது. அதேபோல 1920களின்போதுகூட அந்தத் தேசியவாத இயக்கத்தினுள்ளே அத்தேசிய வாதத்தின் ஒரு பகுதியாக ஓர் ஒற்றைப் பண்பாட்டுத் தேசிய அரசு ஒன்றும், ஓர் ஒற்றைப்பண்பாட்டு தேசியவாதம் தொடர்பாகவும் சில சந்தேகங்கள் தோன்றி இருந்தன. அதாவது இந்து சமயத்திற்கும், இந்தி மொழிக்கும் மற்றும் வட இந்தியச் சமூக அரசியல் யதார்த்தங்களுக்கும் சிறப்பான கவனிப்பைக் காட்டி, அதன்வழி ஏனைய மக்கள் பிரிவினரை விளிம்பு நிலைக்குத் தள்ளிய சிந்தனை தொடர்பாகச் சந்தேகம் நிலவியது. ரவீந்திரநாத் தாகூரின் நாவல்களிலும் தேசியவாதம் தொடர்பாக அவருடைய கட்டுரைகளிலும் ஏனைய ஆக்கங்களிலும் இச்சந்தேகம் கிளம்பி இருந்ததை ஆஷிஸ் நந்தி விபரிக்கின்றார்.

தர்மதாசவின் நூல் விரிவாக முன்வைக்கும் சிங்கள மற்றும் தமிழ்தேசியம் தொடர்பான தகவல்களை நந்தியின் நூலின் வெளிச்சத்துடன் வாசிக்கும்போது என்னிடம் பின்வரும் கேள்வி தோன்றியது. இவ்விரு தேசியவாதங்களும் வெறும் தனிக்கோடானதாக ஒன்றுக்கொன்று பரஸ்பர எதிர்ப்பினை கொண்டதாக, ஒன்றுக்கொன்று முரணானதாக மட்டுமே தோன்றி வளர்ச்சியடைந்தனவா? தெளிவாகவே இப்பண்பானது இத்தேசியங்களின் ஒரு சுபாவம் மட்டுமேயாகும். அவற்றுக்குள்ளே மற்றும் அவை தொடர்பாகத் தாகூரின் சந்தேகம் போன்ற ஏனைய போக்குகள் இல்லவே இல்லையா? அவற்றைப் பற்றிய தேடலை மேற்கொள்ள மூலாதாரங்கள் இல்லையா? அவற்றினைத் தேடுவதினூடாகத் தேசியவாதம் தொடர்பாக, தேசப்பற்றுத் தொடர்பாக இலங்கையில் அறிவுசார் ஒரு கருத்தாடலை வித்தியாசமானதும் மேலும் ஆழமானதுமாக, அதேவேளை கோட்பாட்டு ரீதியாக நுண்மையான பகுப்பாய்வு மட்டத்திற்கும் இட்டுச்செல்ல முடியாதா?

நான் வாசித்த நான்காவது நூலானது ஆஷிஸ் நந்தி, ஷைல் மாயாராம்,. ஷிக்க திரிவேதி மற்றும் அச்யுத் யாக்ஸிக் என்பவர்களின் Creating a Nationality: Ram Janmapoomi Movement & Fear of Self. (ஒரு தேசியத்தை உருவாக்கல்' இராம ஜென்மபூமி இயக்கமும் சுயம் தொடர்பான அச்சமும்) (1995) என்ற

நூலாகும். 1992 ஆம் ஆண்டில் இந்துத் தேசியவாதிகளால் அயோத்தியாவில் அமைந்திருந்த புராதன இஸ்லாமிய புனிதத்தலம் ஒன்று அழிக்கப்பட்ட சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு இந்த நூல் உருவாகியிருந்தது. அவ்வாறு அழிக்கப்பட்டமைக்கான காரணம் அப்புனிதத் தலம் அமைந்திருந்த இடமானது ராமரின் பிறப்பிடம் என்ற கற்பனைக்கு இந்துத் தேசியவாத இயக்கத்தால் கடுமையாக உணர்ச்சிநிலை சார்ந்தும், அரசியல் சார்ந்தும் உத்வேகம் வழங்கப்பட்டமையாகும். அயோத்தியா பிரதேசவாசிகளுக்கு இந்தச் சம்பவமும் அதற்குக் காரணமான விடயங்களும் எவ்வாறானதான அனுபவத்தை வழங்கியது என்பதைப்புரிந்து கொள்ளல் இந்நூலின் ஆசிரியர்களின் அடிப்படையான முயற்சியாகவிருந்தது. இச்சம்பவமானது நூறு வருடகாலமாக இந்துக்களை நேர்த்தியான நவீன இனமொன்றாக்கவும், பாரம்பரிய இனப்பெரும்பான்மை ஆக்கவும் மேற்கொள்ளப்பட்ட நவீனத்துவ தேசியவாத இயக்கத்தின் ஒரு கடைசி விளைவாகும் என்பது இவர்களின் பொருள் விளக்கமாகும்.

இதனூடாக இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் பண்பாடு தொடர்பாகவும் இந்துத் தேசியவாதத்தின் அரசியல் தொடர்பாகவும் அதன் வடிவங்கள் தொடர்பாகவும் ஒரு பகுப்பாய்வு முன்வைக்கப்படுகிறது. சமுதாயத்தின் கூட்டு ஞாபகத்தினுள் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தொடர்பான சமீபகால ஞாபகங்கள் ஒன்றும் இல்லாத நிலையில் இந்துக்களை 'நேர்த்தியான நவீன இனமாக்குவதற்கு நவீனத்திற்கு முந்திய யதார்த்தங் களுக்குள் பண்பாட்டு அடையாளக் குழுக்களுக்கிடையில் ஒரு வகையான சகவாழ்வினை ஏற்படுத்துவதாகவிருந்த சமூக, கலாசார அடித்தளங்கள் சிதைந்து போனதா என்பதைத் தேடுதலும் அவர்களின் முயற்சியாக இருந்தது.

சிங்கள, தமிழ்தேசியவாத மற்றும் தேசப்பற்று இயக்கங்களின் வளர்ச்சியும் அவற்றின் சமீபகால எதிர்மறையான விளைவுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தும்போது எங்களுக்கு இந்த Creating Nationality என்ற நூலின் பிரதான அணுகு முறைகளினின்றும், அதில் உள்ளடங்கும் வியாக்கியானங்களிலிருந்தும் வெளிச்சம்பெற முடியாதா என்ற கேள்வி எழுகிறது. அதாவது நவீனத்திற்கு முந்திய விழுமியத் தொகுதிகளிலிருந்து எங்களுக்கு மரபுரிமை யாகக் கிடைத்திருந்த பெறுமதிகளும், நடைமுறைகளும் இலங்கைத் தேசியவாத மற்றும் தேசப்பற்று இயக்கங்கள் வழியாக எங்களால் இல்லாதொழிக்கப்படவில்லையா? இவற்றை நாங்கள் தேடலை மேற்கொள்ள வேண்டிய, அறிவுசார் மற்றும்



புலமைசார் ஆர்வத்தினைக்காட்ட வேண்டிய விடயங்களாகவே நான் கருதுகின்றேன்.

நான் இறுதியாகப் படித்த நூல் டேவிட் ஸ்கொட்டின் Refashioning Futures: Criticism after Post Coloniality (எதிர்காலங்களை மறுவடிவமைத்தல்: பின் காலனியத்திற்குப் பின்னான விமர்சனம்) (1999). அதில்வரும் Dehistorizing History (வரலாற்றினை வரலாற்று நிலையற்றதாக்குதல்) என்ற நான்காம் அத்தியாயம் மீது கவனம் செலுத்தினேன். இதற்கு இரு காரணங்கள் உள்ளன. தேசியவாதம் அரசியல் முக்கியத்துவம் வகிக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் வரலாற்றினை எழுதுதல் என்ற விடயம் சமகாலச் சமூகம் மீது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதுபற்றிய கேள்வியை எழுப்புதல். அடுத்ததாக இத்தேடலின்போது லெஸ்லி குணவர்த்தன மற்றும் ஏ.என்.ஓ. தர்மதாச என்ற அறிஞர்களுக்கிடையில் சிங்கள அடையாளத்தின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றிய பரஸ்பரம் முரண்படும் கருத்துக்களை ஸ்கொட் பயன்படுத்தியுள்ளமை யுமாகும். எவ்வாறாயினும் நான்காம் அத்தியாயத்தின்போது ஸ்கொட்டின் முயற்சி அடிப்படையில் இலங்கையில் அறிவுசார்ந்தும் மற்றும் கருத்தியல்சார்ந்த தளத்தில் விவாதிக்கப்படும் சமூகத்திற்கும், வரலாற்றிற்கும் இடையிலான தொடர்பு சம்பந்தப்பட்ட விவாதத்தின்போது தோன்றும் வரலாற்றினை வரலாற்று நிலையற்றதாக்குவதேயாகும். வேறோர் விதத்திற் கூறுவதாகவிருந்தால் சமகால அரசியலினுள் வரலாற்று நிலைப்படுத்தல் அல்லது கடந்தகாலம் தொடர்பான நம்பிக்கையானது நிகழ்காலத்தில் செலுத்தும் செல்வாக்கினைக் குறைத்தலுக்கு ஸ்கொட் முயற்சிக்கிறார். அவர் எடுத்துக்காட்டுவதன் பிரகாரம் சமகாலச் சமூகத்தில் வரலாற்றினாற் கடந்தகாலம் தொடர்பாக கட்டியமைக்கப்படும் கதையை அடிப்படையாகக் கொண்டு சமுதாயத்தின் இயல்பு தீர்மானிக்கப்படு வதாகவும், அதன் அரசியல் செயற்படுவதாகவும் உள்ளது என்பதேயாகும் (1999:93). அதாவது கடந்தகாலச் சமுதாயத்தின் இயல்பினை அடித்தளமாகக் கொண்டு நிகழ்காலச் சமுதாயத்தின் இயல்பு நிர்ணயிக்கப்படுவதாக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையாகும். இவ்வடிப்படை நிலைப்பாட்டிற்கு எதிராகவே ஸ்கொட் தனது கருத்துக்களை முன் வைக்கிறார். நிகழ்காலமானது கடந்த காலத்தின் ஒரு பிரதிபலிப்பாக இருக்கவேண்டும் என்ற கருத்தானது அறிவாதார முறைசார்ந்து நோக்கப்படுகையில், நடைமுறையற்றதாகவும் மற்றும் அதனூடாகச் சமகால இலங்கையில் தோன்றும் அரசியல் நிலவரங்கள் பயங்கரமானதாக இருக்கும் காரணத்தினாலும் அவர் இவ்வாறு எதிர்ப்பினைக் காட்டுகிறார்.

குணவர்த்தனாவின் The People of the Lion (சிங்கத்தின் மக்கள்) (1997) என்ற கட்டுரையானது அதன் வரலாற்று நிலையாக்கச் செயற்பாட்டினைச் சமகால அரசியலில் இருந்து மீட்டெடுக்க முடியாததன் காரணமாக, வேறு வகையான வரலாற்றாளர்களின் விமர்சனங்கள் அதன்மீது முன்வைக்கப்பட்டதன் காரணத்தினால் அக்கட்டுரைக்குரிய இயங்கு நிலைகள் உருவாக்கப்பட்டன என்பது ஸ்கொட்டின் வாதமாகும். அவர் குணவர்த்தனாவின் கட்டுரையும், அக்கட்டுரைக்கு எதிர்வினையாக தர்மதாசவினால் எழுதப்பட்ட கட்டுரையும் என்ற இரண்டுமே சமகால அரசியலின் பிடிக்குள் சிக்கிய ஒரு புத்திஜீவி செயற்றிட்டமாகவே பார்க்கிறார். ஏனெனில் குணவர்த்தனாவின் கட்டுரையின் உற்பத்தியானது அப்போது சனரஞ்சகமாகவும், அறிவு சார்ந்ததாகவும் இருந்த கருத்தாடல்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவிருந்த சிங்கள அடையாளத்தின் நீண்ட வரலாற்றினைக் கட்டுடைத்தலின் அவசியத்தினை அக்காலகட்டத்தில் மேலோங்கிக் கொண்டிருந்த இனநெருக்கடிக்கு ஒருவகையான தலையீட்டை மேற்கொண்ட ஓர் அரசியற் செயற்பாட்டின் பகுதியாக இருந்தமையேயாகும். மேலும், தர்மதாசாவின் எதிர்வினைகூட இத்தலையீடு செய்யும் அரசியற் செயற்பாட்டின் இன்னொரு சந்தர்ப்பமாகவே இருந்தது. வரலாற்று நிலைப் படுத்தற் செயற்பாட்டினைச் சமகால அரசியலில் இருந்து தொலைவில் வைக்க முடியாது போனமை இந்த உரையாடலை "யாருடைய வரலாறு மிகவும் சரியானது" என்ற தர்க்கத்திற்கு மலினப்பட்ட கருத்துப்பரிமாற்றமாக மாறியது என்பதை ஸ்கொட் எடுத்துக்காட்டுகிறார் (ஸ்கொட் 1999). ஸ்கொட்டின் மிகவும் சிக்கலான பகுப்பாய்வைச் சுருக்கமாக விபரித்து தர்மதாசாவின் தேசப்பற்றுப் பற்றிய இந்நூல் தொடர்பான கருத்து முன்வைப்பை முடிக்க நான் விளைகிறேன். ஆயினும் ஸ்கொட் நம்பிக்கை வைத்துள்ளதைப்போல வரலாற்றிற்கும் சமுதாயத்திற்குமிடையிலான உறவைப் புரிந்துகொள்வதிலும் வரலாற்று நிலையாக்கச் செயற்பாட்டின்போது அது சமகால அரசியலிற் செலுத்தும் செல்வாக்கை நீக்க முடியும் என்ற நம்பிக்கை என்னிடம் இல்லை. அது மதிக்கத்தக்க, வரவேற்கத்தக்க ஒன்றாக இருப்பினும் எட்டுவதற்கு மிகவும் கடினமான ஓர் இலட்சியமாகும். ஆயினும் அறிவுற்பத்தித் துறையில் ஈடுபாடு கொண்டுள்ளவர்கள் என்ற வகையில் தங்களால் உற்பத்தி செய்யப்படும் பனுவல்களும் அறிவுற்பத்திக் கருவிகளும் தெரிந்து கொண்டே குறுகிய அரசியற் செயற்றிட்டங்களுடன் இணைக்கப்படுவதைத் தவிர்த்துக்கொள்ளல் புலமை யாளர்களின் பொறுப்பாகும். ஆயினும் உற்பத்தி செய்யப்படும் அறிவு, பொது வெளிக்கு வந்தபின்னர் அது எத்திசை நோக்கி செல்லக்கூடும் என்பது தொடர்பாக எழுத்தாளரால் முன்முடிவுகளுக்கு வருதல் என்பது கடினமான



தாகும். அதன் காரணமாக, அறிவு உற்பத்தியை நிறுத்தவும் முடியாது. அதன்படி பார்க்கையிற் குணவர்த்தனாவின் The People of the Lion என்ற கட்டுரை, சமகால அரசியலுடன் தலையிடுவதில்லை என்ற நோக்கில் உற்பத்தி செய்யப்பட்டதாக இருந்திருந்தாலும் அதன் விளைவுகள் உண்மையாகத் தோன்றிய நிலைமையில் இருந்து வித்தியாசமற்றதாக இருந்திருக்கலாம். இறுதியாக நாம் பின்வரு மாறானதொரு கருத்தை முன்வைக்கலாம். தேசியவாதம், தேசப்பற்றுப் போன்ற கருத்தாக்கங்கள் எல்லாவகையான சமுதாயங்களுக்குள்ளும்கூட காணக் கூடியதாகவுள்ள வழக்கமான விடயங்கள் என்றாலும், இவை எம்மைச் சிக்கலுக்குள்ளாக்கவல்ல கருத்தாக்கங்களுமாகும். அறிஞர்களதும், புலமையாளர்களதும் இலட்சியப்பணியாக இருக்கவேண்டியது இவ்வாறான கருத்தாக்கங்கள். அறிவுற்பத்திக்குப் புறம்பாக "இரத்தத்தால் சிந்திக்கப்படும்" "தர்க்கத்திற்குப் புறம்பான" நிலைக்குக் கொண்டு செல்வதைத் தவிர்த்தலாகும். இவ்வாறான கருத்துக்களை அறிவுற்பத்திச் செயற்பாடு களினுள்ளே தர்க்கத்திற்கும், பகுப்பாய்விற்கும் உட்படுத்திக்கொள்ளல் அவர்கள் பொறுப்பாகும். இறுதியாக நாங்கள் இன மற்றும் தேசப்பற்றுத் தொடர்பான அறிவுத்தேடலும், வரலாற்றினைக் கைப்பற்றிக்கொள்ளலும் செய்யவேண்டியது ஒரு புலமைசார் பாணியாக என்ற நிலையில் தவிர, தற்போதைய அரசியலுக்கு முண்டு கொடுப்பதற்காகவல்ல. சமகாலத் தேசப்பற்றும் தேசியமும் என்பது நிகழ்காலப் பிரச்சினைகள் மற்றும் நிகழ்காலக் கருத்தாக்கங்கள் என்பது தெளிவு. அவைக்குச் சமகால அரசியலில் தோன்றும் பிளவுகளுக்கும் சிக்கல்களுக்கும் நாம் அடிப்படையிற் சமகால யதார்த்தங்களுக்குச் சார்புடையதாகவே பதில்களைப் பெற வேண்டும். வரலாற்றிலிருந்து எம்மாற் பல படிப்பினைகளைப் பெறமுடிந்தாலும், அது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் ஒரே சக்தியாக மாட்டிக் கொள்ளக்கூடாது.

**குறிப்புகள்**

1 The difference between me and my followers is that I do not believe in anything I say. Those bastards do.

**உசாத்துணைகள்**


Chatterji, Partha
1995. The Nation and its Fragments: Colonial and Post Colonial Histories. Delhi: Oxford University Press.

ධර්මදාස, කේ. එන්. ඕ.
2002. ජාත්‍යනුරාගය : සමාජ ශාස්ත්‍රීය විමර්ශනයක්. බොරලැස්ගමුව :

Kemper, Stephen
1991. The Presence of the Past: Chronicles, Politics and Culture in Sinhala Life. Ithaca: Cornel University Press.

Nandi, Ashis
1994. The Illegitimacy of Nationalism: Rabindranath Tagore and the Politics of the Self. Delhi: Oxford University Press.

Nandi, Ashis, Shail Mayaram, Shika Trivedi and Achyut Yagnik
1995. Creating a Nationality: Ram Janmaboomi Movement and Fear of the Self. Delhi: Oxford University Press.

Perera, Sasanka
1995. 'Monopoly of Patriotism: A Personal Essay on Inclusion and Exclusion.' In, Living with Torturers and Other Essays of Intervention. Colombo: International Centre for Ethnic Studies.

Scott, David
1999. Refashioning Futures: Criticism after Post Coloniality. Princeton: Princeton University Press.



## கலைச்சொற்கள்

| | |
|---|---|
| அடிப்படை உருவகங்கள் | - root metaphors |
| அதிகாரத்துவம் | - authenticity |
| அமைப்பியல் மானிடவியல் | - Structural Anthropology |
| அரசு உருவாக்கம் | - state formation |
| அறிதல்சார் கருத்து | - cognitive view |
| அறிவாதாரமுறையில் | - epistemology |
| அனுபவம் | - empirical |
| ஆத்மாவின் பிரதான உலகு | - chtonic |
| ஆநிலைச் சமூகம் | - Sedentary pastoralism |
| ஆள் மேற்கொள்ளல் | - impersonation |
| இடமின்மைத் தன்மை | - placelessness |
| இடம் | - place, site |
| இடப்பெயர்வு விவசாயம் | - shifting cultivation |
| இடையீடு / தொடர்புபடுத்து | - mediation |
| இனநலக்கோட்பாடு | - humanistic |
| இயல்பூக்கம் | - insting |
| இயங்கு நிலை | - dynamic |
| இனமையவாதப் பண்பு | - ethnocentrism |
| இருபாற் சின்னவுயிரி | - her maphrodite |
| இயற்கணிதம் | - algebra |
| இனவரையியல் | - ethnography |
| உச்சரிக்கைகள் | - utterances |
| உருவக நிலை | - metaphor |
| உறவு சார்ந்த தொழிலாளர் | - kin labour |
| உளவாற்றல் | - psychic energy |
| ஊருக்கு அப்பாற்பட்ட | - Supra - village |
| ஒப்பீட்டுக் குறியீட்டியல் | - comparrative symbology |
| ஒப்புமை | - homology |
| கருத்தாக்கம் | - conception |

கலைப்படைப்பு / கலைப்பொருள் – artifact
குழைவுருவம் – plastic form
குலக்குறி – totemic
குலவரலாறு – genealogical history
குறிப்பீடு செய்தல் – signification
குறியியல் – semiology
குறியீட்டியக் கருத்தாக்கம் – Symbolic conception
குறியீட்டு மானிடவியல் – Symbolic Anthropology
கூட்டிணைப்பு – collective
கூட்டிணைப்பான குறியீடு – combined mark
கூட்டுக்குறியீடு – collective symbol
சமூகப் பிரிவினை – Social stratification
சமூக இடைவெளி – social distance
சமூக உருவாக்கம் – social formation
சிந்தனையுருவங்கள் – thought forms
சுவை – taste
செவ்வியல் – Classical
செறிந்த குறுதலைமை – complex chiefdoms
தன்னிலைகள் – subjects
திட்டம் – schemata
திட்ட வரைவை – blue print
தூய பால் – pure sex
தொல் படிவுகள் – Archetype
தொல்பழங்குடி – Primitive
தொனிப்பொருள் – theme
தொன்மம் – myth
தொன்ம வகை – primordial type
தொன்ம வடிவம் – primordia
தோரணி – template
நடப்பு வழக்கு – fashion
நடுகற்கள் – Hero stone
நவில் முறை – utterance



நனவு – conscious
நனவிலி – unconscious
நாகரிகம் – civilization
பகுத்தறிவுடையோர் – rationals
பகுத்தறிவற்றோர் – irrationals
நிலவுரு உருவாக்கம் – land scaping
படமொழி – picture language
படிமுறை – process
பண்பாட்டு மானுடவியல் – Cultural Anthropology
பனுவல் – text
பாலியல் – sexuality
பால் – sex
பால்நிலை – gender
புலம் – domain
பெருங்கற்காலம் – megalithic
பொது உற்பத்தி – communal production
பொதுவெளி – public space
பொருள்கோள் – interpretive
பொருள்கோள் மானிடவியல் – Interpretive Anthropology
முந்தைய வடிவம் – prototypes
முன்னேற்றப்படிமுறை – progressive process
வாழ்வாதாரப்பொருளாதாரம் – subsistence economy
விழுமியம் – value
விளக்க முறைக்கருத்தாக்கம் – discriptive conception

## கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர் விபரம்

**சாமிநாதன் விமல் :** சிறி ஜெயவர்த்தனப்புரப் பல்கலைக்கழகத்தில் சிங்களத்தில் சிறப்புப் பட்டம் (1996) பெற்றவர் – தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழி விரிவுரையாளராக பணியாற்றுகிறார்.

**பாக்கியநாதன் அகிலன் :** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலை வரலாற்றிலும், கோட்பாட்டிலும் (நுண்கலை) கலைமானிப்பட்டமும், பரோடா எம்.எஸ். பல்கலைக் கழகத்தில் கலை விமர்சனத்தில் முதுகலைமாணிப்பட்டமும் பெற்ற இவர் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் விரிவுரையாளராவார்.

**ச. ஜீவசுதன் :** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமூகவியற்துறையில் கலைமானிப் பட்டத்தையும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமூக வேலைத்துறையில் முதுகலை மாணிப் பட்டத்தையும் பெற்றவர். கொழும்பு, சமூகசேவைகள் நிறுவனத்தில் விரிவுரையாளராக பணியாற்றுகிறார்.

**கலாநிதி சசங்க பெரேரா :** கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் மற்றும் மானுடவியல் சிரேஷ்ட விரிவுரையாளரான இவர் ஒரு மானிடவியலாளராவார்.

**சு.குணசேகரன்:** புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மத்திய வரலாற்றில் தனது கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டு வருபவர். தனது முதுகலைமாணிப் பட்டத்தை ஐதராபாத் மத்திய பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றவர்.

**தேவசகாயம் லூர்து:** பாளையங்கோட்டை புனித சவேரியர் கல்லூரியில் பேராசிரியராகவும், நாட்டார் வழக்காற்றியற் பட்ட மேற்படிப்புத் துறையில் தலைவராகவும், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்தின் இயக்குநராகவும் இருந்தவர். நாட்டார் வழக்காற்றியல் பற்றி பல ஆய்வுக்கட்டுரைகளையும், புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் South Indian Folk lore என்ற ஆய்வேடுகளின் ஆசிரியர்.

**தா.சனாதனன்:** இவர் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராவார்.



**பனுவலின் நோக்கங்கள் :-**

பனுவல் சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனத்தினால் வருடந்தோறும் வெளியிடப்படும் கட்டுரைகளின் தொகுதியாகும். சமூக விஞ்ஞான மற்றும் மனிதப் பண்பியல் என்று பொதுவாகக் கருதப்படும் எல்லா வகையான துறைகள் சார்ந்ததாகவும் பண்பாட்டு ரீதியான ஆய்வுகளுக்குக் கூடிய கவனத்தைச் செலுத்தும் ஆராய்ச்சி மற்றும் கோட்பாட்டு ரீதியான கருத்தாடல்களுக்கான வெளியீட்டுஊடகமாகவும் பனுவல் அமையும்.

**பனுவலுக்குக் கட்டுரைகள் சமர்பிக்க வேண்டிய முறை :-**

1) சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனத்தின் அழைப்பின் பெயரில் கட்டுரையை வழங்க முடியும்.

2) எந்தவொரு நபரும் பனுவலின் நோக்கங்களுக்கும், குறிக்கோள்களுக்கும் பொருந்தி வரக்கூடிய கட்டுரைகளைச் சமர்ப்பிக்கமுடியும்.

**கட்டுரை ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்**

1) பனுவலில் வெறும் விபரண ரீதியான எழுத்துக்கள் உள்ளடக்கப்படுவதில்லை. பனுவல் கட்டுரைகளின் தகவல்கள், சமூகக் கோட்பாடுகளுடன் தொடர்புபட்டனவாகவும், பகுப்பாய்வு என்ற அம்சங்களை எடுத்துக்காட்டுவதாகவும் பொதுவாக இருத்தல் வேண்டும்.

2) பனுவலிற்கான கட்டுரைகள் தமிழ்மொழியிலானதாக இருத்தல் வேண்டும். சமூக விஞ்ஞான ஆவணப்படுத்தலின்போது மேற்கோள் காட்டும் குறியீடுகள், மூலாதார தகவல்கள், பிற்குறிப்புகள் ஆகியவற்றுடன் சார்ந்ததாக உள்ள சர்வதேச மட்டத்திலான கட்டுரையாக்கல் முறைகளும், தொழில்நுட்பப் போக்குகளும் கடைப்பிடிக்கப்படவேண்டும். பனுவலிற்குக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிக்க முன்னர் பிரதான தொகுப்பாசிரியரிடமிருந்து பனுவல் கட்டுரையாக்க ஆலோசனைகள் உள்ளடக்கிய கடிதமொன்றினைப் பெற்றுக்கொள்வது நன்று. இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு Chicago Manual of Style (14வது பதிப்பு) படிக்கவும். கட்டுரையின் எழுத்து Point 11, "LT-TM-Lakshman" என்ற எழுத்து வடிவத்தில் இருத்தல் வேண்டும்.

**பனுவலிற்கான கட்டுரைகளைத் தெரிவு செய்யும் முறை**

*பனுவல் வருடந்தோறும் வெளிவரும் கட்டுரைத் தொகுதியாகும்.* (refereed journal). *பனுவலுக்காக அனுப்பப்படும் எந்தவொரு கட்டுரையும் பனுவல் தொகுப்பாசிரியர் குழுவின் ஒரு அங்கத்தவரினதும் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட இன்னொருவரினதும் ஆலோசனைகளின்படி, திருத்தங்கள் இருப்பின் வழங்கப்பட்ட காலத்தில் அவ்வாறு செய்தல் கட்டுரையாசிரியர்களினது பொறுப்பாகும். கட்டுரையொன்று பனுவலிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அந்தக் கட்டுரையை வெளியிடப்படுமா, இல்லையா, திருத்தங்கள் செய்ய வேண்டியதாக இருப்பின் அது எவ்வாறானவை என்பது தொடர்பான தகவல்கள் பிரதான தொகுப்பாசிரியரால் உரிய எழுத்தாளர்களிடம் எழுத்து மூலமாக அறிவிக்கப்படும். இந்தச் செயற்பாடு தொடர்பாக மேலதிக விசாரணைகள் தேவையற்றவை.*

**பனுவல் முகவரி :-**

*பிரதான தொகுப்பாசிரியர்,*
*பனுவல், சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம்.*
119, A, *கிங்ஸ் வீதி,*
*கொழும்பு - 08*

*மின்னஞ்சல்* :- Patithaeditor@yahoo.com

*பனுவலிற்கான சகல கட்டுரைகளும் கேள்விகளும் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிகளுக்கு மாத்திரமே அனுப்பப்படவேண்டும்.*



அட்டை வடிவமைப்புக் கருத்துரு :
தாமோதரம்பிள்ளை சனாதனன்

அட்டைப்படம் : வீரவாகுதேவரின் படையாட்களில் ஒருவர் – சூரன்போர் நல்லூர் கந்தசுவாமி கோவில் (புகைப்படம் : ஜீவரட்ணம் ஜெயதீஸ்)

வடிவமைப்பு – கணனி எழுத்து வடிவமைப்பு
கரிகணன் பிறிண்டேர்ஸ், இல.424, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.